நிறை நிலவொளியில் ஔவையார்



முனைவர். சரசுவதி இராமநாதன்

சொற்பொழிவுகள்

தமிழய்யா வெளியீட்டகம்,
ஔவைக்கோட்டம், திருவையாறு.

நிறை நிலவொளியில் ஔவையார்

'முத்தமிழ்அரசி' முனைவர்

சரசுவதி இராமநாதன் சொற்பொழிவுகள்



தமிழய்யா வெளியீட்டகம்,
பதிப்பாசிரியர் : **கண்ணகிகலைவேந்தன்,**
ஔவைக்கோட்டம், திருவையாறு-613 204.
தொலைபேசி : 04362 - 260711

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	**நிறைநிலவொளியில் ஔவையார்**
வகை	:	**சொற்பொழிவு**
பதிப்பாசிரியர்	:	**திருமதி. கண்ணகி கலைவேந்தன்**
முதல் பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2038 (ஜுன், 2007)
பதிப்புரிமை	:	**தமிழய்யா வெளியீட்டகம்,** திருவையாறு
நூல் அளவு	:	டெம்மி 1 × 8
எழுத்து அளவு	:	12.5
பக்கங்கள்	:	160
அட்டைப்படம்	:	**ஔவையார்**
படிகள்	:	1000
கட்டுமானம்	:	சாதாரணம்
விலை	:	ரூ 50/-
கணினி அச்சு	:	**மதி கணினி மையம்** 142, வடக்கு வீதி, திருவையாறு.
அச்சாக்கமும் கோப்பும்	:	**பூண்டி மாதா ஆப்செட் பிரிண்டர்ஸ்,** திருக்காட்டுப்பள்ளி.

அருளுரை

ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத் தொரு மித்து ஆதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

"**கற்றல் கேட்டல் உடையார் பெரியார்**" என்பார் ஞானசம்பந்தர் "**நல்லதை கேட்கவேண்டும்**" இது ஔவையார் விருப்பம். இதனை நினைத்து நமது பாராட்டுதலுக்குரிய முனைவர் **மு. கலைவேந்தன்** அவர்கள் திருவையாற்றில் ஔவைக்கு கோயில் கண்டு, அக்கோயிலில் முறையான வழிபாட்டு நெறி வைத்து, ஔவையின் அருந்தமிழ் நூல்களை மக்களுக்கு எடுத்துச்சொல்லும் மகத்தான பணியை செய்ய வேண்டிய பொறுப்புணர்ந்து செயல் பட்டுவருபவர்.

14.3.2006 அன்று தொடங்கி 26.2.2007 வரை ஓர் ஆண்டுகாலம் திங்கள்தோறும் முழுநிலவு நாளில் 'அறஞ்செய விரும்பு முதல் ஔவையார் ஒரு பல்கலைக்கழகம்' வரை 12 தலைப்புகளில் **திருமதி சரசுவதி இராமநாதன்** அவர்களைக் கொண்டு சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றச் செய்தார்.

திருமதி **சரசுவதி இராமநாதன்** அவர்களின் சிறந்த நாவன்மையால் கேட்டார் மனதை பிணைத்து இழுக்கும் தகையது. இனிய குரலால் இசைப்பாடல் செய்வார்கள். அவர்களின் பேச்சினை கேட்கமுடியாத ஆர்வலர்களுக்கும் பயன்படும் வண்ணம் எழுத்து வடிவத்தில் பதிவு செய்து விழாவேந்தர் முனைவர் **மு. கலைவேந்தன்** அவர்கள் தொகுத்து திருமதி **கண்ணகி கலைவேந்தன்** அவர்கள் பதிப்பாசிரியராக இருந்து, வள்ளல் **ஆர்.ஆர். கோவிந்தராசன்** அவர்கள் நூலாக்கப் புரவலராக அமைந்து '**நிறைநிலவொளியில் ஔவையார்**' என்ற நூல் வெளி வருவது சிறப்புடையது.

ஔவையார் நூலில் சிறார்கள், பெரியவர்கள், துறவிமார்கள், அரசர்கள், என பல்லோர்க்கும் நீதி வகுத்த பெரியவர். இந்நூலை அனைவரும் படித்து வாழ்வில் எல்லா நலன்களும் பெற்றுத்திகழ செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும் தருமையாதீன குருமணியின் குருவருளையும் சிந்தித்து வாழத்துகின்றோம்



முனைவர் **குமார சுவாமித் தம்பிரான் அடிகளார்**
கட்டளை விசாரனை தருமையாதீனம் ,திருவையாறு

தோரண வாயில்

ஔவையார் எங்கள் வாழ்வோடு கலந்து அருள்பாலிக்கும் அறநெறி அன்னை ஆவார். தமிழுக்கும்தமிழ்ச்சமுதாயத்திற்கும் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான வாழ்வியல் அனுபவங்களை அறமாக்கித்தந்த தமிழ்த் தெய்வம். நிறைநிலவு நாளில் ஔவை வழிபாட்டினை தமிழ் கூறும்நல்லுலகிற்குக் கொண்டு சொல்லும்பொருட்டு முனைவர் **சரசுவதி இராமநாதன்** சொற்பொழிவுகளைத் தொகுத்து திருவையாறு **தமிழய்யா வெளியீட்டகம்** நூலாக வெளியீட்டுள்ளது. பேராசிரியை **சரசுவதி இராமநாதன்** நாடறிந்த நற்றமிழ் நாவலர் ; அவர் திருவையாறு ஔவைக் கோட்டத்தில் கடந்த ஆண்டு உரையாற்றிய ஔவையார் சொற்பொழிவுகள் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஔவையாரின் படைப்புகள் அனைத்தும் அறிமுகப்படுத்தும் வகையில் இச்சொற்பொழிவுகள் அமைந்திருப்பது படித்தின்புறத்தக்கது; வாழ்வில் பின்பற்றி வளமான வாழ்வு வாழ்வதற்கு இந்நூல் துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஔவை சொன்ன சொல் அமிர்தம் என்போம் ; ஆத்தி சூடி முதலான அறநெறி நூல்களைப் படித்து, வாழ்வில் பின்பற்றுவோம்; ஔவையார் வழி நின்று அனைவரையும் போற்றி மகிழ்வோம்.

நாடு அமைதியுற திகழ்வதற்கும் மக்கள் அன்புடன் வாழ்வதற்கும் இச்சொற்பொழிவுகள் பெருந்துணை புரியும்.

ஔவையாரின் அறநெறிகள் உலகமெங்கும் பரவட்டும் !
உலக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு வாழட்டும் !!



முனைவர் **மு. கலைவேந்தன்**
தொகுப்பாளர்

என்னுரை

என்னைப் போன்ற பேச்சாளரை எழுத வைப்பது கடினம். ஆனால் தமிழய்யா கல்விக்கழகம், திரு கலைவேந்தன் பன்னிரு திங்கள் முழுநிலவு நாளில் ஔவை எனும் மூதறிவாட்டியின்அருந்தமிழ் நூல்கள் குறித்து உரையாற்றவும் உரையைக் கட்டுரையாக எழுதித்தரவும்பணித்தது என் பேறாயிற்று`ஆன முதலில் அதிகம் செலவானால்'`சித்திரமும் கைப்பழக்கம்'`கற்றது கைம்மண்ணளவு' ஆத்திசூடி,`வாக்குண்டாம்' கொன்றை வேந்தன் இவற்றைப் பலரும் கொஞ்சம் கொஞ்சம் அறிவர். முழுமையாக ஔவைத் தமிழை அறியவைக்க மாநாடு நடத்தியது தமிழய்யா கல்விக்கழகம். சிற்றூரில் இருந்து கொண்டு பெரிய **பல்கலைக்கழகம் செய்யும்பணியைச் செய்கிறார் கலைவேந்தன்.**

என்னையும் ஔவை நூல்களைப் படிக்க வைத்தார். இப்போதெல்லாம் என்பேச்சில் ஔவையார்நிறைய வருகிறார். ஔவை (இன்று பெண்ணுரிமை பெற்ற காலம்!) அந்த நாளிலேயே எத்தனை உயர்ந்த இடம் பெற்று வாழ்ந்திருக்கிறார் ! வியப்பாக இருக்கிறது. குழந்தைப்பாட்டு முதல் குண்டலினி சக்திவரையில் உணவுப்பழக்கம் முதல் உயர் முக்தி வரையில் அவர் சொல்லாதது எது?

முனைவர் மு. கலைவேந்தன், கண்ணகி தம்பதி நீடுழி வாழ்க!, அரிமா. வை.கலியபெருமாள், வல்லம் ஆர்.ஆர். கோவிந்தராசன், தங்க கலியமூர்த்தி, தென்னைச் செல்வர் வா.செ.செல்வம், டாக்டர் ச. தமிழரசன், திரு. கலைச்செல்வன் இப்படிப்பலரும் என் அன்புக்கும் வாழ்த்துக்கும் உரிய பெருமக்கள். கவிஞர் கல்லாடனின் கரும்புச்சாரும் கன்னித்தமிழ்க் கவிதையால் வாழ்த்தியுள்ளார். எளியேனின் கட்டுரைகளைப் படித்துப் பாராட்டியுள்ளார். என்றும் நன்றியுடையேன். மூவாத்தமிழில் மூதுரைகள் தந்த மூதாட்டி ஔவையை இன்றைய தலைமுறை கொஞ்சமாவது தெரிந்து கொண்டு, படித்துப் பின்பற்ற வேண்டும் என்பது எங்கள் நோக்கம். நிலவொளி அனவு வெளிச்சம் தரமுடியா விடினும். சிறு கை விளக்காவது தரமுடிந்தது! ஒளியின் துணையுடன் தமிழ் ஔவையைப் பாருங்கள்! பேச்சு நூலாவதால் சில இடங்களில் கூறியது கூறல் இருக்கும் பொறுத்தருள்க.



அன்புடன்

சரசுவதி இராமநாதன்

பதிப்புரை

திருவையாறு ஔவைக் கோட்டத்தில் கடந்த ஆண்டு முழுவதும் நிறை நிலவு நாளில் முத்தமிழ் அரசி முனைவர் *சரசுவதி இராமநாதன்* 'நிறை நிலவொளியில் ஔவையார்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். இதனைத் **தமிழய்யா வெளியீட்டகத்தின்** சார்பில் நூலாக வெளியிடுவதைப்பெரும் பேறாகக் கருதுகிறோம்.

ஔவையார் எங்களின் குலத்தெய்வம் ; குடும்ப விளக்கு ; ஔவையார்க்கு நாள்தோறும் வழிபாடு செய்யும் பேறு கிடைக்கப்பெற்றமை எண்ணி இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறோம்.

ஔவையார் பொருளில் அமைந்த 12 சொற்பொழிவுகளும் முனைவர் *சரசுவதி இராமநாதனின்* முத்துக்கள்; நம்வாழ்வின் சொத்துக்கள்; இதனைத் தொகுத்து நூலாக வெளியிடப்படுவது மகிழ்ச்சியைத் தருகிறது. இந்நூல் வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் மட்டுமல்லாது பேருள்ளத்தோடு பெருந்துணைப்புரிந்த அறப்பணிச் செம்மல்' வல்லம் **ஆர்.ஆர்.கோவிந்தராசன்** 'மங்கையர்குலத்திலகம்' **சூரியகலா கோவிந்தராசன்** இருவருக்கும்இதயங்கனிந்த நன்றி.

அருளுரை வழங்கிய **தவத்திரு. குமாரசாமி அடிகளார்** அவர்களுக்கும் முகவுரை எழுதி, நூலுக்கு அழகு சேர்த்த கலைமாமணி கல்லாடன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. சொற்பொழிவுகள் ஔவைக் கோட்டத்தில் அரங்கேறுவதற்குத் துணைநின்ற அனைத்துத்தமிழ் நெஞ்சங்களுக்கும், பங்கேற்றவர்களுக்கும் நன்றி.

பேராசிரியை **சரசுவதி இராமநாதன்** அவர்களின் இச் சொற்பொழிவு நூல் கருத்துக்கருவூலம் ; வாழ்வியல் பெட்டகம் ; தமிழ்ச்சுரங்கம்; இதனைப்படித்து, வாழ்வில் பின்பற்றி வாழ்வோமாக.



கண்ணகி கலைவேந்தன்
பதிப்பாசிரியர்.

மதிப்புரை

நிறை நிலவு ஒளியில் பேராசிரியர் முனைவர் சரசுவதி இராமநாதன் ஔவையார் பற்றி ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்நூல்.

பேராசிரியர் சமய இலக்கியங்களில் தோய்ந்தவர், கம்பனில் ஆழங்கால்பட்டவர், பாரதியால் தம்மைப் பறி கொடுத்தவர். அவருடைய சொற்பொழிவுகளையும் பட்டிமன்றங்களையும் பலமுறை கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

ஔவை பற்றி அவர் உரைகள் காற்றோடு கலந்து விடாமல் எழுத்து வடிவம் பெற்று நூலாக்கம் பெறுவது மிக்க பயனுரைடயது; பாராட்டுக்குரியது.

ஔவை என்றதும்தமிழ் மூதாட்டி தான் நினைவில் தோன்றுவார். ஔவை என்னும் சொல் தெலுங்கில் 'அவ்வா' என ஒலித்துப் பாட்டியைக் குறிக்கிறது. இதுவே கன்னடத்தில் 'அவ்வே' என ஒலிவடிவம் பெற்று வழங்குகிறது. இலக்கியத்தில் இச்சொல் தாய், தவப்பெண், கிழவி என்றும் பேச்சு வழக்கில் பாட்டி என்றும் பொருள்படும்.

ஔவையார் உயர்ந்தவர், நன்மதிப்பைப் பெற்றவர். அவர் ஒருவரா அன்றிப் பலரா?.

நம் இலக்கிய வரலாற்றில் ஓரே பெயரில் பலர் பல காலங்களில் வாழ்ந்து வந்துள்ளனர். எடுத்துக்காட்டுக்குக் கல்லாடனாரைச் சொல்லலாம்; கபிலரைக் குறிக்கலாம். ஆனால் ஔவையார் ஒருவரே என்றும் பலர் என்றும் கதைகள் வழங்குகின்றன.

சங்க இலக்கியங்கள் வெளிவருவதற்கு முன்பு வரை ஔவை பற்றிய கதைகள் செவிவழிச் செய்திகளாகவும் கண்டனவாகவும் கேட்டனவாகவும் தொன்மங்களாகவும் பேசப்பட்டு வந்துள்ளன.

ஔவை ஆதி என்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் பிராமணர்க்கும் பிறந்த எழுவருள் மூத்தவர் என்றும் நீண்ட நாள் உயிர் வாழ்ந்தவர் என்றும், கவி வல்லவர் என்றும், துறவறம் மேற்கொண்டவர்

என்றும் சொல்லப்படுகின்றது.

சங்க இலக்கியம் வெளிச்சத்திற்கு வந்த பிறகு சங்ககால ஔவையார் பற்றிய அரிய வரலாற்றுகள் கிடைக்கப்பெற்றன. இவர் அகவை முதிர்வாலும், பாட்டுத்திறத்தாலும் முதன்மையானவர்; பாணர் மரபினர். அதியனின் அருகில் இருந்தவர், அரசியல் செல்வாக்குப் பெற்றவர் போரை நிறுத்தியவர், அமைதி காத்தவர், மக்கள் நலம் பேணியவர், மூவேந்தராலும் போற்ற மதிக்கப் பெற்றவர்.

இப்படியாகச் சங்ககால ஔவையர், இடைக்கால ஔவையார், பிற்கால ஔவையார் என ஔவையார் பலர் பல காலங்களல் வாழ்ந்துள்ளனர்.

ஜெமினி பட நிறுவனம் ஔவையர் பற்றிய செய்திகளைத் தொகுத்துத் திரைப்படம்எடுத்து ஒரே ஔவையாராகப் புனைந்து காட்டியது.

இப்படியெல்லாம் ஔவை பற்றிய பல நிலைகள் ! பேராசிரியர் இவற்றையெல்லாம் ஆய்வு செய்துள்ளார். ம.பொ.சி., மு. அருணாசலம், தேவநேயப்பாவாணர், வ.ரா. வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகன், சதாசிவம் பிள்ளை, பாரதியார், தாயம்மாள்அறவாணன், இன்குலாப் போன்ற அறிஞர்கள்கண்டுரைத்த செய்திகளையும் வரலாறுகளையும் கருத்தில் கொண்டும், சங்க இலக்கியங்கள், ஔவைபுராணம், கபிலரகவல், திருவள்ளுவர் சரிதை, வினோதரமஞ்சரி, ஞானாமிர்தம், தனிப்பாடல் திரட்டு போன்ற நூல்கள் நுவலிய செய்திகளை உய்த்துணர்ந்தும், ஔவையார் ஒருவரே என்னும் கருத்து ஏற்கத்தக்கதல்ல என்று நிறுவுகிறார். ஔவையின் பெயர் விளக்கம், காலம் பல்வேறு காலகட்டதில் வாழ்ந்திருந்த ஔவையார் பற்றியெல்லாம் கண்டறிந்து பேராசிரியர் இந்நூலில் விளக்குகிறார்.

ஔவை ஓர் அறிவுக்கடல், பெண்பாற்புலவர்களில் முதன்மையர்; ஆண்களுக்கு நிகரான அறிவுநலஞ் சாரந்தவர் : அகம் புறம் பாடுவதில் வல்லவர்; வீரம் கனிந்தவர் ; ஈர நெஞ்சினர்; பாணர் வழிவரு பாடினி: அறநெறிமடந்தை, மன்னர்களைப் புகழ்ந்த மாப்புகழ்மடந்தை, மன்னர்கள் போற்றிய மாதர்குலத்திலகம், அரசியல் வல்லுனர், இறையின் புகழை இல்லின் சிறப்போடிணைத்துப் பாடிய இன்கவி நல்லார், வாழ்வியற்

பொருள் மொழி வழங்கிய வள்ளல் என்றெல்லாம் ஔவையின் பண்புநலன்களைக் காட்டி, அந்நல்வழியில் நடப்பதற்கு ஆசிரியர் நம்மை ஆட்படுத்துகிறார்.

ஔவை அறநெறி உணர்த்திய அருந்தவச் செல்வி, அழகன் முருகன் கேட்டு மகிழும் அருந்தமிழ் வாக்குடையவர், ஞானக்குறள் தந்த சித்தர், குழந்தைக் கவிஞர், நகைச்சுவை நாவலர், இயற்கையைப் பாடும் இன்சுவைக்கவிஞர், தன்னுர்ச்சிப்பாடலில் தனித்துவம் பெற்றவர், பெருமிதம் கொண்ட அருங்கவிவாணர் என்பதையெல்லாம் ஆய்ந்துணர்ந்து எடுத்துக்காட்டி ஔவையின் பன்முகப் புலமையைப் பேராசிரியர் ஓதுகிறார். ஒவ்வோர் ஔவையின் தனித்திறம் சொல்லி அவரவர் தனித்தன்மையை விளக்குகிறார்.

இப்படி முனைவர் சரசுவதி இராமநாதன் அவர்கள் ஔவையார் பற்றி செய்திகளை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு அவர்கள் படைப்புகள்அனைத்தையும் நெஞ்சங்கொண்டு மக்களுக்கு நிகழ்த்திய உரைகளை வண்ணத்தமிழால் நூலாய்ச் சமைத்துள்ளதை உளம் நெகிழ்ந்து போற்றுகின்றேன்.

நூலின் கண் உள்ள மேலும் பல செய்திகளை எடுத்துக்காட்ட விழையினும், விரிவாஞ்சி ஒரு சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

பேராசிரியர் ஔவையாரையும் வள்ளுவரையும் நுட்பமாகவும் பொருண்மையோடும் இணைத்துக்காண்கிறார்.

'இல்லறமல்லது நல்லறமன்று' என்று ஔவை கூற, அதே நோக்கில் 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்று வள்ளுவர் கருத்துரைப்பதை உலகியலுக்கும் பொருத்திக் காட்டுகிறார்.

திருவள்ளுவர் 'துறவு'க்கு ஓர் அதிகாரமே வகுத்திருக்க ஔவை மூதாட்டி துறவறத்தைப்பற்றி பேசவே இல்லை என்பதை எடுத்துரைக்கிறார்.

'மருந்தேயாயினும் விருந்தோடுண்' , ஔவையின் இந்தக் கொன்றை வேய்ந்தோன் விளக்கமாகவே,

'விருந்து புறந்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'

என்ற குறள் விளங்குவதைப்பேராசிரியர் எடுத்துரைப்பது இனிமை பயக்கிறது.

ஔவை குறள், இவ்வுரை ஒரு புதிய விளக்கம். திருவள்ளுவர் ØÄV_ ó Vm s ä¦ **'வீடு'** என்னும் பகுதியை ஆன்ம நிலையில் எளிமையாக விளக்கி அருள் ஒளி தந்து இன்பநிலை காணச் செய்கிறது. மரணமில்லா வாழ்விற்கு வழிகாட்டுகிறது.

திருவள்ளுவரின் நடை பாமரமனிதனை எட்டவில்லை, ஆனால் ஔவையின் நடை பாமர மனிதனை எட்டியுள்ளது என்ற நிலையையும் ஆசிரியர் உய்த்துச் சொல்கிறார்.

'ஔவையார் தமிழ் வாழ்க்கையாக மாறிவிட்டார், உண்மையில் தமிழ் வாழ்க்கையே ஔவையாராக மாறிவிட்டது' என்ற வ.ரா.வின் கருத்துக்கு ஆசிரியர் மேலும் அரண் சேர்க்கிறார். ஔவைக்குப் புகழ் சூட்டுகிறார்

பாரி மாண்டதும் அவருடைய நண்பர் கபிலர் மாண்டார்; கோப்பெருஞ்சோழன் உயிர் துறத்தும் அவருடைய நண்பர் பிசிராந்தையார் உயிர் நீத்தார். இவர்களைப் போலவே அதியமானிடம் உழுவலன்பும் உயர்ந்த நட்பும் கொண்டிருந்த ஔவை, அவன் மாண்டபோது அவர் உயிர் விட்டாரில்லை. இதற்குக் காரணம் என்ன?

ஔவை அதியமான் தந்த அரிய நெல்லிக்கனியை உண்டதால் நெடுநாள் வாழ முடிந்தது. அதோடு ஒரு பெண் தன் கணவனல்லாத வேறோர் ஆடவனுக்கு உயிர் ஈதல் மரபன்று என்பதால் ஔவை உயிர் துறக்கவில்லை.

இந்தச் சூழலுக்கு ம.பொ.சி. கண்ட அமைதி ஒரு சிறந்த காரணம். தமிழ்ப் பண்பாட்டு மரபு !

பேராசிரியர் சரசுவதி இராமநாதன் அவர்கள் தமிழ்ப் பண்பாட்டு மரபை நினைவு கூறுவதற்கென்றே இச்செய்தியைத் தம் உரையில் குறித்துள்ளார். இதிலிருந்து பேராசிரியர் ஔவையின்பால் கொண்டுள்ள ஈடுபாடும் அவருடைய பண்பு நலனை நுண்மையாக எடுத்துக்காட்டும் திறனும் விளக்குகிறது.

ஔவை காட்டும் களவையும் கற்பையும் பேராசிரியர் சரசுவதி

இராமநாதன்உணர்ந்து அதில் தோய்ந்து தோய்ந்து எழுதியுள்ளார். ஔவையின தமிழ் காதற் பண்கள மட்டுமல்ல, அவை பண்பாட்டுச் செல்வங்கள் என்பதை உணர்ச்சி பொங்க உரைக்கின்றார்.

இறுதியில் ஔவையைஒரு பல்கலைக்கழகமாக அடையாளங் காட்டி இருப்பது ஔவையின் விழுமிய நிலையையும் முழுமைத் தன்மையையும் புலப்படுத்துவதோடு பேராசிரியர் சரசுவதி இராமநாதன்அவர்களின் புலமையையும் உரையின் வீச்சையும் ஆய்வின் சிறப்பையும் உணர்த்துகிறது.

இத்தகு சீர்சால் ஔவையின் கருத்துக் கருவூலத்தைக், கவிதைக் களஞ்சியத்தைப், பண்பாட்டுச்சிந்தனையை யார் தான் இழக்க ஒருப்படுவார்?.

'பாடுபட்டுச் சேர்த்த செல்வங்களை இழந்தாலும் சேகரித்துக் கொள்ளலாம்; ஔவை பிராட்டியின் நூல்களை இழக்க ஒரு போதும் சம்மதப்பட மாட்டோம்!' என்ற சிலம்புச் செல்வர் ம.பொ.சியின் உணர்ச்சி ததும்பும் உரையைப் பேராசிரியர் கோடிட்டுக் காட்டும் போது ஔவையின் புலமை, ஆற்றல், பன்முகத்திறம் முதலியன தெற்றென விளங்குகின்றன.

ஆக, இந்நூல் ஔவை பற்றிய பலவண்ணங்களின் முழுவடிவத்தையும் ஆழ்ந்து உணர்த்துகிறது; அரிய படைப்பாகத் திகழ்கிறது; ஔவை புகழ் பரவத் துணை நிற்கிறது.

சுருங்கச் சொன்னால், ஔவையை முழுமையாகக் காணமுடிகிறது.

இத்தகையதோர் அரிய நூலினை வழங்கிய பேராசிரியர் அவர்களைப் பாராட்டுகிறேன். என் இனிய நல்வாழ்த்துக்களைக் கவிதையில் வழங்குகிறேன்.

ஔவையினைப் பற்றியொரு நூல்ப டைத்தார்
அரியகலை வாணிபெயர் பூண்டார் இங்கே
ஒவ்வாத பொய்க்கதைகள் புராண மெல்லாம்
ஒதுக்கியவர் வரலாற்றின் நிலையு ரைத்தார்;
செவ்வியநல் இலக்கியத்தின் வழியில் நின்று

சீரார்ந்த ஔவைமொழி எடுத்து ரைத்தார் :
எவ்வெவரும் நல்வழியில் நடக்கச் சொல்லி
இனிதுரைத்த தமிழ்ப்பாட்டி ஏற்றம் சொன்னார் !


நிறை நிலவின் ஒளியதனில் தமிழ்மு தாட்டி
நெறியதனை அரும்வாழ்வை எடுத்து ரைத்தார் :
அறநெறிகள், மூதுரைகள் ஆத்தி சூடி
அன்புரைகள் குறள்நெறிகள் காதல் வீரம்
குறைவுபடா பெருநடப்பு கொடையின் மாண்பு
கொள்கைநலம் பண்புநலம் யாவும் காட்டி
உரைசெய்தார், நூலாக்கித் தந்தார் இன்னே
ஓங்குபுகழ் சரசுவதி இராம நாதன் !

அன்னையினைச் சரசுவதியார் ஆய்ந்து கண்டார்,
ஔவையொரு பல்கலைசேர் கழகம் என்றார்:
முன்னமவர் புகழுரைத்தார், பெருமை சொன்னார் :
முந்துதமிழ் உணர்வினிலே கரைந்து போனார்!
இன்னுமவர் பலநூ ல்கள் படைத்து வாழ்க
இனித்தமிழ் ஔவைநலம் போற்றி வாழ்க !
கன்னல்நிகர் தமிழெடுத்துக் கல்லா டன்யான்
கவிதையிலே வாழ்த்துகின்றேன், வாழ்க நீடே !

அன்புடன்..
(ஓ- ம்)

(கல்லாடன்)
23.05.2007.

கலைமாமணி **கல்லாடன்**
'திருக்குடில்'
21, வாணிதாசன் தெரு,
குயவர்பாளையம்,
புதுச்சேரி - 605 013
தொலை பேசி (0413) 2241689.



நன்றிவுரை

முனைவர் *சரசுவதி இராமநாதன்* அவர்களின் சொற்பொழிவுகள் **'நிறை நிலவொளியில் ஔவையார்'** என்ற தொகுப்பு நூலாக திருவையாறு **தமிழய்யா வெளியீட்டகம்** வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

தொடர் சொற்பொழிவுகளிலும் நிறைவு விழாவிலும் நாங்கள் பங்கேற்றுமை எங்கள் குடும்பத்திற்கு கிடைத்தபெரும் பேறாகக் கருதுகிறறோம். முனைவர் சரசுவதி இராமநாதன் பெண்குலத்திற்குப் பெருமை சேர்க்கும் பேரறிவாளர்; பெருநாவலர்; ஆன்மீகச் சுடரொளி; முத்தமிழ் அரசி; அவரின் சொற்பொழிவினை நூலாக தமிழய்யா வெளியீட்டகம் வெளியிடுவதுப் பாராட்டிற்குரியது.

சொற்பொழிவிற்குத் துணை நின்ற தமிழய்யா கல்விக் கழக மதிப்பியல் தலைவர் மருத்துவர் **சு.நரேந்திரன்**, அரிமா **வை. கலியபெருமாள்**, வேளாண்மை விஞ்ஞானி டாக்டர். **வா.செ.செல்வம்**, **தங்க.கலியமூர்த்தி**, மருத்துவர். **ச.தமிழரசன்** கல்வித்தந்தை **ஏ.வி.இராமன்**, **ந.கலைச்செல்வன்**, திருமானூர் **வ. பஞ்சநாதன்** ஆகியோர்க்கும் நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலினைத் தொகுத்த முனைவர் **மு.கலைவேந்தன்,** பதிப்பாசிரியர் திருமதி. **கண்ணகி கலைவேந்தன்** ஆகியோர்க்கும் மெய்ப்புப்பணிக்குத்துணை நின்ற புனல்வாயில் புலவர் **தியாகராசன், ச. இராசலெட்சுமி** மற்றும் நூலாக்கத்திற்குத் துணைநின்ற அனைவருக்கும் நன்றி.

இவ்வரிய நூல் அனைவரது இல்லங்களிலும் தமிழர்களின் உள்ளங்களிலும் இடம்பெற. வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திருமதி. சூரியகலா கோவிந்தராசன்
வல்லம்.

என்றும் நினைவில்...

தஞ்சை மாவட்டம், திருவையாற்றில் இயங்கிவரும் ஔவைக் கோட்டத்தில் தமிழய்யா கல்விக் கழகமும், குழந்தைகளுக்காக தொடக்கப் பள்ளியும் நடைபெற்றுவருகிறது. ஔவையாரின் புகழையும்தமிழ்த் தொண்டையும் வளர்ச்சியடையச் செய்யும் பணியில் ஔவைக் கோட்டம் ஈடுபட்டு வருகிறது. ஔவையார் தமிழ்மொழிக்காற்றிய தொண்டினையும், தமிழ் வளர்ச்சிக்காக அவர்பாடிய பாடல்களையும் பலரும் அறிந்துகொள்ளும் நோக்கத்தில் திருவையாற்றில் முனைவர் **மு. கலைவேந்தன், கண்மணி** ஆகிய இருவரும் ஔவைக் கோட்டத்தை நிறுவி அதன் மூலம் பலரும் பயன்பெறும் வகையில் சீரோடும், சிறப்போடும் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியினையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஔவைக்கோட்டத்தின் மூலம் தமிழ் மொழியைச் செம்மை படுத்தும் வகையில் பல ஆன்மீக சொற்பொழிவுகளும் நடைபெற்றுவருகிறது. ஔவைக்கென்று ஆலயம் உள்ளது. ஔவைக்கோட்டத்தில் ஒவ்வொரு திங்களும் நிறைநிலவு நாள் அன்று நடைபெறும் சொற்பொழிவில் முனைவர் திருமதி **சரசுவதி இராமநாதன்** அவர்கள் சொற்பொழிவுகளின் 12 திங்கள் தொகுப்பினை நூலாக வெளியிடுவதை நான் உளமாற வாழ்த்துகிறேன். இது போன்ற சொற்பொழிவுகளை நூலாக வெளியிடுவதன் மூலம் அதில் கலந்துகொள்ள முடியாதவர்களும் அதனைப் படித்து பயன் பெறும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலை எனது தந்தை திருமிகு **ஆர். இராமசாமி உடையார்** -தாயார் திருமதி **ஆர். சிவபாக்கியத்தம்மாள்** அவர்களின் பொற் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். இந்நூலினை வெளியிடுவதன் மூலம் தமிழய்யா கல்விக் கழத்தின் பணியில் என்னையும் இணைத்துக் கொண்டதற்காக பெருமைப்படுகின்றேன். **பார் உள்ளவரை ஔவையாரின் புகழும் இருக்கும்** நன்றி.



இப்படிக்கு

(ஓ – ம்)

'RTN. PP. MPHF' **ஆர்.ஆர்.கோவிந்தராசன்** பி.ஏ.,
பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர்,தஞ்சை மாவட்டம்
ஸ்ரீ மாருதி நவீன அரிசி ஆலை, திருமலை சமுத்திரம்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ஔவையார்



பேருள்ளங்கொண்ட பெருந்தகைகள்

அமரர். **ஆர். இராமசாமி உடையார்,**

திருமதி. **ஆர். சிவபாக்கியத்தம்மாள்**

ஆகியோர்களின் பொற்பாதங்களுக்கு இந்நூலினைச் சமர்ப்பிக்கிறோம்.

ஆர்.ஆர். கோவிந்தராசன், சூரியகலா கோவிந்தராசன்

ஸ்ரீ மாருதி நவீன அரிசி ஆலை,

திருமலை சமுத்திரம்

சொற்பொழிவுகள்

அறஞ்செய விரும்பு

சொற்பொழிவு-1

ஔவையைப் போற்றுதும் ஔவையைப் போற்றுதும்
அருந்தமிழ் தெய்வமாம் ஔவையைப் போற்றுவோம் !
ஔவையைப் போற்றுதும் ஔவையைப் போற்றுதும்
ஆத்தி சூடி அருளிய ஔவையைப் போற்றுவோம் !
ஔவையைப் போற்றுதும் ஔவையைப் போற்றுதும்
அறநெறிகள் வழங்கிய ஔவையைப் போற்றுவோம் !
ஔவையைப் போற்றுதும் ஔவையைப் போற்றுதும்
அருந்தமிழ்த் தெய்வமாம் ஔவையைப் போற்றுவோம் !

ஔவையார் ஒரு 'அமுத சுரபி' : ஆம் அறநெறிகளையும் வாழ்வியல் அனுபவங்களையும் அள்ளி வழங்கிய அமுத சுரபிதான். 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற குறிக்கோளோடு வாழ விரும்புபவர் அனைவரும் இவரின் ஆத்திசூடி முதலான அறநெறிகளைக் கற்று, இன்புற்று பின்பற்றுதலே சிறப்பான நேரிய வாழ்வு எனலாம்.

ஔவையார் ஒரு கருத்துப் பெட்டகம் ; 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்பதற்கேற்ப எளிய தொடர்களில் வாழ்வியல் இன்ப, துன்பங்களை அனுபவச் சாரங்களை வழங்கிய கருத்துக் கருவூலம் அவர்களின் அறநெறிகள் அன்றும், இன்றும், என்றும் நினைத்து பின்பற்றத்தக்கது எனலாம்.

ஔவையார் ஒரு அறிவுக் கடல் : ஆழமும் அகலமும் பரந்ததும் கரை காண முடியாததுமான கடலைப் போன் ற அறிவு சார் கருத்துக்களை உள்ளடக்கி, அறிவென்னும் ஒளியேற்றி, வாழ்விற்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கம் என்பதை எவரும் மறுக்கலாகாது.

ஔவையார் என்னும் பெயரினையும் அவருடைய நூல்களுள் ஏதேனும் ஒன்றினையும் பற்றி அறியாதவர்கள் இத்தமிழ் நாட்டில் எவரும் இருக்க மாட்டார் என்று துணிந்து கூறலாம். இவர் அறிவுறுத்துங் கருத்து

முடிவுகள் அனைவராலும் விரும்பி ஏற்கப்பட்டு, நாள்தோறும் கடைபிடித்து ஒழுகுதற்குரியனவாய் விளங்கி வருகின்றன.

ஔவையார்-சொற்பொருள் விளக்கம்

ஔவை என்ற சொல்லுக்கு இலக்கியத்தில் 'அன்னை' என்று பொருள் வழங்குவதையும், பொது மக்களுடைய பேச்சு வழக்கில் 'பாட்டி', 'கிழவி' என்று பொருள் வழங்குவதையும் முதலில் ம.பொ.சி. எடுத்துக் காட்டுகின்றார்.

சிலப்பதிகாரத்தில் முற்றிலும் தோய்ந்துள்ள ம.பொ.சி அவர்கள்

" ஔவை மகளிவன் தான் அம்மணம் பட்டிடவா
வையெயிற்று ஐயையைக் கண்டாயோதோழி "

(சிலம்பு, 29. ப.7)

என்று ஔவை என்ற சொல் வருவதைக் காட்டுகின்றார். மணிமேகலையில்,

" தவ்வைய ராகிய தாரையும் வீரையும்
அவ்வைய ராயினீர் " (மணிமேகலை, 11:136-137)

என்று ஔவை என்ற சொல் வருவதைக் காட்டித் தாய் என்ற பொருள் வழங்க இலக்கியத்தில் வழங்கி வருவதை நிறுவுகின்றார்.

ஔவையின் காலம்

தமிழ் இலக்கிய வரலாற்றை நூற்றாண்டு முறைப்படி எழுதி வரும் மு. அருணாசலம் அவர்கள்.

1. சங்ககால ஔவை (கி.பி. 2 ஆம் நூற்றாண்டு)
2. இடைக்கால ஔவை (கி.பி. 10 ஆம் நூற்றாண்டு)
3. சோழர்கால ஔவை (12 ஆம் நூற்றாண்டு)
4. சமயப் புலவர் ஔவை (14 ஆம் நூற்றாண்டு)
5. பிற்கால ஔவை 1 (16 ஆம் நூற்றாண்டு)
6. பிற்கால ஔவை 11 (17-18 ஆம் நூற்றாண்டு)

எனக் கூறுகின்றார் (மு. அருணாசலம் இ.வ.ப. 499)

1979 இல் தமிழிலக்கிய வரலாற்று தேவநேயப்பாவாணரும் 7 வகை ஔவையார் இருந்ததாகக் கூறுகிறார்.

1. கடைக்கழக (சங்க) ஔவை (அதியமான் தொண்டைமான் இடையே தூது நடந்தவர்) (கி.பி. 21)
2. அங்கவை சங்கவை கால ஔவை
3. சேரமான் பெருமாள் நாயனார் கால ஔவை (8 ஆம் நூற்றாண்டு).
4. கம்பர் கால ஔவை (12 ஆம் நூற்றாண்டு)
5. ஔவைக் குறள் ஔவை (14 ஆம் நூற்றாண்டு)
6. ஆத்திசூடி ஔவை (16 ஆம் நூற்றாண்டு)
7. பந்தனத்தாதி ஔவை (17 ஆம் நூற்றாண்டு) (பக் 210)

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் புலவர் புராணத்தில் 12 புலவர் வரலாறு 10 வது ஔவைச் சுருக்கம் சுந்தரரும் சேரமானும் கயிலை சேரு முன்பே விநாயகர் அருளால் ஔவை கயிலை சேர்ந்தார் என்ற செய்தியுடன் தொடங்குகிறார். மழையால் நனைந்து வந்த ஔவைக்குச் சிற்றாடை தந்த பெண்ணுக்கு மணம் முடிக்க சிறிய பனையைப் பெரிய பனை ஆக்கினார். வெட்டிய பலா மரம் துளிர்த்துப் பழுக்க வைத்தார். செவ்வாய் கிழமைப் பிள்ளையார் விரதம் இவற்றைக் கூறுகிறார்.

ஔவையாரின் ஆத்திசூடி

அருந்தமிழ்த் தொண்டும். அமைதித் தொண்டும் ஆற்றிய ஔவையாரின் 'ஆத்திசூடி' எனும் நூல், 108 விதமான அறக்கருத்துக்களை சிறு சிறு சொற்றொடர்களாக்கி, தெளிவுற அமைக்கப் பெற்ற. எழுதப் பெற்ற ஓர் அரிய நீதி நூலாகும். தமிழிலுள்ள அகரம் முதலிய அனைத்து எழுத்துக்களையும் முறையே முதலில் அமைத்து, இவற்றின் சூத்திரம் போலுஞ் சொற்றொடர்களால் அமைக்கப் பெற்று எழுதப்பட்டது இந்நூல். கற்போர் மனதில் பதிவதற்கு ஏற்ற வண்ணம் இனிமையும் எளிமையும் பொருந்தியது மட்டுமல்லாது, பல பெரிய அறநூல்களின் சாரமாகவுள்ள நீதி நெறிக் கருத்துக்களை ஒரே வரியில் தம்முள் பொதித்து வைத்துள்ளது எனலாம். இரமணர் அமுதம் 108 அட்சரமணமாலை எழுதியிருப்பதும் நினைக்கத்தக்கதும், தமிழ்

மொழியில் சிறிய பயிற்சி உடையவர்கள் கூட மிகமிக எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலேயே அமைக்கப் பட்டிருக்கின்றன.

ஆத்திசூடி-ஒருபுதியபார்வை

உலகில் முதன் முதலில் குழந்தை இலக்கியத்தை உருவாக்கிய பெருமை தமிழர்களையே சேரும். ஔவைப் பெருமாட்டியின் ஆத்திசூடியே காலத்தால் தொன்மையும் முதன்மையும் உடைய குழந்தை இலக்கியமாகும். நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் அக்கறை காட்டியவர்கள் தமிழர்கள். குறுகுறு நடந்து சிறுகை நீட்டிக் கொஞ்சி வரும் குழந்தைகளின் வளர்ச்சி நன்முறையில் அமைய வேண்டும். ஏனெனில் ஒரு நாட்டின் எதிர்காலம் அவர்கள் கைகளில் அன்றோ அமைந்து கிடக்கிறது.

ஆத்தி சூடி நூல்கள்

திருக்குறள் அதிகாரத் தலைப்புகளையே கட்டளைகளாகக் கொண்டு வள்ளுவத்தின் சுருக்கப் பதிவேடாக இந்நூல் விளங்குகிறது. இதனைப் பின்பற்றி புதிய ஆத்திசூடி (பாரதியார்), பாரதிதாசன் ஆத்திசூடி, இளையார் ஆத்திசூடி (பாரதிதாசன்), பொதுநெறி புதிய ஆத்திசூடி (சுவாமி சுத்தானந்த பாரதியார்), தமிழ்சூடி (முனைவர். வ.சுப.மாணிக்கம்), புதிய ஆத்திசூடி (வாணிதாசன்), ஆய்வு சூடி (முனைவர். தமிழண்ணல்) , ஆத்திசூடி (முனைவர் ந. சஞ்சீவி)., நெறிசூடி (கவிஞர் நாரா. நாச்சியப்பன்), அறிவியல் சூடி (வரதராசன்) , முத்துச்சூடி (ரெ.முத்துக்கணேசன்) என்று 32 நூல்கள் தோன்றியுள்ளன. எனினும் சூடி என்ற பெயரில் மாற்றமில்லை.

செய்யத்தகுவனவும். செய்யதகாதனவும்.

செய்யத்தகுவனவாக இளமையில் கல், நூல் பல கல், வித்தைவிரும்பு, கேள்வி, முயல் , நன்றி மறவேல் , செய்வன திருந்தசெய் தூக்கி வினை செய், நாடு ஒப்பனசெய், நேர்பட ஒழுகு, பீடுபெறநில், உத்தமனாய் இரு, ஊருடன் கூடிவாழ் போன்றவற்றைக் கூறுகின்றது.

செய்யத்தகாதனவாக இடம் பட வீடெடேல் இயல்பு அலாதன செயேல், அரவம் ஆட்டேல், கைவினைகரவேல், கண்டு ஒன்று

சொல்லேல், தோற்பன தொடரேல், மனம் தடுமாறேல் என்று பலவற்றைக் கூறுகிறது.

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே"

என்னும் கடவுள் வாழ்த்துப் பாடலின் முதல் சொல்லை நூலுக்கும் தலைப்பாக்கி ஔவையாரின் ஆத்திசூடி உள்ளது. பாரதி ஆத்திசூடி இளம் பிறை அணிந்து என்று பாடினார். ஒற்றை வரியில் உருவத்தை அமைத்துள்ளதால் இதில் உவமை, உருவகம் போன்ற அணிகலன்கள் அகற்றப்பட்டுள்ளன. மனிதனின் மனக்கூனலை நிமிர்த்துகின்ற செம்மட்டி அடிமுதல் மனவுணர்ச்சியைச் சோதிக்கும் மயிலிறகு தடவல் வரை அனைவரின் ஆத்தி சூடிகளிலும் தொடர்கள் அமைந்து உள்ளன.

ஔவையாரைப் பின்பற்றி

மனிதனையும் அரசனையும் அறம் செய பணிக்கின்றனர். மனிதனின் உருவாக்கமே அரசு என்பதனால் வேருக்கு நீருற்றி மலருக்கு மகுடம் வைக்கும் நோக்கில் ஔவை பாடியுள்ளார். விரும்பும்மனம் இருந்தால் மார்க்கம் உண்டு: கர்ணன் வரம் "இல்லை என்றுரையா இதயம் கேட்பது" அரசியல் தனிமனித அறம் 'ஆறுவது சினம்' (ஔவை), 'ரௌத்திரம் பழகு' (பாரதி) இவற்றுள் சினம் என்பது கோபத்தைத் தொடரும் உணர்வின் அதிர்வு ஆகும். இது 'ஆற' வேண்டியது என்பதால் நெருப்பு என்று உணரமுடிகிறது. பழகு என்பது கோபப்படுவதற்குக் கற்றுக்கொள் என்கிறது. அந்தக் கற்றல் ஆறுவதையும் அறிந்து கொள்ளும் போது தான் முழுமை அடைகிறது. இருநீதியும் கோபப்பட வேண்டிய செயல்பாடுகளுக்குக் கோபப்பட்டே ஆக வேண்டும் என்கிறது 'ஈவது விலக்கேல்' (ஔவை) என்பதற்கு இணையான பொருளிலேயே, ஈகைதிறன் (பாரதி), ஈதல் இன்பம் (பாரதிதாசன்) ஈவிரக்கம் கொள் (சுத்தானந்தபாரதி) முதலான ஆத்திசூடிகள் உள்ளன.

காலந்தோறும் வளமையும், வறுமையும் , ஈவாரும் இரப்பாரும் ஏழ்மையும், செல்வமும், வாழ்ந்து கொண்டுதான் வருகின்றன. நீதி யுரைப் போரும் வறுமையைத் துடைக்கச் சொல்லி ஈகை அறனை வலியுறுத்திக் கொண்டே வருகின்றனர். பெரும்பாலான ஆத்திசூடிகளின் உயிர்

வரிசையில் ஈ என்பதற்கு ஈகையே இயம்பப் படுகிறது. 'இரப்பவர்க்கு ஈயத்தான்' (அப்பர்) ஐயம் இட்டு உண் (ஔவை) என்பது உண்ணலுக்கு அளவையோ, காலத்தையோ, வகையோ, முறையையோ சுட்டாமல் உண்ண முற்படும் போது உணவின்றிப் பேராடுபவரை நினைக்கவும், ஈயவும் தூண்டுகிறது. 'யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி' பிடி அரிசித்திட்டம் ஔ என்னும் எழுத்து ஔவியம், ஔடதம் என்றே ஆளப்பட்டுள்ளன. ஔவியம், என்பதற்கு அழுக்காறு 'அழுக்காறு என ஒருபாவி' பொறாமை எனப்பொருள் கூறுவர் ஔடதம் என்பதற்கு மருந்து என்று பொருள் இவற்றுள் மனநோய் நீங்க ஔவையும் உடல் நோய் நீங்க பாரதியும், பாரதி தாசனும் கூறுகின்றனர்.

ஃ என்பதைப் அஃகம் சுருக்காதே எனக் கூறிய ஔவைக்குப்பின் அஃகு அகந்தை (சுத்தானந்த பாரதி), எஃகு போலிரு (வ.சுப மா) என்ற சிலரே கூறியுள்ளனர். பாரதியார், பாரதிதாசன் போன்ற பலர் ஆயுதத்தை வைத்து எழுதவில்லை.

ஔவையாரின் பாட்டு வரிச் செய்திகள்

1. பிஞ்சு மனம் பின்பற்றல்
2. அறிவு நிலைப் பின்பற்றல்
3. இளமை நிலைப் பின்பற்றல்
4. முதுமை நிலைப் பின் பற்றல்
5. வாழ்வு நிலைப் பின்பற்றல்

என்ற வரிசையில் துவக்கம் பெற்று வளர்கின்றன.

பிஞ்சு மனம் பின்பற்றல்

உன்னிடம் இருப்பதை பிறருக்காக கொடு ; எளியவர், வறியவர் இவர்களிடம் மறையாது. பொருளை விருப்பமுடன் தந்திடு என்று இளம் வயதிலே வலியுறுத்தினால் என்றைக்கும் வள்ளல்கள் வாழ்ந்து கொண்டே இருப்பார்கள். இவ் வளர்ச்சி பொருளை மட்டும் வழங்கவில்லை; பொருளை வழங்கும் மனதையும், மனிதனையும் நிலை நிறுத்துகிறது. வாழ்வு முடியும் வரையில், இம் முடிவை தெளிவுப்படுத்தவும் தெரியப்படுத்தவும் துணையாய் நிற்பது 'இயல்வது கரவேல்' என்ற ஔவையின் வாக்கு கர்ணன் குறித்துக் கண்ணதாசன்.

`என்ன கொடுப்பான் எவை கொடுப்பான்
என்றிவர்கள் எண்ணுமுன்னே பொன்னகை
கொடுப்பான் ; பொருள் கொடுப்பான்' என்றார்.

2. அறிவு நிலைப் பின்பற்றல்

`ஙப் போல் வளை' `ங' என்ற தனி எழுத்து மற்ற எழுத்துக்களுடன் கூடி வந்து பொருள் உணர்த்துவதை மேன்மையுறச் சொல்கிறது ஔவையின் வாக்கு. அதுபோல் தனி மனிதன் எல்லோரையும் சார்ந்திருத்தல் வேண்டும்.

இனம், மொழி, மதம், இவற்றால் வேறுபட்ட மனிதர்கள் தனித்து வாழ்ந்திடல் முடியாது `கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற வாக்கியத்தை விட `ங' என்ற தனி எழுத்து சேர்ந்து தழுவி வருவதை அறிவு நிலையை அழகுப்படுத்தும் நிலையாக சேர்த்து கொள்கிறது.

3. இளமை நிலையைப் பின்பற்றல்

இணக்கம் அறிந்து இணங்கு, தந்தை தாய்ப்பேண், பருவத்தே பயிர் செய், இயல்பு அலாதன செய்யேல், வஞ்சகம் பேசேல், இளமையில் கல், மேன் மக்கள் சொல்கேள், மை விழியார் மனை அகல், மெல்லி நல்லாள் தோள்சேர்.

இளம் வயது எதை ஏற்க வேண்டும்? எதனைப் போக்க வேண்டும் எனபதோடு மட்டுமின்றி, இளமையில் ஒருவன் மாறி நின்றால் முதுமையில் அவன் வாழ்வு எவ்வாறு இருக்கும்? இளமையில் விளைச்சலை முதுமை என்னும் ஆயுதம் அறுவடை செய்யும். இது காலத்தின் கட்டாயம், இளம் மனதில் தீட்டப் பெறும் திட்டங்கள் நாளை காலத்திற்கு முன்னதாக நிலைத்து நிற்கும். நமது குடியரசு தலைவர் சிறுவர்கள், இளைஞர்களை ஊக்கப்படுத்துவது இதற்காகத்தான்.

4. முதுமை நிலைப்பின்பற்றல்

பூமி திருத்தி உண், பெரியாரைத் துணை கொள்; பேதமை அகற்று, பொருள் தனைப் போற்றி வாழ் , மீதூண் விரும்பேல் போன்ற வாக்குகள் பெரியோரையும், வழிகாட்டிச் சென்ற முதியோர்கள்

அனைவரையும் தேடி, நாடிச் சென்று நன்மை அடைய வழி வகுக்கும். முடிந்தவரை வாழ்க்கையைப் பின்பற்றிச் செல்லல், பெரியோரைத் தொடர்ந்து பயணிப்பது என்றும், அவ்வாறு பின்பற்றாது ஒழியின் அது தீமையின் பால் நிலைத்து நிற்கும் என்பதும் ஔவையின் கருத்து.

5. வாழ்வு நிலைப் பின்பற்றல்

வாழ்வை நலப்படுத்தவும்,நல்வழிப்படுத்தவும் உண்மைப் படுத்தவும், வாழ்வை வளப்படுத்தவும், நம் ஔவையின் ஆத்திசூடி பெரும் துணையாய் நிற்கின்றது.

நுண்மை நுகரேல்

ஆத்திசூடியில் 108 ஓரடிப்பாக்கள் உள்ளன. 'நுண்மை நுகரேல்' என்ற பாவானது 70-ம் எண்ணில் அமைந்துள்ளது. அனைத்துப்பாவும் இரண்டு மூன்று மற்றும் நான்கு (சில) சொற்களால் புனையப்பட்டுள்ளது.

சொல் விளக்கம்

நுண்மை நுகரேல் என்பதன் விளக்கமாக நோய் தரவல்ல உணவினை உட்கொள்ளக் கூடாது என உரையாசிரியர் உரைக்கிறார். அஃதாவது, நுண்மை என்பது நோய்தரும் உணவென்றும், நுகரேல் என்பது உண்ணக்கூடாது எனவும் விரித்துப் பொருள் கொள்ளலாம்.

நுண்மை

இச்சொல் புலமை, நுட்பம், ஆழம், அதிகம் என்ற பொருளிலேயே இதுவரை தொடர்ந்து உணர்த்தப்பட்டு வந்தது, வருகின்றது. தொடர்ந்து ஆராய்ந்தால் கூடுதல், அளவிற்கு மேலாக என்ற பொருளையும் இலைமறை காயாக எடுத்தியம்புகிறது. இவ்வளவு பொருளிலும் ஒட்டு மொத்தச் சுருக்கமாக ஓர் அளவிற்கும் மேலாக, கூடுதலாக என்ற பொருளைக் கொள்வது பொருத்தமெனக் தெரிகிறது.

நுண்ணத்தின்னுட்டான் என்று நாட்டுப்புறத்தில் கூறுவர். இங்கு நுண்ண என்பது வயிறு முட்ட, கூடுதலாக உண்ட நிலையை குறிப்பிடுவதாகும்.

செவி

சுற்றுச் சூழலால் எழும் ஒலிகளை இனம் கண்டு செவியினைப் பயன்படுத்த வேண்டும். பல ஒலிகளைத் தவிர்த்திட வேண்டும். மனதிற்கு இன்பம் தரத்தக்க நல்லனவற்றைக் கேட்க வேண்டும். இவ்வாறு நுண்மை நுகரேல் என்று செவிக்கு கடுதாசு போடுகிறார். கண், வாய், மெய், மூக்கு எல்லாப்புலன்களும் அவ்வாறே திருக்குறளுக்கு அடுத்த நிலையில் ஔவையாரின் ஆத்திசூடிக்கும் விளக்க நூல்கள் பல எழுந்திருக்கின்றன. ஆத்திசூடி வெண்பா, (இராமபாரதி), ஆத்திசூடி வெண்பா (ஆசிரியர் பெயர் தெரியவில்லை), ஆத்திசூடி அந்தாதி. ஆத்திசூடிச் சிந்து, ஆத்திசூடிப் புராணம், ஆத்திசூடித் திறவுகோல் போன்றவை ஆத்திசூடிக்கு விளக்க நூல்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

தற்காலத்தில் ஆங்கில எழுத்துக்களைக் கற்பிக்க 'A for Apple, B for Bag' சொல்லிக் கொடுக்கிறார்கள். இம் முறையைப் பின்பற்றித் தமிழில் அம்மா, ஆடு, இலை, ஈ என்று தமிழ் எழுத்துக்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இது ஆங்கிலேயர் கண்ட கற்பித்தல் முறை என்று சிலர் புலம்புகிறார்கள். ஆனால் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே ஔவையார் தமிழ் எழுத்துக்களைக் கற்க ஆத்திசூடியை அறிமுகம் செய்தவர். ஆத்திசூடியைக் கற்பதின் மூலம் தமிழ் எழுத்துக்களைக் கற்பதோடு, அரிய நீதிகளையும் அறிகிறோம். பாலோடு தேன் கலந்து கொடுப்பது போல ஔவையாரின் ஆத்திசூடி அமைந்துள்ளது.

ஆத்திசூடி களஞ்சியம்

தொன்று தொட்டு வாழ்வியலுக்கு வழிகாட்டும் எண்ணக் களஞ்சியமாக, சிந்தனைக் கருவூலமாக ஔவையாரின் ஆத்திசூடி விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். அகர வரிசையில், நெடுங்கணக்கு அடிப்படையில் 108 தொடர்களாக ஆத்திசூடியை ஆக்கியிருப்பது சிந்தனைக்குரியதாகும்.

அறம், ஒழுக்கம், நட்பு , கல்வி, கேள்வி, சொல், உண்மை, ஊக்கம், குடும்பம், நாடு, தெய்வம், உடல்நலம், வேளாண்மை, ஒப்புரவு, சமுதாய பழக்க வழக்கம் போன்ற வாழ்வியல் நெறிமுறைகளை

உள்ளடக்கிய அறநெறிச்சாரமாக விளங்குவது போற்றத்தக்கதாகும் சாதாரண மனிதனும் நல்ல மனிதனாக, நல்ல குடிமகனாக உருவாக இவ் ஆத்திசூடி இலக்கியம் துணைநிற்கும்.

ஔவையாரும் பாரதியாரும்

ஔவை சொன்ன சொல் அமிர்தம் என்போம் என்ற நிலையில் ஔவையாரைப் பின்பற்றி பாரதியாரும் ஆத்திசூடி படைத்தளித்திருப்பது ஒப்பிடத்தக்கதாகும்.

ஔவையார்	பாரதியார்
ஆறுவது சினம்	ரௌத்ரம் பழகு
தையல் சொல் கேளேல்	தையலை உயர்வுசெய்
தெய்வம் இகழேல்	தெய்வம் நீ என்றுணர்
தொன்மை மறவேல்	தொன்மைக்கு அஞ்சேல்
தோற்பன தொடரேல்	தோல்வியில் கலங்கேல்
போர்த்தொழில் புரியேல்	போர்த்தொழில் பழகு
முனைமுகத்து நில்லேல்	முனையில் முகத்து நில்
ஊண் மிக விரும்பேல்	ஊண் மிக விரும்பு
மூர்க்கரோடு இணங்கேல்	தீயோருக்கு அஞ்சேல்
வெட்டென பேசேல்	வெடிப்புறப்பேசு.

இவ்வாறு சொல், தொடர், பொருள் நிலைகளில் ஔவையாரும் பாரதியாரும் ஒன்று படுவதையும் வேறுபடுவதையும் காண முடிகிறது.

ஆத்திசூடியில் காணலாகும் நயங்கள்

ஆத்திசூடி அறநெறி மட்டுமல்ல வாழ்வியல் சித்திரங்களை, சிந்தனை மொழிகளாக திட்பமும், நுட்பமும் நிறைந்து நிலையில் ஆக்கி அளித்திருப்பதும் எண்ணத்தக்கதாகும். ஆத்திசூடியில் காணலாகும் நயங்கள் அறிந்து இன்புறத்தக்கதாகும்

சனி நீராடு

சனி நீராடு என்பது ஔவையாரின் ஆத்தி சூடி எனலாம். குளிர்ந்த நீரில் நீராடிப்பழகு. சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்து நீராடு.

உடலின் மேலுள்ள அசுத்தங்கள் களையும் வகையில் இந் நீராடுதல் அமைதல் வேண்டும், நாள்தோறும் உடலினைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதும் வாரந்தோறும் எண்ணெய் தேய்த்துக்குளிப்பதும் உடலின் ஆரோக்கியத்திற்கும் தோலின் மிருதுவான தன்மைக்கும் உடல் புத்துணர்ச்சிக்கும் இந்நீராடல் அவசியமாகிறது என்ற சிந்தனையை ஔவையார் இவ் ஆத்திசூடி மூலம் உணர்த்தியிருக்கிறார். மேலும் தேங்கிய நீர் அசுத்தமானது; ஓடும்நீரில், கொட்டும் நீரில் நாள்தோறும் குளிப்பது சிறப்புடையது. இன்னொரு இடத்தில் ஔவையார் 'நீர் விளையாடேல்' என்று கூறுவது முரண்பாடில்லையா? இல்லை தான் ஆழமான நீரில் விளையாடி ஆபத்தை விலைக்கு வாங்காதே என்ற பொருளிலும் 'நீரை வீணாக்காதே' என்ற பொருளிலும் ஔவையார் கூறியிருப்பதும் எண்ணத்தக்கதாகும்.

வேளாண்மை

அன்று முதல் இன்று வரை வேளாண்மைத் தொழில் நம் பாரம்பரியத் தொழிலாகப் போற்றப்பட்டு வந்துள்ளது. வேளாண்மை இன்றேல் வேறு வினைகள் இல்லை எனலாம், அனைத்துத் தொழிலுக்கும் மூல ஆதாரமானத்தொழில். உடலுக்குக் தேவையான உணவை வழங்கும் உயரிய தொழில் எனலாம். திருவள்ளுவர் 'உழவே தலை' என்றும் பாரதியார் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று கூறி யிருப்பதும் எண்ணத்தக்கதாகும்.

ஔவையார் வேளாண்மையின் பெருமையை நன்கு உணர்ந்திருந்த காரணத்தால் ஆத்திசூடியில் 'பூமி திருத்தி உண்' 'நெற் பயிர் விளை' 'பருவத்தே பயிர் செய்' ஆக மூன்று தாரக மந்திரங்களாக வழங்கி வழிகாட்டியுள்ளமை போற்றத்தக்கதாகும்.

உடலோம்பல்

'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்பது திருமந்திரம். 'சுவரை வைத்தே சித்திரம் வரையமுடியும்' என்பது பழமொழி. உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் உயிராற்றல் திறம்பட செயல் பட முடியும் 'வைகறையில் துயிலெழு' ஔவையின் ஆத்தி சூடி விடியற் காலையில் எழும்

போது தூய்மையான காற்றைச் சுவாசிக்கலாம், அன்றாடப்பணிகளையும் உடற் பயிற்சிகளையும் செய்வதற்கு வைகறைப் பொழுதே ஏற்றது என்பதை ஔவையார் அறிவுறுத்தியிருப்பதும் நினைக்கத்தக்கதாகும். சோம்பலை விரட்ட வேண்டும்; உடலிலே சோர்வு ஏற்படும் வரையில் உழைக்க வேண்டும் என்பதை எண்ணிய ஔவையார். 'சோம்பித் திரியேல்' என்றார். 'தூங்காதே தம்பி தூங்காதே , சோம்பேறி என்ற பேரும் வாங்காதே' என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் பாடலும் இதனை நினைவூட்டும்.

இரவில் உறங்கும் போது பஞ்சு மெத்தையில் உறங்க வேண்டும், அதுவும் இலவம் பஞ்சினால் ஆன மெத்தையில் படுத்து உறங்குதல் வேண்டும் என்பதை ஔவையார் 'இலவம் பஞ்சில் துயில்' என்ற ஆத்திசூடியால் அறியலாம். 'அனந்தல் ஆடேல்' 'அரவம் ஆட்டேல்' என்ற ஆத்திசூடிகளால் பாம்பு போன்ற மனிதரிடம் விளையாட வேண்டாம். பாம்பாட்டி பாம்பை ஆட்டுவிப்பான், ஆனால் மற்றவர்களால் அது முடியாது, எனவே பரிச்சயமில்லாத செயலில் ஈடுபட வேண்டாம் என்பதை இல்லற நெறிகளால் உணர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

செயல்திறம்

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்பது வள்ளுவம். தீச் செயலை விடுத்து நற்செயலில் ஈடுபடுதலே நல்ல மனிதர்க்கழகு. மனித குலம் 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு' என்ற பழமொழியை சிந்தனையில் இருத்தல் சிறப்புடையது எச்செயலையும் உரிய நேரத்தில், உரிய முறையில் செய்தலே சிறப்புடையது என்பதை ஔவையார் 'செய்வன திருந்தச் செய்' என்றார். செயலில் ஈடுபடும் போது நன்மை, தீமைகள் நன்கு ஆராய்ந்த பின்னரே அதில் ஈடுபடவேண்டும் என்பதை 'தூக்கி வினை செய்' 'வேண்டி வினை செய்' போன்ற அறநெறிகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

பேச்சு ஒரு கலை

பேச்சாற்றல் மனித குலத்திற்குக் கிடைத்தற்கரிய ஒரு கலை எனலாம்; ஜனநாயக நாட்டில் பேச்சாற்றல் ஒரு முக்கிய இடத்தைப்

பெறுகிறது, பேச்சாற்றல் திறனால் நாட்டின் வரலாறு மாறியிருப்பது நம்மால் இன்றும் நினைத்துப் பார்க்க முடிகிறது. வரலாற்றிலும் சரி நடைமுறை வாழ்விலும் சரி பேச்சாற்றல் பெரும்பங்கு வகிப்பதை உணரலாம். பேச்சாற்றலை நன்நெறி வாழ்விற்குப் பயன்படுத்தலே சிறப்புடையது; தீ நெறிக்குத் தூபமிடும் பேச்சாற்றல் வெறுத் தொதுக்குதல் வேண்டும்; ஒருவரைக் காண்கிற பொழுது ஒன்றும் காணாத பொழுது ஒன்றும் பேசுதலைத் தவிர்த்தல் வேண்டும். முகஞ்சுளிக்க பேசுதல் கூடாது, முகமலர்ச்சியோடும் பிறரைத்துன்புறுத்தாத சொற்களைக் கொண்டும் பேசுதல் வேண்டும்.

உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றும் வைத்து பேசுதல் கூடாது., வஞ்சனையான சொற்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டாது, பிழையாகப் பேசுவதும் வன்மையான சொற்களை நீக்கி வாழ்வதும் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிவகுக்கும் இவற்றை யெல்லாம் ஔவையார் ஆத்திசூடியில்,

'கண்டொன்று சொல்லேல்', 'வஞ்சகம் பேசேல்', 'வல்லமை பேசேல்', 'ஓரம் சொல்லேல்', 'பிழைபடச் சொல்லேல்', 'உடையது விளம்பேல்' 'வாது முற்கூறேல்','வெட்டெனப் பேசேல்', 'சுளிக்கச் சொல்லேல்' என்று கூறியிருப்பதன் மூலம் பேசும் திறனின் கூறுகளை அறிந்து கொள்ளலாம்.

போரில்லா சமுதாயம்

போரில்லா நாடுகளே அமைதியாக வாழ முடியும், போரும் பூசலும் மக்களை சொல்லொணா துயரத்திற்கு ஆட்படுத்தும், எப்பொழுதும் போர்த் தொழிலை மேற்கொள்ளும் நாட்டில் பஞ்சமும் பட்டினியும், அழுகைக் குரலும் தான் மேலோங்கி நிற்கும். உலக நாடுகள் அனைத்தும் போரற்ற அமைதியான சூழலை விரும்புவதும் எண்ணத் தக்கதாகும். ஔவையார் அதியமான் தொண்டை மானிடம் சமாதான தூதுவர் பணி புரிந்து அமைதி ஏற்படுத்தியதை சங்க இலக்கியங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. ஆத்திசூடியில் 'போர்த் தொழில் புரியேல்' என்ற தொடரால் இதனை அறிந்து கொள்ள முடிகிறது.

208

தையல் சொற்கேள்

ஔவையாரின் ஆத்திசூடியில் 'தையற் சொற் கேளேல்' என்ற தொடர் காணப்படுகிறது ; இத்தொடர் இன்றைய நிலையில் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். ஒரு காலத்தில் பெண்கள் கிணற்றுத்தவளையாக வாழ்ந்திருந்த காரணத்தால் ஔவையார் இப்படி சொல்லியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. இருப்பினும் 'தையற் சொற் கேள்' என்பதும் இன்றைய நிலையில் ஏற்றுக் கொள்ளக் கூடியது. தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெண்புத்தி என்பது பின்னால் நடக்கப் போவதை முன் கூட்டியே சொல்லக்கூடிய அறிவுத்திறன் வாய்ந்தது என்பதே பொருத்தமாக காணப்படுகிறது. 'தையற் சொற் கேள்' என்பதற்காக எல்லாவற்றையும் கேட்பதை விடுத்து, எது நல்லது? அதனை மட்டும் ஏற்றுக் கொள்ளுதல் நல்லது. மனைவி கூறுகிறார் என்பதற்காக தாயை விலக்கி வைப்பதும் தாய் கூறுகிறாள் என்பதற்காக மனைவியை விலக்கி வைப்பதும் ஏற்புடையதல்ல. இன்றைய நிலையில் பெண்கள் பல்வகைச் சுதந்திரங்களைப்பெற்று தனித்தியங்கும் திறன் பெற்றவர்களாக விளங்குவது எண்ணத்தக்கதாகும்.

ஔவையாரின் ஆத்திசூடி இலக்கியத்தால் புதிய தொரு இலக்கிய வடிவம் தமிழ் இலக்கிய உலகில் தோற்றம் பெற்றது.. ஆத்திசூடி இலக்கியம் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது பெரியவர்களும் கற்று பின்பற்றத்தக்கது என்பதை அனைவரும் உணரவேண்டும்.

ஆத்திசூடி கற்றால், அதனைப் பின்பற்றினால் உயரிய வாழ்வு வாழலாம் என்ற எண்ணம் மக்களிடையே பரவத்தொடங்கியுள்ளது. எனவே நாமும் ஔவையாரின் ஆத்திசூடியைப் படிப்போம் ; பயனுள்ள வாழ்விற்கு வழி வகுப்போம். தமிழர்களின் பாரம்பரியச் சிறப்பை ஔவையார் வழி நின்று பாதுகாப்போம்.

திருவள்ளுவராண்டு 2037, மாசி 30 (14.03.2006) செவ்வாய் மாலை 6.30 மணிக்கு திருமதி காந்திமதி கலியபெருமாள் தலைமையில் அரிமா வை. கலியபெருமாள் முன்னிலையில் நிறைநிலவு முதற் சொற்பொழிவு நடைபெற்றது.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

சொற்பொழிவு-2

ஔவையாரின் அறநெறிகளில் இரண்டாவது இடம் பெறுவது கொன்றைவேந்தன் அறநெறி நூல் எனலாம். ஆத்தி சூடியைத் தொடர்ந்து அகர வரிசையில் நெடுங்கணக்கு அமைப்பு முறையில் உருவான மற்றுமொரு நூல் கொன்றைவேந்தன். இக்கொன்றை வேந்தன் நூலினை முதல் வரியான '**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**' என்ற தலைப்பில் பேசுவதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

முதல் நெறியே முத்தான நெறியாக அமைந்துள்ளது அனைவரது உள்ளத்தையும் ஈர்த்துள்ளது எனலாம்; தாய், தந்தையரைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்ற சிந்தனையை முதலில் விதைத்தவர் தமிழன்னை ஔவையார் எனலாம்.

இறை இன்பத்தோடு இல்லற இன்பத்தையும் இணைத்து புதுநெறி காட்டிய பெரும் புலவர் ஔவையார் எனலாம். பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்த நற்றமிழ் நங்கையாகவும் நானிலம் புகழும் நாவலராகவும் திகழ்ந்த ஔவையாரின் கொன்றைவேந்தன் அறநெறிப்பனுவலாக வாழ்வியல் ஓவியமாக, வசந்தத் தென்றலாக, அறத்தைப் பேணும் நன்னூலாக ஆக்கி யிருப்பது பெருமைக்குரியதாகும்.

ஔவையார் பற்றி வ. ரா.

"ஔவையார் தமிழ் வாழ்க்கையாக மாறிவிட்டார் உண்மையில் தமிழ் வாழ்க்கையே ஔவையாராக மாறிவிட்டது. எனலாம்". என்கின்றார் வ.ரா. வள்ளுவருடன் ஔவையாரை ஒப்பிட்டுப் பார்த்து வ.ரா. பின்வருமாறு எழுதுகின்றார்.

"வள்ளுவர் அவருடைய திருக்குறள், நடைமுறை உள்ளுணர்விற்கு வற்றாத களஞ்சியமாகும். வாழ்க்கையைப் புரிந்து

கொள்ள விரும்பும் எவருடைய கல்விப் பசிக்கும் ஏமாற்றமளிக்காமல் வழங்குபவர் வள்ளுவர். ஆனாலும் ஔவையாரைப் போல, வள்ளுவர் என்னைக் கவரவில்லை. தமிழ்ப் பாமர மனிதன் வாழ்க்கைக்குள் ஔவையார் எளிதாகத் தனக்குத்தானே தோய்ந்து விடுகின்றார். ஆனால் வள்ளுவர் தமது தனித்தன்மையை மிகச் சிறப்பாக நிலை நிறுத்திக் கொள்வதால் பாமர மனிதன் வள்ளுவரின் அந்த மகத்தான ஆளுமையை அணுக அஞ்சுகின்றான். ஆனால் ஒரு குழந்தை தாயின் மடிமீது அமர்வதுபோல் பாமரன் ஔவையாரிடம் ஈடுபாடு கொள்ளமுடியும்"

தாயம்மாள் அறவாணன் ஔவையார் பலர் என்கிறார்

தமிழ் இலக்கியவழி ஔவையார் பலராவர் என்னும் உண்மையைக் காரண, காரியத்தோடு நிலைநாட்டியுள்ளார் முனைவர் தாயம்மாள் அறவாணன். ஔவையார்களைக் காலவரிசைப்படி அவர் பகுத்துக்காட்டியிருப்பதும் மிகுந்து பயனுடைய முயற்சியாகும்.

ஔவையார் 1	ஏறக்குறைய கி.பி. 2ஆம் நூற்றாண்டு	சங்கப்பாடல்கள் (அகம்+புறம்=59) பொகுட்டெழினி நாஞ்சில் வள்ளுவன் காலம்
ஔவையார் 2	ஏறக்குறைய கி.பி. 10 முதல் 13 ம் நூற்றாண்டு	மூவேந்தர்கள், பாரி கம்பர் முதலியோர் காலம்
ஔவையார் 3	ஏறக்குறைய கி.பி. 16 முதல் 17 ஆம் நூற்றாண்டுவரை	தனிப்பாடல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி அருளியவர்

ஔவையார் 4	ஏறக்குறைய கி.பி 17 முதல் 18 ஆம் நூற்றாண்டுவரை	விநாயகர் அகவல் பாடியவர்
ஔவையார் 5	18 ஆம் நூற்றாண்டு	அசதிக்கோவை, பந்தன் அந்தாதி தந்தவர்
ஔவையார் 6	கி.பி. 18 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு	கல்விஒழுக்கம், பெட்டகம், கணபதி ஆசிரிய விருத்தம் பாடியவர்.

ம.பொ.சி

'*பாடுபட்டுச் சேர்த்த செல்வங்களை இழந்தாலும் சேகரித்துக் கொள்ளலாம். ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம்*' என்கிறார் மா.பொ.சி.

பாவலர் சரித்திரதீபகம் : (யாழ்ப்பாணத்து நூல்)

பாவலர் சரித்திர தீபகம் என்னும் இலக்கியப் புலவர் வரலாற்று நூல் யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் ஆசிரியரும் "உதயதாரகை" என்னும் இதழின் ஆசிரியருமாய் விளங்கிய *அ. சதாசிவம் பிள்ளையால்* இயற்றப்பெற்று 1886 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

410 புலவர்கள் அகரவரிசையில் 84 வது வரலாறாக ஔவையார் வரலாறு சொல்லப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய வரலாறு காண்பதற்குரிய முயற்சி 19 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. ஈழத்துத் தமிழ் மண்ணில் ஆங்கிலக் கல்விச் சூழலில் இது தொடங்கியது.

வரலாறு

ஆதி பெற்ற ஏழு பிள்ளைகளுள் சேட்டையாகிய இவர் சரஸ்வதியின் அவதாரம் என்ப தமிழ் சாகியத்துள்ள பெண்களுள் முதன் முதல் கவி வல்லவராயிருந்தார் இவர் என்றது பலர் துணிபு.

சர்வரோகௌடதம் என்னுமோர் அருமருந்தைக் கண்டுபிடித்து அதை உண்டதனால் பிணிரகிதராய் உசo (240) வயதுக்கு இவர் இருந்தார் எனபது கதை. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்பது இவரது போதனையாயினும் பிரமசாரி விரதமே இவர் சாதனை; கொன்றைவேந்தன், ஆத்திசூடி என்னும் அரிய பெரிய பழமொழி மாலைகள் இரண்டன்றி மூதுரை. கல்வியொழுக்கம், நல்வழி, அசதிக் கோவை, நன்னூற் கோவை, நான்மணிக் கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப் பத்து, ஞானக்குறள், பந்தனந்தாதி என்னும் வேறு பாடங்களையும் இவர் இயற்றினார். சன் மார்க்க சாரம் முழுவதையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்து அகரமாகிய அட்சர நிரையே கோத்தெழுதப்பட்ட ஆத்திசூடியையும் கொன்றை வேந்தனையும் யோன் பண்டிதருடன் பிஸ்ஸெஹ், சட்சென் என்னும் ஆங்கிலேய குரவர்கள் பாராட்டி அவற்றின் மேன்மையையிட்டு இங்கீலிஷில் மொழி பெயர்த்தனர். ஆங்கிலோ பாஷையிலன்றிச் சர்மன், உலாந்தப், பாஷைகளிலும் அவை மொழி பெயர்க்கப்பட்டன. என்கிறார் சதாசிவம் பிள்ளை.

வள்ளுவரும் ஔவையின் கொன்றை வேந்தனும்

'மூர்த்தி சிறியது ; கீர்த்தி பெரியது' என்பது போலவும் அணுவில் புகுந்து ஏழ்கடல் கருத்தாய்ச் சீரும் சிறப்பும் பெற்று நிற்கும் நீதி நூல் "கொன்றை வேந்தன்" ஆகும் 4 சீர் ஓரடிப் பாடலாய் இது திகழ்வதும் ஒரு தனித்தன்மையே 'தந்தைதாய்ப் பேண்' என்ற ஆத்திசூடியின் விரிவே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் (முன்னறி தெய்வம் என்றார் அம்மா அப்பா தெய்வம் என்பது மட்டும் பொருளல்ல முதலில் நீ அறியும் கடவுளர் இவர். பின்னர் அறிய வேண்டிய தெய்வம் உண்டு என்று பொருள்) 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற பரம்பரையினைச் சுட்டித் தொடங்குவது நல்ல மரபுத் தொடக்கமாக அமைந்து உள்ளது ; தாய்வழிப் பிள்ளை, அவள் காட்டி வளர்த்த தந்தை . அவர் வழிகாட்டிய குரு; குருவழி உணர்ந்த தெய்வம் என்ற அடிப்படை வாழ்வியல் நெறிப் புலப்பாடு ஈண்டு கருதற்குரியதே.

'சேமம் புகினும் யாமத்து உறங்கு' , 'தோழனோடும் ஏழமை பேசேல்', 'நல்லிணக்கமல்லது அல்லல் படுத்தும்', 'நீரகம் பொருந்திய ஊரகத்திரு' , 'பாலோ டாயினும் காலம் அறிந்து உண்' ,

போன்ற வரிகள் அன்றாட நடைமுறை வாழ்க்கைக்குத் துணை நிற்பதைக் காணலாம்.

'மோனமென்பது ஞான வரம்பு' என்ற ஔவைக் குரல் விவிலிய நீதிமொழிகளின் எதிரொலி போலுள்ளது.

ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம் (நீதி 12:18)
ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும் (நீதி 15:2)
ஞானிகளின் உதடு அறிவை இறைக்கும் (நீதி 15:7)
தன் வாயையும் உதடுகளையும் திறவாதவன்
ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான் (நீதி 21:23)

இறை நம்பிக்கை

குறள். கொன்றை வேந்தன் இரு நூல்களும் இறை நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. அதே நேரம் சமயப் பொறையுணர் வோடும் திகழ்கின்றன. சமய பொறையுணர்வு உலகெங்கும் மறைந்து வரும் இன்றைய கால கட்டத்தில் இந்நூற்கருத்துக்கள் உலகெங்கும் பரப்பப்பட வேண்டும். ஔவை தன் கடவுள் வாழ்த்தில் இறைவன் பெயரைக் கூட சுட்டவில்லை.

'கொன்றை வேந்தன் செல்வனடியிணை
என்று மேத்தித் தொழுவோமியாமே'

என்பதை கொன்றை வேந்தனில் காணப்படும் இறை வணக்கம். கொன்றை வேந்தன் செல்வனாக விநாயகரைக் குறிப்பிடுகின்றார், உரையாசிரியர் முருகனாகவும் இருக்கலாம்! வள்ளுவரோ பத்துப் பாடல்களில் இறை வழிபாடு நடத்துகின்றார். இறைவனுக்குப் பல பெயர்களைச் சூட்டுகின்றார். ஆனால் ஒரு பெயரில் கூட, மதச்சார்பு இல்லை. ஆதிபகவன். வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான் இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், என அவர் சூட்டுகின்ற பெயர்களில் எந்த மதச் சார்பையும் காண முடியவில்லை. பேதமுள்ளதலை, கரங்கள், கொடி, வாகனம் இவற்றைச்சுட்டாது பேதமற்ற திருவடியை மட்டுமே குறிப்பிடுகிறார்.

இல்லறம்

ஒளவை மூதாட்டி தம் நூலில் துறவறத்தைப் பற்றி பேசவேயில்லை.

'இல்லறமல்லது நல்லறமன்று' எனக் கூறி இல்லறத்தை மட்டுமே போற்றியுள்ளார். குறள் கருத்தும் இதே நோக்கிலேயே அமைந்துள்ளது.

'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.'

பட்ட 'தே' - தேற்ற ஏகாரம் இல்லறத்தின் மேன்மையைக் குறிக்கிறது உலகியலுக்குப் பொருந்தியது இல்லறமே.

விருந்தோம்பல்

சிலம்பில், கணவனைப் பிரிந்திருந்த கண்ணகி விருந்தோம்பல் மேற்கொள்ள முடியாமல் போனது என மிகவும் வருந்திக் கூறுகின்றாள். தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடல் இழந்த என்னை என்று வருந்துகிறாள். குறளும், கொன்றைவேந்தனும் சாவா மருந்தாக இருப்பினும் விருந்தினர்க்குக் கொடுத்தே உண்ண வேண்டும் என ஆணையிட்டுச் சொல்கின்றன. (சாவா) "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என கொன்றை வேந்தன் கூறுகின்றது.

"விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
ஈலாதார் வேண்டற்பாற்றன்று" என்பதே குறள் கருத்தாகும். பொருளைத் தீயவர் கைப்பற்றிக் கொள்ளுவர் என அச்சுறுத்துகின்றது. கொன்றை வேந்தன் ! குறள் சற்று மென்மையாக எடுத்துக் கூறி ஈகை செய்யச் சொல்கின்றது.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்பதே குறள் கருத்தாகும். புகழ் பெறச் செய்ய வேண்டியது '*ஈகை*' என அறிவுரைக்கின்றது இக்குறள். உடலைச்சுமக்கும் வாகனம், வண்டிக் காரர் இவர்களுக்குக் கூலி தருகிறாயே உயிருக்கு என்ன தரப்போகிறார்?.

வினைப்பயன்

'ஆருயிர் முறைவழிப்படூஉம்' என்றார் கணியன்பூங்குன்றன். மனித வாழ்க்கை அவரவர் வினைக்கு ஏற்பவே அமையும் என்பது சமுதாய நம்பிக்கை. "ஊழ்வினை உருத்து வந்தூட்டும்" என்பதை உணர்த்தி நிற்கின்றது. சிலப்பதிகாரம் !. வினைப்பயன் பற்றிய சமுதாய நம்பிக்கை இரு நூல்களிலும் அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்கிறார் ஔவை
"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்பதன் வாயிலாக வினைப்பயன் கட்டாயமாகத் தொடரும் என்பதைக் குறள் அழுத்தமாக எடுத்துரைக்கின்றது.

மக்கட்பேறு

மங்கலமான மனைமாட்சிக்கு நன்கலமாவது நன்மக்கட்பேறு ! குறு குறு நடந்து சிறுகை நீட்டிக் குதலைபேசும் மக்கட் செல்வத்தைப் போற்றாத புலவரில்லை. மக்கட் பேறின்மை இன்றைய விஞ்ஞான யுகத்திலும் பெரும் குறைபாடாகவே கருதப்படுகின்றது. சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த மக்கட்பேறு பற்றி அற நூல்கள் ஒத்த கருத்தினையே வெளிப்படுத்துகின்றன. "ஏவா மக்கள் மூவா மருந்து" எனக்கொன்றை வேந்தன் கூறுகின்றது.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" என்பது குறள் கருத்தாகும்

குறிப்பறிந்து வினையாற்றும் மக்கள் தேவாமிர்தம் போன்றவர் என்பதை ஔவை கருத்தாக உள்ளது. அறிவறிந்த மக்கள் பேற்றை விடச்சிறந்த பேறு வேறு இல்லை என்பதே குறள் கருத்தாகும். இங்கு மக்கட்பேறு சிறப்பித்துச் சொல்லப்படுவதோடு அம்மக்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றியும் அறிவுறுத்திக் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. "நல்லதாய் தந்தை ஏவ, நான் இது செய்யப்பெற்றேன்" என்று அப்பூதியடிகளாரின் மகன் கூறுவது நினைந்து இன்புறத்தக்கது.

கல்வி

கல்விச் செல்வத்தைக் கண்களோடு ஒப்பிட்டுச் சொல்கின்றன தமிழ் நூல்கள்

கொன்றைவேந்தன், குறள் இரண்டுமே
" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் " என்றும்
" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு " என்றும் கூறுகின்றன.

ஈகை

" ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் " எனக் கூறுவதன் மூலம் கட்டாயமாக, ஈகை செய்; இல்லையேல் உன் பொருளைத்தீயவர் கவர்ந்து செல்வர்.

" அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செரிந்து உண்ணாமை நன்று "

என்பதன் வாயிலாக வேள்விப் பயனை விட உயர்ந்தது. பிற உயிரைக் கொன்று தின்னாமை என அறிவுறுத்துகின்றது குறள்.

" நோன்பு என்பது கொன்று தின்னாமை " என்றார் ஔவை.

பிறன்மனை விரும்பாமை

" பிறன்மனை புகாமை அறமெனத்தகும் " என்பதன் மூலம் பிறன்மனை விரும்புதல் அறமன்று என கொன்றை வேந்தன் உணர்த்துகின்றது.

" பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு "

பிறன் மனை விரும்பாத்தன்மை அறம் மட்டுமன்று ஒழுக்கமும் ஆகும் எனப் போற்றுகின்றது. குறள். ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்று வாழந்தால் எய்ட்ஸ் என்ற உயிர்க் கொல்லி வருமா !

பெண்களுக்கு அழகென்று சொல்லப்படுவன

1. உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு

அழகை விரும்பும் பெண்கள் அதிக உணவு சாப்பிட்டால் அழகு குறையும். ஆதலால் அளவோடு சாப்பிட வேண்டும். பெருந்தீனி ஆபத்து.

2. காவல் தானே பாவையர்க்கு அழகு

தங்கள் கற்பைத் தாங்களே காத்துக்கொள்ளும் பெண்களே அழகுள்ளவர்கள். மற்ற பாவையர்கள் வெளி அழகு இருந்தும் அழகு இல்லாதவர்கள்.

3. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன்

எல்லாம் தெரிந்திருந்தும் கூட ஒன்றும் அறியாதவர்கள் போல் இருப்பதே பெண்களுக்கு அழகு தரும் ஆபரணமாகும்.

இவைகளையே பெண்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியது என்றும், ஔவையார் கூறிய முறைப்படி வாழ்ந்தால் பெண்கள் பெருமை அடைவார்கள் என்பதும் விளங்கும்.

பெற்றோர்கள் செய்ய வேண்டியவை

1. சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை

தன் மக்களைப் பற்றி ஒரு தகப்பன் அவர்கள் இடத்திலே புகழந்து பேசக்கூடாது என்பதாம்.

2. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு

பெரியோர்கள் பார்த்து நல்லவர்கள் என்று சொல்லும்படி பெற்றோர்கள் பிள்ளைகளை நல்லவர்களாகவும், கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவும் வளர்க்க வேண்டும்.

இவ்விரண்டையும் பெற்றோர்கள் செய்தால் பிள்ளைகளின் எதிர்காலம் நல்லதாக அமையும் என்பதற்கு ஔவையாரின் **கொன்றை வேந்தன்** ஒரு சான்றாகும்.

தாய்ப்பாலின் மகத்துவம்

இன்று தாய்ப்பாலின் அருமையை உலகமே பேசுகிறது. " பீரம் பேணில் பாரந்தாங்கும் "

தாய்ப்பாலைக் குடித்து வளர்ந்தவர்கள் நல்ல வலிமை உடையவர்களாக இருப்பார்கள். " வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலடா " என்றார் பாரதி.

அதனால் இக்காலத் தாய்மார்கள் பிள்ளைக்குப் பால் கொடுப்பதே இழுக்கு என்று கருதுவர் இவர்களுக்கு இந்நூல் ஒரு சமர்ப்பணம் ஆகும்.

கல்வியில் சிறக்க

1. நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்.

2. " மோனம் என்பது ஞான வரம்பு " மௌனமாயிருந்தலே அறிவை விரிவடையச் செய்யும்

3. " மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம் "
அறிவில் சிறந்த பெரியோர்கள் சொல்லும் தேவாமிர்தம் போன்ற வார்த்தைகள் படி நடக்க வேண்டும்.

4. " நிற்கக் கற்றல் சொல் திறம் பாமை "
படித்தவர் என்று மே சொன்ன சொல் தவறாமல் நடப்பதே அழகு. " கற்றபடி நிற்க அதற்குத்தக "

ஒரு சிறந்த கல்வியாளனாக வாழ வேண்டுமானால் நூல்களைப் படிப்பது மட்டும்போதாது. ஒழுக்கத்தில் சிறந்தவராகவும் பெரியயோர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழுதலும் வேண்டும் என்று ஔவையார் இந்நூல் மூலம் அறிவுறுத்துகிறார்.

" வானம் சுருங்கின் தானம் சுருங்கும் " (82), மழைசுருங்கினால் விளைச்சல் குறையும் விளைச்சல் குறைந்தால் பொருள்வளம் குறைவுபடும், பொருள் வளம் குறைந்தால் ஈகை குறையும் எனவே வானம் சுருங்காது வளம் பெருக வேண்டும்.

" வன்மை " எது ? " இரவாது இருத்தல் " 85 என்று கூறுகிறார். இதன் பொருள் நாம் பிறருக்குக் கொடுக்க வேண்டும் அல்லாது நாம் பிறரிடம் சென்று யாசிக்கக் கூடாது என்பதாகும். பிறரிடம் தமக்கென்று இருந்து எதையும் கேளாமல் வாழ்வோரே மனவலிமை உடையவர் என்று மனதின் வலிமையை ஔவையார் நேர்த்தியாகக் கூறியது பாராட்டத்தக்கது. " ஈயென்று நான் ஒருவரிடம் சென்று நன்று கேளாத இயல்பு " வேண்டும் என்றார் வள்ளல் பெருமான்.

வாழ்வியல்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

நமது தாய் தந்தையரை முதல் தெய்வங்களாக எண்ணி நடக்க வேண்டும். அதன்பின்

2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று

3. இல்லறம் அல்லது நல் அறம் அன்று

நல்ல மனைவியோடு வீட்டில் வாழும் நல்ல மனிதனால் தான் நல்ல தருமங்களைச் செய்ய முடியும் மற்ற சந்நியாசி முதலியோர்களால் அப்படிச் செய்ய முடியாது. ஆகவே இல்லறத்தில் செம்மையாக இருக்க வேண்டும் ' துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல் வாழ்வான் துணை யல்லவா ! '

4. ஏவாமக்கள் மூவா மருந்து

தாய் தந்தையர்கள் சொல்வதற்கு முன்னால் அவர்கள் குறிப்பை அறிந்து விரும்புகிற நல்ல வேலைகளைச் செய்து முடிக்கும் மக்களே சிறந்தவர்கள்.

5. கற்பு எனப்படுவது சொல் திறம் பாமை

கணவன் காட்டும் நல்ல வழியில் நடப்பதே பெண்களுக்குக் கற்பாகும்.

நோயில்லா வாழ்வு பெற

1. சேமம் புகினும் சாமத்து உறங்கு

இரவெல்லாம் கண்விழித்து காவல் காக்கும் வேலையைச் செய்தாலும் மூன்று மணி நேரமாவது தூங்க வேண்டும்.

2. பாலோடு ஆயினும் காலம் அறிந்துண்

நாம் உண்பது பால் சோறு ஆனாலும் அதையும் சாப்பிடத்தகுந்த வேளையில் தான் சாப்பிட வேண்டும். வேளை தவறிச் சாப்பிடலாகாது.

வாழ்வில் முன்னேற கடைப்பிடிக்க வேண்டியது

1. ஐயம் புகினும் செய்வன செய்

எவ்வளவு ஏழையானாலும் கூடிய வரையில் நல்ல செயல்களை விடாமல் செய்ய வேண்டும்.

2. கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்

நாம் எவ்வளவு தான் திறமையுள்ளவர்களானாலும் நமது திறமைபற்றி நாமே எல்லோரிடத்திலும் சொல்லக்கூடாது. தற்புகழ்ச்சி தகாது.

3. சூதும் வாதும் வேதனை செய்யும்

சூதாடுவதும், பெரியார்களோடு தர்க்கம் செய்வதும் கூடாது.

4. வளவன் ஆயினும் அளவறிந்து அழித்து உண்.

நீ பணக்காரன் ஆனாலும் உன் இருப்பையும் வரும்படியையும் தெரிந்து அதற்குத் தக்கபடி செலவுசெய்; இல்லையேல் அழிந்து ஏழையாவாய் இந்நான்கையும் கடைப்பிடித்து வாழ்வாயானால் `உன்னை வெல்ல யாராலும் முடியாது. ஆன முதலில் அதிகம் செலவு ஆனால் மானம் அழியும்

புறங்கூறுவதால் ஏற்படும் தீமைகள்

1. `கொவ்வை சொல்லின் எவ்வருக்கும் பகை' எல்லோரையும் ஓயாமல் பழித்துக் கொண்டிருப்பவன் நாளடைவில் எல்லோருக்கும் விரோதியாய் விடுவான்.

இதையே வள்ளுவரும்

`புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்' என்றும்

`முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பதே நட்பு' என்றும் கூறுகிறார்.

2. `நைபவர் எனினும் நொய்ய உரையேல்'

தாழ்ந்த நிலையில் இருப்பவராயினும் அவர்களை இழிவாகப் பேசக்கூடாது. அப்படி பேசினால் தான் அழிவதோடு சுற்றத்தாரும் அழிவர்.

நல்ல தூக்கம் தூங்க

1. ஒத்த இடத்து நித்திரை கொள் ; மேடு பள்ளம் இல்லாத இடத்தில் தூங்குவது நல்லது. பொருத்தமான இடத்தில் உறங்கு. பழக்கமான இடத்தில் தூங்குக

2. மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு; இலவம் பஞ்சு மெத்தையில் படுத்துத் தூங்கினால் நல்ல தூக்கம் வரும்.

என்று கவலைகளை மறந்து தூங்க வழி கூறுகிறார் ஔவையார் அவர்கள்.

தீய நட்பு நீக்க வேண்டுமானால்

1. மைவிழியார் தம்மை அகன்று ஒழுகு

தீயவர்களின் வீட்டுக்குப் போகாதே என்பதாகும்.

2. தோழனோடும் ஏழமை பேசேல்

எவரிடத்திலும் ஒருவன் தன் சிறுமையை எப்போதும் பேசக்கூடாது.

3. தீராக் கோபம் போராய் முடியும்;

எப்பொழுதும் கோபம் கொள்ளாதிருத்தல் வேண்டும். இல்லையேல் சண்டையை உண்டாக்கும்.

இம் மூன்றையும் கடைப்பிடித்தால் தீய நட்பிலிருந்து நீங்கி நல்லதொரு நட்பைப் பெறுவாய்.

ஈகை

நான்காவது செய்யுளில் `ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்று கூறியுள்ளார். இதன் பொருள் நல்லறச் செயல்களுக்கு வழங்காமல் சேர்த்து வைத்திருப்போர் செல்வத்தைத் தீயவர்கள் பறித்துச் செல்வர் என்பதே முப்பத்து நான்காவது வரியில் `சைஒத்திருந்தால் ஐயம்

இட்டு உண்' என்று கூறியுள்ளார் இதன் பொருள்யாதெனில் நல்ல நிலையில் இருக்கும் போது பிறருக்கு ஈதலே மகிழ்வைத் தரும் என்பதாகும். எண்பத்திரண்டாவது வரியில் 'வானம் சுருங்கின் தானம் சுருங்கும்' என்று கூறியுள்ளார். இதன் கருத்து யாதெனில் "மழையால் விளைவும், விளைவினால் பொருட்செல்வமும் செல்வத்தால் ஈகையும் உண்டாக்கும்" எனவே மழை குறைந்தால் கொடையும் குறையும் என்பதே ஆகும். எண்பத்தி ஐந்தாவது வரியில் " உரவோர் என்கை இரவாது இருத்தல் " என்று கூறுகிறார் இதன் பொருள் நாம்பிறருக்குக் கொடுக்கக் வேண்டும் அல்லாது நாம் பிறரிடம் சென்று யாசிக்கக் கூடாது என்பதாகும். அதாவது பிறரிடம் தமக்கென்று இரந்து எதையும் கேளாமல் வாழ்வோரே மனவலிமை உடையவர் என்று மனதின் வலிமையை ஔவையார் நேர்த்தியாகக் கூறியது பாராட்டத்தக்கது.

அறிவிலும். அனுபவத்திலும் வயதிலும் முதிர்ந்த பெரியோர்கள் தம் வாழ்வில் பல இன்ப துன்பங்களை அனுபவித்து, நல்லது கெட்டது தெரிந்தவர்களாக இருப்பார்கள். அவர்களது அறிவுரைகளைக் கேட்டு நடந்தால் துன்பத்திலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் விடுபடலாம். எனவே பெரியோர்களை மதிக்க வேண்டும் என்பதை

" மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் " (75)

என்றும், பிள்ளைகளுக்குத் தந்தையின் ஆலோசனைக்கு மேம்பட்டதாக வேறு எதுவும் இருக்காது என்பதை அறிந்த ஔவையார்.

" தந்தை சொல் மிக்க மந்திரமில்லை " (37)

என்கிறார்.

தனிமனிதர்கள் ஒழுங்காகச் செயல்பட நெறிமுறைகள் உத்திரவாதம் தருகின்றன. மக்களால் வேதியர்கள் மதிக்கப்பட வேண்டுமானால் அவர்கள் வேதங்கள் ஓதுவதைவிட, வேதங்களில் கூறப்பட்டுள்ள நல்லொழுக்கங்களைக் கடைபிடித்து வாழ வேண்டும். இதனையே

" ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம் " (11)

என்று கொன்றை வேந்தன் கூறுகிறது.

ஒருவரோடு ஒருவர் அன்பு கொண்டு உதவி செய்து வாழ்தல் சிறப்பு. ஊராரின் அன்பும், உதவியும் கிடைக்காவிடின் நன்மை ஏற்படாமல் துன்பம் வரும். மனநிம்மதியோடு வாழ முடியாது ; அழிந்து போய்விடுவோம்.

" ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் " (16)

இத்தகைய நீதி நூல்களின் போதனைப்படி வாழ வேண்டும் என்பதை.

" நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு " (53)
என்று கொன்றை வேந்தன் விளக்குகிறது. அவ்வாறு வாழ்ந்தால் வாழ்வு வளம் பெறும். புகழ் பெருகும்.

உற்றார் உறவினர்களின் குற்றத்தினை ஆராய்ந்து கொண்டிருந்தால் சுற்றத்தாரே இல்லாமல் போய்விடும் (18) என்றும், ஆண்மையும், ஆற்றலும் உள்ளவனாக இருந்தாலும் அடக்கமும் தேவை என்பதை,

" கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல் " (19)
என்றும் கூறுகிறார் ஒளவையார்.

" கோபம் பாபம், சண்டாளம் " என்பத வட மொழியில் ஒரு பழமொழி. ஆகவே தணியாத கோபம் பகைமையை வளர்த்து, பிறகு சண்டையில் முடிந்து, நாசத்தை விளைவிக்கும் என்பதை,

" தீராக் கோபம் போராய்முடியும் " (40) என்றும் விளக்குகிறார்.

ஒளவையை விடத்தமிழ் நாட்டுக்கு உபகாரம் செய்தவர் இல்லை ஆயிரம் காலமாக இந்த தேசத்தில் பக்தியும் ஒழுக்கமும் இருந்து வருகிறதென்றால் அது முக்கியமாக ஒளவையால் தான் என்ற காஞ்சி மகா பெரியவரின் கருத்தும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஷேக்ஸ்பியரை ஒரு நாளும் இழக்க மாட்டோம் என்றார் சர்ச்சில். அதுபோல சிலம்புச் செல்வர் பாடுபட்டுச் சேர்த்த செல்வங்களை இழந்தால் கூடச் சேகரித்துக் கொள்ளாலாம் ஒளவையின் நூல்களை இழக்கச்

சம்மதிக்க மாட்டோம் என்கிறார். ஔவை சமுதாயத்தலைவி. சமதர்ம வாதி சங்கத் தமிழ்மகள், உழவையும் தொழிலையும் போற்றிய உழைப்பாளி, இரவச்சத்தை, ஈகையை வலியுறுத்திய ஈரநெஞ்சினை இனிய குடும்ப வாழ்வுக்கு வழி காட்டிய ஏற்றமார் மூதாட்டி அவர்வழி நடத்தலே நமக்கும் பெருமையாகும்.

ஔவையாரின் கொன்றை வேந்தன் நாமும் படிப்போம்; மற்றவர்களைப் படிக்க வைப்போம் ; பிஞ்சு உள்ளங்களில் பேதமில்லா வாழ்விற்கு வழிகாட்டும் நற்றமிழ்ச் சிந்தனைகளை பதிய செய்வோம் ; பண்டிதரும் பாமரனும் படித்தின்புறச் செய்வோம்: எந்நாளும் அழியாத இவ்வறிவு நெறிகளால் புதிய தொரு சமுதாயம் படைக்க முயல்வோம் ; ஒப்புயர்வற்ற தமிழன்னையாகத்திகழும் ஔவையாரை வாழ்வியல் வழிகாட்டியாகச் கொள்வோம். ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்களின் வழிமுறைகளைப் பின்பற்றுவோம். தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமல்லாது தரணியெங்கும் ஔவையாரின் புகழைப் பரப்புவோம்; ஔவைக் கோட்ட அரும்பணிகளுக்குத் துணை நிற்போம் ஔவையாரின் ஆணையால் அனைத்துப் பணிகளையும் அமைதியாக, அறவழி நின்று முடிப்போமாக.

திருவள்ளுவராண்டு 2037, பங்குனி 30 (13.04.2006) வியாழன் மாலை 6.30 மணிக்கு திருமதி கண்ணகி கலைவேந்தன் தலைமையில் முனைவர் மு. கலைவேந்தன் முன்னிலையில் நிறை நிலவு இரண்டாவது சொற்பொழிவு நடைபெற்றது.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே

சொற்பொழிவு-3

ஐயாற்றுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ஔவைக் கோட்டமும், திருக்கோயிலும் ஔவையாருக்கு அமைத்து ஔவையாரின் அறநெறிகளைப் பரப்பும் இவ்ஔவைக் கோட்டத்தாரை வணங்கி, **'மூதுரை'** என்ற பொருளில் தமிழ் மூதாட்டி வழங்கிய நன்னெறிகளைத் தொகுத்துச் சொல்லுவதில் மனமகிழ்வெய்துகிறேன். திருவையாற்றுக்குப் பல பெருமைமிக்க வரலாறு உண்டு; அப்பருக்கு காட்சி நல்கிய அறம் வளர்த்த நாயகியுடன் உறையும் ஐயாறப்பர் திருக்கோயில் அமைந்துள்ள பாடல் பெற்ற திருவையாறு என்ற பெருமை இவ்வூர்க்கு உண்டு.

திருவாரூரில் பிறந்து, திருவையாற்றுக்கு வந்து இசையுலகில் இராமனின் புகழைத் தெலுங்குத் கீர்த்தனைகளாகப்பாடி, கர்நாடக சங்கீத உலகில் மும்மூர்த்திகளில் ஒருவராகத் திகழ்ந்த சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் வாழ்ந்து, முக்தி அடைந்த பெருமையும் இத்தலத்திற்கு உண்டு.

கர்நாடக சங்கீதத்தையும், தமிழிசையின் மாண்பினையும் உலகிற்கு வழங்கி வரும் இத்திருவையாற்று திருநகரில் பாணர் பரம்பரையில் வந்துதித்த பாடினி, அறங்களைப் போதித்த அறநெறி மடந்தை, மன்னர்களின் புகழை மாத் தமிழால் பறை சாற்றிய மங்கையர்க்குலத்திலகம், எளிய தமிழ்ப் பாக்களால் எல்லோரது உள்ளத்திலும் குடிக் கொண்டிருக்கும் குல விளக்கு, இறைவனின் புகழை இல்லற இன்பத்தோடு இணைத்து நல்ல கவித்தமிழால் நாட்டு மக்களுக்கு தந்திட்ட நற்றமிழ் நங்கைக்கு ஔவையின் திருவுருவத்தை செங்கோல் தாங்கிய நிலையில் மூலவரையும் உலாவரும் திருமேனியை ஐம்பொன்னாலான உற்சவமூர்த்தியாகவும் அமையப் பெற்ற இவ்ஔவைத் திருக்கோயிலும் கோட்டமும் இவ்வூர்க்கு மற்றுமொரு பெருமையாக அமைந்திருப்பது போற்றுதற்குரியது. இக்கோட்டத்தில் ஔவையாரின் திருமுன் அமர்ந்து **'மூதுரை'** யில் **'நல்லாரைக் காண்பதுவும் நன்றே'** என்ற தலைப்பில் சொற் பொழி வாற்றுவதை கிடைத்தற்கரிய பேறாகக் கருதுகிறேன்.

கடவுள் வாழ்த்து

"வாக்குண்டாம், நல்ல மனம் உண்டாம், மாமலராள்
நோக்குண்டாம்; மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு."

இன்குலாப் - ஔவை

'**ஔவை**' என்றவுடன் நம் நினைவுக்கு வருவது நெல்லிக்கனி. தமிழின் இனிமையை, நயத்தை தனது பாக்கள் மூலமாக வெளிப்படுத்தியவர் ஔவையார். ஔவையார் காலம் பற்றி பல்வேறு சந்தேகங்கள் இருப்பினும் கவிஞர் இன்குலாப் அவர்கள் தமது '**ஔவை**' நாடகத்தில் மூன்று ஔவை பற்றிய செய்தியினைப் படைத்துள்ளார். அற இலக்கியம் பாடிய ஔவை, பாடினி ஔவை, ஈழத்து ஔவை என்று கற்பனைப் படைப்போடு '**ஔவை**' களைப்படைத்துள்ளார்.

சங்க கால ஔவை தற்சார்புடைய, சுய சிந்தனையுடன், சுதந்திரமாகச் செயல்படும் புலவராகக் காட்சியளிக்கிறாள். இடைக்கால ஔவை நீதிக் கவிஞராக வலம் வருகிறாள், பிற்கால ஔவையார் நவீனச் சிந்தனைகளும், முற்போக்குச் சிந்தனைகளும் உடைய பெண்ணியம் பேசும் கவிஞராக அடையாளப் படுத்துகிறார். அதியமான் காலத்து ஔவையின் கூந்தல் நரைத்திருக்காது. நெற்றியில் திருநீறு இருந்திருக்காது வெள்ளுடை அணிந்திருக்க மாட்டாள், முதுகும் கூன் விழுந்திருக்காது போதனை செய்பவளாகவும் இருந்திருக்க மாட்டாள் என்கின்றார் இன்குலாப்.

கல்விச் சிறப்பால் ஔவை, மன்னர்களால் மதிக்கப் பெற்றாள். அவர்தம் நட்பைப் பெற்றாள், அரசவைத் தூதராக அனுப்பப் பெற்றாள் இவளது மூதுரை முதுமையான உரை (முதியவள் தந்த உரை என்பதல்ல).

மூதுரை (இலக்கணம்)

முது சொல், முதுமொழி, மூதுரை, என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்களாகும் முதுமொழி என்பது தொன்று தொட்டு மக்களிடையே

வழங்கி வரும் வாழ்வியற் பொருள் மொழி ; இதன் இலக்கணத்தை,

"நுண்மையுஞ் சுருக்கமும் ஒளியு முடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
ஏது நுதலிய முதுமொழி யென்ப" (செய்யுளியல் -170)

எனத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. அறிவின் கூர்மையும் சொற் சுருக்கமும் விழுமிய பொருளை விளக்கும்; ஒளியுடைமையும் எளிதிற் பொருள் விளக்கும் எளிமையும் இதன் பண்பாகும்; தாம் சொல்லக் கருதிய பொருளைக் காரணங்காட்டி உறுதிப்படுத்தும் முறையில் அமைப்பது . இதன் சிறப்பாகும் இம்மை என்னும் செய்யுள் வனப்புள் அமைவது..

நூற்பெயர்

இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் மூதுரை என்பதேயாகும். தொல்காப்பிய உரையிலும் மூதுரை எனும் பெயரினாலேயே வழங்கப்படுகிறது. ஒரு நூலுக்குப் பெயரிடுமிடத்து நூலின் தொடக்கச் சொல்லைப் பெயராக அமைப்பது உண்டு. இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராற் நோக் குண்டாம்" எனத் தொடங்குகிறது, எனவே "வாக்குண்டாம் "என பிற் காலத்தார் இதனை வழங்கினர்.

கல்விக்கு மரியாதை

நாடாளும் வேந்தனை இறை எனப் போற்றுவர். மணிமகுடம் சூட்டிய காரணத்தால் மக்கள் வணங்குதற்குரியவன். ஆட்சியின் மாட்சியால் வேந்தனைக் கற்றறிந்த அறிஞனோடு ஒப்பிட்டு நோக்குகிறார் ஔவை பிராட்டி இவ்விருவரில் யார் சிறந்தவர்?

அறிஞனே சிறப்புடையன். ஏனெனில் அரசனின் புகழ் ஆட்சியின் எல்லையைத் தாண்டாது, அவனது ஆளுகைக்குட்பட்ட தேயத்திற்குள் மட்டுமே அவனுக்கு மரியாதை. ஆனால், அறிஞனுக்கோ அவன் செல்லுமிடமெல்லாம் சிறப்பு உண்டு என்பதை

4

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் மன்னற்கு
தன் தேயம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விட மெல்லாம் சிறப்பு"

என மூதுரையில் ஔவை மூதாட்டி உணர்த்தி, பின் கல்வி ஒழுக்கப் பகுதியில் 'கொற்றவன் தன்னிலும் கற்றவன் பெரியவன்' என்று கல்வியாளனுக்குப் *புகழ் மகுடம்* சூட்டுகிறார் ஔவையார்.

கல்விப்பெருமை

கற்றாரோடு கற்றார் சேருவதால் பெருமை உண்டாகும் என்பதை

"நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றரே காமுறுவர்"

என உணர்த்துகிறார். தாமரையை அன்னம் விரும்பும். காக்கை பிணக்காட்டைத்தான் விரும்பும்.

ஊழ்வினை

ஊழ்வினை நமது நெடுங்கால நம்பிக்கை விதிப்பயன், வினைப்பயன் - ஊழ் என்று அன்றாடம் பேசுகிறோம் சிலம்பு சுட்டும் மூன்று நீதிகளால் "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பது ஒன்று; முதன்மையாகவும் தெரிகிறது.

இலக்கியங்களில் ஊழ்

இலக்கியங்களில் பால், வினை, முறை, விதி, தெய்வம் போன்ற சொற்கள் ஊழினைக் குறிக்கப்பயன் படுத்தப்பட்டுள்ளன, ஔவையார் விதி, வினை, ஊழ் போன்ற சொற்களைப் பயன் படுத்தியுள்ளார்.

தொல்காப்பியரின் "பாலதாணை" (தொல் களவு 2) என்ற தொடர் காதலர் இருவர் ஊழ்வினையால் அன்பின் வயப்படுதலைச் சுட்டுகிறது.

'ஊழிற் பெருவலி யாவுள' (குறள் : 380) என்பது வள்ளுவம். இலக்கியங்களில் மட்டுமின்றி மக்கள் வழக்கிலும் 'ஊழ்' பற்றிய கருத்து

இடம் பெற்றுள்ளது. 'நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்' எனும் வழக்கு மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமைகிறது. ஔவையாரின் "ஊழ் வினை" பற்றிய சிந்தனையை,

1. ஊழின் பயன்
2. ஊழின் பயனை நுகரச் செய்பவர்
3. ஊழின் பயனிலிருந்து விடுபடும் வழி
4. ஊழின் பயனிலிருந்து விடுபட்டோர் பெருமை

எனப் பாகுபடுத்திக் காணலாம்.

ஒருவன் தன் வாழ்வில் எவ்வளவு முயன்றாலும் ஒரு செயல் முடியும் காலத்தில் தான் முடியும் என்பதனை.

"அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா" (வாக்குண்டாம் : 5)

எனும் ஔவையின் பாடல் வரிகள் சுட்டுகின்றன. ஆகும் காலத்தில் எதுவும் ஆகும் அதற்கான விதி வேண்டுமே! ஒருவன் மிகவும் திரை கடலோடியும் திரவியம் தேடினாலும் அச் செல்வத்தின் பயனை ஊழின் வினையளவே துய்க்க இயலும் என்பது ஔவையின் மற்றொரு கருத்தாகும். இக் கருத்தினை ஔவையின்,

"நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்" (வாக்குண்டாம் : 19)

என்ற வரிகள் காட்டும்.

வினை வலிமை

"ஆழ அமுக்கி முகக்தினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நால்நாழி" (19)

எழுதியவாறே எல்லாம் நடக்கும் எனவும் ஊழின் வலியை தெளிவுறுத்துகிறார். விதியை உணர்ந்தால் மனிதன் தன் இயற்கை இயல்பிலிருந்து மாறி - மனித நேயத்திலிருந்து மாறி வன் முறையில் ஈடுபட இயலாது எனத் தெள்ளத் தெளிய உணர்த்துகிறார். அமுத்தி முகந்தாலும் நாழியில் நாழி நீர்தானே கொள்ளும் 4 நாழி ஆகுமா?

வறுமையிலும் செம்மை

"கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே" எனத் தம் செல்வ நிலையிருந்து கெட்டு வறுமை அடைந்தாலும் அட்ட பாலின் சுவை போலவும் சுட்ட சங்கின் வெண்மை போலவும் செம்மாந்து வாழும். தன்மையோர் (4) சீரியர் கெட்டாலும் பொன் குடத்தைப் போல் பயன் நல்கும் பண்புடையோர் (18) வறுமையிலும் பிறருக்கு உதவுவதில் மனச் சுருக்கம் அடையாதவர் (28) எனப்பிறருக்கு உதவ மனநலம் வேண்டுமே ஒழிய செல்வம் ஒரு காரணமல்ல என உணர்த்துகிறார்.

1. பிற உயிர்களுக்கு செய்யும் நன்மை, தீமைகள் செய்தவருக்கே ஊழ்வினையாக வந்து சேரும் தன்மையுடையன. ஆதலால் உலக உ'யிர்கள் இவ்வுண்மையினை ஓர்ந்து உணர்ந்து தீ வினையிலிருந்து நீங்கவேண்டும் விடுபட முயல வேண்டும்.

2. உலக உயிர்களின் ஊழ் வினைகள், அவைகளை வந்தடைவதற்கு காரணமாக இருப்பவர் இறைவன் ஆவார்.

3. உலக உயிர்கள் தாம் தற்போது இருக்கும் நிலையிலிருந்து விடுபட முடியாது ஆனால் வருங்காலத்தில் வினைக்கு ஆட்படாமல் தம்மைக் காத்துக் கொள்ள இயலும், அதற்கு ஈதலும், ஒழுக்கமும், பஞ்சாட்சரத்தியானமும் உதவும்.

துணை வலிமை

கல்வி, செல்வம், பேராற்றல் உடையவர்களாக இருந்தாலும் தக்க துணையே வலிமை! தம் வாழ்வில் தக்க துணையைத் திறமையாளர்களாகத் தேர்ந்தெடுத்தல் அவசியம்.

"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா ....
.... அம்மருந்து போல் வரும் உண்டு" (20) உடன் பிறந்து கொல்லும் வியாதி இருக்கிறதே என்கிறார். அடுத்து உருவுகண்டு எள்ளாது திறமைக்கே முதலிடம் நல்குதல் வேண்டும் என்பதை

"மடல் பெரிது தாழை மகிழ்ந்தினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா கடல் பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும் "

என விளக்குகிறார். மேலும் ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு போன்ற அடக்கமும் (16) உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையும் (6) அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு போல கரவில்லா நெஞ்சத் தவராக இருத்தல் வேண்டும் என்கிறார்.

இல்லாள்

கணவனும் மனைவியுமாக இல்லறத்திலிருந்து செய்யும் அறம் இல்லறம். இருவரில் ஒருவர் இன்றி இதனைச் செய்ய வியலாது எனக் கருதினார். வாழ்வு செம்மையுற அறம் செய்தல் வேண்டும். அவ்வறத்தைப் பெண்ணுடன் இணைந்தே செய்ய வேண்டும். அறம் வளத்தைப் பெருக்கும். 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என் பதன் வாயிலாக மனைவியை வளமைக்குரியவளாக – வளமையைப் பெருக்கும் காரணியாக உயர்த்துகிறார். 'இல்லாள் இல்லாத வீடு புலிகிடந்த தூறு' (21) என உவமித்து இல்லறத்திற்குப் பெண்ணின் இன்றியமையாமையைத் தெளிவுறுத்துகிறார்.

பொருள் செயல் வகை

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள் வாழ்க்கையினைப் பொருளுள்ளதாக (அர்த்த முள்ளதாக) ஆக்கும். வடமொழி அர்த்தம் என்றே சொல்லும். தேன் தமிழும் பொருள் என்று சொல்வது அழகு.

பொருள்நலம்

வாழ்க்கையை நடத்துவதற்கு தேவையான கருவி செல்வமே ஆகும். மாமலராள் நோக்கு உண்டாகும் போது 'மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல உருவும் உயர் குலமும்' (29) ஆகிய செல்வங்கள்

கிட்டும் என்கிறார் அச்செல்வம் எப்போது வேண்டும் என்பதை "இன்னா இளமை வறுமை வந் தெற்தியக்கால் இன்னா அளவினியவும் " (-3) எனக் கூறி இளமை வளமைபெறச் செல்வத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறார். பெற்ற செல்வத்தை பெருக்க நினைத்தாலும் முயற்சித்தாலும் தக்க காலம் வந்தால் அன்றி இயலாது (5) என்கிறார்.

மேன்மக்கள்

நல்ல பண்பாடும், அமைதியும், நடுவு நிலைமை உடையவர்களைச் சான்றோர் மேன் மக்களென்பர். அவர்கள் தமக்கு எத்தகைய துன்பம் வந்தாலும், பிறர் துன்பமளித்தாலும், பொறுமையைக் கையாண்டு அமைதியுடன் இருப்பர்.

பாலை தீயிட்டுக் காய்ச்சினாலும் அதன் சுவைகுன்றாது. நண்பர்களால், தீமை ஏற்படினும் அமைதியோடிருப்பர்.
இதனை மூதுரை (4)

"அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் கெட்டாலும்
மேன் மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும்
வெண்மை தரும் " என்கிறது..

இதே கருத்தை பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த நாலடியார் (156) கூறுவதாவது கடித்துக் கரும்பினைக் கண் தகர நூறி இடித்து நீர் கொள்ளிலும் இன் சுவைத்தே ஆகும், வடுப்பட வைத்து இறந்தத் கண்ணும் குடிப்பிறந்தார் கறார் தம் வாயின் சிதைத்து.

நட்பு

நட்பைப் பற்றிக் கூறும் வள்ளுவப் பெருந்தகை 'முகநகநட்பது நட்பன்று நெஞ்சத்து அகம் நக நட்பதே நட்பு' (குறள் 786) என்றார். உண்மையான நட்பு என்பது வீட்டுத் தோட்டத்து மூலிகை மருந்தாகி நோயை நீக்குவது போலாகும் என்று பழமொழி நானூறு (53) எனும் நூல் கூறுகிறது. வீட்டு மூலிகை அந்நோயாளியுடன் வாழ்வது

"அல்லல் ஒருவருக்கு அடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார் நல்ல வினை
மரபின் மற்று அதனை நீக்குவதுவே மனை
மரம் ஆய மருந்து."

இதே கருத்தை மூதுரை (17) பின்வருமாறு கூறுகிறது. குளத்தில் நீர் நிறைந்துள்ளது, அக்குளத்தில் மீன்களும், பல்வேறு மலர்கொடிகளுமுள்ள நீர் வற்றிவிட்டால்? பறவைகள் வாரா. ஆனால் குளத்திலுள்ள கொடிகள் குளத்துடன் சேர்ந்து நீருக்கு ஏங்கி வாடி வதங்கி விடும்.

"அற்ற குளத்தின் அறு நீர்ப் பறவை போல்
உற்று ழித்தீர்வார் உறவல்லர் அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு,"

"குளத்திலே தண்ணியில்லே கொக்குமில்லை மீனுமில்ல" என்பது கண்ணதாசன் பாடல்.

உண்மைப் போலி

'கான மயிலாட' இந்தப் பாடலை வைத்து ஔவை மூதுரை பாடியகாலம், ஆங்கிலேயர் வருகைக்குப்பின் என்கின்றனர்.

'வான் கோழி' என்ற துருக்கியப் பறவை காலம் ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகுதான் தமிழகத்திற்கு வந்ததாம்.

'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியும் சிறகை
விரித்தாடுவது போலத்தான் கல்லாதான் கவிபாடுவதும்'

எப்படியான இணக்கம் தேவை?

"நல்லிணக்கமல்லது அல்லர் படுத்தும்
நல்லோர் இனத்திரு - இணக்கம்
அறிந்து இணங்கு - சத் சங்கம்
தேவை, சேரிடம் அறிந்து சேர்"

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று"

நல்லவரைக் காண்பதுவும், அவர் சொற்களைக் கேட்பதுவும் நன்மையாகும். அவருடைய நல்ல குணங்களைப் பேசுவதும் அவரோடு கூடியிருப்பதுவும் நல்லறிவும் நல்லொழுக்கமும் தரும்.

'தீயாரைக் காண்பதவும் தீதே'

மூதுரையில் முப்பது பாடல்களும் முத்தான மணிகள் என்பதில் ஐயமில்லை. பாடல் தலைப்புகளாகக் கொள்ளத்தக்க ஒவ்வொரு வரியும் மணிமகுடமே.

எப்போதும் மேன்மக்கள் மேன்மக்களே என்றும் மானமிழந்து வாழாமை வேண்டும் என்றும், நல்லோர் தொடர்பால் நலமும் தீயோர் தொடர்பால் தீமையும் விளையும் என்றும், அறவோர் அருள் உளங் கொண்டு வாழ்வர் என்றும் கூறும் அறவுரைகள் மக்கள் மனம் கொள்ளத் தக்கன.

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா
மாமலை யிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல் வாரு முண்டு

நோயே நமது உடலுறுப்புகளுக்குள் உறுப்போடு உறுப்பாக இணைந்து பெருகி உயிரை அழிக்கவும் செய்யும். ஆனால் எங்கோ ஒரு மலைக்காட்டில் வளர்ந்த மூலிகையோ, அந்நோய்நீக்கி, உயிர் மீட்கும் சக்தி உடையதாக மாறுகிறது போல உடன் பிறந்தோரும் சுற்றத் தோரும் நமக்கு எந்த நிலையிலும் நன்மை செய்யாமல் பல்வேறு வழிகளில் துன்பம் தரலாம். யாரோ ஒரு நண்பர் வந்து உதவி செய்யலாம். மூலிகை மருந்து போல் எங்கோ பிறந்து உற்றுழி உதவி அற்ற குளத்துக் கொட்டி ஆம்பல் போல் ஒட்டி வாழும் அன்புள்ளங்கள் ஆயிரம் உண்டு ; நாம் கண்டதும் உண்டு என்று வெண்திரை ஓவியமாய் அழகுறக் காட்டுகிறார் ஔவையார் தீயவருக்கு உதவாதே. புலிக்கு உதவினால் புலி நன்றி பாராட்டாது, அடித்துக்கொல்லும்.

தீயோர்க்கு உதவி செய்தல் கூடாது

புலியின் நோயை நீக்கி வைத்தியன் அப்புலிக்கே இரையாவது போல தீயவர்க்குச் செய்யும் உதவியானது நம்மையே அழித்து விடுவதால் தீயோர்க்கு உதவி செய்யக் கூடாது என்கிறார்.

நல்ல பெண்ணின் மாண்பு

ஒருவனுக்கு எதிர்த்துப் பேசாத நற்குண நற்செயல்கள் உள்ள மனைவி வீட்டில் இருந்தால் அவனுக்கு அவ்வீட்டில் இல்லாத பொருள் எதுவும் இல்லை என்றும் நல்ல பெண்ணுக்கு ஈடாக உலகில் எதுவும் இல்லை என்றும் பெண் என்பவள் ஆடவரை எதிர்த்துப் பேசாமல் நற்குண நற்செயல்களுடன் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

நல்ல உவமைகள்

ஒவ்வொருவரின் குடிப் பெருமைக்கேற்ப அவர்கள் குணம் அமையும். குணம் உயரிய செல்வம்; அச்செல்வம் அமைய வேண்டுமானால் உயரிய தவ ஒழுக்கம் வேண்டும், தவ ஒழுக்கத்திற்கு நுண்ணிய அறிவு வேண்டும். இவையனைத்தையும் பெற சிறந்த குடிப்பிறப்பு வேண்டும் என்பதை உணர்த்த

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு

என்பதை மூதுரைப் பாடல்-8 விளக்குகின்றது.

"துன்பக் காலத்தில் விட்டு விலகாத உறவே உண்மை உறவு" என்பதை நீரற்ற குளத்தில் வற்றும் நீருடன் வாடி உலர்ந்து போகும் கொட்டியும் அல்லியும் நெய்தலும் போல உடனிருந்து துன்பத்தை அனுபவிப்பரே உண்மையான உறவினர் ஆவார் என்று கூறுகின்றார்.

"...அக்குளத்தில் கொட்டியும்
ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி உறுவார் உறவு" மூதுரை – 18

கற்றவரைக் கற்றாரே காமுறுவர் என்று கூறு முகத்தால்

"நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்" மூதுரை - 25

என்று காட்டுகின்றார் மணமிகுந்த தாமரையில் அன்னமே தங்கும். அது போல "உயர்ந்தோரை உயர்ந்தோரே விரும்புவர்" என்கிறார்.

மேன்மக்கள் வறுமையுற்ற போதிலும் தங்களின் மேலான நிலையிலிருந்து தவற மாட்டார்கள் என்பதைக் குறிக்க "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" மூதுரையில் சங்கோடு வைத்துப் பேசுகின்றார்.

நீர்ப்பாம்பு தன்னிடம் நஞ்சு இல்லாமையால் யாருக்கும் அஞ்சாமல் வாழும். அது போல கரவு இல்லாத நெஞ்சத்தார் யாருக்கும் அஞ்சமாட்டார், மறைந்து வாழ மாட்டார் என்பதை

"அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப்பாம்பு ...." என்று கூறுகிறார்.

தாழை மலரையும், மகிழ மலரையும் உருவுகண்டு எள்ளாமை வேண்டும் என்ற உண்மை உணர்த்தச் சுட்டுகின்றார். தாழம்பூ நீண்ட மடல்களைக் கொண்டு பெரிதாகவுள்ளது. மகிழம்பூ சிறிய இதழ்களைக் கொண்டு மணம் வீசும் மாண்புடையது இவ்விரு மலர்களின் வழி பெரியோர் எல்லாம் பெரியோரும் அல்லர், சிறியோரெல்லாம் சிறியோரும் அல்லர், (மூதுரை-13) என்ற உண்மையை உணர வைக்கின்றார்.

நல் உதவி, நற் பயன் விளைவிக்கும் என்பதனை

"நன்றி ஒருவற்குச் ....நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத் தலையாலே
தான்தரு தலால்" (மூதுரை-2)

தென்னை மரத்தின் வழி எடுத்துக் காட்டுகின்றார் மென்மையான சந்தன மரக் கட்டையானது தேய்ந்து போன காலத்திலும் மணம் குறையாது. அது போல சான்றோராய் விளங்கும் அரசர்கள் தங்கள் செல்வத்தில் குறைந்தாலும் மன உறுதியில் குன்ற மாட்டார்கள் என்று தேய்ந்தாலும் மணம் வீசும் சந்தன மரத்தின் தன்மையினை உயர் மன்னர் மாண்புக்கு (மூதுரை-29) எடுத்துக் காட்டுகின்றார்.

ஈதல் அறம்

வள்ளுவர் வறியவர்களின் பசியைத் தீர்த்தலே உயரிய ஈகைத் தன்மை மற்றவருக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை கொண்டதாகும் என்பதை ஈகை என்றும் அதிகாரத்தின் வழி எடுத்துரைக்கின்றார். 'வறி யார்க் கென்று ஈவதே ஈகை'

ஔவையார் மூதுரையில் ஈகையின் சிறப்பை பேசுகையில் நற்குணமுடையவருக்கு செய்த உதவியானது கருங்கல்லின் மேல் வெட்டப்பட்ட எழுத்தைப் போல அழியாது நிற்கும். ஆனால் நற்குணமில்லாத ஈரமிலா நெஞ்சத்தார்க்கு, செய்த உதவியானது நீரின் மேல் எழுதப்பட்ட எழுத்திற்கு ஒப்பாக அழிந்து விடும் என்றும் செய்தவருக்கே துன்பத்தைக் கொடுக்கும் என்றும் குறிப்பிடுகின்றார் (மூதுரை2) 'நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப் போல் காணுமே'

பெண்மை

பெண்களுக்கென்று கட்டப்பட்ட வரம்புகளில் அவளது பண்புகளும் அடங்கும், பெண் என்பவள் சாந்தமானவளாக, ஆணின் ஆதிக்கச் செயல்பாடுகளுக்கும் ஆண்மைத் தத்துவத்திற்கும் அடங்கியவளாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலுங் கூடி இருக்கலாம், (தனிப்பாடல்கள் பாடல் 15)
என்றும் 'துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு'
(கொன்றை வேந்தன்: 41)

கணவனுக்குத் துன்பம் வந்தவிடத்து துடிக்காத பெண்டிர் மடியில் கட்டப்பட்ட நெருப்புக்குச் சமம் என்கிறார்.

'இல்லாள் வலிக்கிடந்த மாற்றம் உரைக்கு மேல் அவ்வில்
புலி கிடந்த துறாய் விடும்' (மூதுரை 21)
பெண்ணீர்மை கற்பு அழியா ஆற்றலால் கடல் சூழ்ந்த
வையகத்தின் அற்புதமாம் என்றே அறி (மூதுரை 16)

பழிக்கஞ்சா தாரத்தின் நன்று தனி (நல்வழி3) என ஔவையார் மட்டுமின்றி பிற புலவர்களும் ஔவையின் கருத்தினைப் போலவே பாடல்கள் புனைந்துள்ளனர், வெற்றி வேற்கையில் அதி வீரராம பாண்டியர்.

'குலமகட்கு அழகு தன் கொழு நனைப் பேணுதல்' (12) என்கிறார், இதிலிருந்து குடும்பம் என்ற சிறிய வட்டம் பெண்ணுக்குரியது சமூகம் என்ற பெரிய வட்டம் ஆணுக்குரியது என்ற பாகுபாடு தோன்றி ஆழமாக வேரூன்றி விட்டமைபுலப்படுகிறது. பெண்மைக்கு முகவரியே இல்லாமல் போன காலம் இந்தப் பாடல்கள் தோன்றிய காலம் எனத் தெரிகிறது. முக்கியமான முடிவுகளை எடுப்பதில் பெண்ணின் கருத்து புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையினை 'தையல் சொற்கேளேல்' (ஆத்திச்சூடி:62) என்ற வழி உணர்த்துகிறது. கணவனை எதிர்த்துப் பேசுபவள் பழித்துப் பேசப்படுகின்றாள். 'இல்லிற்கிசைந்து ஒழுகாப் பெண் கூற்றம்' (மூதுரை : 27) என்ற வரியின் மூலம் இக்கருத்து வலுவடைகிறது. ஆனாதிக்கம் தலைதூக்கத் தொடங்கிய கால கட்டத்தில் ஒரு பெண் படைப்பாளியாகிய ஔவையார் இவ்வாறு பெண்ணை இழிவு படப் பாடியிருப்பது ஆணின் ஆதிக்க மனப்பான்மைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பது போன்று அமைந்துள்ளது.

பெண்ணின் அழகு ஆணுக்காகவே அமைந்துள்ளது என்தனை 'நாளல்லா நாட்பூத்த நலன்மலரும் போலுமே, ஆளில்லா மங்கைக் கழகு' (மூதுரை: 3) என்ற அடிகளின் மூலம் அழுத்தமாகக் கூறுகின்றார்.

இலக்கியம் தோன்றிய காலம் அப்படிப்பட்டது. ஔவை புதுமைப் பெண்ணா என்ற ஆராய்ச்சி தேவையில்லை.

ஔவையார் அனுபவ உண்மைகளை வாழ்வியல் அறங்களாக்கி, வாக்குண்டாம் நூல் முதல் வழங்கி இருப்பது எண்ணி, எண்ணி இன்புறத்தக்கது.

அனுபவங்களின் பிழிவாகவும், சாரமாகவும், நெறியாகவும், முறையாகவும் வாழ்வியல் சிந்தனைகளாகவும் மூதுரை பெயர்கொண்ட வாக்குண்டாம் நூலை வழங்கியிருப்பது படித்து மகிழ்தற்குரியது.


முத்திரைப்பதித்த மூதுரை ஔவையாரின் அனுபவ முத்திரையில் வெளிப்பட்டுள்ளது எனலாம்.

இவ்வரிய நூல் அறிவியல் சிந்தனைகளையும் அறக் கருத்துக்களையும் எளிய வெண்பா வகையில் யாத்து , பூத்து குலுங்குகிறது எனலாம்.

மூதுரையை முறையாகக்கற்போம்; முத்தமிழ் மணிமாலை யாகத் தொடுக்கப்பட்டுள்ள மூதுரை முத்து மாலையை அனைவரும் அணிந்து கொள்ளுவோம் ; வாக்குண்டாம் பெயர் தாங்கிய வற்றாத மணற் கேணியாக தோண்டத் தோண்ட இன்பம் நல்கும் இவ்வினிய நூலை படித்துப் பின்பற்றுவோம் பண்புநலன்களை வளர்த்துக் கொள்ளுவோம்; பண்பாட்டுப் பெருமையையும் பைந்தமிழ் வளத்தையும் எந்நாளும் காப்போம் என உறுதியை எடுத்துக் கொள்வோம்.

முழு நிலவு நாளில் மூதுரையின் பெருமையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு நல்கிய ஔவைக்கோட்டத்தார்க்கு நன்றி சொல்லி நிறைவு செய்கிறோம்.

திருவள்ளுவராண்டு 2037, சித்திரை 29 (12.05.2006) வெள்ளி மாலை 6.30 மணிக்கு திருமதி தமிழ் அமுதா தமிழ்வாணன் தலைமையில் தனித்தமிழ்ப்புலவர் குடந்தை கதிர் தமிழ்வாணன் முன்னிலையில் நிறை நிலவு மூன்றாவது சொற்பொழிவு நடைபெற்றது.



ஔவையார் வரலாறும் கதைகளும்

சொற்பொழிவு–4

ஔவையார் பற்றிய வரலாறு கதைகளாகவும் புராணச் செய்திகளுடன் இணைந்து பாடல்களாகவும் விளங்குவதனை அறியலாம். ஔவையார் வரலாறு நீண்ட வரலாற்று தொடர்புடையது எனலாம். ஔவையார் வரலாறு பற்றிய கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடையே காணப்படினும் அறநெறிகள் அருளிய ஔவையார் மட்டும் மக்கள் மனதில் ஆழப்பதிந்துள்ளதை அறிய முடிகிறது.

சங்க காலத்தில் எளிய பாணர் குடியில்பிறந்த ஔவை ஜெமினி வாசனின் திரை ஔவையார் வரை கதை நீளக்காரணம் அதுவே. சாவா மருந்தான நெல்லிக்கனி ஔவைக்கு அதியமான் கொடுத்ததை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப் படையில் பதிவு செய்திருப்பதும் அறியத் தக்கதாகும். நெல்லிக்கனி மருத்துவக் குணமுடையது ; அதை உண்டதால் ஔவையார் நீண்ட நாள் வாழ்ந்தார் என்கிற நம்பிக்கை மக்களின் உள்ளங்களில் வேரூன்றி இருந்ததையும் காண முடிகிறது. ஔவையாரைப்பற்றிய வரலாற்றுச் செய்திகளை கபிலரகவல், திருவள்ளுவர் கதை, ஞானாமிர்தம், புலவர்புராணம், வினோதரச மஞ்சரி, பன்னிரு புலவர் சரித்திரம், ஔவைப் புராணம் ஆகிய நூல்கள் வழி அறிய முடிகிறது. கபிலரகவல் நூலில் காணலாகும் வரலாற்றுச் செய்திகளை மற்றக்கதைகள் வாயிலாக வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தப் பட்டதையும் காணமுடிகிறது.

கபிலரகவலில் ஔவையாருடன் உப்பை, உறுவை, வள்ளி, வள்ளுவன், அதியமான், கபிலர் ஆக 7 பேர் உடன் பிறந்ததாகக் கருதப்படும் செய்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவதாய் உள்ளது. ஔவை வாக்கில் பொய்யே இருக்காது, அது வேதம் போன்றது என்ற காஞ்சிமா முனிவரின் வாக்கும் நினைக்கத் தக்கது ஆகும்.

பெரும்புலவர்களில் கருத்துக்குவியல்கள் என்றுமே அழிவதில்லை ஔவையாரின் அரிய கருத்துக்கள் அனைவருக்கும் ஏற்றநிலையில் பாடப்பட்டிருப்பது பெரிதும் போற்றி, பின்பற்றத் தக்கதாகும்; **'என்றும் அழியாது என்பாட்டு'**, என்ற ஔவையின் கருத்தும் **'நான் நிரந்தரமானவன் அழிவதில்லை'** என்ற கவியரசர் கண்ணதாசனின் கருத்தும் ஒப்பிடத்தக்கதாகும்.

ஔவையாரின் வரலாறு தமிழ்கூறும் நல்லுலகில் தனி இடத்தைப் பெற்றிருப்பதும் ***'ஔவையின் வாக்கு அமுதவாக்காக'*** அனைவரது உள்ளங்களிலும் அரசோச்சுவதும் அறிய முடிகிறது. ஔவைப் பெருமாட்டி அறிவுநலஞ் சான்ற முதல்பெண்மணியாக தமிழ் கூறும் நல்லுலகில் கருதப்பட்டு வருவதும் அவரின் அறநெறிகள் வாழ்வியல் நெறிகளாகப் போற்றப்பட்டு வருவதையும் தமிழ் இலக்கிய வரலாறு உணர்த்துகிறது. ஔவையாரால் பெண் இனம் பெரும் பேறு பெற்றதையும் சிந்தனைத்திறத்தாலும் கவிதை வளத்தாலும் அறநெறி கோட்பாடுகளாலும் ஔவையார் உயரிய இடத்தைப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

தமிழ்ச் சமுதாயமும் உலகச் சமுதாயமும் முன்னேற்றம் காண ஔவையாரின் வரலாறும் கதைகளும் துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை ஔவையாரைத் தெய்வமாகப் போற்றி, அவரின் அறநெறிகளைப் பின்பற்றி வாழ்வதே அவருக்கு செய்யும் நன்றி மட்டுமல்லாது நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாக மாறுவதற்கு அவரின் அறநெறிகள் பெரும் தூண்டுகோலாக அமையும் என்பது திண்ணம்.

ஔவையாரின் வரலாறு தமிழ்ப்பண்பாட்டை விளக்குகிறது; தளராது வாழ்விற்கு வழிகாட்டுகிறது; உயரிய நிலை எய்த, உன்னதமான நெறிகளைக் கூறுகிறது; ஔவைக் கதைகள் இளம் தலைமுறையினருக்கு பெரும் வழிகாட்டும் நிலையில் அமைந்துள்ளது; துன்பங்களை களைந்து, இன்பத்துடன் வாழ்வதற்கான அவர்தம் கதைக் கூறுகள் அமைந்திருப்பதை அறியமுடிகிறது. கதை மூலமாக மனித வாழ்வின் வளங்களை எடுத்தியம்பிய நம் முன்னோரின் செயல் திறனில் உள்ளத்தைப் பதிய வைப்போம் ; வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயரிய சமுதாயத்தை உருவாக்குவோம் ; ஔவைப் பெருமாட்டியின்

அறிவுத்திறனை உலகெங்கும் பறைசாற்றுவோம் ; அமைதியான, அறநெறியான வாழ்விற்கு வழி வகுப்போம்.

பாவலர் சரித்திர தீபகம்

"*பாவலர் சரித்திர தீபகம்*" என்னும் இலக்கியப் புலவர் வரலாற்று நூல் யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் ஆசிரியரும் உதயதாரகை என்னும் இதழின் ஆசிரியருமாய் விளங்கிய அ. சதாசிவம் பிள்ளையால் இயற்றப் பெற்று 1886 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

410 புலவர்கள் அகரவரிசையில் 84 வது வரலாறாக ஔவையார் வரலாறு சொல்லப்பட்டுள்ளது, தமிழ் இலக்கிய வரலாறு காண்பதற்குரிய முயற்சி 19 ம் நூற்றாண்டில் தொடங்கியது, ஈழத்துத் தமிழ் மண்ணில் ஆங்கிலக் கல்விச் சூழலில் இது தொடங்கியது.

ஔவையார் வரலாற்றினைப் படிங்குங்கால் கதை கேட்டது போன்ற அமைப்பில் உள்ளது. கருவூர்ப் புலைச்சி மகள் ஆதிக்கும் பகவன் என்னும் பிராமணர்க்கும் பிறந்த மக்கள் எழுவருள் மூத்தவள் ஔவை '*அவ்வெ*' என்னும் சொல்லும் கன்னடமொழியில் ஆகமத்திற்குரிய பட்டப்பெயராகவும் தெலுங்குமொழியில் '*பாட்டி*' என்ற பொருளுடன் வழங்கப்படுவதையும் காணமுடிகிறது. ***ஔவை*** என்ற சொல்லுக்கே மூத்தவள் என்பது கருத்தாதலால் இவருக்குப் பெயர் வேறாக இருந்திருக்கவும் கூடும், ஆதி பெற்ற ஏழு பிள்ளைகளுள் சேட்டையாகிய இவர் சரஸ்வதியின் அவதாரம் என்பர் தமிழ் சாகியத்துள்ள பெண்களுள் முதன்முதல் கவி வல்லவராயிருந்தார் இவர் என்றது பலர் துணிபு, சர்வரோ கௌடதம் என்னுமோர் அருமருந்தைக் கண்டுபிடித்து அதை உண்டதனால் பிணிரகிதராய் உச 0 (240) வயதுக்கு இவர் இருந்தார் என்பது கதை '**இல்லறமல்லது நல்லறமன்று**' என்பது இவரது போதனையாயினும் பிரமசாரி விரதமே இவர் சாதனை. கொன்றைவேந்தன் ஆத்திசூடி என்னும் பெயரிய அரிய பெரிய பழமொழி மாலைகள் இரண்டன்றி மூதுரை, கல்வி யொழுக்கம், நல்வழி, அசதிக் கோவை, நன்னூற் கோவை, நான்மணிக் கோவை, அருந்தமிழ் மாலை, தரிசனப்பத்து, ஞானக்குறள், பந்தனந்நதாதி என்னும் வேறு பாடல்களையும் இவர் இயற்றினார். சன்மார்க்க சாரம் முழுவதையும்

சுருங்கச் சொல்லி விளங்க வைத்து அகரமாகிய அட்சர நிரையே கோத்தெழுதப்பட்ட ஆத்திசூடியையும் கொன்றை வேந்தனையும் யோன் பண்டிதருடன் பிஸ்ஸெஹ் சட்சென் என்னும் ஆங்கிலேய குரவர்கள் பாராட்டி அவற்றின் மேன்மையையிட்டு இங்கீலீஷில் மொழிப் பெயர்த்தனர். ஆங்கிலோ பாஷை யிலன்றிச் செர்மன் உலந்து பாஷைகளிலும் அவை மொழி பெயர்க்கப்பட்டன (என்று சதாசிவம் பிள்ளை எழுதியுள்ளார்).

ஔவையாரைப் பற்றிச் சொல்லப்படும் கதைகளும் நூல்களில் இடம் பெற்றுள்ளன. கம்பராமாயணம் அரங்கேறிய சபையில் ஔவை இருந்தார் எனவும் துதிகவி சொன்னார் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. கணபதி பூசை செய்து வருபவர் அதனால் கணபதி இவரைத்தம் துதிக்கையால் கயிலாயத்திற்கு விட்டார் பாரிசாள் என்னும் ஓர் சிங்களராசன் வளர்த்து இமயமலை இராசனது அவதாரமான தெய்வீக ராசனுக்கு வதுவை செய்து கொடுத்தார் என்றும் அவ்விவாகச் சடங்கிற்கு தமிழ் நாட்டு வேந்தரும் அழைக்கப்பட்டார் என்றும் கதையுண்டு, சோழனைப் புகழ்ந்து பாட வேண்டிய பொழுது *"வரப்புயர"* என வாழ்த்தியமை. கந்தசாமியுடன் பண்ணின சம்பாஷணையில் நரர்புத்தி அடைதற்கேற்ற பல காரியங்களுடன் இனியது யாது அரியது யாது கொடியது யாது என கந்தசாமி வினவ ஔவை பதிவளித்துப் பாடியமை ஆகிய கதைகளும் உண்டு. இவரைப் பற்றிய அபூர்வமான கதைகள் பின்னும் பலவுண்டு. ஔவையார் புகழேந்தி ஓட்டக்கூத்தர் ஆகியோருடன் கலந்து உரையாடிய நிகழ்ச்சிகளும் இதே நூலில் புகழேந்திப் புலவர் சரிதம் பகுதியில் இடம் பெற்றுள்ளன. மேற்கூறப் பெற்ற கருத்துப் பாடல்கள் தனிப்பாடல் திரட்டு முதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. சுருக்கமாகச் சொன்னால் ஔவையார் பற்றிய செய்திகள் அனைத்தையும் கால வேறுபாடு கருதாது தொகுத்துத் தமிழில் கூறும் முதல் நூலாகப் பாவலர் சரித்திர தீபகம் விளங்குகிறது எனலாம்.

அறிஞர்களின் பாராட்டுமொழி

ஆண்பாற் புலவர்களையே பாராட்டிய காலங்களில் பெண்பாற் புலவர்களும் கல்வியில் மேம்பட்டவர்களாக இருந்தனர் என்பதைத்

"*தமிழ் மெய்யறிவு*" எனும் நூல் அவ்வையாரைப் பற்றிப்பேசுகின்றது. பண்டைய நாளில் பெண்மக்கள் ஆண்களோடு சகல துறைகளிலும் சரிநிகர் சமானமாக வாழ்ந்தனர், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் கல்வியும் செல்வமும் உண்டு. புவியரசரும் தலைவணங்கும் புலமை பெற்றவராக ஔவையார் திகழ்ந்தார், மேலும் உலகப்பெண்பாற் புலவர்களோடு ஒப்பிட்டுப்பேசப்படும் கவிஞராக திகழ்ந்தார், ஒழுக்கத்தைப் பற்றிபாடிய திராவிட சாப்பொ என ஔவையைப் புகழ்வதைக் காணலாம். சிறியோர் முதல் பெரியோர் வரை வாழ்க்கையில் எளிமையாக கடைபிடிக்கும் வகையில் நீதி நூல்களையும், கல்வியையும், ஒழுக்கத்தையும் கூறியுள்ளார். இதனால் ஔவையார் மக்களின் நலன் கருதி பாடியிருக்கலாம் என்பதை ஜேசு தாசன் அவர்கள் "வாழ்வின் நடப்பியல் உண்மைகளை உரைத்தவர். மக்கள் கவிஞராக ஔவையார் திகழ்ந்தார்" என்று இயம்புகிறார்.

ம. பொ. சி. கருத்து

ஔவையார் கி.மு. முதல் நூற்றாண்டில் ஆதி என்னும் தாய்க்கும், பகவன் என்னும் தந்தைக்கும் பிறந்தவர் என்றும், பாணர் இல்லத்தில் வளர்ந்தவர் என்றும் கூறுகிறார். பந்தனந்தாதி, பெட்டகம் போன்ற நூல்கள் ஔவையார் இயற்றினார் என்பதை மொழிந்து, புலமையிலோ பொருளிலோ நீதி நூற்களும் ஞானக்குறளும் பாடிய ஔவையார் இயற்றியவை என்று எண்ணத்தக்க அளவுக்கு தரமுடையனவல்ல, பிற்காலத்தில் ஔவையார் என்னும் பெயரால் பாடப்பட்டிருக்கலாம் என்கிறார். கணபதி ஆசிரிய விருத்தம் ஔவையார் இயற்றினார் என்பதை ஆய்ந்து, புகழ் மிக்க பெரும் புலவரான ஔவையார் பாடியதென்று கருதக்கூடிய தரத்தில் இல்லை எது ம.பொ.சியார் கூறுகிறார். ஞானக்குறள் என்பதை ஔவையார் இயற்றியதாக கூறுகிறார். பாடுபட்டுச் சேர்த்த செல்வங்களை இழந்தாலும் சேகரித்துக் கொள்ளலாம். ஔவைப்பிராட்டியின் நூல்களை இழக்க ஒரு போதும் சம்மதப்பட மாட்டோம் என்கிறார். தனிப்பாடல்கள் வரலாற்று நிகழ்வுகளாகவும் உபதேச மொழிகளாகவும் இருப்பதாகக் கூறுகிறார் ஔவையார் நீண்ட காலம் வாழ அதியமான் அளித்த நெல்லிக்கனி உதவியிருக்கும் என நம்புகிறார். நீதி வாக்கியங்களேயன்றி உயர்தரமான

யோக சாத்திரங்களைக் கூட எளிய தமிழில் எல்லோரும் புரிந்து கொள்ளும் நடையில் எழுதியுள்ளார். ஔவையைச் சம தர்மவாதியாக ம.பொ. சி. காட்டுகிறார் ஔவையாரை ஒரு சமுதாய தலைவியாகக் கொண்டு அவர் பாடிய பாடல்களில் கல்வியின் கருத்து லஞ்ச – ஒழிப்பு , நாட்டுப்பற்று , உழவின் பெருமை ஆகியவை பொதித்திருக்கின்றன என்று கூறி எக்காலத்துக்கும் பயன்படும் இலக்கியம் என்கிறார்.

1. ஔவையார் எனும் சொல்லுக்குத் தாய் எனும் பொருள் கொள்ளுகிறார்.
2. ஔவையார் பலர் இருப்பினும் ஔவையார் ஒருவரே என்கிறார்.
3. ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்தவர் என்பது உண்மை என்கிறார்.
4. பெண்பாற் புலவர்களில் மிக உயர்ந்த நற்பண்பின் சிகரமாக விளங்குகிறார் ஔவையார் என்று உறுதியாகச் சொல்கிறார்.

ஔவை யார் ?

மைசூருக்கு அருகிலுள்ள தகடூர் என்னும் ஊரில் யாளிதத்தன் என்பவனுக்கு மகளாகப் பிறந்தார் என்றும் பாணன் ஒருவனால் வளர்க்கப்பட்டாள் என்றும் தமிழ்ப் புலவர் வரிசை நூல் கூறும், குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களின் அரவணைப்புக் கிடைக்கப் பெறாத காரணத்தால் வளர்ந்த நிலையில் மணவாழ்க்கையை வெறுத்தவளாய்க் கிழட்டு வேடம் பூண்டு மணம் பேச வந்தவர் முன் தோன்றினாள். இதனால் மணம் பேச வந்தவர்கள் தம் எண்ணத்தைக் கைவிட்டனர். பின்பு தமிழகமெங்கும் சென்று பன்னாட்டரசர்களைக் கண்டு தம் மதிநுட்பத்தால் பாடிப் பரிசில் பெற்றுப் பல்புகழ் கொண்ட உலகமகா கவியரசி ஔவையின் தியாக வாழ்வு புதிய இலக்கிய வரலாறு என்பதை நாடும் ஏடும் நன்கறியும்.

ஒருவரா ? பலரா?

ஔவையார் என்ற பெயரில் அறுவர் வாழ்ந்துள்ளனர். சங்கத் தமிழ் வளர்த்த ஔவைக்குப் பிறகு கி.பி. 10.12,14,16.17.18 ஆகிய நூற்றாண்டுகளில் ஐந்து ஔவையார்கள் தோன்றி அருந்தமிழுக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். ஔவையார் ஒருவரே என்பதும் அவரே பல ஆண்டுகள் வாழ்ந்து பல்வேறு இலக்கியங்களைப் படைத்துள்ளனர் என்பதும் ஏற்கத்தக்க கருத்துகளல்ல.

அரசியல் பதிவு

ஔவையார் தமது காலத்தில் வாழ்ந்த மன்னர்களோடு கொண்ட நட்பு, அரசியலில் பங்குபெற்றமை, தம் காலத்தில் வாழ்ந்த மன்னர்கள், நிகழ்த்திய போர்கள், விளைவுகள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதன் மூலம் அக்காலச் சமூகம் கொண்டுள்ள அரசியல் சிந்தனையை அறிந்து கொள்ள முடிகிறது. நாஞ்சில் வள்ளுவன், கொண்கண் நாட்டரசன் போன்ற சிற்றரசர்களையும் பாடியுள்ளார். இராச சூயம்வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் மாரிவெண்கோ பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆகிய மூவேந்தரையும் கண்டு முத்தீபோல வீற்றிருக்கிறீர்கள் என வாழ்த்திப் பாடியதன் மூலம் நாட்டிடையே ஒருமைப் பாட்டுணர்வைத் தோற்று விக்கும் ஔவையின் தேச பக்தி தெற்றென விளங்குகிறது.

தொன்மம்

1. தன்னைப் பெண் பார்க்க வந்த இடத்தில் ஔவை மணத்தை வெறுத்துக் கிழவிக் கோலம் பூண்டது
2. வேலனிடம் சுட்ட பழம் கேட்டது.
3. கருநெல்லிக் கனியை முனிவர் கொணர்ந்தது..
4. பாரி மகளிர் திருமணத்திற்கு வந்த மூவேந்தர் கேட்டதற்கிணங்க நட்ட உடனே மூன்று பனம்பழத்தை விளைவித்துத் தந்தது.
5. அத்திருமண நாளில் பெண்ணையாறு பாலாறாக நெய்யாறாகப் பெருக்கெடுத்து ஓடியது.
6. பொற்காசு மழை பெய்யச் செய்து ஏழைகள் பெற்றது புல்வேளூர் வரகுணன் வயலிலுள்ள கிணற்று நீர் மேலேறி வயலெங்கும் பாய்ந்தது.
7. வெட்டிய பலா உடனே தழைத்துக் கனி கொடுத்தது.
8. ஊஞ்சல் சங்கிலி அறுந்தது. உருக் கொண்டாளின் காதலன் உயிர் மீட்டி முன்பு போல் இருவரையும் ஒன்று சேர்த்தது.

9. மூத்த பிள்ளையார் அருளால் சிலமுறை கயிலை சென்று வந்தது போன்ற அற்புதங்கள் தொன்மங்கள், இவற்றுக்குரிய உண்மைக் கருத்தாக்கம் செழுமையுறும்.

'அதிசயப் பிறவி' வ.ரா. வின் கருத்து

வரதராச ஐயங்கார், பொன்னம்மாள் ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்த (17.9.1981) வ. ரா. என்று அழைக்கப்படும் வ.ராமசாமி ஐயங்கார் '*ஓர் அதிசயப் பிறவி*' , '*நடைச் சித்திரம்*' படைத்ததன் மூலம் மறுமலர்ச்சித் தமிழ் உரைநடையின் முதல்வரானார்.

வ. ரா.வின் மறைவைப் பற்றி '*வானம்பாடி மறைந்தது*' என்ற தலைப்பில் அவருக்குப் புகழாரம் சூட்டி அவரை அக்ரகாரத்து '*அதிசயப்பிறவி*' என்று போற்றினார் அறிஞர் அண்ணா.

திருவள்ளுவரின் நடை பாமர மனிதனை எட்டவில்லை, ஆனால் ஔவையாரின் நடைபாமர மனிதனை எட்டியுள்ளது. இந்த நுட்பமான வேறு பாட்டினைச் சுட்டுவதற்கு முன்னால் திருக்குறள் எவருடைய கல்விப்பசிக்கும் அது தீனி எனவும் வள்ளுவருக்கென்றே தனித்தன்மையும் ஆளுமையும் இருந்தன என்று பாராட்டி விடுகின்றார். ஔவையார் தன்னை *நடையால் கவர்ந்தவர்* என முடிவு செய்கின்றார்.

காட்டில் கரு நெல்லிக்கனி அது ஆண்டிற்கு ஒரு முறையே பழுப்பது, ஒரு பழமே காய்ப்பது, பலநாளும் கண்காணித்து அதியன் அதைத் தன்காலில் விழவைத்துத் தேக்கிலையில் ஏந்தி வந்தான்.

அன்று ஔவையார் விருந்தினராக வந்து பசியுடன் இருக்கிறார். கரு நெல்லிக்கனியின் பெருமைகளை எடுத்துக் கூறாது கொடுக்க, பசியில் வாடிய ஔவையார் சுவையாக இருக்கிறது என்று கூறி முழுவதும் உண்டார் பிறகு அதன் பெருமைகளை அதியமானஞ்சி விரித்துரைக்கின்றார்.

உண்ட ஔவை,

"*நீல மணி மிடற் றொருவன் போல மன்னுக*"

என்று பாராட்டுகின்றார்.

பெண்ணை நதிப்புராணம்

சீராடு மல்வை திருப் பாட்டாலே
செழுந்ததி நெய் தீம்பால் முதலீய்ந்த
பூராவாய் நந்தி வரை முதலீய்ந்த
பெண்ணைநதிப் புராணந் தந்தான்
கூராரும் பிரணவத்தைச் சிவபெருமான்
தனக்குகந்து கூற லூற்ற
காராரு மேகம் வாழ் வீரசைவக்
கனகசபைக் கவிஞனன் றானே.

(திருவாமாத்தூர் மடம் சுப்பிரமணியசுவாமிகள்)

இப்புராணம் அறுநூற்றெழுபத்தேழு செய்யுட்களாக மலர்ந்துள்ளது., பதினொன்றாம் படலமாகிய *'பால்தயிர் நெய் வந்த படலத்தில்'* ஔவை பற்றிய பாடல்கள் இவ்வுரைக்குக் கருவாக அமைகிறது. இனி , படலத்திற்குள் நுழைவோம்.

'தாய்க்கு ஔவை என்று பெயர் எனப் பெரியோர் கூறுவர். தாய் தந்தையர்களுக்கெல்லாம் தாயாய் இருக்கப் பெற்ற இவரைப் பாட்டி என்று கூறாமல் தாயின் பெயராகிய ஔவை என்று கூறுவது ஏன் என்றால், எந்த இடத்தில் யார் எதை வேண்டினாலும் அவ்விடத்தில் அவர்களுக்கு அதைக் கொடுக்கின்ற படியால் ஔவை என்று அறிவிற் சிறந்தோர் கூறுவர். அந்த அம்மையின் கருணைப் பெருக்கை யாரே அறிய வல்லார். இலக்குமி குடியிருக்கும் நடுநாட்டில் உள்ள பெருங்கணைவாய் என்னும ஊரையடைந்து ஔவை மங்கல் மங்கயைர் வாழும் சிங்களத் தெருவில் செல்கையில், மழையில் நனைந்து வாய்ப் பற்கள் மடமட வென்று அடிபடக் கை கால்கள் உதறல் எடுக்கக் கிழப்புலி குகையில் புகுவது போல ஒரு வீட்டில் நுழைந்தார், அவரை அவ்வீட்டுப் பெண்கள் மூட்டம் போட்டுக் குளிரைப் போக்கி அவர் மனம் மகிழுமாறு பணிவிடை செய்தனர், அவர்கள் செயலைக் கண்ட ஔவை அவர்களைப் பாராட்டி அப் பெண்களுடைய உடலழகைக் கண்டும், அவர்களின் விதி வலிமையையும் கிளிப்பிள்ளைகள் கற்றுக் கொள்ளும் படியான சொல்லும் வார்த்தையையும் பார்த்து, இத்தகைய பெண்களை யாம் எங்கும்

கண்டிலேம் என வியந்து இவர்கள் அரசர்களுக்கு உரித்தானவர்களே என்று எண்ணி, அவர்களைப் பார்த்து நீங்கள் எல்லா இலக்கணங்களும் பொருந்தியிருக்கிறீர்கள், திருமாலுக்கொப்பான மன்னரையே கணவனாகப் பெறுவீர் ! என்று கூறி பின் வாருங்கள் என்றழைத்துச் சென்றார். காந்தத்தால் ஈர்க்கப்பட்ட இரும்பைப் போல் ஔவை பின் சென்றனர் அங்கவையும், சங்கவையும், காட்டில் பன்றிக் குட்டிகள் தாயை இழந்து பசியினால் வருந்துகையில் அவற்றின் துன்பம் நீக்க அருட் பாலூட்டி மந்திரிகளாக்கி வரங்களைத் தந்தருளிய சிவபெருமானைப் போல ஓராதரவுமில்லாத எங்களைத் தாயைப் போலத் தேடிவந்து அரசருக்கு மணம் புரிவித்தால் வேறென்ன வேண்டும் எங்களுக்கு என்றனர் அப்பெண்கள்.

ஔவையார் தெய்வப் பெண்களுக்கிணையான இப்பெண்களுடன் மலைகளையும், நதிகளையும் கடந்து திருக்கோவலூர் சென்றனர். அவ்விரு பெண்களை ஓரிடத்திருத்தி அரண் மனையில் அரசனைக் கண்டார் ஔவை, அவரைக்கண்ட தெய்வீக மன்னன் அன்புடன் வரவேற்றான்.

ஔவையார் பெண்ணை நதியை நோக்கி இத் திருமணத்திற்குப் பால், தயிர், நெய் கொண்டு வா ஓடிவா எனப் பாடிய வெண்பா,

"முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்தி வரு நெய்பால் தலைப்பெய்து குத்திச்
செருமலை தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா"

என்று பாடினார் ஒரு பக்கம் தேவாமிர்தம் போன்ற பாலும், ஓர் புறம் நெய்யும் ஒரு புறம் சந்திரன் போலத் தயிருமாய் ஆற்றின் இரு கரையும் ததும்பும்படி விரிந்த அலைகளையுடையதாய் நீர் என்கிற பெயரே இல்லாமல் மிகுந்த பிரளயமாக வந்தது கண்ட மக்கள் ஆனந்தக் கூத்தாடினார். சிவபெருமான் முன்னம் உபமன்னியு முனிவருக்கும் பாற்கடலைக் கொடுத்தும், உமாதேவியார் குகை நமச்சிவாயருக்குக் கொடுத்த திருமுலைப்பாலும் தீர்த்தமாய் தடாகத்தில் அடங்கியதால் திருப்பாற் கடல் தீர்த்த மென்றும், திருமுலைப்பால் தீர்த்த மென்றும்

சொல்லுவார்கள். பாலும் தயிரும் நெய்யும் கொண்டு வந்த பெருமை, பெண்ணை நதிக்கின்றி அவைகளுக்குண்டோ ? என்பர்.

பின்னர் ஔவையானவர் தெய்வங்களைப் பார்த்து நான் கொடுக்க வேண்டுவனவெல்லாவற்றையும் கொடுத்து விட்டேன், நான் சொன்ன முகூர்த்தத்தில் மணம் செய்து கொள் என்றார். மங்கல வாத்தியங்கள் இசைக்கத் தெய்வீகன் நீராடி ஆடை அணிகலன்கள் அணிந்து மன்மதனைப் போல இருக்கையிலமர்ந்தான் மங்கல மங்கையர் கூடி, அங்கவைக்கும் சங்கவைக்கும் நீராட்டி ஆடை ஆபரணங்களை அணிவித்து தெய்வீகன் பக்கத்தில் வீற்றிருக்கச் செய்தனர், அக்கினி காரியம் நடத்தி திருமணத்தை விதிமுறைப்படி செய்தார்கள், ஔவை அனைவரையும் வாழ்த்தினார். என்பது பெண்ணை நதிப்புராணச் செய்தி.

இனிய நண்பருடன் இறவாத காரணம்

பாரி மாண்ட போது கபிலர் மாண்டார். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறந்தபோது பிசிராந்தையாரும் அவனைத் தொடர்ந்து உயிர் நீத்தார். அவர்களைப் போன்று அதியமான் மாண்ட போது ஔவையும் உயிர் விட வில்லை என்ற கேள்வி ம.பொ.சி ஆய்வுள்ளத்தில் எழுகிறது. இத்தகைய சிக்கலுக்கு அக்கால சமுதாய நிலையைக் கொண்டு ம.பொ.சி. தீர்வு காண்கின்றார்.

1. அதியமான் தந்த நெல்லிக்கனியை உண்டதால் மரணத்தை வென்று நெடுங்கால வாழ்க்கையை ஔவையார் பெற்றிருந்தார். நெல்லிக்கனியை உண்டால் நீண்டநாள் வாழலாம் என்ற மக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக உள்ளது இதனை ஒரு காரணமாக ம.பொ.சி. கொள்கின்றார்.

2. ஒரு பெண்ணானவள் தன் கணவனல்லாத இன்னொரு ஆடவனுக்காக உயிர்தியாகம் புரிவது மரபன்று என்ற காரணத்தால் அதியமான் மாண்டதும் ஔவை உயிர்துறக்க வில்லை. இது தமிழ்ப் பண்பாட்டு மரபு. எந்த நிகழ்ச்சியையும் தமிழ்மரபோடு இணைத்துப் பார்க்கும் ம.பொ.சி யின் உள்ளம் இத்தகைய சிக்கலான கேள்விக்கும் விடை பகர்கின்றது.

நாஞ்சில் நாட்டிற்கு ஔவை வருகை

பறம்பு நாட்டு பாரி வள்ளலுடன் மகட்கொடைக்காக மூவேந்தர்களும் போரிட்டு அவனைக் கொன்றனர். பாரியின் மறைவிற்கு பின் அவன் மகளிர் அங்கவை, சங்கவை இருவரையும் ஔவையார் தம்முடன் அழைத்துக்கொண்டு பாண்டிய நாடு கடந்து சென்று பாண்டிய சேரநாட்டின் எல்லையில் அமர்கின்றாள். மூவேந்தர்களையும் அழைத்து அங்கு ஒரு சமாதான பேச்சுவார்த்தை நடத்துகிறாள். அன்று மூவேந்தர்களும் கூடிய இடம் இன்று 'முப்பந்தல்' என்று வழங்கி வருகின்றது. அவ்விடம் நாகர்கோவில் – நெல்லை நெடுஞ்சாலையில் 25 கி.மீ. தொலைவில் உள்ளது. மூவேந்தர்களோடு ஔவையார் நடத்திய பேச்சு வார்த்தைத் தோல்வியில் முடிந்தது. அதனால் ஆத்திரம் அடைந்த ஔவையார், அங்கவை, சங்கவைக்கு மூவேந்தர்களால் தொந்தரவு ஏற்படும் என்று கருதி அங்கவை, சங்கவை ஆகிய இருவரையும் தம் தவ வன்மையால், புலமைச் சிறப்பால் கற்சிலையாக மாற்றி விட்டார். அங்கவை, சங்கவை இருவரும் முப்பந்தலில் இன்றும் வழிபாட்டுத் தேவியர்களாக உள்ளனர்.

ஈசாந்தி மங்கலம்

நாஞ்சில் நாட்டின் வடபகுதியில் உள்ள ஊர் ஈசாந்தி மங்கலம். முப்பந்தல் நிகழ்ச்சிக்குப் பின் ஔவையார் ஈசாந்தி மங்கலம் வருகிறார். அங்கு ஒரு திருமண வீட்டில் உணவு உண்ண விடாமல் விரட்டி விடுகின்றனர். 'பசிவந்தால் பத்தும் பறக்கும் (மானம்குலம்கல்வி)' என்பதற்கு ஏற்ப ஔவை பசியின் கொடுமையால் பின்வரும் பாடலைப் பாடினார்.

இட்ட இலைக்குச் சோறிடா
ஈசாந்தி மங்கலமே
வடக்கு மாய காற்றடித்து
வழிச்சாலே போக

இப்பாட்டை ஔவையார் முடித்தவுடன் பெருங்காற்றடித்து அங்கு உணவு பரிமாறப்பட்ட இலைகள் எல்லாம் பறந்தன. இன்னும் அவ்வூரில் திருமண வீட்டில் இலைகள் இட்டு பரிமாறுவது நடைபெறாத ஒன்று. மிகப் பெரிய காற்று ஏதாவது ஒரு திசையில் இருந்து வீசும் என அவ்வூர் மக்கள் நம்புகின்றனர்.

ஔவையார் கோவிலும் - பூதப்பாண்டியும்

தாடகை மலை அடிவாரத்தில் ஔவையாருக்கு கோவில் எழுப்பப்பட்டுள்ளது.

இக்கோயில் கற்ப்பக்கிரகத்தில் வயதான மூதாட்டியின் தோற்றத்தில் கையில் ஒரு ஊன்றுகோலும் மற்றொரு கையில் ஏடும் கொண்ட நிலையில் ஔவையின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோவிலை ஔவையார் அம்மன் கோவில் என்றும் சரஸ்வதி அம்மன் கோவில் என்றும் மக்கள் அவரை சரஸ்வதியாகக் கருதுகின்றனர்.

நாவல்காடும் ஔவையாரும்

ஔவையார் கோவிலுக்கு அருகில் நாவல்காடு என்ற ஊர் உள்ளது. அங்கு ஒரு முருகன் கோவிலும் உள்ளது. இன்றும் அவ்வூரில் நாவல் மரங்கள் அடர்ந்திருப்பதை பார்க்க முடிகிறது. மாடுமேய்க்கும் சிறுவனான முருகனிடம் ஔவையார் நாவல் பழம் கேட்க அதற்கு முருகன் சுட்டகனி வேண்டுமா? சுடாத கனி வேண்டுமா? எனக் கேட்டு நாவல் பழங்களை உதிர்த்து விட்டான். அப்பழங்கள் மண்ணில் விழுந்தன. ஔவை அப்பழத்தில் உள்ள மண்ணைத் துடைப்பதற்காக பழத்தை ஊதிய பொழுது மரத்தில் இருந்த முருகன் பழம் சுடுகிறதா? எனக் கேட்டான். இக்கதையை அவ்வூர் மக்கள் ஈசாந்திமங்கலம் ஔவையார் கோயிலோடும் நாவல் காட்டோடும் தொடர்புப்படுத்திப் பேசி வருகின்றார்.

திருவையாறில் தமிழன்னை ஔவைத்திருக்கோவில்

திருவையாறு இசைபிறந்த மண்ணாகப் போற்றப்படுகிறது; தேவாரப்பாடல் பெற்ற தலமாகவும் தியாகய்யர் முக்திப் பெற்ற இடமாகவும் உள்ள திருவையாறில் இசையிலும் தமிழிலும் புலமைப் பெற்ற பாணர்குடியைச் சேர்ந்த ஔவையார்க்கு திருக்கோயில் எழுப்பி பௌர்ணமி தோறும் வழிபாடும், சிறப்பு வேள்விகளும், அபிசேகங்களும் ஔவையார் போற்றி வழிபாடும் முறைகளும் திருவையாறு திருநகருக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது. ஔவையாரை நாளும் வழிபட்டுவந்தால் திருமணமாகாத கன்னிப்பெண்கள் விரைவில் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கையும் மகப்பேறு இல்லாதவர்கள் விரைவில் மகப்பேற்று

இன்பத்தை அடைவார்கள் என்ற நம்பிக்கையும் கல்வியிலும் செல்வத்திலும் புகழ்பெற்று விளங்குவார்கள் என்ற நம்பிக்கையும் இங்குள்ள மக்களிடம் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

வண்ணச்சரபம் யார் ?

சென்ற 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவர், நாற்கவிநாவலர், முருகனருள் பெற்றவர்; பண் மிகுந்த சந்தப் பாடல்கள் பாடுவதில் வல்லவராய், சரபம் போன்று விளங்கினமையின், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் எனப் புகழ் பெற்றார். அவர் ஔவையைக் குறித்து என்னபாடுகிறார்?

ஔவையார் சுருக்கம்

புலவர் புராணத்தே 72 புலவர்கள் வரலாற்றில் பத்தாவது ஔவைச் சுருக்கம், ஔவையின் முழு வரலாற்றைப் பாடுகின்றது. எடுத்த எடுப்பிலேயே,

"முற்படப் பிறந்த ஔவை முதுகதை யினைச்சே சற்குப்
பிற்படம் பகரும் என்மேற் பிழைவகுத் திகழ வேண்டாம்
அற்படு களத்தான் வெற்பிற் கவனொடா ரூரன் முற்போம்
சொற்படர் வதனால் அன்னோர் தோல்விநன் கிலங்கு மாறே"

சுந்தரரும், சேரமானும் கயிலை சேர்தற்கு முன்பே ஔவை சேர்ந்தார் என்பதிலிருந்தே அவர்கள் தோல்வியும் ஔவை உயர்வும் தெரிகிறதல்லவா?

"இரவொடு பகலும் ஒடி, இனிது சேர்ந் திடம் ஒவ்வொன்றில்
தரவரும் மகவோர் எழில் தலைமகள் ஔவை தானே"

ஆதி, பகவன் எனும் பெற்றோர் எங்கெங்கு சென்று தங்குகிறார்களோ அங்கங்கு குழந்தைகளை அவ்வவ்விடத்திலேயே விட்டுச் செல்வர். ஏழு தெய்வக் குழந்தைகளும் பிறந்த அப்பொழுதே,

"இறைவன் எமைக் காப்பான் - கலங்காது செல்வீர்"

என வெண்பாவால் பாடி அமைதிப்படுத்தி அனுப்பினவாம்.

இவற்றில் ஒளவை பிறந்தவுடன் பாடி ய பாடல்

"இட்டமுட னென்றலையி லின்னபடி யென் றெழுதி
விட்ட சிவனுஞ் செத்து விட்டானோ - முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ" - தனிப்பாடற்றிரட்டு

ஒளவையுடன் பிறந்த ஆண் மகன் மூவர், வள்ளுவன், கபிலர், சேரமான் மூவரும் தம் புலமையால் உலகம் போற்ற வாழ்ந்தனர். உப்பை, உளுவை, வள்ளி ஆகிய மூன்று பெண் குழந்தைகளும் தம் அறிவினை வெளிக் காட்டாது இருந்து போயினர்.

ஒளவை, கிழவியல்ல தமிழ்க்கல்வி கொண்டு உலகில் சித்தாடும் வல்லியாக, சிங்காரச் செல்வியாக, செந்தமிழ் விறலியாக ஊர்தோறும் சென்று யாசித்துண்ணும் நாடோடியாக எண்ணற்ற மக்களின் துயர் போக்க உலாவந்த தெய்வமாயிற்றே என அருமையாகப் பாடுகிறார் !.

1. ஒளவை மழையில் நனைந்து வந்த சமயம், தனக்கு சிற்றாடை தந்த கன்னிப் பெண்ணிற்கு மூவேந்தர் உதவியுடன் மணம் முடித்து வைத்தார்.
2. மணவிழா ஒன்றில் சிறியதொரு பனையை பெரிய பனையாக்குகின்றார்.
3. அண்ணன் தம்பி சச்சரவில் அண்ணன் வெட்டிய பலாமரத்தைத் துளிர்க்கச் செய்து காய்காய்த்து பலாப்பழம் தரப் பாடுகிறார்.
4. செல்வமின்றித் துயருரும் பெண் ஒருத்திக்கு செவ்வாய்க் கிழமை பிள்ளையார் விரதம் செய்து வழிபட்டுயர வழி செய்தார் என்பதைச் சான்றாகக் கூறலாம்.

பாரதி

"பெண்கள் முழுமையாக விடுதலை பெறவேண்டுமாயின் அதற்குக் கல்வி முக்கியம். அதற்கு அறிவை விருத்தி செய்ய வேண்டும், இடைவிடாத பழக்கத்தினால் தமிழ்ப் பெண்கள் தமக்குள்ள அறிவை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர முடியும்"

"ஔவையார் பிறந்து வாழ்ந்த தமிழ்நாட்டு
மாதருக்கு அறிவுப் பயிற்சி கஷ்டமாகுமா"
(பாரதியார் கட்டுரைகள் ப. 238)

இவ்வாறு அரசியல் வல்லுநர், ஆத்மஞானி, அறிவில் சிறந்த பெண்மணி, சமூக நீதி பேசுவாள், தெய்வீகக் கவி என்றெல்லாம் ஔவையாரைப்பற்றி குறிப்பிட்ட பாரதி,

"ஔவைப் பிராட்டியின் நூல்களிலுள்ள
வசனங்களை உதாரணம் காட்டி
அவருடைய மகிமைகளை யெல்லாம்
விளக்கி கூற வேண்டுமாயின் அதற்கு
எத்தனையோ சுவடிகள் எழுத வேண்டும்"
(பாரதியார் கட்டுரைகள் ப. 254)

என்று கூறுவது முத்தாய்ப்பானது.

தனிப்பாடல்களில் ஔவையார் நிகழ்வுகள்

தனிப்பாடல்களாக காணப்படும் பல பாடல்களில் ஔவையார் பற்றிய பல நிகழ்ச்சிகள் பாடல்களாகத் தொடுக்கப்பட்டிருப்பதும் எண்ணத்தக்கதாகும்.

சிலம்பி என்னும் தாசியிடம் ஐந்நூறு பொன் பெற்றுக் கம்பர் பாடிய முன்னிரு வரிகளோடு பின்னிரு வரிகளை ஔவையார் கூழுக்காகப் பாடினார் என்பதை,

"தண்ணீருங் காவேரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சசோழ மண்டலமே - பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பியரவிந் தக்தா ளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்று தமிழ் நாவலர் சரிதைக் குறிப்பிடுவதும் உணரத்தக்கதாகும்.

பாரிமகளிர் அங்கவை, சங்கவை கொடுத்த நீலச்சிற்றாடையை வாங்கிய ஔவையார்,

"பாரி பரித்த பரியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக் கொட்டுஞ் - சேரமான்
வாராய் எனவழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்"

என்று பாடி, பாராட்டியதும் அறியத்தக்கதாகும்,

பாரி மகளிரை மணந்து கொண்ட மணப் பிள்ளைகளை வாழ்த்தி, மணப்பெண்களை எப்போதும் அன்பாக வைத்திருக்கும்படி ஔவையார் வேண்டுவதை,

"ஆயன் பதியில் அரன்பதிவந் தூற்றளகம்
மாயனூ றுங்கருவி யானாலும் - தூயமணிக்
குன்றுபோல் விறு குவி முலையார் தம்முடனீர்
இன்று போல் என்றும் இரும்"

என்ற பாடலால் அறிய முடிகிறது.

பாண்டியன் ஒருவன் திருமணத்திற்கு ஔவையார் சென்றபோது, '*உணவு உண்பீரோ?*' என்ற கேள்விக்கு

"நெடுக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினா
கடுக்குண்டேன் சோறுண் டிலேன்றன்"

வீட்டுத் திருமணத்தில் அழகுதான் என்பதில்தான் எத்தனை எள்ளல் சுவை! பசியாலும் தமிழச்சுவை மேலோங்கப்பாடியுள்ள ஔவையாரின் ஆற்றல் அளப்பரியது.

ஔவையாரின் கதைகள் அனைத்தும் அனுபவத்தின் சாரமாக அமைந்துள்ளது. இக்கதைகளைப் படித்தின்புறுவதோடு, வாழ்வியல் உணர்ந்து வாழுதற்கு இப்பாடல்கள் பெருந்துணைப்புரிய வல்லன; ஔவையாரின் பாட்டுத்திறத்தினை உணருவோம் ; அவரின் அமுத வாக்கினைப் பின்பற்றி, அறவாழ்வு வாழ்வோம்;

திருவள்ளுவராண்டு 2037, வைகாசி 28 (11.06.2006) ஞாயிறு மாலை 6.30 மணிக்கு திருமதி இராணிசாமிநாதன் தலைமையில் வணிகச்செம்மல் சி.சாமிநாதன் முன்னிலையில் நிறைநிலவு நான்காவது சொற்பொழிவு நடைபெற்றது.

ஔவை காட்டும் களவும் கற்பும்

சொற்பொழிவு-5

ஔவையார் சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பால் புலவர்களில் முதல்வர் எனலாம்; ஆண்களுக்கு நிகராகவும் அறிவு நலஞ்சான்றப்புலவராகவும் அகப்புறப்பாடல்கள் பாடுவதில் வல்லவராகவும் ஔவையார் வாழ்ந்து காட்டிய திறத்தை சங்கப் பாடல்கள் கொண்டு அறிந்து கொள்ளலாம் இலக்கணப்புலமையும் இலக்கிய இன்பமும் ஒரு சேரப் பெற்ற அகப்பாடல்களை ஔவையார் பாடி, சங்க காலத்தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுப்பாங்கினைப்பாதுகாத்த திறத்தினையும் அறிந்து கொள்ள முடிகிறது. சங்கத்தமிழர்களின் வாழ்வியலை, அக இன்பத்தினை, மேம்பட்ட நெறிமுறைகளைக் கொண்டிருந்த தமிழர் வரலாற்றினை சங்ககால இலக்கியங்களில் காணலாகும் களவு, கற்பு நெறிகள் வாயிலாக ஔவையார் உணர்த்திய பாங்கினை இன்றைய சொற்பொழிவுத்தலைப்பாக அமைத்திருப்பது மகிழ்ச்சிதரத்தக்கதாகும். திருமணத்திற்கு முன் நிகழும் நிகழ்வுகளை களவாகவும் திருமணத்திற்குப்பின் நிகழும் நிகழ்வுகளை கற்பாகவும் கொண்டு தமிழர்கள் வாழ்ந்த முறைகளைத் தொல்காப்பியரின் தொல்காப்பியத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

களவு, கற்பு இலக்கணத்திற்கு இலக்கியமாக ஔவையாரின் அகப்பாடல்கள் விளங்குகின்றன.

களவு

தமிழ் மொழியின் தனிப் பெரும் பாடல்களாகப் பாட்டும் தொகையுமாக அமையும் சங்கப்பாடல்கள் விளங்குகின்றன. இவற்றைப் பாடிய புலவர்களுள் 30 பெண்பாற் புலவர்கள் உள்ளனர். இவர்களுள் ஒருவரான ஔவையார் 59 பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் 26 பாடல்கள் அகப் பாடல்களாகும், நற்றிணையில் ஏழும் குறுந்தொகையில் பதினைந்தும் அகநானூற்றில் நான்குமாக அமைந்துள்ளன.

குறுந்தொகை 23 வது பாடலில் வரும் ஔவையார் பாடல் பிற்காலத்தில் தனி இலக்கிய வகையை குறவஞ்சி, குறம் என்று உருவாக்கியதோடு, தலைசிறந்த நாடகத் தமிழ் இலக்கிய வகையைத் தந்துள்ளது.

குறவஞ்சி

பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய தலை சிறந்த நாட்டிய இலக்கிய வகைகளாகக் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்கள் உள்ளன,

தொல்காப்பியர் களவுக் காலத்துத் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை கண்டு செவிலித்தாயும் நற்றாயும் கட்டு வைத்தும் கழங்கு வைத்தும் வெளியீட்டின் வாயிலாகவும் குறிபார்த்தும் காணும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

"கட்டினும் கழங்கினும் வெளியென இருவரும்
ஒட்டிய திறந்தாள் செய்திக் கண்ணும் " (தொல் 3.4)

கட்டுப் பார்த்தலாவது சேரியில் முது பெண்டாகிக் குறி சொல்லும்மாதரை மனையகத்துக் கொணர்ந்து வைத்து, முறத்திலே பிடி நெல்லையிட்டு எதிரே தலைமகளை நிறுத்தித் தெய்வத்திற்குப் பரப்பிட்டு வழிபாடு செய்து அந்நெல்லை நந்நான்காக எண்ணி எஞ்சிய ஒன்றிரண்டு மூன்றளவும் முருகணங்கெனவும் நான்காயின் பிறிதொரு நோய் எனவும் உரைப்போர் இது குறித்து,

"நன்னுதல் பரந்த பசலை கண்டு அன்னை
செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக்
கட்டிற் கேட்கும் " (நற்றிணை 288: 5-7)

முருகனால் இந்நோய் வந்ததோ என்பதனை அறிவதற்கு வேலன் குறி பார்ப்பது கழங்கு பார்த்தல் என்பர். இவ்வாறு கட்டிலும் கழங்கினும் குறிபார்த்தல் மையமாகக் கொண்டு குறவஞ்சி இலக்கியங்கள் தோன்றின. இதற்கு முன்னோடியாக அமைந்த பாடலாக ஔவையார் பாடிய குறுந்தொகை 23 வது பாடல் அமைந்துள்ளது.

"அகவன் மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பு அன்ன நல் நெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே "

இப்பாடலில் வரும் குறி சொல்பவளாக அகவன் மகள் விளங்குகிறாள். அகவன் மகளோடு உரையாடுவதன் மூலமாகத் தோழி அறத்தொடு நின்று, தலைவியின் நோய்க்குரிய காரணத்தை வெளிப்படுத்துகிறாள். இத்தகு அகவன் மகள் கையில் சிறுகோல் வைத்திருப்பாள், இதனைக் குறுந்தொகை 298 ஆவது பாடல் "வெண்கடைச் சிறு கோல் அகவன் மகள்" என்று கூறுகிறது. "நுண்கோல் அகவர்" என்று அகநானூறு 152 குறிப்பிடுகிறது. இத்தகு குறி கூறும் மகளிரை முதுவாய்ப் பெண்டிர் என்று அகநானூறும் (22) செம்முது பெண்டிர் என்று நற்றிணையும் (பா.288) குறிப்பிடுகின்றன, இடைக்கால இலக்கியங்களில் கட்டு வித்தி, கட்டுவிச்சி, கட்டறிமகடூஉ என்று அகவன் மகள் குறிப்பிடுகின்றாள். தலைவியின் நோய் போக்க உற்ற வழி கட்டுப் பார்த்தல் என்பதைத் திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடல் குறிப்பிடுகின்றது.

"காரார் குழல் கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறி
சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா,
வேரா , விதிர் விதிரா, மெய்சிலிரா கைமோவா,
பேரா யிரமுடையான் என்றாள் "

பெருங்கதையில் கட்டறி மகடூஉ குறியுரைத்த செய்தி (உஞ்சைக் காண்டம் 235-38) குறிப்பிடப் பட்டுள்ளது, இவ்வாறு இலக்கியங்களில் நடமாடிய அகவன் மகள் குறவஞ்சி இலக்கியங்களை உருவாக்கிய நாயகியாக விளங்குகிறாள்.

நல்நெடுங்கூந்தல்

ஔவையால் பாடப்பட்ட அகவன் மகள் நல்நெடுங்கூந்தலை உடையவளாகத் திகழ்கிறாள். நல் கூந்தலையும். நெடுங்கூந்தலையும் உடையவள், அதுவும் மனவு கோப்பு அன்ன நல் நெடுங் கூந்தலாகும். மனவு என்பது சங்கு மணியைக் குறிக்கும், கோப்பு என்பது கோவையைக்

குறிக்கும், மெய், உரு பற்றிய உவமையாக வந்துள்ளது, கூந்தலின் சரிவு, நெய்ப்புடமை, அளவு முதலியவற்றில் நன்னெடுகூந்தலுடையவளாக விளங்குகிறாள். இயற்கை அழகுடையவளான இவள் பல்வகை அணிகளை அணிந்துள்ளாள். சிங்கி அணிந்திருக்கும் நகைகளைக் குறவஞ்சி விவரிக்கும்.

தோழி கூற்று

தோழி, சங்க இலக்கியத்தில் மிக இன்றியமையாதவளாகின்றாள். தலைவனைப் பகற்குறி, இரவுக்குறி ஆகிய நேரத்தில் தலைவி சந்தித்தல், தலைவன் பிரிந்து செல்லும் போது ஆற்றுவித்தல், அறத்தொடு நிற்றல், வரைவு என அனைத்து நிலைகளிலும் தோழி முன் நிற்கின்றாள்.

தோழி மிகுந்த அறிவாற்றலோடு செய்யபடுகின்ற தன்மையினைப் பாடல்கள் வழி நாம் உணர முடிகின்றது களவு, கற்பாக மாறுவதற்குத் தோழி தன் சொல்லாற்றலை வெளிப்படுத்துகிறாள். தலைவனுக்கு எந்தச் சூழலில் நயம் பட அறிவுரை கூறவேண்டும் என்பதைச் சிந்தித்து செயல்படுகின்றாள்.

துறை விளக்கம்

குறுந்தொகை இருபத்து மூன்றாம் பாடலில், மூன்று நோக்கங்களை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறாள். 1. கட்டுவிச்சியால் குறிகேட்கத் தலைப்பட்ட செவிலிக்குத் தோழி, இந்நோய் தெய்வத்தால் வந்ததன்று : ஒரு தலைவனால் ஆயிற்று எனக் குறிப்பால் கூறி அறத்தோடு நின்றதாகும்.

பாடுகபாட்டே

அகவன் மகள் தலைவனின் நல்நெடுங்குன்றைப் பாடுகிறாள். தலைவனைப் பிரிந்து உளநோயால் துன்பப்படும் தலைவிக்கு அவனது குன்று பற்றிப் பாடும் பாடல் இனிமையைப் பயக்கிறது. உள நோய்க்கு மருந்தாக அமைகிறது. சிறையாரும் மடக்கிளியை அழைத்து அவனுடைய நாமத்தை ஒரு முறை கூறு உனக்கு பால் தருவேன் தேனோடு பால் பழந்தருவேன் உன்னை மதித்து முறையால் தருவேன் அவனது நாமத்தை ஒரு முறை கூறு என்று திருஞானசம்பந்தர் பாடுகிறார். இவ்வாறு அகமரபு

பிற்காலத்தில் பக்திப்பாடல் மரபாக வளர்ந்தது. மன்னனை எழுப்பிப் பாடிய பாடல் பள்ளி எழுச்சி ஆயிற்று. தலைவன் உலாவருதலைப் பாடிய பாடல் பக்திப் பாடலாயிற்று.

ஔவையார், குறுந்தொகையில் பாடிய பாடல்கள் யாவும் கூற்று அடிப்படையில் அமைந்துள்ளன. அவை முறையே, தோழி கூற்று இரண்டு பாடல்களிலும் (23,338), செவிலி கூற்று ஒரு பாட்டிலும் (15), தலைவன் கூற்று இரண்டு பாடல்களிலும் (29,99), தலைவி கூற்று எட்டு பாடல்களிலும் (28, 39,43,91,102,158,183,200), பரத்தை கூற்று இரண்டு பாடல்களிலும் (80,364) காணப் பெறுகின்றன.

தலைவி கூற்று
வெள்ளி வீதியார்

வெள்ளி வீதியார் சங்க காலப் பெண்பாற் புலவர் ஆவார். மதுரை வெள்ளியம்பலத் தெருவில் வசித்து வந்ததால் வெள்ளி வீதியார் எனப்பெயர் பெற்றிருக்கலாம் என்பர். (அபிதான சிந்தாமணி ப.1502) வெள்ளி வீதியார் தம் கணவரை விட்டுப் பிரிந்து வாழ்ந்து வந்தார். அதற்கான காரணம் தெரியப் பெற வில்லை. அன்பு மேலீட்டின் காரணமாகத் தம் கணவனைத் தேடிச் சென்று அலைந்ததாகவும் கூறுவர். இச் செய்தி ஔவையாரின் அகப்பாடல் ஒன்றில் இடம் பெறுகின்றது.

"வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
செலவயர்ந் திசினால் யானே....."

என்ற அகநானூற்றுப் பாடல் (147:9-10) அடிகள் கணவனைத் தேடிச் சென்று வெள்ளி வீதியாரைப் பற்றிக் கூறுகின்றன. வெள்ளி வீதியாரின் செயல், தலைவி காட்டில் செல்லத் துணிந்தமைக்கு உவமிக்கப் பட்டுள்ளது. இவ் உவமை வெள்ளி வீதியார் பற்றிய வரலாற்றுக் குறிப்பாக அமைகின்றது.

முல்லைத் தலைவி கூற்று

முல்லைத் தலைவியிடம் எதிர்பார்ப்பும் தலைவன் மீதான நம்பிக்கையும் வெளிப்படுகின்றன. குறித்த காலத்தில் வராத தலைவனின் நிலையை, அவன் கடமை உணர்வின் பொருட்டு தாமதித்துள்ளான் என

உணர்ந்து கொள்கிறாள். தலைவன் சென்ற நாட்டில் பூக்கும் கொன்றை, இணைந்த மானினம், கார் காலமழை (183) போன்றவற்றைக் காண்பார், அவை, கடமையை விரைந்து நிறைவேற்றத் தூண்டும் என்று தோழியிடம் கூறுகிறாள். முல்லை சான்ற கற்பின் மெல்லியல் ஆதலால், தலைவனின் கவனத்தைத் திசை திருப்பும் வன்மை இயற்கையின் ஆற்றலுக்குண்டு என்று நம்பிக்கையை வெளிப்படுத்துகிறாள். இதன் மூலம் ஆழ்ந்த காதல் புலப்படுத்தப்படுகிறது. இத் தலைவி கடமை உணர்வும், குடும்பப் பொறுப்பும், தலைவனின் வினைநேர்மை அறிந்த மாண்பு முடையவளாக இருக்கிறாள்.

குறிஞ்சித்தலைவி கூற்று

தலைவியைத் தலைவன் சந்திக்க வரும் போது கார்கால மழை பெய்து இடையூறு செய்கிறது. இத்தலைவன் மணமுடிக்கும் முயற்சியின்றி களவு மணத்தில் விருப்பம் உறுகிறான் வழி நடை வருத்தத்தினால் தலைவன் படும் இன்னல்களையும் கண்டு தான் துயரப்படுவதாகக் கூறி வரைந்து கொள்ள உணர்த்துகிறாள். பெரும்பாலும் தோழியே தலைவியின் ஆற்றாமையைச் சொல்வாள். இங்கு தலைவியே பேசுகிறாள் இமயமும் துளைக்கும் பண்பினை மழையே என்று தலைவன் செயலை மழையோடு ஒப்பிட்டு இடித்துரைக்கிறாள். கருணை, ஆற்றல், செயல்திறம், வன்மை, கல்லைக் கரையவைக்கும் ஆண்மையுடைய தலைவன் உடன் வரைந்து கொள்ளாமல் தொடர்ந்து இரவுக்குறி நாடி வருவது பேராண்மையன்று என்று கூறுகிறாள். மழையைக்காரணம் காட்டிக்குறிவிலக்குகிறாள் குறியிடம் கூறுவது பெண்களின் பணியாதலால் அதனால் தான் படும் சிரமங்களை உணர்ந்த, 'விரும்பி துணையிலர் அளியர் பெண்டிர்' என்ற சொற்களைப் பயன்படுத்துகிறாள்.

கற்பு :

தலைவியின் பிரிவாற்றாமை :

தலைவனின் பிரிவைத் தாங்கிக் கொள்ள இயலாத மெல்லிய உள்ளத்தாள் தலைவி தலைவனுடைய பிரிவை எண்ணிவாடும் தலைவியை ஔவை சில பாடல்களில் படம் பிடித்துக் காட்டுகின்றார், பாலைத்திணையில் பிரிவிடை மெலிந்த கிழத்தி ஒருத்தியின் உள்ளக் கலக்கத்தைப் பின்வரும் பாடல் சுட்டுகின்றது.

"செல்வார் அல்லர் என்று யான் இகழ்ந்தனனே
ஒல்வாள் அல்லள் என்று அவர் இகழ்ந்தனரே
ஆயிடை, இருபேர் ஆண்மை செய்த பூசல்
நல் அராக் கதுவி யாங்குஎன்
அல்லல் நெஞ்சம் அலமரல் உறுமே" (குறுந் 43)

இப்பாடலில் தன்னிடம் சொல்லாமல் தலைவன் செல்லமாட்டான் என நினைக்கின்ற தலைவியையும், சொன்னால் பொறுக்க மாட்டாள் என்று நினைத்துச் சொல்லாமல் சென்ற தலைவனையும் காணுகின்றோம். தன் துயரத்தின் நிலையை உணர்ந்து விழைகின்ற அவள் மிகக் கொடிய நல்லரவு கதுவியதால் விளைந்த உவமையைக் கூறுகின்றாள், பொறுக்கவியலாத துன்பத்திற்கு ஈடாக ஔவை கூறும் உவமை மிகப் பொருத்தமுடையது.

ஔவையின் பாடலில் வரும் நெய்தல் நிலத் தலைவி தன் தோழியிடம் "தலைவரை எண்ணினால் அவரது பிரிவை நினைத்து என் உள்ளம் வேகத் தொடங்கி விடும், அவரை நினைக்காமல் இருக்கவும் இயலவில்லை" (குறுந் 102) என்று தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றாள். "உள்ளினும் உள்ளம் வேமே!" (வேகுமே!)

தலைவியின் துயரம்

தலைவி, தலைவன் மேல் அளவு கடந்த அன்பு கொண்டிருப்பதனால், அவனது பிரிவு அவளை மிகுதியாகத் தாக்குகிறது. ஔவையின் பாலை நிலத்தலைவி. தன் நோயை அறியாமல் உறங்குவோரைக் கண்டு,

"முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு
ஓ ஒல் எனக் கூவு வேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்பவென்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே" (குறுந் 28)

என்று தன் உணர்வுகளை வெளிப் படுத்துகிறாள்

"சென்ற நாட்ட கொன்றை அம் பசுவீ
நம் போல் பசக்கும் காலை தம்போல்

சிறு தலைப் பிணையின் தீர்த்த நெறிகோட்டு
இரலை மானையும் காண்பர்கொல் நமரே
புல்லென் காயா பூக்கெழு பெருஞ்சினை
மென் மெயில் எருத்தின் தோன்றும்
புன் புல வைப்பின் கானத் தானே" (குறுந் 183)

என்று தலைவி தோழியிடம், தோழி ! மழைமுகம் காணாது பொலிவழிந்திருந்த காயாமரத்தின் மலர்கள் பொருந்திய கொம்பு மழை பெய்த காரணத்தால் மெல்லிய மயிலின் கழுத்தைப் போலப் பொலிவுற்றுத் தோன்றும் புல்லிய இடத்தையுடைய காட்டிடத்தே எம்மைப் பிரிந்து சென்று அவர் தாங்கிய நாட்டில் கொன்றை மரத்தின் பசுமையான செவ்விய மலர்கள் நம்மைப் போல பசலை நிறத்தை அடையும் பெண் மானை விட்டுப் பிரிந்த முறுக்குமண்டு வளைந்த கொம்புகளையுடைய ஆண் மானையும் நம் தலைவர் காண்பரோ? என்று வினவுகின்றாள். தலைவனின் வருகையை அவள் நம்பிக்கையுடன் எதிர் பார்ப்பதை மேற்கண்ட பாடல் சிறப்பாக விளக்குகிறது.

தலைவியின் ஊடல்

பரத்தையர் மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டிப் புக்க வழித்தன் வரைத்தன்றி, அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழி மருத நிலத் தலைமகள் ஒருத்தி,

நெஞ்சே ! ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு வளர்கின்ற பிரப்பங் கொடியின் புறத்தே வரிகளைக் கொண்ட கனிந்த பழத்தை ஆழமான நீரையுடைய குளத்தில் உள்ள கெண்டைகள் கவ்வுதற்கு இடமான தண்ணிய நீர்த்துறைகளையுடைய தலைவனுக்குரிய மனைவியாக நீ இருப்பாயாயின், நின் உள்ளத்தில் துன்பமும் பலவாக ஆகுக (குறுந் 91) என்று தன் நெஞ்சகத்தின் உணர்வைப் பகர்கின்றாள், நிலத்தில் படர்ந்துள்ள பிரம்பின் கனியை நீரில் வாழும் கெண்டை கவ்வும் என்பது உயர்குடிப் பிறந்தானாகிய தலைவன் தன்னை நீக்கி பரத்தையர் வசமாயினான் என்னும் உட்குறிப்பைக் கொண்டது. இதன் வழி ஔவை உட்பொருளாகத் தலைவனின் இழி செயலை இடித்துரைக் கின்றாள்.

மருதத்தலைவி கூற்று

பரத்தையிடம் சென்று மீண்ட தலைவனை இடித்துரைக்காமல் அவனோடு கூடிய தலைவியை அவள் நெஞ்சம் இடித்துரைக்கிறது. இவ்வாறு தவறுணர்த்தாமல் விடுவது அவன் பரத்தையிடம் தொடர்ந்து செல்வதற்கும், தலைவியோடு சிலநாள் மட்டுமே தங்குதற்கும் வழி வகுத்துவிடும் என்று அவளது நெஞ்சம் எச்சரிக்கிறது. "கூடும்பகட்டியானை நெடுந்தேரஞ்சி கொல்முனை இரவூர் போலச் சிலவாக நீ துஞ்சு நாளே" (91) தலைவன் மீதுள்ள அளப்பரிய அன்பினால் தலைவன் மனதிலும் சாடாது தன்னையே கடிந்து கொள்ளும் இத்தலைவி இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு என்ற குறளுக்கு ஏற்ற சான்றான்மை உடையவளாகத் திகழ்கிறாள்.

நெய்தல் தலைவி கூற்று

நெய்தல் தலைவியிடம் தலைவன் குறித்த காலம் வராததால், கானலும் கடலும் தோன்றி வருந்துதலால் ஏற்பட்ட வாழ்க்கைத் துயரமும், உரிமைக் கோபமும் ஏமாற்றமும் வெளிப்படுகின்றன. தோழி தலைவியின் மனதை மாற்ற பருவமழையன்று வம்பமாரி என்று கூற தலைவி பருவமழையே எனக் கூறுகிறாள், தலைவர் 'மறந்தோர் மன்ற மறவா நாமே' (200) என்பதால் உள்ளின் உள்ளம் வேமே, நினைக்காமல் இருக்கவும் முடியவில்லை, இவ்வாறு நம்மை வருந்த விட்ட தலைவர் சான்றோர் அல்லர் (1020 என்கிறாள். 'வான்நோய் வற்றேகாமம்' என்ற இப்பாடலில் வரும் தொடரை குறித்து வ. சுப. மாணிக்கம் அவர்கள் 'என் காமம் வானளாவ உயர்ந்தது என் காதலன் அதனை முற்றுந் தணிக்கவில்லை' (ப 367) என்றுரைத்து இத்தலைவியை அடக்கமுடியாத காமவேட்கைப் பட்டவளாகச் சித்தரிப்பார். ஆனால் முதிர்ந்த காதலில் நாணத்திற்கு இடமில்லை என்பதை ஔவை அகநானூற்றுப் பாடலின் மரவுருவகத்தின் மூலம் குறிப்பிடுகிறார். காமம் என்ற மரம் - நெஞ்சில் முதலில் செடியாக வளர்ந்தது, ஊராரின் அலர் என்ற கிளை பரப்பிற்று காதல் எனும் தளிர்விட்டு நாணம் என்ற கிளை நீக்கி மரம் ஆனது.

பாலைத் தலைவியின் கூற்று

பொருள்வயிற் பிரிவு பற்றி "இன்பமும் கடமையும் போராடும் இடமாக, நல்ல உணர்ச்சிகள் மோதிக் கொள்ளும் இடமாக இத்துறை

அமைந்திருக்கக் காணலாம்" என்று வ.சுப. மாணிக்கம் குறிப்பிடுவார். ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையயே வாழ்க்கை என்று, கலித்தொகை தலைவி போல இத் தலைவி கூறினும் இல்லறக் கடமைக்காக மட்டுமின்றி ஊரார் பழிச் சொல்லுக்காகவும் தலைவன் வினைமேற் செல்வது அவசியமாகிறது, சுற்றத்தினர், நண்பர், உறவினர் போன்றோர் பெண்ணின் முலைத்தடத்தில் அழுந்திக்கிடப்பவன் என இகழ்ந்து (அகம் 279) விடுவார்களோ என 'அஞ்சி வெந்திறல் கடுவெளி பொங்கும் மலையுடை அருஞ்சுரம்' பொருள் தேடச் சென்றவன் தலைவன். இவ்வாறு தலைவன் சென்றதை கடுமையான பாலை வழியை நினைத்துக் கலங்குகிறாள். தலைவனின் நெஞ்சில் தலைவி பெற்றிருந்த முதலிடத்தை ஏக்கத்துடன் வெளிப்படுத்துகிறாள். தலைவன் தன்னைப்பிரிந்து பாலைவழி சென்றதற்கு ஊர் மக்களே காரணம் என்ற எண்ணம் வலுப்பட்டு, பிரிவுத்துயரைத் தனக்குமட்டும் கொடுத்து நிம்மதியாகத் தூங்கும் ஊரை கூட்ட வேண்டும்; தாக்கவேண்டும்; கூவி உறக்கத்தை கலைக்க வேண்டும் (28) என்று தோழியிடம் ஆவேசத்துடன் கூறுகிறாள்.

மற்றொரு தலைவி தோழியிடம் நீரின்றி அமையா உலகம் போல தலைவனின்றி நானில்லை என்பதை உணர்ந்தவர் தலைவர். எனவே என்னைப் பிரியார் என்ற துணிவோடு இருந்தேன். என் காதல் துணிவினால் பிரிவிற்கு உடன்படேன் என்று தன் வினைத் துணிவினால் குறிப்பாகப் பிரிவுணர்த்தாது திடீரென கிளம்பி விட்டார். 'இரு பேராண்மை செய்த பூசலால்' நல்லபாம்பு கடித்தாற் போன்ற உயிர் வேதனை யடைந்தேன் என்று கூறுவாள்.

தலைவி கூற்றுப் பாடல்கள்

ஔவையின் பாடல்களில் அகநானூற்று பாடல்கள் நான்குமே தலைவியின் கூற்றாக அமைந்துள்ளன.

தலைவி தன் உள்ளக் கருத்தினைத் தன் தோழியிடம் கூறுவதாக ஔவையின் மூன்று பாடல்கள் அமைந்துள்ளன. ஒரு பாடல் தலைவி தன் நெஞ்சிற்கு கூறியதாக இயற்றப்பட்டுள்ளது.

பிரிவு

தலைவன் பொருள் தேடும் பொருட்டும் வினையின் பொருட்டும் தலைவியைப் பிரிந்து செல்கின்றான், தலைவனின் பிரிவைத் தலைவி

பொறுத்திருக்கிறாள். தலைவன் குறிப்பிட்ட காலம் வந்தும் தலைவன் வரவில்லை. பொருத்திருந்த தலைவி, தலைவன் பிரிவை எண்ணி வருந்துகின்றாள். தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச் சென்று பனிக்காலம் திரும்பி விட்டதை பாலை நிலைப்பொருள்கள் தலைவிக்குக் காட்ட, தலைவன் வரவில்லை. அதனால் வருந்திய தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுபவளாய்த் தோழிக்குச் சொல்கிறாள். தலைவி தோழியிடம்

"விசும்பு விசைந்து எறிந்த கூதளங் கோதையின்
பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளை இ
ஆர்கலி வளவயின் போதொடு பரப்ப
புலம்புனீறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்
நலம் கவர் பசலை நலியவும், நம்துயர்
அறியார் கொல் லோ, தாமே" (பாடல்-273 வரி 1-6)

என்று கூறுகின்றாள், மேலும் வாடைக்காற்றானது முடிவின்றித் தன்னை வாட்டுகிறது, அதனது வரவால் தலைவியின் இளமுலையிடத்தே காமநோய் என்ற மரம் தோன்றியது. தலைவியின் தளர்ச்சியான நெஞ்சம் என்னும் நிலத்தில் அது செடியாய் வளர்ந்தது. ஊரார் எழுப்பிய ஆம்பல் என்ற கிளைகளைக் கொண்டு, காதல் என்னும் தளிர்களைப் பரப்பி, புலவரால் புகழப் பெற்ற, நாணம் இல்லாத பெரிய மரமாய் ஆனது, நிலத்தின் எல்லை எல்லாம் பரவிக்கவிந்து அலர் என்னும் மலர்களைச் சொறிந்தது. முன்பனிக்காலம் நம்மை வருத்த, நம்துயரத்தை அவர் அறியவில்லை. அறிந்தாலும் தம்மனதில் மங்கையர் உலகத்தின் இயல்பைத் தலைவன் அறியவில்லையோ? என்று தன் உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள்.

நம்பிக்கையுடன் தலைவி கூற்று

தலைமகன் பொருள்வயிற் பிரிந்து செல்கின்றான். தலைவனின் பிரிவை தலைவி ஆற்ற மாட்டாள் என எண்ணிய தோழியிடம், தலைவனின் பிரிவை ஆற்றியிருப்பேன் என்பது படப்பின்வருமாறு தலைவி கூறுகிறாள். வானில் உலவும் விளங்குகின்ற ஒளியையுடைய கதிரவனானது தீயைப்போன்று சுட்டதால் வெப்பமானது கானல் நீராகத் திகழும், அரும்பு இல்லாமல் மலர்ந்த இலவமரங்கள், ஆரவாரம் உடைய

மகளிர் கூட்டம் மகிழ்ந்து எடுத்த கார்த்திகை விளக்குகள் போல வரிசையாய் விளங்கி நிற்கின்றன. அங்குக் குளங்களை துகள் படிந்திருக்கும், மழைவளம்தவறிய காடு, அத்தகைய காட்டில் நம் தலைவர் நம்மை உடன் அழைத்துச் சென்றால், என் முயக்கத்தைப் பெற்றிருப்பாரே!

"கயம் துகள் ஆகிய பயம் தபு கானம்
எம்மொடு கழிந்தனர் ஆயின், கம்மென
வம்பு விரித்தன்ன பொங்கு மணற் கான் யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயில் இணர் எக்கர்
மெய் புகுவு அன்னகை கவர் முயக்கம்
அவரும் பெறுகுவர் மன்னே " (பாடல்-11 வள் 5-10)

வினையே ஆடவர்க்கு உயிர் என்பதனையும், பொருள் இன்றேல் இல்லறம் இல்லை என்பதனையும் உணர்ந்த தலைவி தலைவனுடன் விரைவில் கூட வேண்டும் என்ற நிலையில் அமைந்ததாக இப்பாடல் விளங்குகிறது.

தலைவன் சென்ற வழியில் நான் செல்வேன்

தலைவன் பொருள் ஈட்டத் தலைவியைப் பிரிந்து சென்றான். பொறையன் மலையில் உள்ள அருவி ஒலியைப் போன்று தலைவியினுடைய காமம் அலராயிற்று. அதைக் கேட்ட நெஞ்சம் வருந்த, தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியதாக இப்பாடல் அமைகின்றது. பேயைக் கனவில் கண்ட கோழை, தன் கோழைத் தன்மை பிறர் அரிய கூடாது என்பதற்காக, தன் கனவைப் பிறரிடம் கூறாது மறைக்கிறான். அது போல நாம் நமது ஆற்றாமையை மறைத்தும், பல சிறப்புக்களை உடைய காமமானது நம்மையும் அறியாதபடி பிறருக்குப் புலனானது. அதனால் வெற்றி தரும் வேலையும் உடைய சேர மன்னனின் நாட்டில் மேகம் மழையாகப் பெய்கிறது. மேகம் விரும்பி மழை பெய்த கொல்லி மலையின் உச்சியில் இருந்து விழுந்து அருவியின் ஒலியைப் போல அலர் வெளிப்பட்டது. இவ்வாறாக நம்மைப் பிரிந்து தலைவர் மீண்டும் வருவார் என்பதனை,

"வரை புரை களிற்றொடு நன்கலம் ஈயும், ...
வருவர் என்று உணர்ந்த மடம் கெழு நெஞ்சம் "
(பாடல் 303 வரிகள் 9-15)

என்று ஔவையார் பாடுகின்றார். வற்றிய மரத்தில் பொருந்திய சிள் வீடு என்னும் வண்டுகள் கூடி, உப்பு வணிகர்களின் வண்டி எருதுகளின் மணியைப் போன்று ஒலிக்கும், இத் தன்மையுடைய பாலை வழியில் உள்ள ஓடைகளில் உள்ள நீரானது வற்ற, மீன்கள் வேறு இடத்திற்குச் செல்லும், அதைப் போல தானும் செல்லப் போவதாக தலைவி கூறுவதாக ஔவையார் இப்பாடலை இயற்றியுள்ளார். தலைவன் மீதுள்ள அன்பின் காரணமாகவும் தலைவனைத் தேடிச் செல்லப்போவதாக இப்பாடல் புனையப் பெற்றுள்ளது.

காதலனைத் தொலைத்து விட்டுத் தேடும் ஆதிமந்தியைப் போலவும், காட்டுக்குள் கணவனைத் தேடிச் சென்ற வெள்ளி வீதி என்பவளைப் போலவும், தானும் கூறுவது அவளது அன்பின் மேலோங்கிய நிலையை உணர்த்துவதாக உள்ளது.

தலைவியின் நிலை

தலைவியின் நிலையினை
"இன மணி ஒலிப்ப, பொழுது படப்பூட்டி
மெய்ம் மலிகாமத்து யாம் தொழுது ஒழிய
தேரும் செல் புறம் மறையும் "

தலைவன் வந்தான், வந்தவன் என்னோடு இருந்து என்னை மகிழ்வூட்டிப் பின் மணியொலிக்கும் தேரிலேறிச் சென்றான். நானும் அவனை வழியனுப்பி வைத்தேன். ஆனால் என் உள்ளமோகாம நோய்மிக்கு வருந்துகிறது. இனி மாலை வர அந்நிலை என்னாகுமோ? என வருந்துகின்றாள் மேலும்,

"வான் தோய் வற்றே காமம்
சான்றோர் அல்லர், யாம்மரீ இயோரே "

எனக் காமத்தின் இயல்பை எடுத்துரைத்து இவ்வாறு நான் வருந்தக் காரணமாக தலைவன் உண்மையில் நோக்க அவன் சான்றோனல்லன் அவன் சான்றோனாக இருந்தால் என்னை இப்படி வருத்தம் கொள்ளச் செய்து, அன்பில்லாதவனாக தான் பிரிந்து செல்வாரா? எனப் புலம்புகிறாள்.

ஔவையார் பெண்பாற் புலவர் என்பதில் ஒரு பெண்ணின் மனநிலை எவ்வாறிருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றார்.

காம வருத்தத்தைத் தலைவி வெளிப்படக் கூறுதல் கூடாது என்பது விதியாயினும் ஔவையாரின் தலைவி வெளிப்படையாகக் கூறுகிறாள். செய்யுள் மரபுச்சட்டத்தை மீறி மன அழுத்தத்தைக் கவிதையாக்கிய அருமையான பாடல்கள் இவை.

பாடலொன்று கூற்றிரண்டு

பரத்தையர்மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டிப்புக்க வழித்தன் வரைத்தன்றி அவன் வரைத் தாகித்தன் நெஞ்சு நெகிழ்ந்துழித் தலைவி அதனை நெருங்கிச் சொல்லியது போலவும், பரத்தையிற் பிரிந்து வந்த வழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியது போலவும், ஔவையின்,

"அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகள்" (குறுந் 91)

எனும் மருதப் பாடல் அமைந்துள்ளது.

பிரம்பின் வரிப் புறத்தையுடைய வளைந்த கொம்பினைப் பழுத்த இலஞ்சிக் கெண்டைகள் பற்றிக் கொள்ளும் ஊரினன் அவன் பரத்தைமைக்கு வறாது என நெஞ்சு அவனைக் கண்ட அளவே நெகிழ்ந்து தழுவப் புகுகின்றது. எனத் தலைவி கூறுகிறாள் என்பதை,

"பலவா குகநின் நெஞ்சிற் படரே
....
சிலவா குகநீ துஞ்சு நாளே"

எனும் வரிகள் புலப்படுத்துகின்றன. இதனை,

"ஒரு தலையா னின்னாது காமம் காப்போல
விருதலை யானு மினிது"

என்னும் குறளில்-காப்பர் ஒரு தலைக்கண் இன்னாததற்கும், இரு தலைக் கண்ணுமாயின் இனிதாதற்கும் உவமையாதல் போல துஞ்சு நாள் சிலவாதலும், படர் பலவாதலும் நெடுமானஞ்சி கொன் முனையிரவூர்க்கும் உள்ளன என்று உவமையை முன்னும் பின்னுமாக வைத்துப் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. மேலும் கொடையும், வீரமும்

குறிக்கப்பட்டுள்ளது. தலைவி நின் இல்லறத்திற்கும் கற் பொழுக்கத்திற்கும் தக ஊரனை எதிர் கொண்டு வழிபடாது அவன் பரத்தைமை கருதி வேறுபடும் தன்மை உடையாவளாயின் தலைவனைத் தழுவாமையால் அவன் பரத்தையிலும் கொடிய படர்பலவாகுமென்றும், தலைவிக்குத் துஞ்சுநாள் சிலவாகுமென்றும் கூறுவாள் தோழி. தலைவி தோழி இருவர் கூற்றும் ஔவையாரால் ஓரே பாடலில் சிறப்புற கூறப்பட்டுள்ளன.

கற்பனைத்திறனும், அற்புத உவமைகளும் வித்தகக்காட்சிகளும், விஞ்சி வந்த உணர்ச்சிப் பெரு வெள்ளமும் ஔவையின் களவு, கற்புப் பாடல்களின் தனிச்சிறப்பு !

காமத்தை மரமாக உருவகித்ததும், பிரம்பின் பழத்தை மீன் கவ்விய உவமையும், உப்பு விற்பவர் வண்டியின் மணி ஒலிபோலச் சிள் வண்டு ஒலிக்கும் என்ற உவமையும், கார்த்திகை விளக்குப்போல இலவமரங்கள் மலர்ந்து வரிசையாக நிற்கின்றன என்ற உவமையும், சங்கு கோர்த்தாற்போல அகவன் மகளின் கூந்தல் இருக்கிறது என்ற உவமையும், ஆதி மந்தி போல, வெள்ளி வீதிபோல என்று பெயர் கூறிய உவமையும் எண்ணி எண்ணி இன்புறத்தக்கன.

நாலூர்க்கோசர் நன்மொழிபோல தலைவி தலைவனுடன் உடன் போக்குச் சென்றது உண்மை - என்கிற உவமை அழகானது. கோசரின் ; வாய்மை- அபிதான சிந்தாமணியிலும் குறிப்பிடப்படுகிறது.

கடும்பகட்டுயானை நெடுந்தேர் அஞ்சி கொன்முனை இரவூர் போல தலைவியின் துன்பம் உளது (குறுந்தொகை-91) அதியமான் போர் முனைக்குப் பக்கத்திலுள்ள ஊர்காரர் துன்பம் பெரிது போரின் ஒலி, ஓசை அவலக்குரல் எல்லாம் இவர்களைத்துன்புறுத்தும் தூங்கவிடாது தலைவியின் துன்பமும் மிக அதிகம் என்கிறார். தூங்க இயலாதவளாக இருக்கிறாள். இத்தகைய இயல்பான சொற்களும். உவமைகளும் உணர்ச்சிப் பெருக்கும் இயல்பாகப் பெண்ணாக இருந்த ஔவையின் பாடல்கள் - ஆண்டாளைக் குறித்துச் சொல்வது போல பள்ளமடைதலைவனுக்கு எதைப்பார்த்தாலும் தலைவிபோலத் தோன்றுகிறது "நோக்குவ எல்லாம் அவையே போறல்" "காக்கை சிறகினிலே" பக்திகாதல்

"ஆடும் கடைமணி வைவேல் அசதி அணிவரைமேல்
நீடும் கயற்கண்ணி யாள்தந்த ஆசை நிகழ்த்தரிதால்
கோடும் குளமும் குளத்தருகேநிற்கும் குன்றுகளும்
காடும் செய்யும் அவளாகத் தோன்றும் என் கண்களுக்கே"

(அசதிக் கோவை)

ஔவையாரின் களவும் கற்பும் அகவாழ்வின் இரு கண்களைப் போன்றவை. ஔவைத் தமிழோ காதற்பண்கள் மட்டுமல்ல. பண்பாட்டுச் சிந்தனைகளாகவும் அவைகள் பிரகாசிக்கின்றன.

ஔவையாரின் அகத்திணைப் பாடல்களைச் அக்கால மக்களின் உளப்பாங்கினையும் பிரிவுப்பெருந்துயரினையும் அறிந்து கொள்ள முடிகிறது. விருந்தோம்பல் பண்பினையும் அன்பின் ஆழத்தினையும் தலைவன், தலைவியின் அறிவுத்திறத்தையும் ஔவையாரின் சங்கப்பாடல்களால் அறிந்து கொள்ளமுடிகிறது.

ஔவையாரின் சங்கப்பாடல்களை பொருட் செறிவுக் கொண்டவை ; வாழ்வியல் கூறுகளை எடுத்தியம்புபவை ; நெறியான இல்லற இன்பத்திற்கும் முறையான குடும்ப வாழ்விற்கும் வழிகாட்டுபவை; கண்ணொத்த களவும் கற்பும் ஔவையாரின் அகப்பாடல்களின் சிகரங்கள்; அனைவரும் படித்தின்புறுவோம் ; பயன் பெறுவோம் ; பண்பாட்டின் சிறப்பினை உணருவோம். பாரெங்கும் பறை சாற்றுவோம் ; பைந்தமிழின் இன்பத்தை மனதில் மகிழ்வுடன் பதியவைப்போம் ;

திருவள்ளுவராண்டு 2037, ஆனி 26 (10.07.2006) திங்கள் மாலை 6.30 மணிக்கு திருமதி சூரியகலா கோவிந்தராசன் தலைமையில் 'அறப்பணிச்செம்மல்' வலலம் ஆர்.ஆர்.கோவிந்தராசன் முன்னிலையில் நிறை நிலவு ஐந்தாவது சொற்பொழிவு நடைபெற்றது.

ஔவை காட்டும் வீரமும் ஈரமும்

சொற்பொழிவு-6

முன்னுரை

காதலும் வீரமும் தமிழ் இலக்கியத்தின் இரண்டு கண்கள். சங்க காலத்தில் தமிழர் போர்க்கலையிலே சிறந்தவர் என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். அக்காலத்திலே வாழ்ந்த தமிழர் இயற்கையாகவே மறப்பண்பு படைத்தவராக விளங்கினர். அவர்களுடைய பழக்கவழக்கம், தொழில், விளையாட்டு, போன்றவற்றிலும் போர்ப் பண்புடனே திகழ்ந்தனர். தமது பிள்ளைகளின் மார்பில் ஐம்படைத் தாலி அணிவித்து இன்புற்றனர். இறந்த குழந்தையைக் கூட வாளால் போழ்ந்து அடக்கம் செய்தனர்.

போர்க்குக் காரணம்

அளவு கடந்த மண்ணாசையால் போர் நிகழ்வதுண்டு சொல்லில் அல்லது செயலில் மானக்குறைவு ஏற்பட்டாலும் போர் நிகழும். அரசுரிமைக்குத் தடையேற்படும் பொழுதும் போர் மூளும்.

புலவரும் போரும்

'இந்த மன்னனைப் போரில் புறங்காட்டச் செய்யாது போனால் புலவர் பாடாது வரைக என் நிலவரை' என்று சபதமிட்டான். அரசருக்கு வீர உணர்ச்சி ஊட்டிப் போர் செய்யத் தூண்டும் வாயிலாகப் புலவர்கள் இருந்தனர். பகைத்த இருவேந்தருக்கிடையே குறுக்கிட்டு இருவரையும் ஒற்றுமைப்படுத்தும் செயலிலும் புலவர் ஈடுப்பட்டனர், போர் மூளுங்காலத்து வீரமின்றிப் பதுங்கிக் கிடக்கும் அரசரை இடித்துரைத்து அவரைப் போருக்குத் தூண்டுதலிலும் புலவர் ஈடுபட்டனர்.

சங்ககால அரசியலில் அமைச்சர், தூதுவர், புலவர் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர். தமிழகத்தை மூவேந்தர்கள் ஆட்சி புரிந்தனர். அம்மூவேந்தர்களுக்கிடையே என்றும் போர் நிகழ்ந்த வண்ணமேயிருந்தது. இவர்களைத் தவிர குறுநில மன்னர்களும் பலர் ஆட்சி புரிந்தனர். இவர்களுள் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி

புரிந்த அதியமானின் அவைக்களப் புலவராகவும், நெருங்கிய நண்பராகவும் ஔவையார் விளங்கினார்.

ஔவையாரும் மூவேந்தர்களும்

மூவேந்தர்கள் ஒன்றாக இருந்த காட்சியைக் கண்ட ஔவையார் "நில உலகம் வேந்தர்க்கு உரியதாயினும் இறந்து போகுங்கால் உலகம் உடன் போவதில்லை" என்ற நிலையாமைத் தன்மையையும் கூறினார் உலகில் வாழ்வோரைக்காத்து அரசியலை அறவழியில் நடத்தி ஒற்றுமையுடன் வாழுமாறு,

"ஒன்று புரிந் தடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்" (புறம் - 367)

என்ற பாடலில் வலியுறுத்துகின்றார் அவரது ஈர நெஞ்சு புலனாகின்றது.

அதியமானின் ஆற்றல்

அதியமானின் ஆற்றல் அறியாது பகைவர்கள் போர் தொடுக்க முனைந்தனர்; அதை அறிந்த ஔவையார் போர்க்களத்தில் போர்புரிய வருவதை விட்டு விடுங்கள்! ஏனென்றால் எம்மிடையே போர்க் களத்தில் எதிரிகளோடு மாறுபட்டு நின்று போர் புரியும் வீரன் ஒருவன் இருக்கின்றான்; அவன் எத்தகையவன் என்றால் ஒரு நாளில் எட்டுத் தேர்களைச் செய்யும் தச்சன் ஒரு மாதம் முயன்று செய்த ஒரு தேரின் சக்கரத்தைப் போன்ற வலிமை உள்ளவனாவான், ஒரு மாதத்தில் 240 தேர்களைச் செய்யச்கூடிய தச்சன் ஒரு மாதம் முயன்றும் 1 சக்கரம் செய்கிறான் என்றால் அது எத்தகைய வலிமையுடையதாய் இருக்கும் அத் தேர்காலைப் போலவே அதிகமாக வலிமையும், விரைந்து செயலாற்றும் திறமும் போற்றுதற் குரியவனவாகும், ஆகவே எதிர்த்துப் போர்புரிய நினையாதீர்கள் என பகைவர்களை எச்சரிக்கின்றார்.

"களம் புகல் ஓம்புமின் தெவ்வீர்
வைகல் எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னான்"

அதியமான் என்று கூறும் வீரமும் உடையவர்.

ஔவையாரும் - வீரர் குடிப்பெருமையும்

'வேந்தே! இக்கள்ளை முன்னர் இவர்க்குத் தந்து பின்னர் நீ உண்பாயாக. இவன் தந்தைக்கு தந்தை நின் தந்தையைக் கண்ணியமாகக்காத்து "ஆர் செறிப் புண்டு நிற்கும் ஆழிக்குடம் போலப்" பகைவர் எறிந்த வேல் பாய்ந்து நின்று இறந்தான். அவனுடய பேரனாகிய இவன் "கடுமழை காக்கும் பணங்குடைபோல" நின்னைக் குறித்து மாற்றார் எறியவரும் வேலைத் தான் இடை நின்றேற்றுக் காத்து நிற்பான் இவன் வெல் போர் பல செய்து மறப் புகழ் நிறைந்தவன் என்று கூறி, குடிப் பெருமையை, வீரச்சிறப்பை

"நுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்சான்" (புறம்: 290)

பாடியுள்ளார்.

போருக்குத் தயார்ப்படுத்தல்

மனித உரிமைகள் பற்றியும் அமைதி குறித்தும் அதிக விவாதங்கள் நடைபெற்று வரும் இன்றைய கால கட்டத்திலேயே போர் என்பது தவிர்க்க முடியாததாக தெரிகிறது. சங்காலத்திலோ "விழுப் புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன் நாளை அடுத்து" என்று மக்கள் காலம் தள்ளியிருக்கிறார்கள். காற்றில் முரசு அதிரும் ஓசை கேட்டால் கூடப் போர் வந்துவிட்டதென அதிர்ந்து எதிர்ந்து எழும் ஆண்கள் இருந்திருக்கிறார்கள். குழந்தையே இறந்தாலும் கூட அதை வாளால் கீறி வீரமரணம் அடைந்தது போல் காட்டியிருக்கிறார்கள் "குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் ஆள் ஆன்று என்று வாளில் தப்பார்" போர்க் களத்தில் வீறுபடப் போரிடும் மறவனின் நிலையைச் சித்தரிப்பது ஒரு நிலை.

இதன் மூலம் பிறருக்கும் போர் உணர்ச்சியையும் ஆர்வத்தையும் தூண்டுவது இன்றியமையாததாகிறது.. தனி ஒருவன் போர்களத்தில் பகைவரைச் சாய்த்தானாம்.

"களர்ப்படு கூவற் றோண்டி நாளும்
....
தோல் கொண்டு மறைக்குந்த சால் புடையோனே" (புறம் 311)

தனியொருவனாகப் போர்க்களத்தில் நின்று பகைவனைச் சாய்க்கும் வீரனைப் பற்றியப் பெருமிதப் பாடல் இது !

பெண்கள் போரில் பங்கேற்க அனுமதி இல்லை. எண்ணரும் பாசறைப்புகுதலும் பெண்களுக்கு இல்லை. ஈன்று புறந்தருதல் அதுவும் வீரமகனை ஈன்று தருதல் மட்டுமே பெண்கள் போரோடு கொள்ளக் கூடியதொரு பங்களிப்பு. மூதின் முல்லை என்ற துறை பங்கேற்கவியலாத ஆனால் போர்ச் செயலுக்குத் துணை நிற்கக்கூடிய, பெண்களின் செயல்களைக் காட்டுகிறது, ஔவையும் உவகைக் கலுழ்ச்சித்துறையில் இவ்வாறான தாயைக் காட்டுகிறார்.

"கடல் கிளர்ந்த தன்மை சுட்டூர் நாப்பண்

....

வாட முலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே"

வயதான தாய்க்கும் போரில் பங்குண்டு அல்லது இவ்வாறு வீரம், நாட்டுப்பற்று இவற்றில் பங்கு பெற முடியும் என்பது அதில் உள்ள கருத்தாக்கம். மகன் வீரமரணமடைந்த செய்தி கேட்டு வற்றிய தாய்மார்பில் கூடப்பால் சுரந்ததாம். போர் இயற்றுதல் என்பது ஒரேவழி அரசனால் தீர்மானிக்கப்பட்ட செயலாக இருப்பதால் அதற்கு குடிமக்களின் மனநிலையைத் தயார் செய்ய வேண்டியது அரசனின் கடமையே, உண்டாட்டு, பரிசளிப்பு, முறைசெய்தல் போன்றவை மூலம் இறந்துபட்ட அல்லது வெற்றிமிக்க மறவர்களின் புகழ் மேம்படுத்திப் பாடப்பட்டு, இருப்போருக்கும் வீரமரணம் அடைவதான இச்சையைத் தூண்டுவதாக இந்நிகழ்வுகள்அமைகின்றன.

"இவற்கு ஈத்து உண்மதி, கள்ளே ; சினப்போர்
இனக் களிற்று யானை, இயல் தேர்க் குருசில் !
நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை,
எடுத்து எறி ஞாட்பின் இமையான், தச்சன்
அடுத்து எறி குறட்டின், நின்று மாய்ந்தனனே ;
மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்,
உறைப்புழி ஓலை போல,
மறைக்குவன் – பெரும ! நிற்குறித்து வருவேலே" (புறம் 280)

இங்கே அரசன் பின்னுக்குத் தள்ளப் பட்டு வீரமறவன் முன்னே நிற்க வைக்கப்படுகிறான் இதன் மூலம் அரசனுக்காக உயிரைத் துறக்க முன்வரும் மனநிலை வலியுறுத்தப்படுகிறது.

தூது சென்ற ஔவை கூட அதியமானின் வீரத்தைச் சொல்லியே போரை நிறுத்துகிறாள்.

அதியமானுடைய படைக்கலக் கொட்டிலைப் கூறும் "வாள் மங்கலத் துறைப்பாடல்" அரசியல் தூதில் முகிழ்த்தது, கருத்தின் செறிவின் கனம் குறைய, அங்கதக் குறிப்பு விரவிய நகைச் சுவை இழைந்துள்ளது. பாடலின் அடிக்குறிப்பு கூறுவதாவது,
"அவன் தூது விட, தொண்டைமானிடம் சென்ற ஔவை, அவன் படைக்கலக் கொட்டிலைக் காட்டக், கண்டுபாடி யபாடல்"

"இவ்வே, பீலிஅணிந்து, மாலைசூட்டி
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
கடியுடை வியன் நகரவ்வே அவ்வே
பகைவர்க் குத்தி, கோடு துதி, சிதைந்து
கொல் துறைக் குற்றில மாதோ" - என்றும்
"உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே" - (புறம்-95)

மூலமாக சுட்டிக் காட்டுகிறார். ஔவையார் "இவ்வே" "அவ்வே" என்று தொண்டைமான் வேலையும், அதியமான் வேலையும் ஒப்பிடுகிறார் ஔவையார். புகழ்வது போல் பழிப்பதும். பழிப்பது போல் புகழ்வதும் கவிதையில் அமைந்துள்ள நயம் ஆகும், தூதிற்கு உரிய ஆராய்ந்த சொல் வன்மைக்குச் சான்றாகும். வெற்றிச் சிறப்போடும் அதியமானின் கொடைச் சிறப்பையும் சேர்த்துக் கூறுவதில் அதிக மதி நுட்பத்தைக் காட்டியிருக்கிறார். ஔவையார் வேல் தாங்கும் மறவர் படை மட்டும் வெற்றிக்கு அடிப்படை ஆகிவிடாது ; வறுமை ஒழிந்த வீறு பெற்ற மக்கள் சக்தியும், வேலோடு வெற்றி தருவது என்னும் நுட்பத்தை இறுதி நான்கு வரிகளில் நிறுத்திக்காட்டுகிறார்.

அதியமான் போர்ப்பறை கேட்டாலே மகிழ்வான்

பாடிப் பரிசில் பெறும் விறலி போல வெவ்வேறு நாட்டிற்குச் செல்லக் கூடிய ஔவையாரிடம் அதியனின் பகை மன்னருள் ஒருவன் "உம்முடைய நாட்டில் சிறந்த போரினைச் செய்யும் வீரரும் உளரோ?" என வினவுகின்றான், அதைக்கேட்ட ஔவையார் சிறிதும் மனம் தளராது, "பெருவிருப் புடன் போர் செய்யும் படையை யுடைய மன்னவனே எம் நாட்டில் அடிக்கும் கோலுக்கு அஞ்சாது எதிர்க்கும் பாம்பு போன்ற இளைய வலிய வீரரும் உள்ளனர், அவர் மட்டுமன்று மன்றில் தொங்கும் கட்டப்பட்ட முரசினது கண்ணில் காற்றால் உண்டாக்கப்பட்ட ஒலியைக் கேட்டால் அதனைப் போர்பறை என்று மகிழும் எம் தலைவனும் இருக்கின்றான்" (புறம்-89) என்ற கருத்தமைந்த பாட்டாலேயே அம் மன்னவனுக்குப் பதிலுரைக்கின்றார். சீறிவரும் பாம்பைப் போன்ற படை வீரர்களையும் காற்றால் ஒலியெழுப்பப்பட்ட முழவொலியைக் கேட்டு, போர்ப்பறை என்று மகிழும் மன்னவனையும் பெற்றிருப்பது எம் நாடு என்று இறுமாப்புடன் உரைக்கும் ஔவையாரின் நாட்டுப் பற்றையும் அதியமானின் வீரவுணர்வையும் குறிப்பாகப் புலப்படுத்துகிறது இப்பாடல்.

அதியனுக்கு உவமைகள்

போர் செய்வதனால் உண்டாகும் அழிவை எண்ணி வருத்தப்பட்டு வாளா இருந்தான் அதியமான், அவனுக்கு ஏற்பட்டுள்ள சோர்வினை நீக்கி ஊக்கப் படுத்தும் விதமாக ஒரு பாடலைப் பாடியுள்ளார் ஔவையார். அப் பாடலில் மூன்று வகையான உவமைகளைக் கூறி அதனொடு அதியனின் வீரவுணர்வைப் பொருத்திப் பார்க்கிறார்.

> "மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
> ....
> பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ"

அதாவது வரிகளையுடைய மறப்புலி பகைத்து வருமாயின் அதனெதிர் மான் கூட்டம் நிற்க முடியுமோ? முடியாது, கதிரவன் கொதித் தெழுகின்ற பொழுது இருட்டு அதனெதிர் நிற்க முடியுமோ? முடியாது, சுமை மிக்க ஒரு வண்டியை அதன் சக்கரம் பட்டு மணல் தெறிக்கவும், கற்கள் துண்டுகளாகச் சிதறவும் மிக எளிதாக இழுத்துச் செல்லும் எருதினுக்கு,

செல்லுதற்கரிய இடம் எதுவும் உண்டோ? இருக்காது, இம் மூன்று உவமைகள் வாயிலாக அதியனைப் புலியாகவும் கதிரவனாகவும் காளையாகவும் உருவகப்படுத்திப் பாடுகின்றார், அத்தகைய வீரமும் வலிமையும் உடைய அதியமான் போர்க்களத்திலே தோன்றியவுடனே பகைவர்கள் அனைவரும் இருக்குமிடம் தெரியாமல் ஓடி ஒளிந்து விடுவர் என்பதனைப் புலப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவனது வீரம் (மறம்) செல்லாத இடம் எதுவுமே இல்லை என்கிறார்.

ஔவையின் வீரம் புலமையால் வந்த பெருமிதம்

பெண்பாற்புலவர்களில் அளவுக்கு மிஞ்சிய நெஞ்சுரமும், தவறு கண்ட வழி மன்னரையும் கண்டித்துப் பேசும் துணிவுடைமையும் இவர் பால் இருந்தன.

"......... நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே, அதனால்
காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை ....
.... எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"

என்று முழங்குகிறார், அவரது தன் மான நிமிர்வு, பெருமிதம், இதுவும் வீரம் தானே !

ஈரம்

நாஞ்சில் வள்ளுவன்

நாஞ்சில் வள்ளுவன் என்னும் வள்ளல் விறலியர்கள் சிறிது அரிசி கேட்டால் யானையையே பரிசாகக் கொடுக்கும் மனம் படைத்தவன் இவனது இந்தச் செயலை ஔவையார் புகழ்கிறார்.

"அரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடலும் வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கியோனே"

அதியமானின் ஈரநெஞ்சும் எளிமையும்

நாட்டை ஆளுவோர் எளிமையோடு நடந்து கொள்ள வேண்டும் என்கிறார், ஊர்க் குளத்தில் யானை குளிக்கும் போது சிறுவர்கள் அதன் தந்தங்களைத் தழுவி விளையாடுவார்கள் ஆற்றல் மிக்க களிறுகள் சிறுவர்களுடன் அன்புடன் நடந்து கொள்ளும். அது போல பகைவர்க்கு அச்சம் தரும் அதியமான் புலவர்களிடம் அன்போடு நடந்து கொள்வான் என்கிறார்.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே! மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னதோர்க்கே" (புறம் :94)

ஒளவையின் நன்றி

நன்றி பாராட்டும் நல்லுணர்வை அதியமான் ஒளவையார் தொடர்பில் காண்கிறோம். அதியமான் எளிதில் கிடைப்பதற்கரிய நெல்லிக்கனி ஒன்றை மலைச்சாரலில் பெற்றான். அது அமிழ்து விளை தீங்கனி; உண்டாரை நீண்ட நாள் வாழ்விப்பது. தான் உண்பதைவிட ஒளவையார் உண்பாராயின் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்ற முடியும் என எண்ணி அதை அவன் ஒளவைக்குக்கொடுத்தான். கொடுக்கும் போது அதனால் உண்டாகும் நன்மையை அவருக்குக் கூறவில்லை. இது அவனுடைய பெருந்தன்மையை உணர்த்துகின்றது.

நெல்லிக்கனியை உண்ட ஒளவையார் தம் உள்ளம்நிறைந்த நன்றியை அவனுக்குக் கூறுகிறார். சிவபெருமான், எல்லோரும் சாவதற்கு உரிய நஞ்சைத் தான் உண்டு. நீண்ட நாள் வாழ்வதற்குரிய அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தது போல நீண்டநாள் வாழ்விக்கும் நெல்லிக்கனியை எனக்குத் தந்தாய் நீ அந்த ஆலமுண்ட கண்டனைப் போன்று நெடு நாள் வாழ்வாயாக என நன்றியோடு வாழ்த்துகிறார்.

"போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி

நீல மணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே !"

அதியனின் கொடைத் தன்மை

அதியனின் கொடைச் சிறப்பை

"ஒரு நாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பன்னா ளிருந்துப் பலரொடு செல்லினுந்
தலைநாட்பட்ட அன்பினன் மாதோ" (புறம் 107)

என்ற பாடல் வழி நவில்கிறார்.

அதியனின் பண்பு நலன் குறித்து பாடும் இரங்கற்பா

அதியமான் இறந்த பின்னர் அவன் உடலை அடக்கம் செய்த சான்றோர்கள் நன்னாளில் அவனுக்கு நடுகல் நாட்டினர் அதன் கண் அவனுடைய பீடும் பெருமையும் எழுதி மயிற்பீலி சூட்டி நடுகல் விழா எடுத்தனர். அந்த இடத்தில் சான்றோர் பலரும் கூடியிருந்தனர். ஔவையாரும் இருந்தார். நடுகல்லாகிய அதியமானுக்குச் சிறு கலங்களில் நாரால் வடிக்கப்பட்ட தேறலை வைத்துப் படைத்து வழிபட்டனர். அதைகண்ட ஔவைக்கு நெஞ்சில் எழுந்துபீறிட்ட துயரத்திற்கு அளவே இல்லை, கண்களில் நீர் ஆறாய் ஒழுகிற்று, அந்நிலையில் தம் ஆற்றாமையைப் வெளிப்படுத்துகின்றார்.

"இல்லாகிய ரோ காலை மாலை
அல்லாகியர் யான் வாழு நாளே !
நடுகர் பீலி சூட்டி நாரரி
சிறு கலத்து விடுப்புவங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழிஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளாதோனே " (புறம்)

என்பதால் பகைவன் தமது நாடு முழுவதும் கொடுப்பினும் கொள்ளாத மறப்பண்புடைய அதியமான் இந்த சிறு கலங்களில் பெய்துத் தரப்படும் தேறலைக் கொள்வானே? எனப்பாடி தமது ஆற்றாமையைப் புலப்படுத்தி நம்மை உருகி அழ வைக்கிறார். அதியமானின் பண்பை உணர முடிகிறது.

ஈகைத்திறன்

புறம் 235 ஆம் பாடலில் அதியமானின் மார்பில் தைத்த வேல் இன்னும் எங்கெங்கு தைத்தது என்பதை அழகுபட வருணிக்கிறார்.

"அருந்தலை இரும்பாணர் அகல் மண்டைத்துளை உரீஇ
இரப்போர் கையுளும் போகி
புரப்போர் புன்கண் பாவை சோர
அம்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன்
அருந்திறத் தியங்கிய வேலே" (புறம் : 235)

என்பார், புலவர்களுக்கும் பாவலர்களுக்கும் வாழ்க்கையின் பற்றுக் கோடாக விளங்கிய அதியமான் இறந்த போது

"ஆசாகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ ?
இனிப்பாடு நரும் இல்லை பாடுநர்க்கு ஒன்று
ஈகுநரும் இல்லை"

அவனோ இறந்து பட்டனன் எமக்குத் தந்தையாக விளங்கிக் காத்தவன் எங்கே உள்ளான்? இனிப் பாடுவார்க்கு ஒன்று தருவாரும் இல்லையே! நீர் துறையின்கண் உள்ள பகன்றைப் பெரும்பூ எவர்க்கும் பயன்படாது கழிவது போல, வறிதே மாய்ந்து போகும் உயிர்களே இனிப் பலவாகும் எனக்கூறுவதன் மூலம் அவனது ஈகைத் திறன் நன்கு புலப்படுகின்றது.

இரங்கற்பா

சிறந்த கொடையாளனும், பண்பாளனுமான அதியமான் மாண்டு விட்டான், அவன் பூதவுடலை ஈமக்காட்டில் வைத்து விறகடுக்கித் தீயிட்டனர். கொழுந்து விட்டெரிகிறது ஈமத்தீ, ஔவையார் கண்ணீருடன் பாடுகிறார்.

"எறிபுக் குறவன் குறைய லன்ன
கரிபுற விறகி னீம வொள்ளழற்
குறுகினுங் குறுகுக! குறுகாது சென்று
விசும்புற நீளினும் நீள்க ! பசுங்கதிர்த்
திங்க ளன்ன வெண்குடை
ஞாயிற் றன்னோர் புகழ்மா யலவே" (புறம் 231)

ஈமத்தீச்சுடர் ஓரளவோடு நின்றாலும் நிற்கட்டும்; வானமண்டலம் வரை சென்றாலும் செல்லட்டும்; ஆனால் திங்கள் போன்ற குளிர் வெண் குடையும், ஞாயிறன்ன ஆற்றலும் கொண்ட அதியன் புகழைத் தீய்க்க முடியாது. தீயானது வானத்தினைத் தொடுமளவுக்கு உயர்ந்தாலும் வெண் மதியினையும், ஞாயிற்றையும் அதனால் நெருங்க இயலாது. அது போன்றுதான் அதியன் புகழும், அவன் ஈரத்தால் தண்மதி அன்னான்; வீரத்தால் ஞாயிறு அன்னான்; இத்தகு அவன் தன்மையினை இந்த வெந்தழலால் என்ன செய்து விட முடியும்? என்று ஔவையார் கண்ணீருடன் பாடியுள்ள இப்பாடல்,

"தீயே உனக்கொரு நாள்
தீ மூட்டிப் பாரா மோ ?"

என்று கவியரசர் கண்ணதாசன், ரோஜாவின் ராஜா மீது பாடிய கண்ணீர் வரிகளை நினைவூட்டுவது இயல்பே.

மது சிறிதளவாக இருந்தால் அதியமான் அதை எங்களுக்குத் தந்து விடுவான், பெருமளவு இருந்தால் முதலில் நாங்கள் அருந்திப்பாடப் பிறகு அவன் மகிழ்ந்து அருந்துவான்! அந்தோ! அந்த இன்ப நாட்கள் போயினவே !

சிறு விருந்தாயினும் பல உணவுக் கலங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும், பெரிய விருந்தாயினும் அதே நிலைதான்! ஏராளமான உண்கலங்கள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருக்கும், பாணரும் விறலியரும், புலவரும் பொருநரும் மகிழ்ச்சியோடு கூடி அவ்விருந்தில் அவனோடு கலந்துண்பர் ! அந்தோ! அது கழிந்ததே! நரந்தம் பூவின் மணம் கமழ்கின்ற தன்கையால் அழுக்குப் பிடித்த என் தலையை அன்போடு தடவிக் கொடுப்பான்.

இவ்வாறு விருந்துகள் தந்து, அன்பு பாராட்டியவன்; போர் முனையில் ஈடுபட்டுப் போய் நின்றதால் அந்த இன்ப நாட்கள் அற்றுப் போயினவே!

அவன் மார்பில் ஊடுருவிய பகைவரின் வேலானது மார்பை ஊடுருவியதோடு நிற்கவில்லை. அது பாணர்கள் கையிலிருந்த

உண்கலத்தைத் துளைத்து, இரவலர் கைகளில் ஊடுருவித் தன்னால் பாதுகாக்கப் படுவோரின் கண் பாவைகளைச் சிதறச் செய்து செந்நாப் புலவர்களின் நாவில் சென்று பாய்ந்துள்ளது !

இரவலர்க்கும் புலவர்க்கும் பற்றுக் கோடாக விளங்கிய எந்தை எங்கே இருக்கின்றானோ?

இனி இவ்வுலகில் பாடுவோரும் இல்லை ! பாடுவோர்க்கு ஒரு பொருளை ஈபவரும் இல்லை! பகன்றைப் பூவானது மக்களால் சூடப்படாமலே வாடி உதிர்வதைப் போலப் பிறர்க்கு ஒன்றை ஈயாமலே மடிந்து போகும் உயிர்கள் இவ்வுலகில் நிறைந்துள்ளன. ஈந்து வாழ்ந்து அஞ்சி மறைந்துவிட்டான்! இக்கருத்துக்களைக் கொண்ட - ஔவையின் பாடல் இது

"சிறிய கட் பெறினே, எமக்கு ஈயும் மன்னே!
யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும் ; மன்னே !
சிறு சோற்றானும் நனி பல கலத்தன் ; மன்னே !
பெருஞ் சோற்றானும் நனி பலகலத்தன்: மன்னே !
என்பொடு தடிபடுவழி எல்லாம் எமக்கு ஈயும் மன்னே !
அம்பொடு வேல்நுழை வழிஎல்லாம் தான் நிற்கும்; மன்னே !
நரந்தம் நாறும் தன் கையால் ,
புலவு நாறும் என்தலை தைவரும் ; மன்னே !
அருந்தலை இரும்பாணர் அகல் மண்டைத் துளை உரீஇ,
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர,
அம்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று, அவன்
அருநிறத்து இயங்கிய வேலே !
ஆசுஆகு எந்தை யாண்டு உளன் கொல்லோ?
இனிப் பாடுநரும் இல்லை; பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை;
பனித் துறைப் பகன்றை நறைக் கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர் தவப் பலவே ! "

சங்க இலக்கியங்களில் ஔவையாரின் புறப்பாடல்கள் தனித்த இடத்தைப் பெற்று, பண்டைத்தமிழரின் வீரத்தையும் ஈரத்தையும் அறிந்துகொள்ள முடிகிறது. மூவேந்தர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து. ஒருமைப்பாட்டுடன் வாழ ஔவையாரால் வழிகாட்டப்பட்டுள்ளது. ஔவையார்- அதியமான் நட்புணர்வும் அன்புள்ளத்தையும் இப்புறப்பாடல்களால் அறிந்த கொள்ள முடிகிறது.

அன்பும், அமைதியும் சமாதான வாழ்வும் நாட்டு மக்களுக்கு நிம்மதியை வழங்கும் என்று ஔவையாரின் சங்கப்பாடல்களால் உணர்த்தப்பட்டுள்ளது.

கொடைப்பண்பில் தலைசிறந்து விளங்கும் தமிழரின் உள்ளம் ஔவையாரால் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. ஔவைப்பெருமாட்டி வழங்கியுள்ள சிந்தனைகளை இதயத்தில் ஏந்தி, வாழ்க்கை நடத்துவோமானால் நாடும், வீடும் நலம்பெறும்; உலகெங்கிலும் அமைதி நிலவும் : அன்பால் இன்பம் எய்தி, அறத்தோடு இயைந்து வாழும் வாழ்வே எங்கும் நிலைத்துநிற்கும்,

திருவள்ளுவராண்டு 2037, ஆடி (09.08.2006) அறிவன் (புதன்) மாலை 6.30 மணிக்கு திருமதி சுழல்நர் பத்மாவதிசெல்வம் தலைமையில் 'வேளாண்மை விஞ்ஞானி' டாக்டர் வா.செ. செல்வம் முன்னிலையில் நிறைநிலவு ஆறாவது சொற்பொழிவு நடைபெற்றது.

அரியது, பெரியது, இனியது

சொற்பொழிவு - 7

ஔவையாரின் வாழ்வியல் சிந்தனைகள் பலவற்றை தனிப்பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தனிப்பாட்டில் காணலாகும் கதைகள் அனுபவ நெறிகளாக ஔவையாரின் அறநெறிகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன "**கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு**" ஔவையாரின் அமுத வாக்கு தெய்வ வாக்காக உலகெங்கும் போற்றப்படும் பெருமைகொண்ட தாகத்திகழ்கிறது.

வாழ்வியல் நிலைகள் பயிற்சியினால் வரக் கூடியது என்பதை. "**சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்**" என்ற தனிப்பாடலால் அறிய முடிகிறது.

ஔவையார் பாடிய தமிழ்ப் பாடல்களில் தமிழ்க் கடவுளான முருகப் பெருமான் ஔவையைச் சோதிப்பதற்காகச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டு ஔவையின் தமிழோடு விளையாடி மகிழ்கின்றார். அதோடு மட்டுமல்லாமல் தாய் தந்தையிடம் ஞானப் பழத்திற்காகக் கோபம் கொண்டு ஆண்டியாய் நிற்கும் முருகனிடம் ஔவையார் இவ்வாறு நீ கோபம் கொண்டு வரலாமா என்று கேட்க முருகன் கோபம் தணிந்து ஔவையிடம் உலகில் கொடியது, இனியது, பெரியது, அரியது எது? என வினவுகிறார். உடனே ஔவையார் இசைத்தமிழில் வாழ்வியல் துன்பங்களை அடுக்கிக் கூறுவதனைக் காணமுடிகிறது.

கொடியது கொடியது இல்லாமை ஆகிய வறுமையே கொடியது என்பதையும் அதைவிடக் கொடியது இளமையிலேயே செல்வம் இல்லாது சொல்லொணாத் துயரங்களுக்கு ஆட்படும் வறுமை கொடியது என்பதையும் அதை விடக் கொடியது நீண்ட நாட்களாக இருந்து துன்புறுத்தும் நோய் கொடியது என்பதையும்அதைவிடக் கொடியது அன்பைக் காட்டாத பெண்டிர்களின் நிலை கொடியது என்பதையும் அதைவிடக் கொடியது அவர்களின் கரங்களால் உணவு உண்பது கொடியது என்பதை ஔவையார்,

"கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடியது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது இன்புற
அவர் கையில் உண்பது தானே"

என்ற தனிப்பாடலால் வாழ்வில் எவையெவை கொடியது என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

கொடியது எது? என்று கூறிய ஔவையே ? இனியது எது? என்று கூற, அதற்கு ஔவையார் விடை கூறுவதும் எண்ணத்தக்கதாகும்.

இனியது இந்த உலகம் ; அதைவிட இனியது ஆதிபகவனாகிய இறைவனை வணங்குவது ; அதைவிட இனியது அறிவு நலஞ்சான்ற அறிஞர்களோடு சேர்ந்து வாழ்வது ; அதைவிட இனியது கனவிலும் நனவிலும் அறிவுடைய சான்றோர் பெரு மக்களைக்காண்பது என்பதை ஔவையார்,

"இனியது கேட்கின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுவது
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது , அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே"

என்று தனிப்பாடலால் வாழ்வில் எவையெவை இனியது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இனியது கூறிய ஔவையே? பெரியது எது? என்ற கேட்ட முருகனுக்கு அந்தாதி முறையில் அடுக்கடுக்காக ஔவையார் விடையளிப்பது, அறிந்து இன்புறத்தக்கதாகும்.

மிகப்பெரியது இந்த உலகம் ; அது நான்முகனின் படைப்பு ஆகும்; அவனோ திருமாலின் உந்தியில் வந்தவன் ; திருமாலோ அலை வீசுகின்ற கடலில் துயில்பவன் ; அலை வீசுகின்ற கடலோ குறுமுனியாகிய

அகத்தியரின் உள்ளங்கையில் அடக்கம்; அகத்தியரோ கலசத்தில் பிறந்தவன்; கலசமோ பூமியில் சிறிய மண்ணால் செய்யப்பட்டது. பூமியோ பாம்பினுக்கு ஒரு தலைப்பாரமாக விளங்குவது. பாம்போ இறைவியாகிய உமையவள் சிறுவிரலில் அணிந்திருக்கும் மோதிரம் ஆகும். இறைவியாகிய உமையவளோ இறைவன் பரமசிவனின் ஒரு பாகத்தில் ஒடுக்கம் எனலாம். இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்; தொண்டர்களின் பெருமையோ சொல்வதற்கு மிகப் பெரிதாகும் என்பதை ஔவையார்,

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ, நான்முகன் படைப்பு
நான்முகன், கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ, அலைகடல் துயின்றோன்
அலைகடல், குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ, கலசத்தில் பிறந்தோன்
கலசமோ, புவியில் சிறுமண்
புவியோ, அரவினுக்கு ஒரு தலைப்பாரம்
அரவோ, உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ, இறையவர் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ, தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"

என்று கொண்டு, உலகில் மிகப் பெரியது எது? என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

தொண்டர் தம் பெருமையே பெரியது என விளக்கிய தமிழன்னையே! அரியது எது? என்று முருகன் ஔவையாரிடம் கேட்க ஔவையார்,

"அரியது கேட்கின் வரிவடி வேலாய்
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது

ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தாம் செயல் அரிது
தானமும் தவமும் தாம்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே"

என்று பாடி, மானிடப்பிறவியின் சிறப்பினையும், பிறவிகளில் பெரும் பேறாகத் திகழ்வது மானிடர் பிறவி என்பதையும் ஞானமும் கல்வியும் பெற்று, தானமும் தவமும் செய்து வருவராயின் வானவர்கள் வாழும் சொர்க்கத்திற்குச் செல்லலாம் என்று சொல்லி, மனிதப் பிறவியின் மேன்மையை ஔவையார் கூறியிருப்பது அறிதற்குரியதாகும்.

தனிப்பாடல்களில் காணலாகும் தனிச்சுவை கனிச்சுவையைப் போன்றதாகும் தனிமனித அறமும் சமுதாய அறமும் கதை வாயிலாகவும் அனுபவங்கள் வாயிலாகவும் ஔவையார் பாடியிருப்பது ஔவையாரின் சமுதாய முன்னேற்றம் பற்றிய ஈடுபாட்டைக் காட்டுவதாய் உள்ளது.

மூவகை மனிதர்கள்

சமுதாயத்தின் மூன்றுவகை மனிதர்களைப் பார்க்கலாம்

1. பெரியவர் 2. சிறியவர், 3. கயவர்

பெரியவர் : பெருமைக்குரியவர் ; நற்பண்புகளின் இருப்பிடமானவர்; நாட்டிலுள்ளோர் போற்றும்படி வாழ்பவர்; எதனையும் யாரும் சொல்லாமலேயே அடுத்தவர்க்குத் துணை நிற்கும் செயல்களில் ஈடுபடுபவரையே பெரியவர் என்று கூறலாம்; இவர் போன்ற நல்லவர்கள் இருப்பதாலேயே மழை பொழிந்து அனைவரும் நலமாக வாழ்கிறார்கள். ஔவையார் இவர்களையே "சொல்லாமலே செய்வர் பெரியவர்" என்று சொல்லி, அனைவரின் குறிப்பறிந்து செயல்படுபவர்கள் பெரியவர்கள் என்ற இலக்கணத்தைத் தருகிறார்.

சிறியவர் : பெருமைக்குணங்கள் சிலவற்றைக்கடைப்பிடித்து வாழ்பவர்கள்; இழிவான செயல்களை செய்ய அஞ்சுபவர்கள் ; முன்னோர் மொழிப் பொருளை பொன்னை போல் போற்றுபவர்கள் ; பிறர் சொல்லுவதை, பெரியவர்கள் சொல்லுவதை அப்படியே பின்பற்றுபவர்கள் சிறியவர்கள் என்று சொல்லாம் இதனை ஔவையார் "சொல்லிச் செய்வர் சிறியர்" என்ற அறநெறியால் உணரலாம்.

கயவர் : இவர்களே இழி குணத்தவர் எனலாம் ; எதனையும் முறையாக செய்ய விரும்பாதவர்கள் பிறர் சொல்லும் நற்பண்புகளையும் கேளாதவர்கள்; முறையற்ற செயல்களால் வாழ்வில் தடுமாற்றம் கொள்ளுபவர்கள். பெரியவர்கள் சொல்லுவதையும் கேட்டு அதன் வழி நடவாதவர்கள். இதனை ஔவையார் "**சொல்லியும் செய்யார் கயவரே** " என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லி, மூவகை மனிதத்தன்மைகளை எடுத்துக் கூறியிருப்பது எண்ணத்தக்கதாகும்.

அறிவை விசாலமாக்கு

மனித இனம் புதியதான அறிவு வளர்ச்சியில் ஈடுபடுதல் வேண்டும். கல்வியில் ஈடுபாடும் நற்பண்புகளில் ஆர்வமும் காட்டுதல் வேண்டுதல் ; கல்வி என்பது கடல் போன்றது ; ஆனால் பலரும் அதில் கடுகு அளவே கற்கின்றனர்; குறிப்பிட்ட ஒரு துறையில் குறிப்பிட்ட ஒரு பகுதியே கல்வியாக கற்கின்றனர்; மனித இனம் பல்வேறு துறைகளிலும் படித்து, அறிவின் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்; ஔவையார் கூறுவது போன்று "**கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு**" என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும்.

இன்ப வாழ்க்கை

மனித இனம் அறச் செயல்களில் ஈடுபடுதல் வேண்டும்; பிறருக்குக் கொடுப்பதையும் துணை நிற்பதையும் பெரும்பேறாகக் கொள்ளுதல் வேண்டும்; ஈகைப் பண்பே இணையற்றது என்பதை உணர்தல் வேண்டும்; பொருளை நல் வழியில் ஈட்டல் வேண்டும்; நல் வழியில் சேர்க்கும் செல்வமே நிலைத்து நிற்கும். தீவினையால் வரும் செல்வம் விரைவில் அழிந்து போகும் ; கணவன், மனைவி இருவரும் அன்பு செலுத்தி, கருத்தொருமித்து ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் இன்பமே மிகச்சிறந்தது என்பதை, ஔவையார்,

> "**ஈதல் அறம் தீவினைவிட் டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்**
> **காதலிருவ ர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்**
> **பரனை நினைத்து இம்மூன்றும்**
> **விட்டதே பேரின்ப வீடு** "

என்று கூறி, இன்பமான, மகிழ்ச்சியான, நிலையான வாழ்விற்கு வழி காட்டுகிறார்.

பாராட்டும் பண்பு

மனித குலத்திற்கு இன்றைய இன்றியமையாத தேவை பாராட்டும் பண்பு ஆகும் ; பயிர் செழித்து வளர எப்படி பருவ மழை தேவையோ அதைப் போல மனித குலம் சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு பாராட்டு அவசியமாகிறது; பாராட்டு தான் மனித நெஞ்சத்தை நெகிழச் செய்வது அற வாழ்க்கை வாழ்வதற்கும் இப்பண்பே துணை நிற்கிறது. ஔவையார் பாராட்டுவதற்குரிய இடங்களைப் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது நினைக்கத்தக்கதாகும், நண்பனை நெஞ்சாரவே பாராட்டுதல் வேண்டும்; பாடங் கற்பிக்கும் ஆசிரியரை எல்லாவிடங்களிலும் பாராட்டுதல் வேண்டும்; உடன் உறையும் மனைவியை பஞ்சணையில் பாராட்டுதல் வேண்டும் ; வேலை செய்யும் பணியாளரை வேலையின் முடிவில் பாராட்டுதல் வேணடும். இதனை ஔவையார்

"நேசனைக் காணாவிடத் தினெஞ்சார வேதுித்தல்
ஆசானை யெவ்விடத்தும் அப்படியே - வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்"

என்று பாடியிருப்பதும் பின்பற்றத்தக்கதாகும்.

பிறவிக் குணம்

ஔவையார் பண்பாட்டின் வடிவம்; பாரம்பரியத்தின் அடையாளச் சின்னம்; கிடைத்தற்கரிய கருத்துக் கருவூலம்; நற்பண்புகளின் குணக்குன்று; நாட்டில் உள்ளோர் வாழ்வதற்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கம் ; பழக்க. வழக்கங்களைத் தொகுத்துச் சொல்லுவதிலும் பகுத்துக் காண்பதிலும் இன்பங்கொள்பவர். மனித குலம் கடைபிடிக்க வேண்டிய பிறவிக் குணத்தை ஔவையார்,

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழும் நாப் பழக்கம்
வைத்ததொரு கல்வி மனைப்பழக்கம் நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புத் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்"

என்று கூறியிருப்பது கொண்டு, அறிய முடிகிறது.

மனைவியே மாண்புடையவர்

வாழ்க்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை போன்றவை நிலையற்ற வாழ்விற்கு எடுத்துக் காட்டாகக் கூறுவர். ஒவ்வொரு மறைவிற்குப் பின்னால் என்னென்ன வற்றை இழக்க நேரிடும் என்பதை ஔவையார் பட்டியலிடுகிறார்.

"தாயோட றுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் ஆயவாழ்வு
உற்றா ருடன்போம் உடன் பிறப்பாற் றோள் வலிபோம்
பொற்றாலி யோடெ வையும் போம்"

எவரெவர் இறப்பிற்குப்பின் எது எது போய் விடும் என்பதைக் கூறுவது நினைக்கத்தக்கது. தாய் இறந்து விட்டால் அவருக்குப்பின்னர் அறுசுவையோடு உண்ணும் உணவை இழக்க நேரிடும் ; தந்தை இறந்துவிட்டால் கற்கும் கல்வியை இழக்க நேரிடும் : தான் பெற்ற குழந்தைகள் இறந்துவிட்டால் ஈட்டிய செல்வத்தை இழக்க நேரிடும்; உறவினர் இறந்துவிட்டால் வளமான வாழ்வை இழக்க நேரிடும் உடன்பிறந்தார் இறந்து விட்டால் தோள்வலியை இழக்க நேரிடும் ; பொற்றாலி அணிந்த மனைவி இறந்து விட்டால் அனைத்தையும் இழக்க நேரிடும் என்பதை ஔவையார் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது நினைக்கத்தக்கதாகும். மனைவியோடு எல்லாம் போய்விடும் என்ற கூற்றால் மனைவியின் மாண்பினையும் அவளின் தியாக உள்ளத்தையும் ஔவையாரின் தனிப்பாடலால் அறிந்து கொள்ள முடிகிறது.

கோடி பெறுவன

சோழன் மன்னனுக்கு ஔவைப் பிராட்டி கோடியின் தன்மையினைக் கூறி. கோடியின் மதிப்பினை உணர்த்தியிருப்பது அறிதற்குரியது. நான்கு கோடிப் பாடல்களைக் கேட்ட, சோழ மன்னனுக்கு பதில் கூறும் முகத்தான் வாழ்வியல் பண்புகளை விளக்கியிருப்பது அறிதற்குரியது. மதியாதார் வீட்டிற்கு வாசற்படியினை மிதியாமை கோடி பெறும் ; உணவு உண்ணுங்கள் என்று உபசரியார் வீட்டில் உணவு உண்ணாமை கோடி பெறும்; நல்ல குடிப்பிறந்தாரோடு கூடி வாழ்தல் கோடி பெறும் : கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக்கு

தவறாமை கோடி பெறும் என்று நான்கு கோடிக்கு நிகரானப்பாடலை ஒளவையார்,

"மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீர் உண்ணீரென்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிபிறவார் தம்மோடு
கூடாமை கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநா
கோடாமை கோடி பெறும்"

என்று பாடியிருப்பது வாழ்வின் உயரிய பண்புகளை விளக்குவதாய் உள்ளது.

ஒளவையாரின் தனிப்பாடல்கள் ஒவ்வொன்றும் வாழ்வியல் அனுபவங்களை விளக்குவனவாய் பாடப்பட்டிருப்பது படித்தின்புறத்தக்கதாகும்; போற்றிப் பின் பற்றத்தக்கதாகும்; தனிப்பாடல்கள் ஒளவையாரின் அறநெறிக்குச் சான்று பகவர்வன எனலாம்.தனிப்பாடல்கள் தரும் இன்பம் தனி இன்பமாகும்: உண்மைகளை உரைக்கும் உயரிய சிந்தனைகளாகும்; தனிமனித அறம் பேணும் அறநெறிகளாகும்; சமுதாயம் நலம் நாடும் வழிகாட்டு மொழிகளாகும். ஒளவையாரின் தனிப்பாடல் சுவையினைப் படித்து மகிழ்வோம்; தமிழரின் உயரிய பண்பாட்டுப் பெருமைகளைக் காத்து நிற்போம் ; உழைப்பின் பெருமையை உயிராக மதிப்போம் : ஒளவையாரின் அறநெறிகளை பின்பற்றி. அற வாழ்விற்கு வழிவகுப்போம்.

திருவள்ளுவராண்டு 2037, ஆவணி 22 (07.09.2006) வியாழன் மாலை 6.30 மணிக்கு திருமதி மகாலட்சுமி இரத்தினசபாபதி தலைமையில் 'மருத்துவச்செம்மல்' டாக்டர் சி. இரத்தினசபாபதி முன்னிலையில் நிறைநிலவு ஏழாவது சொற்பொழிவு நிகழ்வுற்றது முனைவர் சரசுவதி இராமநாதன் உரை வாசிக்கப்பட்டது..

பேரின்பம் நல்கும் ஔவைக்குறள்

சொற்பொழிவு-8

ஞானத்தின் உச்சியில் ஏற்ற உதவும் யோக நிலைகளை உணர்த்தும் உயரிய ஆன்மீகப் பனுவலாக ஞானக்குறள் என்ற நூல் ஔவையார் பெயரில் வெளியிடப்பட்டிருப்பதை தமிழ் இலக்கிய வரலாற்றின்வாயிலாக அறிகிறோம்.

முற்றிலும் பேரின்பத்திற்கு வழி காட்டும் நிலையில் தத்துவ மேன்மைகளை திருக்குறள் போன்ற அமைப்பில் ஆக்கி, அளிக்கப்பட்டுள்ளது. ஔவையாரின் ஞானக்குறள் பேரின்பத்தில் திளைக்கச் செய்வது; இன்ப, துன்பங்களை ஒன்றாகக் கருதும் நிலையினை ஏற்படுத்தித் தருவது; நிலைப்பேறினையும் நிலையாண்மைக் கூறுகளையும் எடுத்தியம்புவது, அறச் சிந்தனையுடன் ஆற்றுப்படுத்தும் அரிய நூலான ஔவையாரின் ஞானக்குறளைப் படித்தின்புறுதல் சிறப்புடைய பயன்களை நல்கும்.

பூலோக சரசுவதி

சிவாய நமவென்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்

- நல்வழி - 15

பூலோக சரஸ்வதி என்று அன்று தொட்டு இன்று வரை தமிழகம் போற்றி வழிபட்டு வருகின்ற மூதாட்டி ஔவை, நரை மூதாட்டியாய் கூனும் கோலும் கொண்டவராய் அறிவுரை வழங்கும் பொருட்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த ஓர் உருவத்தை ஔவை என மக்கள் மனத்திரையில் வரைந்துள்ளனர்.

ஔவை சொல் விளக்கம்

சூடாமணி நிகண்டு நோற்பவர் பெயர்களில் ஒன்றாக ஔவை என்பதைக் குறிக்கிறது.

துறவு பூண்ட பெண்கள் ஔவை என அழைக்கப்பெற்றனர் என்பதைத் திருத்தக்கதேவர்

"அணியிருங் கூந்தல் அவ்வை மார்கள் தாம்
பணிவிலர் பரித்தனர் பரமன் சொன்னநூல்
துணிபொருள் சிந்தியாத் துறத்தல் மேயினார்"

என வரும் வரிகளில் குறிப்பிட்டுள்ளார்.

மணம் செய்து கொள்ளாதிருந்து பருவத்தால் முதிர்ச்சி பெற்றுத் தவக்கோலம் தாங்கிக் கல்வி கேள்விகளில் மேம்பட்டு விளங்கிய பெண்டிரை இயற்பெயர் சுட்டாது என்று முன்னோர் வழங்கினர் போலும் இத்தகைய பெண்டிர் பலர் இலக்கிய வல்லவர்களாகக் காலந்தோறும் இருந்துவருகிறார்கள் என மு. அருணாசலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுவர்.

ஔவைக் குறள்

ஔவைக்குறள் ஔவையாரால் சொல்லப்பெற்ற குறள் வடிவிலான தத்துவ நூலாகும். திருக்குறளுக்கு ஔவை அளித்த பாயிரம் குறளாகவே அமைந்துள்ளது. அதேபோல் ஔவையாரும், தாம் கண்ட தத்துவ ஞானத்தைக் குறட்பாக்களாகவே பாடியுள்ளார். வெண்பா மூன்று தலைமையான பொருண்மைகளை எடுத்துக்காட்டும் அவையாவன:- 1.பழங்கதை கூறல், 2. அறமுரைத்தல், 3. சமயநெறி விளக்குதல். ஔவையின் குறள்வெண்பா சமயநெறியின் விளக்கமாக அமைந்துள்ளது. ஔவையாரின் ஔவைக் குறள் வள்ளுவத்தில் சொல்லி விளக்கப்படாத வீடு என்னும் பகுதியை மிக விரிவாகக் கூறுகின்றது. இதனால் வள்ளுவரின் குறள் கற்ற அறிஞர்கள் அதன் தொடர்ச்சியாக ஔவைக் குறளைக் கற்க வேண்டும் என்பது தெளிவாகிறது. வள்ளுவர் குறளை அறம், பொருள், இன்பம் என மூன்று பாக்களாக 133

அதிகாரங்களாகப் பகுத்து ஒவ்வொன்றிற்கும் பத்து குறட்பாக்கள் வீதம் 1330 பாக்களாகப் பாடியுள்ளது போல் ஔவையாரும் தம் நூலில் வீட்டு நெறிப்பால், திருவருட்பால், தன்பால் என மூன்று பாக்களாக பிரித்து எழுதியுள்ளார்.

ஔவைக்குறள்

வீட்டுநெறிப்பால் -10	திருவருட்பால் -10	தன்பால் - 11
1.பிறப்பின் நிலைமை	1.அருள்பெறுதல்	1. குருவழி
2.உடம்பின் பயன்	2.நினைப்புறுதல்	2.அங்கியிற்பஞ்சு
3.உள்ளுடம்பின் நிலைமை	3.தெரிந்துதெளிதல்	3. மெய்யகம்
4.நாடி தாரணை	4.கலைஞானம்	4.கண்ணாடி
5.வாயு தாரணை	5.உருவொன்றி	5. சூனியகாலம் அறிதல்
6.அங்கிதாரணை	6.முக்தி காண்டல்	6.சிவயோகநிலை
7. அமுத தாரணை	7.உருபாதீதம்	7.ஞானநிலை
8.அர்ச்சனை	8.பிறப்பு அறுத்தல்	8.ஞானம்பிரியாமை
9.உள்ளுணர்தல்	9. தூயஒளிகாண்டல்	9. மெய்ந்நெறி
10.பக்தியுடைமை	10.சதாசிவம்	10.துரிய தரிசனம்
		11. உயர் ஞான தரிசனம்

ஔவைக் குறளிலே யோகத்தைப் பற்றியும் ஞானத்தைப் பற்றியும் தான் கூறப்பட்டுள்ளன.

திருமூலர் திருமந்திரம், ஔவையார் ஞானக்குறள், ஞானவெட்டியான் முதலிய நூல்களைச் சித்தர்களின் கருத்தடங்கின நூல்களாகவே கொள்ள வேண்டும். மதம், சமுதாயம் இவைகள் பற்றிய சித்தர்களின் கொள்கையைச் சித்தர் பாடல்களிலே காணலாம்.

இவ்வுடம்பு பஞ்ச பூதங்களால் ஆகியதை இறைவன் நம்மிடமே தான் இருக்கிறான். அவனைக் கண்டறிவதே ஞானம், யோக சித்தியால் உடலை வலுவாக வைத்துக் கொள்ள முடியும் என்ற கருத்துக்களைத்தான் ஔவைக்குறளில் காணலாம், இது சித்தர்கள் கண்டறிந்த உண்மையாகும்.

மனித குல மேம்பாட்டிற்குப் பாடுபட்ட சான்றோர்களுள் ஒளவையாரும் ஒருவர், மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டி நெறிகளைத் காலந்தோறும் ஒளவையார் குறிப்பிட்டுள்ளார். சங்க கால ஒளவை, சமயகால ஒளவை, நீதியிலக்கிய ஒளவை என ஒளவையார் மூவர் இருந்துள்ளனர். இடைக் காலத்தில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் சிறப்புப் பெற்றிருந்தன. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையானவை, அவை நித்தியமானவை, பாசங்களின் நீங்கி பசு பதியைச் சென்றடையின் பிறப்பின்மை தோன்றும் என்பதை அடிப்படையாகக் கொண்டது சைவ சித்தாந்தம், இறைவனை உயிர் சென்றடைவதற்குரிய சாதனங்களாக சரிமை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்களில் யோகமார்க்கம் என்பதொன்று, உடல் மூளை, மனம் ஆகிய மூன்றையும் ஒருமைப் படுத்தும் மார்க்கம் இம் மார்க்கம். இந்நெறியை மிக விரிவாக ஒளவையார் ஞானக்குறள் எடுத்துரைத்துள்ளது. மூலாதாரத்தில் உறங்கும் குண்டலினியை மேலெழும்பச் செய்து ஆறு ஆதாரங்களைக் கடந்து உள் நாக்கு வாசல் வழியே புருவ மைய வாசலைக் கடக்கச் செய்து சகஸ்ராரத்தில் ஐக்கிய மாவதை மனதினை ஒரு முகப்படுத்தி உணர்வுநிலையில் அறிந்து உணரலாம், இவ்வுணர்வினை அடைபவர் ஜீவன் முத்தர் என்றழைக்கப்படுவர், உடலிலே உத்தமனைக் கண்ட தன்மை யுணர்ந்த தவத்தோர்களின் நெஞ்சில் அரன் தானே விரும்பி வீற்றிருப்பான் என்பர்.

வீட்டு நெறிப்பால்

ஆசை

"ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம்
ஆசை படுத்தும் அளறு"

பிறவிக்குக் காரணமாக அமைவது ஆசை, ஆசையென்றும் அருநரகில் வீழத்துவன ஐம்புல நுகர்ச்சி என்பதனை எத்துணை இரத்தினச் சுருக்கமாகப் பாடியுள்ளார்.

இறைவன்எங்கும் உள்ளான். ஆனால் நாம் அவனைப் புறத்திலே தேடுகிறோம். நம் உள்ளே தேடினாலன்றி அவனைப் பார்ப்பதும் அரிது. மனமாசு நீங்கினாலன்றி நம்கருவி, காரணங்கள் உள்நோக்கித் திரும்பாது.

"மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக் கால்
ஈசனைக் காட்டும் உடம்பு"

நுண்ணுடம்பாகிய சூட்சம் சாரீரத்தால்

"கற்கலாம் கேட்கலாம் கண்ணாரக் காணலாம்
உற்றுடம்பா லாய உணர்வு"

சித்தர்கள் செய்யும் அற்புத நிகழ்ச்சிகளுக்கு நுண்ணுடம்பின் ஆற்றலே காரணம். 72000 நாடிகள் உள. அவற்றுள்ள 10 சிறந்தன, இவைகளுக்கெல்லாம் ஆதாரமான நாடி ஒன்று உள்ளது என்கிறார். நாடி தாரணையில், வாயு தாரணையில் மயிர்க்கால் வழியெல்லாம் பாயும் வாயுவை அடக்கவேண்டும் என்பார்.

"மயிர்க்கால் வழியெல்லாம் மாய்கின்ற வாயுமை
உயிர்ப்பினறி உள்ளே பதி"

உடலை அழியாது பல்கால் காத்து வைக்கும் அருமறை இது. மூச்சை அடக்கப் பழகினால் ஆயுள் நீட்டிக்கும், ஸ்வர்ணதேகம், ப்ரணவதேகம் பெறலாம் என அங்கி தாரணையில் கூறுவார். இருபத்தைந்து தத்துவங்களும் ஒழிய மூலாக்னியை தரிசித்தால் ஐம்பொய்களும் வெளியேறிப் போம் என்கிறார்.

"ஐயைந்தும் மாய அகத்துள் எரிநோக்கில்
பொய் ஐந்தும் போகும் புறம்"

வள்ளலார் போன்றோர் மரணமிலாப் பெருவாழ்வைப் பேசுவதை கேட்டிருப்போம். அது பற்றிய ஔவைக்குறள் இது.

"மேலை அமிர்தை விலங்காமல் தான் உண்ணில்
காலனை வஞ்சிக்க லாம்"

எமனை ஏமாற்ற வழிகாட்டுகிறார் ஐங்கரன் அருளால் யோக சாதனை கைவரப்பெற்ற மூதாட்டி அர்ச்சனை எப்படி புரிய வேண்டும்?

"உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியர் அர்ச்சிக்கு மாறு"

திருவருள் பெற வழி

முதல் அதிகாரம் அருள் பெறுதல் இறைவன் திருவருள் பெற வழி என்ன?

"வேண்டுவார் வேண்டும் வகைதான் விரிந்து எங்கும்
காண்பதற்கு அரிதாம் சிவம்"

இதன்நுண் பொருளைச்சிந்தித்து உணர்ந்தால் உலகில் சமயப் பிணக்கேது? தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் பிறப்பறுக்க வழிகாட்டுகிறார்.

"எல்லோருக்கும் ஒன்றே சிவமாவது என்றுணர்ந்த
பல்லோர்க்கும் உண்டோ பவம்"

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனப் பகர்ந்த திருமூலர் நம் சிந்தனைக்கு வருகிறார், சந்திரகலையும் சூரிய கலையும் ஒன்று கூடுவதே சுழி முனை இதுவே வீடு பேற்றிற்கு வழித்துணை.

"சத்தியம் சந்திரனைச் செங்கதிரோன் ஊடுருவில்
முக்திக்கு மூலம் அது"

கலைஞானம் இது

"உள்தங்கு சிந்தை வைத்தார் உள்கு வார்க்கு
உள்ளம் வைத்தார்"

எனப்பாடும் திருநாவுக்கரசர்.

"விறகில் தீயினன் பாலிற் படு நெய்போல் மறைய
நின்றுளன் மாமணிச் சோதி யன்"

எனப்பாடி பரவுவார். இக் கருத்தையும் ஔவையின் வாய்மொழியால் கேட்டு இன்புறுவோம்.

"எள்ளகத்து எண்ணெய் இருந்ததனை ஒக்குமே
உள்ளகத்து ஈசன் ஒளி"

"பாலின் கண் நெய்போல் பரந்தெங்கும் நிற்கும்
நூலின் கண் ஈசன் நுழைந்து"

ஞானஒளி

'குருவருள் இன்றேல் திருவருள் இன்று' என்பது நாமறிந்ததே

"தலைப்பட்ட சற்குருவின் சன்னதியில் அல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்"

இந்நெறி "கற்றதனால் ஆயபயன் வாலறிவனைத் தொழல்"

என்ற வள்ளுவன் குறளை நினைவூட்டும் பகுதி.

"பற்றிலாது ஒன்றினைப் பற்றினால் அல்லது
கற்றதனால் என்ன பயன் ?"

தெள்ளத் தெளிந்தோர்க்குச் சீவன் சிவலிங்கம் என்பார் திருமூலர். "சீவன் சிவலிங்கமாகத் தெளிந்தவர் பாவம் நசிக்கும் பரிந்து" என்பது ஒளவைக்குறள். மெய்யகத்து ஈசன் ஒளி கண்டால் கையகத்து நெல்லிக்கனியாய் மோட்சம் சித்திக்கும் என்கிறார்.

இறுதியாக உயர் ஞான தரிசனம் பெறக் காலம் இயம்புகிறார் மூச்சு நிலை (சரம்) பார்க்க வழி காட்டுகிறார், மேலும் கல்லாத மூடர் ஞானியர் வேடம் கொண்டு வாழ்தலைச் சாடுகிறார்.

"கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடச்
செல்லா (து) அது என்ன செயல்"

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல ஒளவைக் குறளில் ஒரு சிலவே சுட்டிக் காட்ட முடிந்தது. காலமும் இடமும் போதாமையின் குற்றமற முந்நூறு குறளையும் சிந்தித்துத் தெளியுமாறு இறையருளை வேண்டுகிறேன்.

அகவழிபாடு

"தவமும் தவம் உடையார்க்கு ஆகும்" என்பது வள்ளுவன் வாக்கு, எண்ணற்கரிய அருந்தவத்தால், பல்லூழிக் காலம் பயின்று அரனை அருச்சித்தால், எண்ணிலி ஊழி தவம்செய்த பயத்தால், முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தால், பண்டைப் பிறவிப் பயனாம் தவத்தினால்,

காடும் மலையும் கருதித்தவம் செய்தலால் இறையுணர்வாகிய உள்ளுணர்வு பிறக்கும் என்கிறார் ஔவை மூதாட்டி.

"ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்
நேசத்தால் நீ நினைத்து கொள்"

தன்னில் உலகையும், உலகைத் தன்னுள்ளும் காண்பவனே பக்தன்; சித்தன்; முக்தன்; சிவயோகி.

1. "மண்டலங்கள் மூன்றும் மருவ உடனிருத்தி
அண்டரனை அர்ச்சிக்கு மாறு"

சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அக்னி மண்டலம் என்ற மூன்றும் ஒவ்வொருவர் உடலிலும் உள்ளன. நம் சிந்தையை அவற்றின் பால் செலுத்தி, அரனை அங்கே இருத்தி, வழிபாடு செய்ய வேண்டும். இது தான் வழிபாடு.

2. "ஆசனத்தைக் காட்டி அரன் தன்னை அர்ச்சித்துப்
பூசனைசெய்து உள்ளே புணர்"

ஆசனங்களைச் செய்; அரனை அர்ச்சித்து வழிபாடு செய்; யோகத்தால் அசையாமல் இருக்க உள்ளம் அசையாது. ப்ராணனும் கட்டுப்படும். உள்முக நோக்கு எளிதில் கிட்டும். யோக சாதனையின் இரகசியம் இது. அகமுக வழிபாட்டிற்கு உடலும், உள்ளமும் பக்குவம் அடைய ஆசனம் தேவை.

3. "உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியர் அர்ச்சிக்கு மாறு"

ஞான யோகத்தால் தெளிவுற்றோர் இறைவனை அமர்த்தும் இருக்கையாகத் தம் உள்ளத்தையே கொள்கின்றனர். உணர்வையே சிவலிங்கமாய் மாற்றி வழிபாடு புரிகின்றனர். இதய கமலத்தில் இறைவனை வழிபடுவதே உண்மை வழிபாடு.

"உள்ளம் பெருங்கோயில் .... தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்" திருமூலர்.

4. "ஆதாரத் துள்ளே அறிந்து சிவனுருவைப்
பேத மற அர்ச்சிக்கு மாறு"

மூலதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன ஆறு ஆதாரங்கள், அந்த இடங்களிலே தெய்வீக உணர்வை இருத்தி வழிபடும் வழிபாடே வழிபாடு.

5. "பூரித் திருந்து புணர்ந்து சிவனுருவைப்
பாரித்து அங்கு அர்ச்சிக்கு மாறு"

பூரகம் மூச்சை உள்ளே இழுத்தல் ; ரேசகம் மூச்சை வெளியே விடுதல்; கும்பகம் மூச்சை உள்ளே இழுத்தல், மூச்சை உள்ளே இழுக்குங்கால் இறைவனோடு இணைந்து சிவ சிந்தனையைக் கைக் கொள் அதுவே வழிபாடு.

6. "விளக்குறு சிந்தையான் மெய்ப் பொருளைக் கண்டு
துளக்கற அர்ச்சிக்கு மாறு"

கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பன நான்கு படிகள், தெளிந்த சிந்தையால் மெய்ப் பொருளை அகத்தே கண்டு வழிபடுவதே வழிபாடு.

7. "பிண்டத்தின் உள்ளே பேராது இறைவனைக்
கண்டு தான் அர்ச்சிக்கு மாறு"

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில், உலகெலாம் தேடிக் காணொணாத இறைவனை நம் பிண்டமாகிய உடலின் உள்ளே கண்டு தரிசித்து, மனம் அசையாது வழிபடுவதே வழிபாடு.

8. "மந்திரங்கள் எல்லாம் மயங்காமல் உள் நினைத்து
முந்(து) அரனை அர்ச்சிக்கு மாறு"

மந்திரங்களைச் சொல்லலாம் ; தவறில்லை. மனம் மந்திரத்திலே மயங்கக் கூடாது. மந்திரத்தின் உட்பொருளாய் ஒளிரும் இறைவன்பால் மனதை இருத்தி வழிபாடு செய்க.

9. "பேராக் கருத்தினால் பிண்டத்தில் உள் நினைந்து
ஆரா தனை செய்யு மாறு"

எண்ணங்கள் அலை மோதுவது இயல்பு அந்த எண்ணங்களைத் தோன்றாமல் செய்த, இறைவன் ஒருவன்பால் பெயராத சிந்தையுடன் உடலின் உள்ளே இறைவனை ஆராதிப்பதே ஆராதனை. (வழிபாடு).

10. "உள்ளத்தின் உள்ளே உறப்பார்த்து அங்கு ஒண்சுடரை
மள்ளத்தான் அர்ச்சிக்கு மாறு"

ஒளி மயமான இறைவனை உள்ளத்தின் உள்ளே இருத்தி மெள்ள மெள்ள வழிபடுக, இத்தகைய அக வழி பாட்டால் அட்டமாசித்திகள் நம்மைத் தேடி வந்தாலும், அவற்றையெல்லாம் ஒதுக்கி இறைவன் பால் பெயராத சிந்தையால் வழிபடுவதே வழிபாடு; அக வழிபாடு; உண்மை வழிபாடு.

"ஏத்தும் தொண்டர் அகமலால் கோயிலில்லை
ஐயன் ஐயா றனார்க்கே" என்றார் அப்பரடிகள்.

பிறவாநெறி

1. நூல்களைக் கற்றதனால் என்ன பயன்?

நல்ல நூல்களை வாசித்ததன் பயன் என்ன என்பதைப் "பிடிப்பதற்கு முடியாமல் அருவமாக உள்ள இறைவனின் திருவடிக் கமலத்தைப் பிடித்தாலல்லாமல், பயனில்லை" என்கிறார்.

"பற்றிலா தொன்றைப் பற்றினால் அல்லது
கற்றதனால் என்ன பயன்" (214)

இக் குறளின் கருத்தையே வள்ளுவரும்,

"கற்றதனா லாய பய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழஅ ரெனின்" (2) என்கிறார்

2. உடம்பினைப் பெற பயன்; நாம் ஒவ்வொரு வரும் ஆற்றிவுள்ள உயர்வுடைத்தாகிய உடம்பைப் பெற்றிருந்தும், இந்த உடம்பினைப் பெற்ற பயனை உணர்ந்திருக்கிறோமோ, அடைந்திருக்கிறோமோ.

"தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான் முகனும்
தேடித் தேடொணாத்தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்று திருநாவுக்கரசு நாயனார் சொல்லியது போல் உடம்பினுள் இறைவனைத் தேடிக் காணவேண்டும் அப்படிக் கண்டு கொண்டால் இந்த உடம்பே இறைவனைக் காட்டிவிடும் என்பது ஔவையார் கருத்து.

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு" (19)

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்" (11)

"மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு" (16)

"அன்னத்தா லாயஉடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும்" (20)

3. தம்மை அறி ; 96 தத்துவங்களால் ஆன உடம்பைப் பெற்றவர்கள். "நான்" என்று சொல்லப்படுகின்ற ஆன்மாவை அறிந்தால் தான்ஆன்மாவில் வீற்றிருக்கின்ற கடவுளை அறிய முடியும், தம்மை அறியாதவர்கள் இறைவனைக் காண முடியாது உயிர்க்குயிராயுள்ள இறைவனை அறிந்த பிறகு தன்மை அறியும் வேலை சாதகர்களுக்கு இல்லை என்கிறார் ஔவையார்.

"தம்மை அறியாதார் தாமறிவோம் என்பதென்
செம்மையால் ஈசன் திறம்" (127)

"தம்மை அறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
தம்மை அறிவாரோ தான்" (215)

திருமூலர் அருளிய திருமந்திரம் ஈண்டு நினைந்தின் புறத் தக்கது.

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே"

4. பிறப்பில்லை வீடுபேறு : தன்னையறிந்து யோகநிலையில் இருக்கும் போது தூக்கம், மன உணர்வு , பிராணினின் அசைவு, காமக்குரோதிகள்

முதலியவை நீங்கி உடல் உருவ நினைவே இல்லா நிலையில் சுடர் ஒளி கண்டான் உடம்பிற்கு மீண்டும் பிறப்பில்லாமல் வீடுபேறு கிட்டும் என்கிறார்.

"தன்னை அறியும் அறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு" (171)

"தன்னை அறிந்து செறிந்தடங்கித் தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு" (177)

"துரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு" (218)

5. பிறப்பை அறுக்கு :

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்" -- திருக்குறள்

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்"

காரைக்காலம்மையார் புராணம் (சேக்கிழார்)

பிறவாதிருக்க வரம் பெறல் வேண்டும் - பட்டினத்தார், பிறப்பை அறுக்க ஔவையார் கூறும் உபாயங்களைப் பார்ப்போம்.

"அந்தத்தில் அங்கி அழல்போலத் தானோக்கிற்
பந்தப் பிறப்பறுக்க லாம்" (51)

"ஊறும் அமிர்தத்தை உண்டியறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக்க லாம்" (65)

6. வீடுபேறு : விடுவதுவீடு, பெறுவது பேறு. மலங்களை விடுவது, திருவடி நிலையில் பேரின்பத்தைப் பெறுவது.

வீடுபேற்றைப் பெற ஔவையார் கூறும் உபாயங்களைக் காண்போம்.

"நினைப்பு மறப்பு நெடும்பசியும் அற்றால்
அனைத்துலகும் வீடா மது" (175)

"சிந்தை ஆங்காரம் செறிபுலன் அற்றக்கால்
முந்தியே ஆகுமாம் வீடு" (175)

"அற்கலிலும் கேட்கிலும் ஞானக் கருத்துற
நிற்கிற் பரமவை வீடு" (180)

7. இறவா நிலை : அந்நிலையை அடைபவர்கள் பிறவி இறப்புச் சங்கிலியிலிருந்து விடுபட்டவர்கள், அவர்களுக்கு மரணமில்லை, ஆயுள் பெருக்கம் உண்டாகும், அவர்களுக்கு நரை, திரை, மூப்பு, நமன் இல்லை என்கிறார் ஔவையார்.

"மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவார் இறவார் பினை" (207)

"வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுட் பெருக்க முண் டாம்" (49)

"மறவாமற் காணும் வகையுணர் வாருக்
கிறவா திருக்கலும் ஆம்" (229)

8. உடம்பில் மாற்றங்கள் : அப்படி இறவாநிலை அடைந்தவர்கள் உடம்பில் மாற்றங்கள் நிகழும், உடம்பில் ஒளி உண்டாகும், இளமையாகும், ஓவியமாகும், உருவற்று நிற்கும், ஆனந்தமாகும், அழிவற்று நிற்கும் உடம்பு.

"மெய்யகத்தின் உள்ளே விளங்கும் சுடர்நோக்கில்
கையகத்தில் நெல்லிக் கனி" (221)

"தோன்றா தூய ஒளி தோன்றியக்கால் உன்னைத்
தோன்றாமல் காப்ப தறிவு" (225)

"கண்டத் தளவிற் கடிய ஒளிகாணில்
அண்டத்த ராகும் உடம்பு" (234)

"ஆவி பாழ் போகா தடங்கி இருந்தபின்
ஓவிய மாகும் உடம்பு" (245)

"ஒழிவின்ற நின்ற பொருளை உணர்வில்
அழிவின்றி நிற்கும் உடம்பு" (249)

"நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளி காணில்
முற்றும் அழியா துடம்பு" (238).

9. சிவமானது : அந்தமும் ஆதி இல்லாச் சுடராம் இறைவனில் உயிரை வைத்து, நமக்குள்ள சிவன் செயல்நாடு, இறைவன்பெயராம் திருவைந்தெழுத்தை ஓது, அட்டமாசித்திகள் அடைந்து சீவன் சிவகுணங்கள் பெற்றுச் சிவமாகும் என்பது ஔவையார் கருத்தாகும்.

"அறிந்தடங்கி நிற்குமந் நாடிகள் தோறும்
செறிந்தடங்கி நிற்கும் சிவம்" (40)

"நினைப்ப மறப்பும் இல்லாதவர் நெஞ்சம்
தனைப்பிரி யாது சிவம்" (192)

"ஆகமம் சீவனும் ஆசையும் தானாகி
ஏகமாய் நிற்கும் சிவம்" (193)

"சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்
பாவம் நசிக்கும் பரிந்து" (220)

ஔவை ஞானக் குறளின் அனுபவம் பெற்று மரணமிலாப் பெருவாழ்வில் – பேரின்பத்தில் திளைத்து மகிழ முயல்வோமாக.

அறிவும் அருளும்

அறிவு வளத்தால் மேன்மையுறுவதும், வளமின்மையால் தீமையடைவதும் மனிதனின் வாழ்வின் இயல்பாகவுள்ளன. அத்தகைய அறிவினை கல்வியறிவு, மெய்யறிவு என்று அறிஞர்கள் வகைப் படுத்தியுள்ளனர். அவற்றில் மெய்யறிவு என்று போற்றப்படும் உண்மையறிவு ஒன்றே அவனுக்கு இம்மை, மறுமை வாழ்வில் இன்பம் பயக்கின்றது, கல்வியில் பெறுகின்ற அறிவு நிலைக்கும் மேலாக உள்ளுணர்வால் ஊற்றறிகின்ற அறிவு நிலையினையே "மெய்யறிவு" என்றும் "அருளறிவு" என்றும் தத்துவ ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

"அருளினால் அன்றி அகத்தறி வில்லை
அருளின் மலம் அறுக்க லாம்"

அறிவை அறியாமை என்ற இருள் மூடி மறைந்துள்ளது பகலவன் வர இருள் உணர்வால் அகத்தறிவு வளம் பெற அறியாமை அகலும். மனத்தில் உள்ள மயக்கத்தில் தெளிவு பிறக்கும், அங்கு தான் சிவசிந்தனை தோன்றும்.

யாவர்க்கும் தீமை இல்லா வாய்மையாலும், பொய்மையில்லா மனத்தினாலும், குற்றமற்ற தூய்மையை அடையலாம். அதுவொன்றே ஈசன் அருள் பெறும் வழி எனறார் ஔவை.

"வாய்மையால் பொய்யா மனத்தினால் மாசற்ற
தூய்மையால் ஈசன் அருள்"

"மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" என்பது சித்தர் வாக்கு. மனத்தூய்மையே இறைநிலை என்பதை இங்கு அறிந்து கொள்ளலாம் அந்நிலையிலிருந்து செய்கின்ற செயலுக்கு வலிமை உண்டு. அவ் வலிமையே நினைத்ததை நினைத்த வண்ணம் நிறை வேற்றும் என்பதை வள்ளுவர், "எண்ணியர் திண்ணியரானால் எண்ணியாங்கு எய்துவர்" என்பார். இதேபோல் ஔவையார், "நிலையன ஒளி வடிவமாம் ஈசனருள் பெற்றால் உன்னும் கருமம் முடிக்கலாம்" என்பார் எல்லாச் செயலையும் செய்து முடிக்கும் வல்லமையும் அவன் அருளால் பெறலாம் என்பதை,

"எல்லாப் பொருளும் முடிக்கலாம் ஈசன்தான்
தொல்லை அருள்பெற்றக் கால்"

என்ற குறள் வழி, சித்தரைப் போன்ற தவநிலைக்கு உயர்த்துவதே ஈசன் அருள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

"ஓவாச் சிவனருள் பெற்றால் வரையின்றித்
தாவாத இன்பம் தரும்"

என்ற குறள் வழி அருளாளர்கள் சொல்லொனா இன்பத்தை, அழிவில்லா இன்பத்தை இறையின்பமாகப் பெறுவார்கள். "அவனருளால் அவன் தாள் வணங்கி" இன்பநிலை அடையலாம் என்று ஔவை இங்கு அறிவுறுத்துகின்றார்.

"அருளே நம் இயல் அருளே நம் உரு
அருளே நம் வடிவு ஆம் என்ற சிவமே"

என்ற வள்ளலாரின் வாக்கிற்கு, ஏற்ப ஔவைக்குறள் காட்டுகின்ற "அருள் ஒளி " யினை உள்ளத்தில் ஏற்றி, உலகினை வாழ்வித்து நாமும் வாழ்வோமாக.

ஔவையின் அருங்குறளால் பேரின்பம் காண வழி காண்போம்; அருள் நெறியும் அறநெறியும் தழைத்தோங்க ஔவையாரின் ஞானக்குறளைப் படித்தின்புறுவோம்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை விடுத்து இறையின்பமே உண்மையான பேரின்மாகக் கருதுவோம் நிலையாமையை உணர்த்த நிலை பேற்றுக்கு வழி வகுக்கும் ஞான வழிகளை நாடுவோம்; நல்லவர் காட்டிய நன்நெறியினை வாழ்வில் கடைப்பிடித்து நாமும் நம் சமுதாயத்தையும் முன்னேற்றவும் காணச் செய்வோம் உடம்பாகிய கோயிலையும் உள்ளமாகிய தீபத்தையும் ஒளி பெறச் செய்வோம்; பேரின்பம் நல்கும் ஔவையாரின் ஞானக்குறளே மரணமிலா ஒரு வாழ்விற்கு வழிகாட்டும் என்பதை உணர்வோமாக.

திருவள்ளுவராண்டு 2037, புரட்டாசி 20 (06.10.2006) வெள்ளி மாலை 6.30 மணிக்கு தமிழக வணிகவரித்துறை அமைச்சர் மாண்புமிகு பாரிவேள் சி.நா.மீ. உபயதுல்லா அவர்கள் தலைமையில் திருவையாறு சட்டப்பேரவை உறுப்பினர் தமிழ்த்திரு துரை.சந்திரசேகரன் முன்னிலையில் நிறைநிலவு சொற்பொழிவு நடைபெற்றது.

மடக்கொடி இல்லா மனை

சொற்பொழிவு-9

அறநெறி உணர்த்தும் அருந்தவச் செல்வியாக, அதியனைப்பாடும் அவைப்புலவராக, அழ்கன் முருகன் கேட்டு மகிழும் அருந்தமிழ் வாக்குடையவராக, ஞானக்குறள் தந்த சித்தராக, குழந்தைக்கவிஞராக காதலைப்பாடிய காரிகையாகவெல்லாம் பன்முகப்புலமை காட்டியுள்ள ஔவை தனித்தனியே பாடிய தன்னுணர்ச்சி பாடல்களிலும் தனித்துவம் பெற்றுத் திகழ்கிறார். நகைச்சுவை உணர்வு மிக்கவரான இவருக்குச் சட்டென்று கோபமும்வரும் போலும்! 'தன் அறியலன் கொல்! என் அறியலன் கொல்! எத்திசைச்செலினும் அத்திசைச்சோறே.' என்ற பெருமிதத்துடன் கலந்த கோபம்! அவர்மீது நமக்கு மரியாதையைத் தருகிறது. அதியன் இறந்தபோது பாடிய கையறு நிலைப்பாடல்கள் நம்மையும் கண்கலங்க வைக்கிறதே !

தற்குறிப்பேற்றம்

நிலவு இயல்பாக உதித்து வெளி வருகிறது. வானில் உலா வருகிறது. நிலவைப்பாடாத கவிஞர் உண்டா? ஆனால் ஔவையின் கற்பனை புதிது.

மரங்கள் சூழ்ந்த மலை நாடான ஐவேல் அசதியின் மலைச் சாரலில் நீராடப்போகிறாள் ஒரு பெண், பின்னால் அவள் காதல் வலையில் பட்ட ஆண் போகிறான், 'பிடிடா', 'போ' என்று தூண்டுவது போல் நிலவும் பின் தொடர்கிறது என்கிறார் ஔவை.

போறாள், 'பிடி பிடி.' என்றே
நிலவும் புறப்பட்டதே ! இது அழகானதற்குறிப் பேற்றம்

ஒரு நாள் ஒரு சங்கு வாயைத் திறந்தவாறு வானத்தை நோக்கி இருந்தது. கரை ஓரத்து மரக்கிளையிலிருந்த பூக்கள் சிந்திய தேனில் 2 துளிகள் சங்கின் வாயில் விழுந்தன, இயற்கையின் அரிய ஆற்றலை யார்தான் அறிவார்? சோழன் ஒரு முறை 'கம்பன் போல யாரும் காவியம் பாட முடியாது.' என்றான் தூக்கணாங்குருவிக்கூடு, தேன்கூடு, கரையான் புற்று, சிலந்திவலையும் கூடத்தான் யாராலும் செய்ய முடியாது.

"வான் குருவியின்கூடு வல்லரக்கு, தொல்கறையான்
தேன் சிலம்பி யாவர்க்கும் செய்தலரிதால்" என்றாள் ஔவை.

காதல் வசப்பட்டவருக்கு "நோக்குவ எல்லாம் காதலராகவே தெரியும்" பாரதி, பக்திக் காதலில்

"காக்கைச் சிறகினிலே - நந்தலாலா - நின்றன்
கரியநிறம் தோன்றுதடா நந்தலாலா" என்றார்

இந்தக்காதலனோ "கோடும் குளமும்
குளம்தரு குன்றுகளும்
காடும் செடியும் அவளாகத் தோன்றும்
என் கண்களுக்கே"

என்று பாடுகிறான்.

பழக்கமா - வழக்கமா

ஓவியனாக வேண்டுமா - எடுத்த பொருளை எடுத்து எதைப் பார்த்தாலும் எந்த இடத்திலும் வரைந்து பார்க்க வேண்டும். பயிற்சி அவனை ஓவியனாக்குகிறது. 2 கையும் இல்லாதவன் காலால் ஓவியம் வரைந்து கண் காட்சியும் வைத்த செய்தி அண்மையில் படித்திருப்பீர்கள் "சித்தரமும் கைப் பழக்கம்" பேச்சாளராவது எப்படி என்று சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. பேசிப்பேசிப் பழக, சபைக்கூச்சம் மறையும். திக்குவான் கூடப் பேசிப்பழகி நல்ல பேச்சாளனாக முடியும்.

"செந்தமிழும் நாப்பழக்கம்" மனம் ஒன்றி, கவனம் செலுத்தினால் எத்தகைய கல்வியையும் கற்கலாம் (எந்த வயதிலும்)

"வாய்த்ததொரு கல்வி மனப்பழக்கம்" நடை அழகு நடக்க நடக்கத்தான் வரும்.

நித்தம் நடையும் நடைப்பழக்கம் இவையெல்லாம் பயிற்சியால் வருவன. ஆனால் அன்பாக, நட்பாக நடப்பது, கருணையோடிருப்பது, கொடை கொடுப்பது இவை பிறவியிலேயே வருவன

"நட்பும் கொடையும் தயையும் பிறவிக்குணம்"

எது அழகு ?

உலகம் அழகு ! புத்தம்புதிய காலை அழகு ! கடல் அழகு! இளஞ்சிவப்பு வானம் அழகு! மலை அழகு, நீரோடை அழகு; நிறம் நிறமாய்ப்பூத்த மலர்கள் அழகு! பூமி மகள் போர்த்துள்ள பச்சைக் கம்பளமான வயல் அழகு ! "அழகின் சிரிப்பை " பாவேந்தர் காட்டுவார்

"அருவிகள் வயிரத் தொங்கல்
அடர் கொடி பச்சைப் பட்டே। "

ஆனால் ஔவை காட்டும் அழகு இதோ !

"குஞ்சி அழகும் கொழுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு। "

விரதம் இருந்து இளைத்த உடல், இனிய புணர்ச்சியின் பின் தோகைமயிலன்ன பெண்ணின் தளர்ச்சி, கொடுத்துக் கொடுத்துப் பெற்ற வறுமை, போரிலே பட்ட விழுப்புண். இவை அழகு!

கூறாமல் சன்யாசியாகிவிடு

ஔவையை ஒருவன் தன் இல்லத்தில் விருந்துக்கு அழைத்து விட்டான். மனைவி குணமோ மூர்க்கக்குணம் 'விருந்து' வந்தது என்று சும்மா சொல்ல முடியுமா? முகத்தைத் தொட்டான் ; தலை கோதினான்; பேன் பார்த்தான்; பின்னர் மெல்ல 'விருந்தாளி' வந்துள்ளார் என்றானே பார்க்கலாம் அந்த நல்லவள் ஆடினாள் பாடினாள் அவ்வளவு மகிழ்ச்சியா! என்கிறீர்கள் - பழமுறத்தால் சாடினாள் ஓட ஓடத்தான் - போதுமா! இப்படிப் பட்டவள் மணவாட்டியானால் ....

"பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி வாழலாம் - சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாகில்
கூறாமல் சான்யாசம் கொள் " இது தான் நல்ல தீர்வு

"நல்ல மனைவி, நல்ல குழந்தை,
நல்ல குடும்பம் தெய்வீகம்" கவியரசர்

"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை" என்றாள் ஔவை

"நீறு இல்லா நெற்றிபாழ்; நெய் இல்லா உண்டிபாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகுபாழ்; மாறு இல்
உடன்பிறப்பு இல்லா உடம்புபாழ்; பாழே
மடக்கொடி இல்லா மனை"

பசி பொறுத்தாலும் பாட்டுப் பொறுக்காத தமிழ்மகள் ஔவை. ஒரு இல்லாள் சோறு பரிமாறிய விதமும், நடந்து கொண்ட விதமும் குறித்துப் பாடுகிறார் பாருங்கள்.

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய் திறக்க மாட்டாதே - வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரியுதே - ஐயையோ
அன்பிலாள் இட்ட அமுது"

சிலரைப் புகழ்ந்தால் நாவினிக்கும், மனமும் இனிக்கும் சிலரைத் (தகுதியில்லாமல்) புகழ்ந்துவிட்டால் நம்மனமே நாணும். ஔவையின் அனுபவமோ – வேறு

"கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்
காடேறித் திரிவானை நாடாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்
போர்முகத்துக் கோழையைப் புலியே என்றேன்
மல்லாரும் புயம் என்றேன் சோம்பற்றோனை
வழங்காத கையனை நான் வள்ளல் என்றேன்
இல்லாத சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும் என் குற்றத்தால் ஏகினேனே"

தகுதியில்லை அவனுக்கு, நான் புகழ்ந்தேன் இல்லாதைச் சொன்னாயே "ஒன்றும் இல்லை" என்று கூறிவிட்டான் நான்தான் குற்றம் புரிந்தேன் – என்றார். மன்னர் பெரியவரா? கற்றோர் உயர்ந்தவரா ? கற்றோர் தாம் மன்னனை அவன் நாட்டில் மட்டுமே மதிப்பார்கள் கற்றவரை உலகமே

ஏற்றிப் போற்றும் "கற்பகத்தடியில் நின்றாலும் காஞ்சிரங்காய்தான் கிடைக்கிறது என்றாள், அது முற்பவத்தில் செய்த வினை" பாவம் செய்யாதீர்கள், தீவினை தொடர்ந்து வரும் என்று எச்சரிக்கின்றார் அருந்தமிழ் ஔவை.

"உடன் பிறந்தார் சுற்றம் என்றிருக்காதீர்
உடன் பிறந்தே கொல்லும் வியாதி
உடன்பிறவா மாலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு"

இரக்கப்போனாலும் ...

பிச்சைக்காரரில் கூட அதிகாரப் பிச்சை எடுப்பவர்சிலர் பந்தாவினால் பெரும் புரவலர் ஆகின்றனர். ஏழை சொல் அம்பலம் ஏறுவதில்லை

"விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும் விரல்நிறைய மோதிரங்கள்
வேண்டும் - அரையதனில் பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்
கவிதை நஞ்சேனும் வேம்பேனும் நன்று"

புலமைக்கு ஒரு பெருமிதம் தேவை.

"கல்வி, இசை, தறுகண் கொடை
நான்கும் பெருமிதம் தருவன"

"நான் நிரந்தரமானவன்" - என்றார் கவியரசர்

"குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பில்லை" என்று அரசரை உதறிவிட்டுச் செல்லும் புலவர் தமிழ்ப்புலவர்,

"நூற்றுப் பத்தாயிரம் பொன் பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும். மாற்றவரைப்
பொன்றப் பொருது தடக்கைப் போர்வேல் அகளங்கா
என்றும் கிழியாதுஎன் பாட்டு"

இது நம்பாட்டியின் பெருமிதம்.

கொடையா ?

கோரைக்கால் ஆழ்வான், "அம்மா ! நாளைவா! யானைதருகிறேன்" என்றான் மறுநாள் குதிரை அடுத்த நாள் எருமை; அதன்பின் புடவை - இப்படித் தருவதாகச் சொன்னவன் ஒன்றுமே தரவில்லையாம்.

"கரியாய்ப் பரியாகிக் கார் எருமை தானாய்
எருதாய் , முழுப்புடவையாகித் - திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்து கால் ஓய்ந்ததே
கோரைக் கால் ஆழ்வான் கொடை "

வெய்யிலில் நின்றால் நிழலருமை தெரியும் வெவ்வினை தொடரும் போது ஈசன் திருவடி நிழலருமை தெரியும். தமிழ்ச் சொல்லரும் நாலிரண்டில் தெரியும் (நாலடியார் குறள். நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி) அச் சொல்லருமை ஔவையிடமும் அழகுற அமைந்து விட்டது.

பலா, மா, பாதிரி - தெரியும் ! பலா - தெரியாமலே காய்க்கும், மா பூத்துக் காய்க்கும். பாதிரிபூத்தாலும் காய்க்காது.

"சொல்லாமலே செய்வர் பெரியர்
சொல்லிச் செய்பவர் சிறியர்
சொல்லியும் செய்யாதவர் கயவர் "

கற்றது கைம் மண்ணளவு தான்; கல்லாதது உலகளவு; எறும்பு கூடத் தன்கையால் எட்டுச் சாண் இருக்கும்.

கோடி கோடி

புரவிபாளையத்தில் ஒரு சித்தர் பல்லாண்டு வாழ்ந்திருந்தார் "கோடி கோடியாய் இரு " என வாழ்த்துவார் அதனால் அவரைக் "கோடி சாமியார் " என்பார்கள் - ஔவை கோடிப் பாடல் தந்த மாதரசி. என்ன யோசிக்கிறீர்கள்? ஒரு முறை சோழநாட்டுப் புலவர்கள் வருத்தமாய்க் கூடி யிருந்தனர். என்ன செய்தி? என்று ஔவை வினவிய போது, நான்கு கோடிப்பாடல் தரவேண்டும் என்று அரசகட்டளை - அதை நிறைவேற்ற வழி என்ன என்றனர். "அதென்ன பிரமாதம் இதோ பாடல் "

"மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீர் உண்ணீர் என்று ஊட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவது கோடி பெறும்
கோடானு, கோடி கொடுப்பினும் தம்முடை நாக்
கோடாமை கோடி பெறும்" 4 கோடி வந்துவிட்டதே !

உம் நட்பு எப்படி ?

"பானையிலே சோறிருந்தால் பூனைகளும் சொந்தமடா"
"குளத்திலே தண்ணியில்லே கொக்குமில்லே மீனுமில்லே"

என்றெல்லாம் கவியரசர் பாடினார். நீரற்ற குளத்தைப் பறவைகள் தேட மாட்டா. ஏன் அங்கு மீன் இல்லையே! ஆனால் கொட்டி ஆம்பல், நெய்தல் இவை நீர்வற்ற வற்ற அந்தக் குளத்திலேயே வாடி வதங்கிப் போய்விடும். உம் நண்பர் உண்மையானவரானால் உனது வறுமையில், துயரத்தில் உன்பக்கம் நிற்பர். இல்லை என்றால் அற்ற குளத்தில் நீர்பறவை போல் "பறந்து விடுவர்" "கற்றாரைச் கற்றாரே காமுறுவர்" நல்ல தாமரையை அன்னம் தேடும். காக்கையோ பிணம் தேடும். மூர்க்கரோ மூர்க்கரைச் சேர்வர்.

நீலச்சிற்றாடை

பாரி நிறையப் பரிசில் தந்து ஔவையை வழியனுப்பினான். தந்திரமாக அவனே கள்வர்போல் சிலரை அனுப்பி, அப்பரிசுப் பொருள்களை கவர்ந்தான். (ஔவை தன் நாட்டை விட்டுப் போகக் கூடாது தன்னுடன் தங்கியிருக்க வேண்டும் என்று தான்!) அவனிடமே வந்து முறையிட்ட ஔவையிடம் பாரி உண்மையைச் சொல்லி , மன்னிப்பு வேண்டினான். ஔவை மகிழ்ந்தாள். சில நாள் தங்கினாள் "பாரி பரித்தபரியும்" பழையனூர்ச் செல்வர் பெரிய வள்ளல் அவரிடம் சில நாள் தங்கிவிட்டு ஔவை புறப்பட விடை பெறப் போனாள். அவர் தன் கையிலிருந்த களைக் கொட்டைக் கொடுத்து, அம்மா இந்த நிலத்தைக்

களைக் கொட்டால் அளந்து சொல்க ! என்றான். சிரித்துவிட்டாள் ஔவை, அதை அளக்க ஒரு நாள் போதுமா? என்னை இன்னும் தங்க வைக்க இப்படி உபாயமா! என்றாள்.

பழையனூர் கொடுத்த களைக் கொட்டு அது! சேரமான்மாரி வெண்கோ ஒருமுறை விருந்து வைத்தான் ஒரு புலவருக்கு இடமில்லை. ஔவையை நீங்கள் எழுந்திருங்கள் எனறான், முகம் வாடியது அதன்பின் தன்பக்கத்தில் இருத்தி விருந்துண்ணச் செய்தான்.

"சேரமான் வாராயே என்றழைத்த வாய்மையும் "
"நீலச்சிற்றாடைக்கு நேர் "

என்றாரே ! அது என்ன? ஒருமழைநாள் இரவு, குளிரில் நடுங்கி வந்த புலமைப் பெருமாட்டிக்குத் தங்கள் நீல ஆடையைத் தந்து உபசரித்து அன்பு காட்டிய இரண்டு மங்கையர் அன்பைப் போற்றிப் பாடிய பாடல் இது அந்தப் பெண்கள் கீரை என்று சொல்லி அமுதமே ஊட்டினர்.

"வெய்தாய், நறுவிதாய், வேண்டளவும் தின்பதாய் (தாய் போல உணவளித்த பெண்களைப் பாடும் போதே தாய் தாய் என்றதுசரிதானே நெய்தான் அளாவி நிறைவிட்டு. - பொய்யே அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார் கடகம் செறியாதோ கைக்கு "

ஈயான் செல்வம்

'ஈ ' என்றார் – (படம் அல்ல) கொடு; நல்லவாக்குக் கொடு

"நம்பன் அடியார்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் ; பரத்தைக்காம் - வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் , கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகும் காண்"

உங்களைப்பாடவா? பாடுகிறேன்

கூழுக்கும் பாடுவாயாமே - ஔவையே எங்களைப் பாடு, பாடு என்று பாடாய்படுத்திய சிலரைப் பார்த்து ஔவை பாடினார்.

"மூவர் கோவையும் மூவினங் கோவையும்
பாடிய என்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக என்றனிர்" -- நீங்கள்

"களிறு படு செங்களம் கண்ணில் காணீர்"-போர் என்றால் வைக்கோல் போர் தானே என்பீர்

"வெளிறு படு நல் யாழ் விரும்பிக்கேளீர்" -இசை ரசனை அறியாத செவிகள் !

"புலவர் வாய்ச்சொல் புலம்பலுக்கு இரங்கீர்" புலவர் வாழ்க்கைத் தரம் குறித்து எண்ணியிரங்கமாட்டீர்.

"இலவ வாய்ச்சியர் இளமுலை புணரீர்"அழகான மங்கையர் காதலையும் பெற்றறியீர்.

'அவிச்சுவை' மட்டுமே தெரிந்த உங்களுக்குச் செவிச்சுவை, தமிழ்ச்சுவை தெரியாது.

உடீர், உண்ணீர், கொடீர் கொள்ளீர், ஒவ்வாக்கானத்து உயர்மரம் பழுத்த துவ்வாக்கனி எனத் தோன்றியநீர் - என்பாடலைக்கேட்கலாமா ! என்றார். எப்படியோ - எங்களைப் பார்த்தும் ஔவை பாடிவிட்டாளே - போதும் என்றனர்.

கல்யாணமாம் கல்யாணம்

ஒரு தோழர் வீட்டுக்குப் போயிருந்தேன் அவரோ ஒரு திருமண வீட்டிற்குச் சென்று தாமதமாகத்தான் வீடு சேர்ந்தார். ஏன் இவ்வளவு தாமதம்? என்றாள் அவர் மனைவி "விடவேயில்லையம்மா" என்றார் உடனே நான் அத்தனை அன்பு காட்டுபவர்களை விட்டு விட்டு வருவது சிரமம்தான் என்றேன் "போங்கம்மா சாப்பிட உள்ளே விடவேயில்லை, அத்தனை கூட்டம்" என்றார் அதுபோல் ஔவைக்கு ஒரு அனுபவம் ;

"வண்டமிழைத் தேர்ந்த வழுதி கல்யாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள் - அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன். நீள் பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்"

நன்றாக உண்டார்.

வரப்புயர

குலோத்துங்க சோழன் திருமணம். புலவர் அவை. பலரும் வாழ்த்திப்பாடினர். ஔவையோ - 'வரப்புயர' என்று சொல்லி அமர்ந்து விட்டார். புலவர் குழம்பினர் ஒட்டக்கூத்தர் மகிழ்ந்து எழுந்தார்.

மன்னா !

நெல்வயலின் வரப்பு உயர்கிறது என்றால் பயிர்உயர்ந்து செழித்து, ஓங்கு பெருஞ் செந்நெல்லாக வளர்ந்துள்ளது. அந்த அளவு நீர்மட்டமும் உயரும் நெல், விளைச்சல் உயர மக்கள் ஓங்கி வாழ்வர் மக்கள் உயர்ந்து, நிறைந்து வாழ மன்னனும் உயர்வான்.

"வரப்புயர நீர்உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்"

என்றால் மன்னனும் மகிழ்ந்து வணங்கினான்.

"புலவர்க்கு வெண்பா - புலி" ஆனால் ஔவைக்கு அது சிறு முயல் போலச்சாதுவாக மடி அமர்ந்து, கையில் தவழ்ந்து விளையாடும்.

"ஈதல் அறம் - தீவினை விட்டு ஈட்டுவதே" பொருள், காதலர் இருவர் இணைவதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றையும் விட்டது பேரின்பவீடு இப்படி அற்புதப் பாடல் கனித்தோட்டமாய்க் காண உண்ண ஏராளமாகத் தனிப்பாடல் திரட்டாக உள்ளது. சுவைத்துப் பயன் பெறுக.

திருவள்ளுவராண்டு 2037, ஐப்பசி 19 (05.11.2006) ஞாயிறு மாலை 6.30 மணிக்கு ந.கலைச்செல்வன் தலைமையில் 'கல்வித்தந்தை' ஏ.வி.இராமன் முன்னிலையில் நிறைநிலவு ஒன்பதாவது சொற்பொழிவு நடைபெற்றது.

விநாயகர் அகவலும் தரிசனப்பத்தும்

சொற்பொழிவு–10

ஔவையின் வாழ்க்கையில் நடந்ததாகப் பல செய்திகள் குறிப்பிடப் பெறுகின்றன. சுந்தரரும், சேரமான்பெருமாளும் கயிலைக்குப் புறப்பட்டபோது ஔவை பூஜையிலிருந்தாரம், அவசரப்பட்டாராம் "ஔவையே நீ வழிபாட்டை முடி, நானே அந்த யானை, குதிரைக்கு என் துதிக்கையால் உன்னை அங்குக் கொண்டு சேர்ப்பேன் " என்றாராம். அப்போது பாடி யருளியது விநாயகர் அகவல் என்பர்.

அகவல் தரும்தத்துவம்

விநாயகர் அகவல் சாதாரணச் சமய நம்பிக்கையுடையவர்கள் முதல், ஞானிகள் வரை படித்துப் பக்தி செலுத்திப் பாராயணம் செய்யும் நூலாக விளங்குகிறது. ஔவையார் அகவலில் விநாயகரின் நீலமேனி, அகக் கண்முன் காட்சியளித்து ஆனந்தக் கூத்தாட வைக்கிறது. தத்துவங்களையும் சாத்திர, தோத்திர, சித்தாந்தக் கருத்துக்களையும் உள்ளடக்கி இயற்றியது விநாயகர் அகவல் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்

விநாயகரின் உருவம்

ஔவையார் முதலில் விநாயகப் பெருமானின் உருவத் தோற்றத்தை 14 வரிகளில் கூறுகிறார்.

"சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலயிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்

வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற் பதங்கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே "

என்பன விநாயகர் தோற்றப் பொலிவைக் கூறும் பகுதியாகும்.

விநாயகர் குளிர்ந்த தாமரை பூவைப் போன்ற பாதங்களையுடையவர். திருவடிகளில் அமைந்துள்ள சிலம்பின் ஓசையுடையவர், இடுப்பில் பொன்னாலாகிய அரை ஞாணும் பட்டாடையும் அணிந்து அழகாகக் காட்சி தருகிறார். பருத்தவயிறையும் கனமான – வலிமையான தந்தங்களையும் உடையவர். யானை முகமும் அதன் நெற்றியில் செந்தூரப்பொட்டும் உடையவர், ஐந்து கைகளுடையவர். அதில் இரண்டு கைகளில் அங்குசமும் பாசமுமான ஆயுதங்களையுடையவர், எல்லாரையும் கவரும் நடனம் ஆடியவர். மனத்தில் வீற்றிருக்கின்ற நீல நிறக்கடவுள், தொங்குகின்ற வாயையுடைய துதிக்கையும், மேலும் நான்கு புஜங்களையும் உடையவர், மூன்று கண்களையும் மூன்று மத நீர் வழிந்த சுவடும் உடையவர். இரண்டு செவிகளையும் பிராகாசிக்கின்ற பொன்னால் செய்யப்பட்ட கிரீடமும் உடையவர். பூணூல் அணிந்த மார்பையுடையவர், எடுத்துக் கூற முடியாத மெய்ஞ்ஞானமே உருவாய் அமைந்து பல அற்புதங்களைச் செய்யும் கற்ப விநாயகராக்க்காட்சியளிக்கிறார். இவ்வாறு அவர் உருவத்தை யாவரும் அறியுமாறு எளிய இனிய முறையில் எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் அதே பகுதியில் ஒவ்வொரு வரியிலும் மிக்க நுட்பமான ஞான சாத்திர, தோத்திர, சிந்தாந்தக் கருத்துக்களையும் உள்ளடக்கி இருக்கிறார்.

"தொண்டர் கண்டு அண்டி திமான்டு
உண்டு இருக்கும் " பாதம் தாமரைப்பாதம்.

அவர் பாதம் குளிர்ந்த தாமரை போன்ற பாதம் என்பதால் அடியார்களின் துன்பங்கள், தொல்லைகள், கோபதாபங்கள் ஆகியவற்றைப் போக்கி நறுமணம் போன்ற ஞானத்தை நல்கும் என்று திருவடிகளைச் சிறப்பித்தமையறியலாம். விநாயகப் பெருமான் ஆடி ஓடி அடியார்கட்கு அபயமளிப்பதோடு அவர் காலில் அணிந்துள்ள சிலம்பு தன் ஆட்டத்தால் இன்னிசை அளித்து இன்ப மூட்டுகிறது என்பதாம். நம் சைவ சமயத்தில் சிவபெருமான் நடனமாடியது போல ஆடியவர் விநாயகர். அருணகிரி "முருகனை உன் தந்தைபோல ஆடுக " என்று (தண்டையணி) திருப்புகழ் பாடினாார். ஆகையால் நர்த்தன கணபதி என்றும் நிருத்தன கணபதி என்றும் அழைக்கப்படுகிறார். "நிர்த்தப்ரியாயனம் " என்று வடமொழியில் அருச்சனை செய்வர் மேலும் விநாயகர் உருவத்தில் அனைவரையும் கவர்ந்து இழுப்பது அவருடைய பெரிய வயிறாகும். அது வெளிப்படையாகப் பேழை வயிறு என்றாலும் அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கிக் காப்பாற்றுபவன் என்றும் தன் பெரு வயிற்றை நிரப்புவது போல் அண்ட சாரசரங்களின் அபிலாசைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்து குறைவின்றி நிறைவடையச் செய்பவர் என்ற தத்துவப் பொருள்களாகவும் கொள்ளலாம். அவன் வலிமையான கனமான இரண்டு கொம்புகளைப் பெற்றிருப்பது அடியார்களுக்கு ஆபத்து வரும் போது பாதுகாக்கவும் அடியார்கட்கு உண்டாகும் தேவையைப் பூர்த்தி செய்யவும் என்பதைக் காட்டுகிறது. இதை விநாயகர் வியாச முனிவருக்குத் தன் தந்தங்களை ஒடித்து வியாச பாரதம் எழுதியதால் அறியலாம்.

"முத்தமிழ் அடைவினை முற்படஎழுதிய முதல்வன் "

அன்றோ?

ஆனை முகத்தானின் அன்னையின் ஞான சக்தியின் சின்னமாக அங்குசபாசத்தையும், கிரியா, சக்தியனி, சின்னமான தனுர் (வில்) பாணங்களையும் நான்கு கைகளில் வைத்துக் கொண்டிருக்கிறார். இவ்வாறு விநாயகரை பிரணவப் பொருளை உபதேசிக்கும் சொரூபமாகக் காட்டுகிறார்.

விநாயகரிடம் ஔவையார் வேண்டுவன

விநாயகரின் ஔவையார் ஞானத்திறவு கோல் வேண்ட முற்படும் போது, விநாயகர் நம்மீது தாயுள்ளங் கொண்டவர் என்பதைக்காட்ட தாயாய் எனக்குக் காட்சியளித்து உன் உபதேசம் பெறுவதைக் தடுக்கும் (மயக்கத்தை) மாயாமலத்தை அறுக்கவேண்டுமென வேண்டுகிறார். முதலில் சைவ சமயத்தின் உயிர் மந்திரமாகிய "சிவாய நம" என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை விளங்குமாறு செய்ய வேண்டுகிறார் "நமசிவாயவே நானறி கல்வி வித்தை" இதன் மூலம் ஐந்தெழுத்து மந்திரத்தில் எல்லாம் அடங்கும் என்ற தத்துவத்தை விளக்குகிறார். இந்த உபதேசத்தைத் தாயுள்ளத்தோடு குருவடிவாக வந்து உபதேசிக்க வேண்டும் என்கிறார். உயிர்களைக் குருவிடம் உபதேசிக்கப் பெறும் தகுதி பெற அந்த உயிரைப்பற்றியுள்ள கொடிய-கடிய வினையைத் தன் கொம்புகளாகிய ஆயுதத்தால் அகற்ற வேண்டுகிறார். கோடாயுதத்தால் கொடுவினைகளைந்தே, இவ்வாறு ஆன்மாவைப் பக்குவப்படுத்தி அதன் பிறகு உவட்டா உபதேசத்தை என் செவியால் புகுத்தி அதன் மூலம் இன்பமயமான ஞானத்தை அளிக்குமாறு வேண்டுகிறார். முதலில் பிரணவ மந்திரத்தின் துணை கொண்டு இவ்வுடம்பிலுள்ள ஒன்பது வாயில்களையும் ஐந்து புலன்களாகிய கதவுகளையும் அடைக்கும் வழியைக் காட்ட வேண்டுகிறார். வேதாகமக் கருத்துக்களோடு கூடிய வேண்டுதல்களை அமைக்கிறார்.

"தன்னை யறிந்தின்புறவே வெண்ணிலாவே ஒரு
தந்திரம் நீ சொல்வேண்டும்" என்றார் வள்ளலார்.

நிறைவான மனிதன் முதலில் தான் யார்? தன் நிலை என்ன? என்பதை உணர வேண்டும் என்ற அடிப்படையில் 'என்னை அறிவித்து எனக்குருள் செய்த' அதற்குத் தடையாக இருக்கும் முன்னை வினையைக் களையுமாறு வேண்டுகிறார். சொல்லும் எண்ணமும் இல்லாத 'மனோபலம்' எனக்குச் சிந்திக்குமாறு செய்து உள்ளம் தெளிவடையச் செய்ய வேண்டுகிறார். இருளையும் ஒளியையும், இன்பத்தையும், துன்பத்தையும் ஒன்றாகக் கருதும் நிலை ஏற்பட்டால் **'எல்லை இல்லா ஆனந்தம்'** கிடைக்கும். அப்பொழுது அல்லல் போய்விடும். அகத்திலும் புறத்திலும்

சிவபெருமானைக் காணும் பேறு கிடைக்கச் செய்ய வேண்டுகிறார். அணுவுக்கு அணு வாய பரம் பொருளை என் உள்ளத்தில் கரும்பாக நேரில் அனுபவித்து உணரும் ரசமாக இருப்பதை உணரும்படி செய்யவேண்டுகிறார்.

சிவ வேடமும் திருநீறும் என்னிடம் நிலையாகப் போருத்திச் சிவனடியார்களின் கூட்டத்தில் சேர்க்க வேண்டுகிறார். ஐந்தெழுத்து மந்திரத்தை என் நெஞ்சில் நிலையாக இருக்கச் செய்து அதன் மூலம் உண்மைநிலையை எனக்கு அருளி என்னை ஆட்கொண்ட ஞான வடிவாகியவிநாயகப் பெருமான் முக்தி பெறத் தேவையான யோக தத்துவங்கள் அத்தனையும், தாயாக நின்றும், குருவாக வந்தும் அருளிச் செய்தான் என்று பேசப்படுகிறது. மாயாப்பிறவி மயக்கமற வேண்டுமென்றால் நம் உள்ளம் கோயிலாக வேண்டும். அக்கோயிலில் இறைவன் எழுந்தருள வேண்டும். இங்கு விநாயகப் பெருமான் குரு வடிவாகி வந்து, ஔவையார் திருஉள்ளத்தில் திருவடி பதித்து ஞானத் தீவினையாம் இருவினை முதலை அவன் தன் கோடாயுதத்தால் கவ்வி எடுக்கின்றான். இரு வினையொப்பு ஏற்படுகின்ற போது தான் சக்தி நியாதம் (திருவருள் வீழ்ச்சி) ஏற்படும். திருவருள் வீழச்சி ஏற்பட்ட பிறகு ஆணவம், கன்மம், மாயையாகிற மும்மல பந்தம் அறுபட்டு, சாலோக, சாமிப,சாரூப, சாயுஜ்யமாகிற வீட்டின்பத்தலங்கள் நான்கும் சித்திக்கும். இப்பேரின்பத்தைப் பெருமதக் களிற்றான் வழங்கினான் என ஔவைப்பிராட்டி பாடிப் பரவுகின்றாள். பிரணவமந்திரத்தால் ஒன்பது வாயிலையும் ஐம்புலக் கதவையும் அடைக்கும் வழி வாய்-1, கழிவு-2, மூக்கு-1, காது-2 அறிவித்தான் எனப் பாடுகிறார்.

"ஆறா தாரத்து அங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே" (35-36)

மூலாதாரம், சுவாதிஷ்டனம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன ஆறு ஆதாரங்கள்.

இவ்வாறு ஆறாதாரங்களும் ஒவ்வொருவர் உடலிலும் உள்ளன. இவற்றின் இருப்பிடம், ஆசனம், மந்திரம், தேவதையின்நிறம், தெய்வசக்தி அட்சரம் (எழுத்து) என்று நமது புராதன தெய்வீக நூல்களில் காணப்படுகிறது. "மாங்காய்ப் பாலுண்டு மலை மேலிருப்பார்" என்று சித்தர் கூறியமறைபொருள் இதுவே.

குண்டலினிச் சக்தி விழித் தெழுந்தால் நமது உடலிலேயே மேற்படி அட்சரங்களையும், தெய்வங்களையும், தெய்வ சக்திகளையும் நம் கண்கூடாகக் கண்டு ஆனந்த பரவசமடைவோம். பஞ்சப் பிரம்மங்களும், பஞ்ச சக்திகளும், பஞ்சாட்சர எழுத்தும் கரந்தொளிர்கின்றன. இவை காணப்பெற்றார் ஞானக் கண் பெற்றார். இத்தகு நிலையில் "சும்மா இரு " என்று அறுமாமுகவன் அருணகிரிக்குப் பகர்ந்த பேச்சு, உரை கடந்த நிலை கண்டிடுவோம். இத்தகு நிலை ஐங்கரன் அருளால் கைவரப் பெற்றாள் ஔவை மூதாட்டி.

மந்திரங்களில் சிறந்தது அசபாமந்திரம் (ஹம்ஸ மந்திரம்) பரா, பச்யந்தி, மத்யமா, வைகரி என்று ஒலிகள் பிறக்கும் இடங்களைப் பகர்வர். வாய்விட்டு ஒலிப்பது வைக, கழுத்தில் பிறப்பது மத்யமா, உதட்டளவில் உச்சரிக்கும் நிலை இது. இதனினும் உயர்ந்தது பசயந்தி, அதனினும் சிறந்தது பாரா, உதடும் அசையாது; வாயும் திறவாது, உள் மனத்தே ஊசலாடும் மந்திர நிலை இது, இத்தகு நிலையில் உச்சரிக்கும் மந்திரங்களுக்குப் பேராற்றல் உண்டு.

"மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்

....

குழுத சகாயன் குணத்தையும் கூறி " (43-46)

– சந்திரகலை (அமுதம்)

மூலாதராத்தில் மூண்டெழும் அக்னிச் சுவாலையை மெல்ல மெல்ல எழுப்பிடும் ஆற்றலை அளித்தாய், குண்டலினிச் சக்தியின் திருவருட் கருணை தந்தாய், குண்டலினி ஸஹஸ்ராரத்தை அடையுங்கால் ஏற்படும் அமுத நிலையையும் சூரிய நாடியாகிய பிங்கலையின் இயக்கத்தையும், சந்திர நாடியாகிய இடை கலையின் இயக்கத்தையும் விளக்கி யருளினாய்.

"இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும் ....

இருத்தி முக்தி இனிதெனக் கருளி " (47-54)

இடைச்சக்கரமாகிய விசுத்தி சக்கரத்தின் பதினாறு நிலைகளும், உடலாகிய சக்கரத்தின் பல்வேறு உறுப்புக்களின் தன்மையையும் எனக்கு உணர்த்தி ஓம் நமச்சிவாய என்ற ஆறெழுத்து மந்திரமும், ஓம் சிவாய என்ற

நாலெழுத்து மந்திரமும் சிந்திக்கச் செய்து, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற தன் மாத்திரைகள் மனம், புத்தி, அகங்காரம் என்ற எட்டையும் கொண்ட புரியட்டகத்தின் தன்மையை விளக்கி, மூலாதாரம் தொடங்கி சஹஸ்தாரம் ஈறாக அனைத்து நிலைகளும் என் அனுபவத்தில் கொணர்ந்து , கபால வாயிலில் உள்ள ஸ்ஹஸ்ராரம் எனும் சக்கரத்தைக் காட்டி சித்திகளும், முக்திகளும் தந்தருளினாய்.

"என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து ......
அல்லல் களைந்ததே அருள்வழி காட்டி " (55-62)

என்னை நான் உணர, திருவருட் கருணை செய்த, ஆணவமலம் அகற்றி, வாக்கும் மனமும் கடந்த மனோலயம் தந்து சிந்தை தெளிவித்து, அருளானந்தம் அளித்து துன்பம் தவிர்த்து அருள் வழி காட்டினாய்.

"சத்தத்தின் உள்ளே சதா சிவம் காட்டி ......
வித்தக் விநாயக விரைகழல் சரணே! " (63-71)

நாதமாம்புறஉலகிலும், சித்தமாம் அக உலகினும் சிவனது நினைவே சிந்திக்கச் செய்த அணுவினுள்அணுவாய் பெரிதினுட்பெரிதாய் உள்ளதோர் பொருளை என உள்ளகத்து முற்றிய கரும்பாய் இனிக்கச் செய்தனை. சிவ வேடமும், திருநீறும் தோற்றும் சாரூப்ய நிலையைக் காட்டி மெய்த் தொண்டர் குழாத்துடன் சேர்ந்து என்னை வழி நடத்தி. ஐந்தெழுத்தின்மேலாம் பொருளை என் சிந்தையில் நிலைத்திருக்கத் திருவருள் சுரந்து தத்துவ நிலையாம் உண்மை நிலையை உய்த்துணர வைத்து. எம்மை ஆட்கொண்ட வித்தக விநாயகப் பெருமானே! உன் திருவடிகளே சரணம், இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் இவ்வெட்டு அங்கங்களையும் கொண்டதே. அட்டாங்கயோகம், இதனையே "இராஜயோகம் " என்பர். இதனைச் செய்வதால் ஞானத் தெளிவு ஏற்படுகின்றது. செவிப்பறை திறக்கின்றது. ஆத்திசூடிக்குச் சமமான நிலையில் சித்தமலம் அற்று சிவன் சிவமாகிறது. சமாதி வாய்கின்றது. இத்தகைய உயரிய நிலையைக் "குரு " என்று ஒருவர் இருந் தான் கற்றுத் தருதல் வேண்டும். இவற்றையெல்லாம் நன்கறிந்ததால் ஞானசொரூபமாக விளங்கும் விநாயகப் பெருமானையே தமக்குக் குருவாக வரும்படி வேண்டுகின்றார்.

மனித அறிவை "மாயை" எனும் வினைகளே மூடியிருக்கின்றன, வினைகள் ஒழியுமெனில் அறிவுத் தெளிவு ஏற்படும். ஐம்புலன்களை அடக்கம் வேண்டும். இரு வினைகளும் மலங்களும் நீங்குதல் வேண்டும். அப்பொழுதே மௌனம் வாய்க்கும். புரியட்டகாயம் புலப்படும். எனவே இவ்அகவலின் மூலம் செயல்முறைகளின் மூலம் அடையும் ஞானநிலையே! ஞான நிலை கைவரும் போதே உடல் தத்துவங்கள் மறையும் சத்தத்தினுள்ளே சதாசிவமும் சித்தத்தினுள்ளே சிவலிங்கமும் காணும் பேற்றினை ஞானாசிரியன் மட்டுமே நல்க முடியும்.

ஔவை ஞானப்பெண்ணாகவும், யோகியாகவும் திகழ்ந்த தனிச்சிறப்புடையவர். இலக்கிய உலகமும் ஆன்மீக உலகமும் ஔவை என்ற தெய்வப் பெண்ணை மதித்து, வணங்கி ஏத்துதல் வேண்டும்.

தரிசனப் பத்து

ஔவையார் விநாயகரைப் பற்றி விநாயகரகவலும் முருகனைப்பற்றி தரிசனப்பத்தும் பாடி, முருகன் பெருமைகளைப் பாடியிருப்பது அறிதற்குரியது, இதனை முருகன் துதி என்று கூறியிருப்பதும் எண்ணுதற்குரியது. தரிசனப்பத்து 10 பாடல்களே கிடைத்திருப்பதாக ஔவையார் பாடல்களைத் தொகுத்தளித்த ஆய்வாளர் ப.சரவணன் ஔவையார் கவிதைக்களஞ்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். கிடைக்கப்பெற்ற பாடல்களில் அறுமுகக்கடவுளின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. முருகனின் தோற்றம், வடிவம், திருவடிபெருமை, அடியார்களுக்கு அருள் புரியும் தன்மை, இயற்கையாய் முருகன் திகழும் இயல்புகள் இந்நூலின் பாடுபொருளாக காணப்படுகின்றன, இப்பாடல்களை படித்தின்புறுவோம்.

திருவள்ளுவராண்டு 2037, கார்த்திகை 18 (04.12.2006) திங்கள் மாலை 6.30 மணிக்கு திருமதி செல்வராணி தமிழரசன் தலைமையில் மருத்துவர் ச.தமிழரசன் முன்னிலையில் நிறைநிலவு பத்தாவது சொற்பொழிவு நடைபெற்றது

கல்வி ஒழுக்கமும் நீதி ஒழுக்கமும்

சொற்பொழிவு-11

கல்வி என்பதற்கு ஒரு பொருள் மட்டும் இல்லை ; கற்கை, கல்வி அறிவு, வித்தை, பயிற்சி, நூல் என்று பல பொருள்கள் உள. மனிதனுக்கு வாய்த்த மாபெரும் வரம் கல்வி. மனிதகுலத்தை நல்வழிப்படுத்துவது கல்வி, அதற்கு எல்லை இல்லை 'கல்வி கரையில' 'கற்றது கைம்மண்ணளவு' கல்வி பெற வேண்டிய பருவம்இளமை "இளமையில் கல் , இல்லையேல் முதுமையில் மண்தான். ஓதுவது ஒழியேல் , எண் எழுத்து இகழேல், பிச்சை புகினும் கற்கை நன்றே - ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம் " (கொன்றை வேந்தன்) இவை கல்வியின் பெருமையை காட்டும்தொடர்கள். 'கற்றபின் நிற்க அதற்குத் தக ' - குறள் 'நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை ' (கொன்றை வேந்தன்) 'நூல்முறை தெரிந்து சீலத்தொழுகு ' -(கொன்றை வேந்தன்) இவை கற்ற மாந்தர் அந்நன்னெறியில் ஒழுகுதலே நலம்என்று பகர்வன. பண்பாடு இல்லாத கல்வி மணமில்லா மலர் ; அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயன் மட்டுமா? நூல்கற்றவர் பெற வேண்டிய பயனும் தான் !

கல்வி வழி ஒருவன் சிந்திக்கக் கற்றுக்கொள்கிறான்; முகக்கண் புறப்பொருளைப் பார்க்கும். அகக்கண்ணான கல்வி உட்பொருளை நோக்கும். கற்றல் நடத்தையோடும், அறச்செயல்களோடும் இணைய வேண்டும் அதுதான் வாழ்க்கையின் நோக்கத்தை அடையச்செய்யும் என்பார். ஜே.கே.பிள்ளை. இது குறித்து ஔவை பாடியுள்ளார்.

"எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்ப்
பழுதற வாசிப்பரிது - பண்பாய், முழுதுமதைக்
கற்பரிது ; நற்பயனைக் காண்பரிது ; கண்டக்கால்
நிற்பரிது தான் அந் நிலை "

கல்லாமை - களர்நிலம். அறப்பயிர்கள் வேர்பிடித்தல் அரிது 'ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்' - கற்றவர்க்கு அவர் பெற்ற கல்வியை விட ஒழுக்கமே மிகவும் தேவை 'பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்' என்றார் வள்ளுவப் பேராசான்.

பண்பாடு

மேலை நாட்டு நாகரிகம் நமக்கு அவசியமில்லை ; உடை, நடை, பேச்சு இவற்றில் நாம் அவர்கள் நகல் ஆகத் தேவையில்லை. நாம் நிஜமாக, அசலாக இருப்பதே நலம் ஔவையின் 'அடிப்படைக்கல்வி முதல் வாழ்க்கைக் கல்வி' வரையிலான பாடத்திட்டத்தை நாம் அடியோடு மறந்து விட்ட கொடுமையை என்னென்பது? அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் வெள்ளைவாரணர் அவர்களது பின்வரும் கருத்துக்களைப் படித்தால் உண்மை புரியும் "தமிழ் நாட்டுப் பள்ளிக் கூடங்களில் பயிலும் இளமாணவர்கட்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதி நூல்களில் ஒன்றேனும் முழுமையாகவும், முறையாகவும் கற்பிக்கும் பழக்கம் இடையறவு பட்டு இல்லா தொழிந்தது. இதனால் தொடக்கப்பள்ளியிலும் இளஞ்சிறுவர்கள் முதல் பல்கலைக்கழகங்களில் பயிலும் பெரிய மாணாக்கர் வரையுள்ள மாணவர் சமுதாயத்திலே, கட்டுப்பாடு, கடமையுணர்வு முதலிய ஒழுங்கு முறை தவறி, வரம்பு மீறிய வன்முறைச் செயல்கள் வளர்ந்த, நாட்டின் முன்னேற்றத்திற்கும் பல வகையிலும் இடையூறு விளைவிக்கக் காண்கிறோம்.

இத்தகைய அவலநிலை நமது சமுதாயத்தில் ஏற்படாது தடுக்க வேண்டுமானால் கல்விபயிலும் இளஞ்சிறுவர்கள் உள்ளத்தே மக்கள் நல்வாழ்வுக்கு அடிப்படையாக ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதி நூல் கருத்துக்களைப் பசுமரத்தாணிபோல் பதியும் வண்ணம் பயிலச் செய்தல் இன்றியமை யாததாகும்" படபடப்பிலும், பளபளப்பிலும், படாடோபத்திலும் கிடைப்பதல்ல கல்வி ஒழுக்கம்; அது எப்படி இருக்க வேண்டும் என்று ஔவை காட்டும் நூல் இது.

கல்வி ஒழுக்கம்

இந்நூல் சிலம்புச் செல்வர், ம.பொ.சி. அவர்கள் தேடிக்கண்டு பிடித்துப் பதிப்பித்த நூல்.

1. ஐந்து வயதில் ஆதியை ஓது

2. ஆதியை ஓத அறிவுண்டாமே

ஐந்தில் வளைந்தால் தானே நல்லது - ஐம்பதில் வளைக்க முடியாது. பள்ளி செல்ல வயது 5 என்றனர் முன்பு; 5 வயதில் கடவுளை வணங்கி அறிவைத் தேடி, நன்முறையில் வாழ்க

3. இனியது கொடுத்தே எழுத்தை அறி

4. ஈட்டிய நற்பொருள் எழுத்தே ஆகும்.

5. உடைமை என்பது கல்வி உடைமை.
இலவசமாய் எதையும் பெறுதல் சரியன்று மதிப்புத் தெரியாது.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!"

பொருள் தந்து கலையை விலைபோடலாமா என்பீர்; குருதட்சணை தரலாம், தவறில்லை ;. நாம் பெரும் பொருளான அறிவைப் பெற இவ்வுலகச் சிறு பொருளைத் தரலாம் இந்த உடைமைதான் உடைமை! பொருள் உடைமை நில்லாது; நீங்கிவிடும்.

6. ஊமை என்பவர் ஓதாதவரே = படித்தவர் என்பவர் உண்மை பேசி ஒழுக்கமுடன் வாழ்பவரே. பிறரோ ஊமை போல உளறித் திரிபவர்.

8. ஏழை என்பவர் எழுத்தறியாதவர் - உழைப்பவர்யாரும் ஏழையல்லர். எழுதப் படிக்கத் தெரியாதவரே ஏழை கல்விச் செல்வம் அவரிடமில்லையே.

11. ஓதல் உடைமை வேதவித்தை

வாழ்க்கை முறைகளைக் கூறும் வேதம் – நீதிக்கருவூலம் – அதை நன்கு ஓதுக. 12 ஔவியம் இல்லாதவராக வாழலாம். இவர்களே தீமைகளைக்காணாத நல்ல கண் படைத்தவர். (13)

கல்வியின் சிறப்புகள்

மன்னர்களின் பெயர்கள் காலச் சுவட்டில் அழிந்து விட்டன, அறிவுடைப்புலவர் பெயரோ பாருள்ள அளவும் நிலைத்திருக்கும் எங்கும் என்றும், செல்லும் நாணயம் கல்வியே (15)

கீர்த்தியும் பெருமையும் கிடைப்பதுகல்வி (16)

உன் சுற்றம் அற்றகுளத்தில் அறு நீர்ப்பறவை போலப் பிரிந்து போனாலும்
பிரியாதது கல்வியே (28)
அதுவே கைப்பொருள் (21)
தாழ்விலாச் செல்வம் அதுவே (20)
கொடுக்கக் கொடுக்கக் குறைவு படாதது (19)
உலகத்தை வசப்படுத்தவல்லது கல்வி (23)
சென்ற இடமெல்லாம் சிறப்பளிப்பது கல்வி (30)

என்றெல்லாம் கல்வியின் சிறப்புக்கள் கூறப்படுகின்றன.

எவன் நல்லவன் ?

உண்மையான பிள்ளை யார்? இவன் தந்தை எந்நோற்றான் என்ற புகழைப் பெற்றுத்தர முன்னிற்பவனே நன்மகன்.

"சேயன் என்பவன் தீங்கறக் கற்றவன்" (31)

சைகையும், சமர்த்தும் தரும் கல்வி பெற்றவன்நன்மகன் சொல்லும் பொருளும் தோன்ற அறிந்தவனே உத்தமன் சோம்பல் இல்லாமல் ஆம் காலத்தில் அறிவைத் தேடுபவன் நன்மாணாக்கன்.

தான் கற்றவற்றைச் சபையில் ஓதும் திறம் தேவை. "இணர் ஊழ்த்தும் நாறா மலர்" போல இருக்கக் கூடாது. கற்றல் என்பது குறிப்பிட்ட கால எல்லைக்குட்பட்ட செயல் அல்ல ; வாழ்நாள் தேடல் அது தொடர்பணி அது. இளமையில் அது நல்ல அடித்தளமாக அமையும். கல்விக்கு உளத்தை ஒருமுனைப்படுத்தும் திறன் தேவை. அதற்குரிய பருவம் இளமையே! வறுமை கல்விக்குத் தடை - ஆகவே. "கொடிது கொடிது இளமையில் வறுமை" கல்விக்கண் திறக்கும் ஆசான், குரு, தேசிகன் என்று போற்றப்படுவார்.

தீரக்கற்றவன் தேசிகன் ஆவான் (38)
துரிசு அறக்கற்றவர் துறவோர் (39)
மனத்தில் பதியுமாறு கற்றவர் சமர்த்தர் (43)

பிறப்பிலே கெட்டவர் உளரா ?

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே" என்றார் புலமைப்பித்தன். சொல் எழுத்து அறியாமல், நன்மை, தீமை

தெரியாமல் பிள்ளைகளை வளர்த்தால் அவர் கெட்டுப் போவதுண்டு!

"தூர்த்தர் என்பவர் சொல் எழுத்து அறியார்" (40)
"தெளிய ஓதத் திறம் உண்டாமே" (41)
"ஆகவே, தேசமும் நாடும் திருந்த ஓதுக" (42)
"தொன்னூல் முழுவதும் தோன்றக் கற்றறி" (44)

ஆயுள் காப்பீடு (LIC) என்கிறோமே ! அது கல்வி 'Life' ஐ Interesting ஆக Courageous மாற்றுவது இந்த LIC தான்.

உலகம் மதிக்கும் உயர்கல்வி

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு ? வான்புகழ் வள்ளுவர் கேட்ட வினா இது! நானிலம் முழுவதும் நயம் தரும் கல்வி தோழன் ஆவது சோர்விலாக்கல்வி (45)

நில்லாது எதுவும் ; நிலையே கல்வி (48)
இவை நம் ஔவை மூதாட்டியின் கணிப்பு

நூறிலும் கற்க ஆவல் கொள் (51)

எந்த நாடு என்ற பேதமில்லை. கல்வி உனக்கு அங்குச் சிறப்புகள் தேடித்தரும். நம் ஊர் இளைஞர்களே கடல் கடந்து புகழ் பெற்றுள்ளனர், நமது இந்தியமங்கை கல்பனா சாவ்லா அன்று (2003) இன்று சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளிக்கப்பலில் பறக்கிறார்கள் என்றால் நமக்குப் பெருமை யில்லையா?

நெடுங்கடல் ஓடியும் நிலையே கல்வி (52)

கற்றதைப் பிறருக்கு உரை

நையக்கற்பினும் நொய்ய உரை (54) - பாடு பட்டு நீ கற்றதை மாணவருக்குப் பரிவுடன்கற்றுத்தா, செந்தமிழ் கற்றவர் நொந்து அறியாதவர் (55) நுண் பொருள் அறிந்தோர் நோகாது உண்பார் (56), "கசடு அறக்கற்க" என்றார் குறளாசான். குற்றமில்லாமல் படி என்பது மட்டுமல்ல, மனத்தில் கசடு, குற்றம் சேரவிடாமல் நற்கல்வி கற்க, பழுதறக்கற்றோர் பாவலர். பிழையறக்கற்றவர் பெரியவர். (58,59)
குழவி அழுதால் தாய்ப்பால் கிடைக்கும்

ஞானி அழுதால் இறையனுபவம் கிடைக்கும்
இயற்கை அழுதால் மழை கிடைக்கும்
உழவன் உழுதால் மகசூல் கிடைக்கும்
மனத்தை உழுதால் நல்ல ஞானம் கிடைக்கும்
கல்வி என்ற ஏர் கொண்டு மனத்தை உழுதால் பீடும்,
செல்வமும்தானே வந்து சேரும் (60).

"மூத்தோன் வருக என்னாது
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்!" என்றது புறநானூறு
"புரையறக் கற்றவன் புவி ஆள்பவனே!" என்பது அருந்தமிழ் அன்னையின் வாக்கு.

படி, படி, படி

படிப்படியாக உயரப்படி, படி - என்பர் பெரியோர் உ.வே.சா. (தமிழ்த்தாத்தா) வயது அதிகமானபின்னும் ஏடு தேடி இளைத்த விதம் சொல்ல முடியுமா ? கருந்தேள் பரணியிலிருந்து கொட்டிய போதும், அது குறித்துக்கவலை கொள்ளாமல், 'ஆகா; மணிமேகலை ஏடு கிடைத்து விட்டது' என்று மகிழ்ந்த புண்ணியர் அவர். ஒரு வீட்டு வாசலில், பக்கத்திலிருந்தவர் 'படி படி' என்றார் இந்த வயதான காலத்திலும் 'படி படி' என்று சொல்ல நீ இருக்கிறாயே என்று மகிழ்ந்தாரம்.

"பூமியில் செல்வம் புகழ் பெறும்கல்வி" - 62
"பெருமை பெறுவது பேசரும் கல்வி" - 63

அதிகம் படிக்கப்படிக்க அறிவு விளக்கம் பெறும். தொட்டனைத்து ஊறும் மணற்கேணி – அது போலக் கற்றனைத்து ஊறுவது அறிவு – அல்லவா?

சின்ன வயதில் சிறுகச் சிறுகப் படித்த படிப்பு வாழ் நாள் முழுதும் ஊன்று கோலாய உடன்வருமே!

"பையப் பையப் படித்தே ஒழுகு" - 65 என்கிறது கல்வி ஒழுக்கம்.

"போதக்கற்றவன் புண்ணியம் செய்தவன்" 67

அதிகம் கற்றவன், ஞானம் பெறக்கற்றவன் என்று பொருள், வெறும் ஏட்டுச் சுரைக்காயான கல்வி பயனற்றது. ஞானம் நல்கும் கல்வியே நம்மை ஈடேற்றும்.

"பொருள் மிகக் மிகக் கொடுத்தும் போதக்கற்று அறி" -66

அரசன் அறிவார்ந்தவனாயிருத்தல் அவசியம். அறிவு அற்றம் காக்கும் கருவி

"மன்னர் ஆயினும் மறைகளை ஓது" - 68

"மாசறக் கற்றோர் மாநிலம் ஆள்வர்" - 69

கோடி கோடி செல்வம் வீடுதேடி வரவேண்டுமா ? கல்வி என்ற மரத்தை வளர்த்து விடு, அதன் கிளைகளே ஆயகலைகள் 64. 22 வயது ஒரு பெண்ணுக்கு, மாதம் 1 லட்சம் சம்பளம், அவள் கற்றகல்வி அப்படி! தகவல் தொழில் நுட்பத்துறை அப்படி அள்ளித்தரும்.

"மிகப் பொருள் செல்வம் விளைத்திடும் கல்வி" - 70

ஆகவே, அதிக விலைதந்தேனும் குரு வருளோடு கலை, கல்வி கற்றுக்கொள் (71).

சீரிளமைத்திறம்

" தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை " என்றார் பாவேந்தர்; அதன் சீரிளமைத்திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்தினார் சுந்தரனார். (மனோன்மணீயம் ஆசிரியர்)

"முத்தமிழ் தமக்கு மூப்பில்லை " என்றாள் ஔவை, முத்தமிழ் கற்றவர்க்கும் மூப்பில்லை, முத்தமிழ் அறிஞர் பலரும் இளமையோடு இன்றும் விளங்குகிறார்களே!

ஆகவே மெலியர், எளியர் என்றில்லாமல் அனைவரும் கற்க வேண்டும் (73) மூதறிவை உயர்த்துவது தீதிலாக்கல்வி (73)

தெருவிளக்கில் படித்தவரும் உயர்நீதி மன்ற நீதிபதியாக முடியும். ஆற்றலில் நீந்திவந்து கற்றவரும் அகிலம் போற்றும் பிரதமர் ஆகமுடியும். மேலோர் என்ன? வித்தையைக்கற்றறி:; கல்வித்தாய் உன்தாய் எந்தத்தாய் உன்னைப் பெற்றால் என்ன? அதுவா கேள்வி - ஔவையின் சமுதாயச் சிந்தனை எத்தனை உயர்ந்தது !

"மையறு கல்வி கைவிடாது ஓது !" 76

அதென்ன கல்வியில் குற்றமற்ற கல்வி உண்டா? ஆம் பணம் ஈட்டுவது மட்டும் கல்வி எனில் வியாபாரக்கல்வி; பண்பாட்டினை வளர்ப்பது மையறுகல்வி

கலைமகளுக்கு வெள்ளைக்கலை - ஆடை
வெள்ளை ஸ்படிகமாலை
வெள்ளை அன்ன வாகனம்
வெள்ளைக்கமலம், ஆசனம்

ஏன் ! வெண்மை - தூய்மை, கலையும் கல்வியும் தூய்மை தருவதாக, பெறுவதாக அமைய வேண்டும் என்பதே, நல்வித்தையைக் கல்லாதவர் வெறியர், நல்ல கல்வி வெறி உண்டாக்காது. தீவிரவாதத்தை ஏற்காது, தீய பழக்க வழக்கங்களை வளர்க்காது, இன்று வெடிகுண்டு வெறி, லஞ்சம், ஊழல், பழி வாங்கல், கற்பழிப்பு, காம வெறிச் செயல்கள் பெருத்தது ஏன்? மாசறுகல்வி இல்லை.

"வழக்கறிவுறுத்தும் மாசறு கல்வி" - 79
"வாட்டம் தராது மறவாக் கல்வி" - 80
"மூட ரென்பவர் முதலெழுத் தறியார்" - 78

வீரியம் பேசும் வாய்ச்சொல்வீரர் நாட்டில் அதிகம்,

"நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத்திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி!"

என்றார் பாரதி, உண்மையான படிப்பாளி, அடங்கியிருப்பான், வீண்வார்த்தை பேசான், வீரியம்பேசார் வித்தை அறிந்தோர் சிற்றறிவு சிலுசிலுக்கும்; குறைகுடம்தான் கூத்தாடும்; நிறை குடம் நீர் தளும்பாது.

பாக்கள்

நால்வகைப்பா; அதன் இலக்கணம், ஓசை, சீர்வகை எல்லாம் சொன்ன அற்புத யாப்பிலக்கணம் தமிழுக்குரியது 4 பக்கம் வாசல் இருந்தாலும் சுவர் ஏறிக் குதிப்பேன்எனறு தாவிவரும் வசன கவிதைகளும், ஹைக்கூக்கவிதைகளும் புதியவரவுகள், ஓசை யின்பம் கேட்டதமிழன் "டமார், டுமீல்" - ஓசைகளைப்பாட்டு என்று கேட்கும் நிலை இன்று !

"வெண்பா முதலாக விளங்கவே ஓது" - 83
"வேதம் முதலாய் விரைந்து அறிந்து ஓது " - 84
"வையகம் எல்லாம் வாழ்த்தவே ஓது " - 85

வேதம், வடமொழிவேதமானாலும், தமிழ்மறையான குறளானாலும், திருமறை, பிரபந்தமானாலும் ஓதி உணர்க உலகம் வாழ வாழ்த்தி ஓது.

உலகம் வாழ்க ! வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன் என்று வாழ்த்து.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினை " (தாயுமானவர் அருளியதுபோல்)

கல்வியின் சீர்மை
கல்வியின் இன்றியமையாமை,
கல்வியின் தன்மை
தரமிலாக் கல்வியின் தாழ்வு
கற்றோர் இயல்பு
கல்வியின் பயன்

என்ற பலப்பல அரிய செய்திகளைச் சொற்றொடருடன் அகர வரிசையில் ஔவை "கல்வி ஒழுக்கம் ! " எனத் தந்துள்ளார். இலண்டன் அருங்காட்சியகத்தில் 85 வரிகள் மூலம், தமிழ் உரை ஆங்கில மொழி பெயர்ப்பு முழுமையாகக் கிடைத்தாக ம.பொ.சி. ஐயா எழுதியுள்ளார், 94 ஆவது வாக்கியம் குறித்து ஜெ.எஸ். அவர்கள் முன்னுரையில் குறிப்பிடுகிறார். ஆகவே இன்னும் பல வரிகள் உண்டுபோலும் ! தேடிப்படிப்போம், பதிப்பிப்போம் ! தேசமும் நாடும் திருந்த ஓதுவோம்.

நீதி ஒழுக்கம்

ஔவை விநாயகப் பெருமானை வணங்கி நீதி ஒழுக்கம் பாடுகிறார்.

"நீதி ஒழுக்கம் நிலையுன் படிக்க
ஆதி விநாயகன் அடியிணை காப்பு"

கற்றதன் பயன் வாலறிவன் நற்றாள் தொழலே

"ஏத்தி வணங்கி இருப்போர் தாம் எலாம்
புத்தி யுடனே புகழுடன் வாழ்வர்"

நீதி சொல்வதில் இரண்டு விதம்உண்டு செய் செய்யாதே 'do's and don'ts'

ஐந்து வயதில் ஆதியை ஓது – உடன்பாடு
ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் – எதிர்மறை அறிவுறுத்தல்
பலப்பல நீதிகளைப் பாங்குடன் கூறும் நீதி ஒழுக்கம்எளிய தமிழில் அரிய உபதேச நூலாகிறது.

1. குறை (கேள்) அரசிடம் சொல்லாதே, உனக்கே அது ஆபத்தாகும்
2. பழி வரும்படி நடந்து கொள்ளாதே
3. பழைய செய்தியைத் திரும்பத் திரும்பக் கிளறாதே.
4. விரதத்தைத் தொடங்கிவிட்டால் நிறுத்தாதே !

எல்லாமே அறிவுரைகள் தாம்

இன்று எய்ட்ஸ் அரக்கன் உலகெங்கும் பரவி உள்ளான். இதற்குக்காரணம் என்ன? ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப் பண்பாடு – மாறியதுதான், ஆதரவாக மனைவியை நேசி; எய்ட்ஸ் வருமா நீ யோசி !

பல தாரத்தை விரும்பாதே! எச்சரிக்கிறாள் நம் தமிழன்னை ஔவை.

பணத்தாசையால் பரதேசம் போய், கள்ளவிசா, போலி "பாஸ்போர்ட்", காலம் கடந்து தங்குதல் இவற்றால்கம்பி எண்ணும் பலரை நான் பார்த்துள்ளேன். "பரதேசம் போக நினையாதே" சொர்க்கமே என்றாலும் நம்மூர் போலாகுமா ?

கோவில் சொத்து குலநாசம். அதை உண்ணாதே; பசுவை ஒட்டக் கறக்காதே, இவை பாதகங்கள்

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம், அவர்தம் சொல்லை முறித்து, மறித்துப் பேசாதே.

கனமான பாரம் தூக்காதே. (உடல் நலம் குறித்தசெய்தி மூச்சுப் பிடிப்பு, இதயவலி – ஏற்படும்.

உற்றார் என்றாலே நமக்கு உற்ற இடத்து உதவும்நல்லவர். அவர்களுடன் வழக்காடாதே. இருளில் தனிவழி நடக்காதே. ஆபத்துக்களை விலைக்கு வாங்காதே.

52 வரிகளில் அருமையான செய்திகளைக் கடுகைத்துளைத்துக் கடலைப்புகட்டியது போல் தந்துள்ள ஔவையின் அறிவைப் போற்ற வார்த்தை இல்லை.

"அடைக்கலப் பொருளை அழியாதே
முனைந்த களரியில் நில்லாதே " சண்டை, மறியல், போராட்டம் நடக்கும் இடத்தில் துப்பாக்கிச்சூடு நடக்கிறது. இறப்பவர் பாதி அப்பாவிப் பொதுமக்கள்.

"எதிரி நீர் ஒரியை நீந்தாதே -
ஆறு , ஏரியில் எதிர் நீச்சல் போடாதே !
அளக்கும் நாழியைக் குறைக்காதே " சரியான அறிவுரை. இன்று நுகர்வோர் விழித்துக் கொண்டதால் எடை குறைவாக விற்பனை செய்ய (அதிகம்) முடியவில்லை.

"ரேஷன் கடைக்காரருக்குக் குழந்தை எடை குறைவாகவே பிறந்தது" - சரியான அங்கதம் புதுக்கவிதையானது.

நுனிக் கொம்பில் ஏறுவது உயிர்க்கிறுதி யாகிவிடும்

"அருங்கொம்பு தன்னில் ஏறாதே "

நாம் வசிக்கும் தெருவைச்சுத்தமாக, அமைதியாக, உறவான வைத்திருப்பது நல்லது

"தெருவுக்கு அழிவுகள் செய்யாதே "

கோவிலுக்குச் செருப்புப் போட்டுச் செல்லக் கூடாது, சுவாமி வீதி உலா வரும் போதும் அவ்வாறே !

"திருநாள் ஓடும் வீதியிலே
செருப்பைத் தொட்டு நடவாதே "

வடக்கே தலை வைக்கக் கூடாது, காந்தக்கதிர்கள்மூளையைப்பாதிக்கும், தூக்கம் கெடும் ; கனவுகள் வரும்இன்று விஞ்ஞானம் சொல்கிறது. அன்றே

"வடக்கே தலையை வையாதே" என்றாள் ஔவை
"தாயை நிந்தனை செய்யாதே"
"மனத்தில் சுவடுகள் செய்யாதே"
(மனத்துக்கண் மாசிலன் ஆதல் அல்லவா அறம்)

மதியார் வாசல் மிதியாதே !
வேட்டைக்கு நாயுடன் போ !

பயனில்லாத சொல், செயல் இவற்றை விலக்கு இந்த நீதிகளைப்பற்றி வாழ்பவன் ஒழுக்கமானவன் ; உயர்ந்து வாழ்வான் !

கல்வி ஒழுக்கமும் நீதி ஒழுக்கமும் இரட்டை நூல்கள் எனலாம்; மக்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கும் தன்மைகளை ஔவையார் கூறியிருப்பது அறிந்தின்புறத்தக்கது. அனுபவம் அறச்சிந்தனைகளும் இந்நூல் முழுவதும் விரவி கிடக்கின்றன. இந்நூல்களைப்படித்து அமைதியான வாழ்வு வாழ்வர் என்பதில் ஐயமில்லை. கல்வியின் விழுமிய பயனே ஒழுக்கம் என்பதை உணர்ந்த ஔவையார் நற்பண்புகளை இவ்வொழுக்க நூல்கள் மூலம் வெளிப்படுத்தியிருப்பது பின்பற்றத்தக்கதாகும்.

திருவள்ளுவராண்டு 2037, மார்கழி 19 (03.01.2007) அறிவன் (புதன்) மாலை 6.30 மணிக்கு திருமதி மங்களம் பஞ்சநாதன் தலைமையில் திருமானூர் வ. பஞ்சநாதன் முன்னிலையில் நிறைநிலவு பதினொன்றாவது சொற்பொழிவு நடைபெற்றது

ஔவையார் ஒரு பல்கலைக்கழகம்

சொற்பொழிவு-12

"எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்கள்
இளைப்பில்லை காணென்று கும்மியடி "

என்றார் மகாகவி பாரதியார். அத்தகைய அறிவு நலம் சான்ற புலமைப் பெண்மணிகளில் தலையானவர் ஔவைப் பிராட்டி! இவருக்கு பல அவதாரங்கள் போலும் "நூறு முகம் காட்டுதம்மா ஆறுமுகம் இன்று " என்று கவியரசர் பாடியதைப் போல ஔவையின் அறிவு நலம் பல துறைகளில் வெளிப்படுகிறது. "**ஔவை ஒரு பல்கலைக்கழகம்** "

1. வரலாற்றுப் பதிவாளராக	2. அரசியல் தூதராக
3. நல்ல நண்பராக	4. சிறந்த கவிஞராக
5. கல்வியாளராக	6. பக்தி நெறி ப்பாவலராக
7. சமுதாய சிந்தனையாளராக	8. பன்னூலாசிரியராக

இப்படிப் பல தோற்றங்களில் ஔவையைப் பார்ப்பதே இச்சொற்பொழிவின் நோக்கம் ஆகும்.

1. வரலாற்றுப் பதிவாளராக

கோசர் என்பார்கள் ஒருவகைச்சாதியர் எனவும், கண்ணகிக்குத் திருவிழாச் செய்தவர்கள் எனவும் அபிதான சிந்தாமணி (ப. 514) குறிப்பிடுகின்றது. மிகச்சிறந்த போர் மறவராக இருந்திருக்கின்றனர். இவர்கள் வாய்மை தவறாதவர்களாக விளங்கி இருக்கின்றனர். இத்தகைய கோசர்கள் குறித்த செய்தியினை ஔவையார் தம் அகப்பாடலொன்றில், தொன்மூதலாத்துப் பொதியிற்றோன்றிய நல்லூர்க்கோசர் நன்மொழி போல என்று குறிப்பிடுகின்றார். தலைவனுடன் தலைவி உடன் போக்கு அறத்தோடு நிற்கிறாள். செவிலி, நற்றாய்க்குச் சொல்லுகையில் கோசரின் மொழி போல் தலைவி உடன் போக்கு சென்றது உண்மை என்கிறாள். கோசரின் வாய்மை தவறாத பண்பு பாடலில் உவமையாக்கப் பட்டுள்ளது. சொன்ன சொல்பிழையாத மோகூர்ப்பழையன் என்ற குறுநில மன்னனின்

நண்பரான கோசரைப் பற்றி அறிந்து கொள்ள ஔவையாரின் அகப்பாடல் உதவுகின்றது.

ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியமானாவும் உன்னத நண்பனாகவும் திகழ்கிறான். அதியமான் இருபத்தி இரண்டு புறப்பாடல்களில் (புறநானூறு) புகழ்ந்துரைத்துள்ளார். புறப்பாடல்களில் மிகுதியாக அதியமானைப் புகழ்ந்துரைத்த பின்னரும் ஔவையார் அகப்பாடல்களல் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

"ஓவா தீயு வண்கைக்
கடும் பகட டியானை நெடுந்தே ரஞ்சி
கொன் முனை இரவூர் போல"

என்று குறுந்தொகைப்பாடலில் (91:5.7) அதியமான் பற்றியகுறிப்பு இடம் பெறுகின்றது. தலைவியின் துன்பத்திற்கு அதியமானின் போர்க்களத்திற்கு அருகிலுள்ள ஊரிடத்து வாழ்வோரின் துன்ப நிலை உவமையாக அமைகிறது. அதியமானின் வீரம் அகப்பாடல்களில்ஔவையாரால் உரைக்கப்படுகிறது.

கிள்ளி, வளவன் என்ற பெயர்கள் சோழ அரசனைச் சுட்டியுரைக்கும் பொதுப் பெயர்கள் ஆகும். கிள்ளி எனும் பெயரை ஔவையார் தம்அகப்பாடலொன்றில் கையாள்கிறார்.

"கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த"

என்ற நற்றினைப் பாடல் (390:3) இதனைக் காட்டுகின்றது.

வெள்ளி வீதி

வெள்ளி வீதியார் சங்ககாலப் பெண்பாற்புலவர் ஆவார். மதுரை வெள்ளியம்பலத் தெருவில் வசித்து வந்ததால் வெள்ளி வீதியார் எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்பர் (அபிதான சிந்தாமணி ப. 502) அகநானூற்றுப்பாடல் (147 அடிகள் 9-10) ஒன்றில் "வெள்ளி வீதியைப் போல் நன்றும் செலவயர்ந்திசினால் யானே" என்று தலைவிபாடுவதாய் அமைத்து வெள்ளி வீதி கணவனைத் தேடிச்சென்று அலைந்த செயலைப் பதிவு செய்கிறார்.

2. கல்வியாளர்

ஔவையின் தமிழுணர்வு

சங்ககால ஔவையாரைப் பற்றி அறிவதற்கு அவர்பாடல்கள் ஓரளவு துணை புரிகின்றன. இடைக் காலத்தில் வாழ்ந்து நீதி நூல்கள் பல இயற்றிய ஔவையார் நல்வழியில் மூவர் தமிழையும் குறிப்பிடுவதால் இவர் சுந்தரர் காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்பர்.

பொதுவாக உலக மக்கள்இறைவனை வேண்டும் போது பொன்னும்பொருளும் நன்மக்கட்பேறு முதிலியனவும் தருமாறு வேண்டுவர்.

"மண்கண்ட வெண் குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவில் பணியச் செய்வாய்"

என்று சகலகலாவல்லியை வேண்டுகிறார் குமரகுருபரர்.

ஆனால் அருந்தமிழ் மூதாட்டியான ஔவை தான் வழிபடும் கடவுளான விநாயகர்பால் பொன்னும் பொருளும் வேண்டவில்லை "தூமணியே நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று முத்தமிழ் ஆற்றலைத் தருமாறு வேண்டுகிறார் இது அவருடைய தமிழ் உணர்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.வீரமும் ஈரமும் இல்லாத சிலர்– தமிழ் உணர்வு இல்லாத சிலர் வந்து தங்களைப் புகழ்ந்து ஒரு பாடல் பாடவேண்டுமென ஔவையாரை வேண்டினர்.

அவர்களைப் பற்றி ஔவை அறிவார். அவர்கள் செல்வம் மிக்கவர்கள் தான் : ஆனால் தமிழ் மீது பற்றோ, தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் பண்போ இல்லாதவர்கள். எனவே அவர்களைப் பற்றிப்பாட அவர் வன்மையாக மறுத்துவிட்டார் அவர்களை நோக்கி

"பிறர் வாழ்க்கைக்கு உதவாத காட்டில் முளைத்து
உயர்ந்து வளர்ந்துள்ள மரத்தில் பழுத்திருக்கின்ற
உண்பதற்குத் தகுதியற்ற கனிபோலப்
பிறத்திருக்கின்றவர்களே!
பயனற்ற வாழ்க்கை நடத்துபவர்களே!"

தேவர்களுக்கு தலைவர்களாகிய அரன், அரி, அயன் என்ற முப்பெருங் கடவுளரையும், தமிழ் நாட்டு முடிவுடை மூவேந்தராகிய மூன்று இளங்கோக்களையும் பாடி எனது பாடல் மணக்கும் வாயினால் உங்களையும் பாடும்படிக் கேடகிறீர்கள்! உங்களை நான் எந்தப் பண்பை அடியாக வைத்து பாடுவேன் ? வீரம் அற்றவர்கள் என்றாலும் தவறில்லை தமிழ்ப்பற்றாவது உங்களுக்கு உள்ளதா? இல்லை! எனவே உங்களை நான் பாடுவதற்கில்லை என்று கூறிவிட்டார்.

ஒழுக்க நெறி போதித்தவர்

தமிழ் உலகின் கலங்கரை விளக்காக விளங்கும் திருவள்ளுவரின் வழிவந்த ஔவையாரும் அறத்தின் மாட்சியையும் சமூக நீதிச் சிந்தனைகளையும் போற்றிக் கூறுவார்.

"வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலை புணை பிறிதில்லை (புறம் 367)
நாடா கொன்றோ காடா கொன்றோ ....
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே " (புறம் 187)

என வரும் அடிகள் நல்வினை ஒன்றே பேரின்ப வாழ்வின் புணை என்றும் செயலாற்றல் மிக்க ஆடவர் நல்லோராயின் எம் எண்ணும் நன் மண்ணாம் என்றும். உணர்த்துகின்றார் சங்க வாழ்வில் ஆடவர்கள் பலர் கழி காமத்திலும் போதையிலும் வீழ்நிலையில் இருந்தனர், எனவே மண்ணின் மானம் ஆள்வினை மிக்க ஆடவர் அறத்தில் உள்ளது என்று உணர்கின்றார் ஔவையார்.

தனிப் பாடல்களில் உள்ள ஔவையாரின் புறப்பாடல் ஒன்று மேற்கூறிய கருத்துக்கு விளக்கம் தரும் வகையில் அமைந்து விளங்குவதைக் காணலாம். அப்பாடல் வருமாறு

"எம் மிகழ் வோரவர் தம்மிகழ்வோரே
எம்மிகழாதவர் தம்மிகழாரே
தம்புகழ் இகழ் வோர், எம்புகழ் இகழ்வோர் "

என்பதாம். இப்பாடலால் மனிதகுலம் நிலை பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழும் பண்பு நலம் நிறைவேற வேண்டின் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் தகுதி அறிந்ததாக இருக்க வேண்டும்.

சமுதாயச் சிந்தனையாளர்

"கண்டு ஒன்று சொல்லேல் ; உடையது விளம்பேல், ஞயம்பட உரை, வஞ்சகம் பேசேல், சித்திரம் பேசேல், சுளிக்கச் சொல்லேல்; தெய்வம் இகழேல்; நொய்ய உரையேல்; பழிப்பன பகரேல்; மிகைபடச் சொல்லேல்; மொழிவது அறமொழி; வல்லமை பேசேல்; வெட்டெனப் பேசேல்; ஓரம் சொல்லேல்; ஔவியம் பேசேல்; நாவடக்கத்திற்கு ஔவையின் போதனைகள் சொற்கள் கனத்துப் போனதால் ஈராக்கும், அமெரிக்காவும் மோதிப் போர் ஏற்பட்ட நிலையைப் பாருங்கள் பயன்படுத்தத்தெரியாமல் சொற்களைப் பயன்படுத்தியதால் மணமுறிவு வரை போன குடும்பங்களின் நிலையையும் யோசியுங்கள் நாவடக்கம் குறித்து ஔவையாரின் வழிகாட்டலே உன்னதமானது.

ஔவையாரின் நம்பிக்கை நோக்கு

தோல்வியின் தோளின் மீது பயணிக்கும் இன்றைய இளைஞர்களுக்கு ஔவையார் நம்பிக்கையைத் தருகிறார். எதைக் கைவிட்டாலும் கிடைத்து விடும், ஆனால் "ஊக்கமது கைவிடல்" என்று கூறி நம்பிக்கை ஊட்டுகிறார் சொல்லில் கூடச் சோர்வு வரக் கூடாது என்பதை "சொல் சோர்வு படேல் " என உரைத்தவர் "சோம்பித் திரியேல்" என தன்னம்பிக்கையை உருவாக்கினார். எச்செயலிலும் வெற்றி பெற மன உறுதி வேண்டும் என்பதை, "மனம் தடுமாறேல்" என உரைக்கிறார்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை " (குறள் – ஊக்கமுடைமை 594)

எனும் குறளின்படி ஊக்கம் தருகிறார் ஔவையார். தேர்வுத் தோல்விகளும், காதல் தோல்விகளும் அதிகரித்துத் தற்கொலை மிகுந்துள்ள இக் காலத்தில் ஔவையாரின் நம்பிக்கை நோக்கு உயர்வு தருகிறது.

ஔவையாரும் வாழ்வியலும்

இன்று எதை எதையோ கற்கிறோம் ; ஆனால் வாழக்கற்க வில்லை. கிடைத்தால் போதுமென அள்ளி அள்ளி உணவை விழுங்குகிறோம் நமக்கு சற்றும் பொருந்தாத துரித உணவக முறையைப் பின்பற்றி நோயல் விழுகிறோம் "கொன்றை வேநதனில்" உணவு முறைப்பற்றிக் கூறும் ஔவையார். "நோன்பு என்பது கொன்று தின்னாமை" எனப் புலாலை மறுத்து இதய நோயிலிருந்து அன்றே மக்களை விடுவித்துள்ளார் ஔவையார் நேரம் தவறி உண்பதால்வயிற்றில் புண் ஏறபடுவதைக் கருத்திற் கொண்டு அவர் "பாலோடு ஆயினும் காலம் அறிந்துண்" என்கிறார்.

சிக்கனம் மறந்த அரசுகளே அழிவதைக் காண்கிறோம். அவ்வகையில் "அஃகமும் காசும் சிக்கெனத் தேடு" , "வளவன் ஆயினும் அளவறிந்து அழித்து உண்" எனச் சிக்கனத்தைக் கொன்றை வேந்தனில் வலியுறுத்துகிறார் ஔவையார்.

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்"

எனச் செல்வத்தைச் சேர்ப்பதை ஔவையார் முன்னிலைப் படுத்துவதை இன்றும் சமுதாயம் ஏற்றுச் செயல்படுகிறது.

4. ஒழுக்கக் கல்வியாளர் ஔவையார்

ஔவையாரின் நீதி நூல்கள் குழந்தை மனத்திலே பதிந்து விட்டால் நாட்டுக்கும்வீட்டுக்கும்நன்மகனாக அவன் வளர்வான். கடவுளை நம்பு. கல்வியின் பயன் வாலறிவனைத் தொழுதலே! ஈட்டிய நற்பொருள் எழுத்தே கல்லாதவன் கண் இல்லாதவனே. கைப் பொருள்என்பது கசடறு கல்வி.

மன்னருக்குத்தன் தேசத்தில் மட்டுமே மதிப்பும் மரியாதையும், கற்றவர் எல்லா நாட்டிலும் மதிக்கப்பெறுவர் கல்விக்கு எல்லையில்லை நமக்கோ வாழ்நாள்சிறிது செந்தமிழும் நாப்பழக்கம்.

சுற்றமாக, நட்பாக, குருவாக, கண்ணாக, செல்வமாக, வழித்துணையாக எல்லாமாக உடன் வருவது கல்வி, ஒழுக்கம், நீதி, நேர்மை, அன்பு, பரிவு இவை கல்வியின் முற்ற முடிந்த குறிக்கோள்கள்.

அரிது அரிது மானிடர்ஆதல் அரிது அதிலும் கூன்குருடு செவிடு, பேடு என்றில்லாமல் நல்ல ஆரோக்கியமுடன பிறத்தல் அரிது.

அப்படிப் பிறந்தாலும் ஞானமும்கல்வியும் நயத்தலரிது , அந்தக் கல்வி, ஒழுக்கத்தால் மேன்மையுறும். கல்வி ஒழுக்கம் என்ற அழகிய சிறு நூல் (சிலம்புச் செல்வர் அரிதின் முயன்று தேடிப் பதிப்பித்தது) கல்விக்கழகு கற்றபடி நிற்றல். 'ஐந்து வயதில் ஆதியை' வணங்கி நல்லாசானை மதித்து, நற்கல்வி பெற்று, நல்லொழுக்க நெறி நிற்றலே நல்ல வாழ்க்கை என்பது நூலின்சாரம்.

"கூர்மை என்பது குன்றாக்கல்வி" "கைப் பொருள் என்பது கசடறு கல்வி" "சுற்றம் என்பது துகளறு கல்வி" "பெருமை பெறுவது பேசறு கல்வி" "ஊக்கம் என்பது உள்ளத்துக்கல்வி" "வழிபாடாவது மாறாக்கல்வி" இவை அமுத மொழிகள் அன்றோ! "சாதி இரண் டொழிய வேறில்லை" என்று தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தம் தானே !

5. ஔவை நல்ல தூதர்

காதல், போர் இரண்டிலும்தூது இடம்பெறும். அகத்தூது (காதல்) சொல்லப்போக அன்னம், மான் மயில், கிளி, குயில் தமிழ்மொழி, நெஞ்சு, மேகம் இவை துணைநிற்கும் எனத் தூது என்ற இலக்கிய வகையே சிற்றிலக்யங்களாகச் சித்தரிக்கும். புறத்தூது செல்ல, இராமனுக்கு அனுமனும் அங்கதனும், கந்தவேலுக்கு வீரபாகுத்தேவரும், தர்மருக்கு உலூகரும், கண்ணனும், துரியனுக்குச் சஞ்சயனும் இருந்தனர். அகத்தூதுவருள், சிவபெருமானும், அனுமனும் சிறப்பிடம் பெறுகின்றனர். பரவை ஊடல் தீர்த்த சிவபெருமானும், சீதாதேவிக்கு தூது சொன்ன அனுமனும் இலக்கியத்தூதுவருள் ஏற்றம் பெற்றவர். போர்த்தூதராகச் சென்ற ஔவை போரை நீக்கிய புலமைப் பெண்மணி என்பது தனிச்சிறப்பு.

"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவர்க்கு
உறுதி பயப்பதாம் தூது" என்றார் வள்ளுவர், ஔவையின்

புரவலன். வள்ளல், நல்ல நண்பன் அதியமான் அதியனுடன் தொண்டைமான் போர் தொடுக்கப்போகிறான் என்பதை அறிந்த ஔவை, சமாதானம் செய்யும் நல்ல உள்ளத்துடன் தூது சென்றார். போர் என்ற சொல் கேட்டதும் சீறி எழும்மறவர் படை அதியனுடையது ஆயினும், போரினால் ஏற்படும் இழப்புக்கள், இழவுகள், எத்துணை கொடிது, அதனால் போரை நீக்க விரும்பிய ஔவை, தானே தூது நடந்தாள் தொண்டைமானிடம் பக்குவமாகச் சொல்லி அவன் மனத்தை மாற்றி விட்டார்.

"தொண்டைமானே ! உன் படைக்கலன்கள் புத்தம்புதியன. நெய்பூசப்பெற்று. மலர் சூட்டியவாறு அழகாக உள்ளன (பயன்படுத்தப்படாமல் உள்ளன) அதியனுடைய ஆயுதக் கிடங்கில் உள்ளவையோ, பகைவர்களின் கோட்டைகளை, யானைகளைத்தாக்கி, முனை ஒடிந்து வளைந்து கொல்லன் உலைக்களத்தில் பழுது பார்க்கப் படுகின்றன. அடிக்கடிபோர் செய்து வெற்றி பெற்றுள்ள அந்த அதியனுடன் போர் செய்யவா போகிறாய் !" (இவ்வே பீலி அணிந்த என்ற புறநானூற்றுப் பாடல் 95)

புகழ்வது போல் பழித்துப் பழிப்பதுபோல் புகழ்கிறார் மனம் மாறிய தொண்டைமான் போர் செய்வான் எண்ணத்தைக் கைவிட்டான் மறவர் படைமட்டும் வெற்றி தராது. மக்கள் சக்தி தேவை என்பதை ஔவை கூறும் அருமையான கருத்து .

6. ஔவையின் கவித்திறம்

2 வார்த்தைகள், 3 சொற்கள், நான்கடித்தொடர், குறள் வெண்பா, வெண்பா, அகவல் என்று அனைத்து வகைப் பாக்களையும் கையாண்டு இலக்கிய உலகில் புதுமைப் பெண்ணரசியாகத் திகழ்கிறார் ஔவை. ஔவையார் அகநானூற்றில் நான்கு பாடல்கள் தந்துள்ளார் அவற்றில் ஓரிரு அழகிய உவமைகளைப் பார்ப்போம்.

"வானில் ஊர்ந்தவயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அம்காடு"

ஞாயிறு நெருப்புப் போல் சிவந்து, சினந்து எரித்த வெப்பம் நிறைந்த காடு (பாடல் 11இ வரி 1,2)

"அறுகுள நிறைக்குந போல
அல்கலும் அழுதல் மேவலவாகி" (11-வரி 12,14)

நீரற்ற குளத்தைப் பெருக்கும் மடைபோல் நாளும்அழும்கண்கள்.

பேயினைக் கனவில் கண்டாற்போல் வெளியில் சொல்ல முடியாது தனக்கும்காதலனுக்கும் இடையே நிகழ்ந்தவற்றைச் சொல்லாமல் மறைக்கிறாள் தலைவி

"இடை பிறர் அறிதல் அஞ்சி மறைகரந்து
பேய் கண்ட கனவின்" (303, வரி 1,2)

இரைதேடச் சென்ற குருவிகள், ஞாயிறு மறைந்து இருள் சூழும் நேரம் திரும்பி, நெற்கதிர் கொண்டு, வரும் அதுபோல் என் தலைவரும் பொருளீட்டி விரைவில் வருவார் என என் பேதை நெஞ்சம்நினைத்ததே - (303 வரி 10-15) "சீள்வீடு" என்ற வண்டுகளில் ஒலி உமணர் இழுத்துவரும் எருதுகளின் கழுத்துமணிபோல் ஒலிக்கும் என்ற இயல்பான உவமைகள் (303, வரி 17,18) பயின்று வருகின்றன.

7. நல்ல நண்பர்

மதியார் முற்றம் மதித்து மிதிக்காத சுயமரியாதைப்பெண்மணி ஔவை அதியமானிடமே சினந்து "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்று பேசியவர் ஆனால் நட்பு, அன்புக்கு அகம் குழையும் பாசப்பறவை அவர்! செல்வக்காலை பலரும் பழுமரம் நாடும் பறவை என வருவர். அற்றபோதும் உயிர் அற்றபோதும் உடனிருப்பவர் யார்! "உற்ற நண்பர் மட்டுமே" அதியன் போரில் இறந்து கிடக்கிறான் ஔவை பார்க்கிறாள் ! "ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ !" எனக்கதறுகிறாள் "இந்த வேல் உன் நெஞ்சிலா பாய்ந்தது! இல்லை உன்னிடம் இரந்து வந்து வரிசை பெற வரிசையாக நிற்கும் பாணர் கூட்டத்தின் உண்கலத்தைத்துளைத்தது அவர்கள் கைகளைத்துளைத்தது. பாணரின் சுற்றத்தார் கண்மணிகளைத் துளைத்தது புலவர் நாவிலும் தைத்தது" என்று கதறுகிறாளே ! அது நட்பின் வெளிப்பாடு, நன்றி உணர்வின பெருக்கு.

சிறிதளவு கள் பெற்றால்எங்களுக்கு அளித்து மகிழ்வாய் நிறையகள் இருந்தால், எங்களைப்பாடச் சொல்லி மகிழ்ந்து, எங்களோடு

நீயும் அருந்துவாய்! இருக்கும் உணவு எந்த அளவு என்றாலும் எல்லோருக்கும் பகுத்தளித்து உண்பாயே! நீயோ மாண்டாய்! என்றெல்லாம் புலம்பும் கையறு நிலைப்பாடல்கள் ஔவை மிகச்சிறந்த நண்பராக நன்றி மறவாத பண்பாளராகத்திகழ்தமையைக்காட்டும்.

புலமைப் பெருமிதம்

அதியன் பரிசில் தரும் காலம் தாமத மானாலும் அது "யானைதன் கோட்டிடைவைத்த கவளம்" போன்றது நிச்சயம் கிடைக்கும். ஆனாலும் கோபம் புலமைக்குரிய பெருமிதத்தால் வருவது அல்லவா?

ஐயா, எம் பையைச் சுருக்கிக் கொண்டு போகிறோம்! எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே என்றும் பாடுவார் ஔவை, யான் பாடும்பாட்டுகுழந்தையின் மழலைதான், பொழுதொடும் புணராதவை யாழ் போல் இனிமை தரக்கூடியன அல்ல, என்றாலும் அதியன் கேட்டு மகிழ்கிறான் என்று அவையடக்கத்துடன் பாடிய ஔவை தமிழர்களின் நெஞ்சில், தமிழ் இலக்கிய உலகில் மிகச்சிறந்த இடம் பெற்றவர் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. மழலைகள், இளையோர், முதியோர், படித்தவர், பாமரர்,ஞானமுடையோர் என அனைத்து நிலையினர் அறிவுக்கும் மருந்தும் விருந்தும் தந்தவர் ஔவை.

பல்வகைத்திறம் படைத்த ஔவையார் பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தை வாழ்விக்க வந்த பெண்மணி ஆவார்; பெண்ணுலகிற்கு மட்டுமல்ல மண்ணுலகமே பயன் பெறும்பாடல்களால் உலகைப் பாங்குடன் வாழ வழிகாட்டிய பன்னூலாசிரியர் எனலாம்.

பந்தனந்தாதி

ஔவையார் வெளியிட்ட அரிய நூல்களில் ஒன்று பந்தனந்தாதி, இந்நூலில் பந்தனின் வரலாறும் சிறப்பும் கூறப்பட்டுள்ளது. பூம்புகாரில் வைசிய குலத்தில் பிறந்தவர், சிறந்த சிவபக்தர். செல்வந்தரான பந்தனார் வந்தவர்க்கெல்லாம் வரையாது வழங்கும் வள்ளல் தன்மைப்படைத்தவர் கடல் கடந்து சென்று வாணிபம் செய்து பொருளீட்டியவர்.

ஒரு சமயம் ஆதிசேசன் பந்தன் செட்டியாரின் ஈகைக் குணத்தை அறிய, நடுக்கடலில் இவரது நாவாய் செல்லும் வழியில் தமது கரங்கள் மட்டும் தெரியுமாறு கை நீட்டி நின்றான், இதனைக் கண்ட பந்தனார் தமது நாவாயில் உள்ள பொருளில் ஒன்றை அக்கரங்களிடக் கட்டளையிட்டார் மீண்டும் மீண்டும் அக்கரங்கள் தோன்ற அனைத்துப் பொருட்களையும் வழங்கிய பின்னரும் அக்கரங்கள் தோன்றாதிருக்க பந்தனர் "இவ்வற்புதத்தைக் சோதித்தறிவேன்" என்று துணிந்து தாமே அக்கரங்களில் சென்று அமர்ந்தார்.

ஆதிசேசன் மகிழ்வடைந்து, பந்தனரைத் தம் உலகிற்கு அழைத்து சென்று தம் மகளைத் திருமணம் செய்து வைத்தனன். பந்தனாரும் நாக கன்னியிடன் இன்பம் நுகர்ந்து பல்லாண்டுகள் வாழ்ந்து வரலானார். பூம்புகாரில் பல ஆண்டுகளாக கடல் கடந்து சென்ற அண்ணன் வராததை கண்டு வருத்தமடைந்த தம்பியர், இறந்தவர்க்குரிய இறுதிக்கடன் செய்ய தீர்மானித்தனர்.

இதனை தமது ஞானப் பார்வையால் அறிந்த ஆதிசேசன், பந்தனரே! பூவுலகில் உம்மைகாணாமையால் அந்திமக் கிரியைகள் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன. நான் தரும்பரிசுகளைப்பெற்று உடன் ஊர் செல்வீர்என்று கூறி "பொற்படாம்" "கருநெல்லிக்கனி" கொடுத்து ஆசிர்வதித்து காவிரிப்பூம்பட்டினத்திற் கொண்டு வந்து சேர்த்தனர்.

பந்தனார் பட்டிணம் வந்து சேர்ந்த செய்திகேட்டு உற்றார், உறவினர், ஊரவர் யாவரும் மகிழ்வெய்தினர், நாடு காக்கும் மன்னனும் வரவேற்றுச் சிறப்பித்தான், பந்தனாரின் கொடை நலமும் தமிழ்ப்பண்பும் கேள்வியுற்று ஔவையார் நவமணிமாலை, பந்தனந்தாதி ஆகிய இரு நூல்களால் பாடி சிறப்பித்தமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

வேழ முகம்

வேழ முகம் 32 ஜய ஜய என்ற முடியும் விநாயகரைப் பற்றிய போற்றிப் பாடலாகவும் 28 வரிகளில் சரசுவதியின் சிந்தனையாக, சரசுவதியின் தோற்றம், வடிவம் கூறப்பட்டுள்ளது.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"

"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத்தொழ

துள்ளியோடுந் தொடர்ந்த வினைகளே" என்ற வரிகளுடன் வேழ முகம் தொடங்குகிறது. இப்பாடல் வரிகளில் வடி மொழியின் செல்வாக்கு காணப்படுகிறது. "சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜய ஜய" என்று தொடங்கி "அனந்தலோ டாதியிலடி தொழ வருளே" என்று முடிவுறுகிறது.

"சரசுவதி சிந்தனை" என்ற பகுதியில் "புத்தகத் துள்ளுறை மாதே" என்று தொடங்கி, "சூட்சும ரூபி நமஸ்து" என்று முடிவுறுகிறது. வேழ முகம் கடவுள் அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் படித்து வழிபாட்டிற்கு ஏற்ற நிலையில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

ஔவை நிகண்டு

ஔவையார் பெயரில் "பிடக நிகண்டு" என்ற ஒரு நூலும் காணப்படுகிறது ஆனால் அது குறித்த எவ்வித செய்தியும் கிடைக்கவில்லை. "ஔவை நிகண்டு" என்னும் பெயரில் ஒரு பாடல் மட்டும் தற்போது கிடைத்துள்ளது. இது பிடக நிகண்டின் வேறோ அல்லது இரண்டும்ஒன்றோ என்பது ஆராயப் படவேண்டியது என்று ஔவையார் கவிதைக்களஞ்சியத் தொகுப்பாளர் ப.சரவணன் குறிப்பிடுவது நினைக்கத்தக்கதாகும்.

"ஏலம் தக்கோலம் சூடன்
இலவங்கதம் , சாம்பிராணி ,
காலஞ்செல் அகில், சந்து, ஒங்கு
கத்தூரி , புழுகு, மௌவல்
கோலமார் மருக்கொழுந்து வெட்டி
குங்குமம், இலாமிச்சம் வேர்
சாலும் சண்பகம், சவ்வாது
சாற்றும் டோடச் வாசப்பேர் "

மேற்கண்ட பாடலே "ஔவை நிகண்டு" என்ற பெயரில் காணப்படுகிறது. மேற்கண்ட பாடல்களின் காணலாகும் 16 பொருள்களும் இறைவனுக்கு ஏற்ற நிலையில் சொல்லப்பட்டுள்ளது அறியத்தக்கதாகும்.

அசதிக் கோவை

இந்நூல் முழு அளவில் கிடைக்கப் பெறவில்லை 9 பாடல்களே கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் "அசதி" என்றும் ஆயர் மகள் மேல் ஒளவை பாடியது என்பர்

"அற்றாரைத் தாங்கிய ஐவேல் அசதி அணிவரைமேல்
முற்றா முகிழ் முலை எவ்வாறு சென்றனள் முத்தமிழ் நூல்
கற்றார் பிரிவுங்கல் லாதார் இளமையும் கைப் பொருளொன்(று)
அற்றார் இளமையும் போலே கொதிக்கும் அருஞ்சுரமே"

என்பன போன்ற பாடல்கள் காணப்படுகின்றன.

பெட்டகம்

"பெட்டகம்" என்ற நூலும் ஒளவையாரால் எழுதப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது. 79 பாடல்களைக் கொண்ட இந்நூல் முதல் பகுதி நல்ல பெண் அல்லாதவரைப் பற்றியும் இடைப்பகுதி கிழவியன்அறவுரையும் கடைப்பகுதி நல்ல பெண்களைப்பற்றியும் விளக்கி உள்ளது. பெட்டகத்தில் உள்ள கணவனை விளித்துப்பாடுவதாக இப்பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல மனைவி, நல்ல கணவன் இனிய இல்லறம் இவையே இந் நூலின் மையக் கருத்து என்பார் முனைவர் தாயம்மாள் அறவாணன்.

ஒளவையாரின் பல்கலை நூல்கள்

ஒளவையார் இயற்றியதாகக் கூறப்படும் வேறு சில நூல்கள் பட்டியல் மட்டுமே காணப்பெறுகின்றன. நவமணி மாலை, அருந்தமிழ் மாலை, நன்னூற் கோவை, நான்மணிக் கோவை, ஆகியவை ஒளவையார் என்ற பெயரில் எழுதப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. ஆனால் மேற்கண்ட நூல்கள் இன்னும் கிடைக்கப் பெறாமலேயே உள்ளன. இவை கிடைக்கப்பெற்றால் ஒளவையாரின் பல்துறை ஆற்றலை அறிந்து கொள்ளத் துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

அறிவில் முதிர்ச்சி ; ஆயகலை அறுபத்து நான்கிலும் தேர்ச்சி; பட்டி, தொட்டியெங்கும் மக்களைச் சந்திக்கும்முயற்சி; அனுபவங்களை அறநெறி ஆக்குவதில் பயிற்சி; ஆண்டி முதல் அரசர்கள் வரை ஆற்றுப்படுத்தும் நல் உணர்ச்சி; "ஔவையாரை ஒரு பல்கலைக்கழகம்" என்று போற்றுமளவிற்கு அவரின் அறநெறிகள் வாழ்வியல் பெட்டகமாகத் திகழ்கிறது. அவர்தம் அறநெறிகளைப் பின்பற்றி வாழ்வோமாக.

ஔவையாரின் கொன்றை வேந்தனை நாமும் படிப்போம் ; மற்றவர்களைப் படிக்க வைப்போம்; பிஞ்சு உள்ளங்களில் பேதமில்லா வாழ்விற்கு வழிகாட்டும் நற்றமிழ்ச் சிந்தனைகளைப் பதியச் செய்வோம்; பண்டிதனும் பாமரனும் படித்தின்புறச் செய்வோம் ; எந்நாளும் அழியாத இவ்வறிவு நெறிகளால் புதியதொரு சமுதாயம் படைக்க முயல்வோம்;

ஒப்புயர்வற்ற தமிழன்னையாகத்திகழும் ஔவையாரை வாழ்வியல் வழிகாட்டியாகக் கொள்வோம். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களின் வழிமுறைகளைப் பின்பற்றுவோம்.

தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமல்லாது தரணியெங்கும் ஔவையாரின் புகழைப் பரப்புவோம்: ஔவைக் கோட்ட அரும்பணிகளுக்குத் துணை நிற்போம்; ஔவையாரின் அருளால் அனைத்துப் பணிகளையும் அமைதியாக அறவழி நின்று முடிப்போமாக.

(திருவள்ளுவராண்டு 2037, மாசி (26.02.2007) ஞாயிறு காலை 11.00 மணிக்கு மருத்துவர் சு.நரேந்திரன் தலைமையில் தங்க கலியமூர்த்தி, புலவர் மு.பண்டரிநாதன், புலவர் மா.கோபாலகிருட்டிணன் முன்னிலையில் நிறைநிலவு பனிரெண்டாவது சொற்பொழிவு நடைபெற்றது)



முனைவர் சரசுவதி இராமநாதன் முத்தமிழ் அரசி;
இனிய தமிழால் இல்லற நெறிகளைச் சொற்பெருக்காற்றும்
செந்தமிழ் நாவலர்; மகளிர் குலத்திற்குப்
பெருமை சேர்க்கும் மங்கையர் குலத்திலகம்;
ஔவை அறநெறிகளைப் பரப்பிவரும் அறநெறிச்செம்மல்;
எழுத்தாலும் பேச்சாலும் தமிழ் நெறிகளைப் பரப்பிவரும்
இசைத்தமிழ் அருவி; உலகெங்கிலும்
தமிழ்ப்பொழிவால் முத்திரைப்பதித்த கலையரசி;
முழுநிலாவாக ஒளிவிடும் இலக்கிய நிலா;
ஔவையின் அறநெறிகள் இவர் சொற்பொழிவால்
எழுச்சி கொள்ளட்டும்; அனைவரது வாழ்விலும்
இன்பம் பொங்கட்டும்.



முனைவர் மு.கலைவேந்தன்
ஔவைக்கோட்ட நிறுவனர்,
திருவையாறு.